# தமிழ் 10



தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

# தமிழ்ப்பாட நூல்

## பத்தாம் வகுப்பு

*தீண்டாமை ஒரு பாவச்செயல்*
*தீண்டாமை ஒரு பெருங்குற்றம்*
*தீண்டாமை மனிதத்தன்மையற்ற செயல்*

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

சென்னை

© தமிழ்நாட்டு அரசு

முதற் பதிப்பு—1977
மறு பதிப்பு—1983

(பள்ளிக் கல்வி இயக்குநர் தலைமையில் அமைந்த குழுவினரால் தயாரிக்கப்பட்டது)

விலை : ரூ. 3-60

இந்திய அரசு சலுகை விலையில் வழங்கிய 60 ஜி. எஸ். எம். தாளில் இந் நூல் அச்சிடப்பட்டுள்ளது.

அச்சிட்டோர் :
பிரேம் எண்டர்பிரைசஸ், சென்னை-600 015.

## தேசிய கீதம்

ஜன கண மன அதிநாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா.

பஞ்சாப ஸிந்து குஜராத மராட்டா
திராவிட உத்கல பங்கா

விந்திய ஹிமாசல யமுனா கங்கா
உச்சல ஜலதி தரங்கா

தவ சுப நாமே ஜாகே
தவ சுப ஆசிஸ மாகே
காஹே தவ ஜய காதா.

ஜன கண மங்கள தாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா

ஜய ஹே ஜய ஹே ஜய ஹே
ஜய ஜய ஜய ஜய ஹே!

—மகாகவி இரவீந்திரநாத தாகூர்

## நாட்டுப்பண் - பொருள்

இந்தியத் தாயே! மக்களின் இன்ப துன்பங்களைக் கணிக்கின்ற நீயே எல்லாருடைய மனத்திலும் ஆட்சி செய்கிறாய்.

நின் திருப்பெயர் பஞ்சாபையும், சிந்துவையும், கூர்ச்சரத்தையும், மராட்டியத்தையும், திராவிடத்தையும், ஒரிசாவையும், வங்காளத்தையும் உள்ளக்கிளர்ச்சி அடையச் செய்கிறது.

நின் திருப்பெயர் விந்திய, இமய மலைத் தொடர்களில் எதிரொலிக்கிறது ; யமுனை, கங்கை ஆறுகளின் இன்னொலியில் ஒன்றுகிறது ; இந்தியக் கடலலைகளால் வணங்கப்படுகிறது.

அவை நின்னருளை வேண்டுகின்றன ; நின் புகழைப் பரவுகின்றன.

இந்தியாவின் இன்ப துன்பங்களைக் கணிக்கின்ற தாயே! உனக்கு
வெற்றி ! வெற்றி ! வெற்றி !

## தேசிய ஒருமைப்பாட்டு உறுதிமொழி

'நாட்டின் உரிமை வாழ்வையும் ஒருமைப்பாட்டையும் பேணிக்காத்து வலுப்படுத்தச் செயற்படுவேன் என்று உளமார நான் உறுதி கூறுகிறேன்.

'ஒருபோதும் வன்முறையை நாடேன் என்றும், சமயம், மொழி, வட்டாரம் முதலியவை காரணமாக எழும் வேறுபாடுகளுக்கும் பூசல்களுக்கும் ஏனைய அரசியல்-பொருளாதாரக் குறைபாடுகளுக்கும் அமைதி நெறியிலும்' அரசியல் அமைப்பின் வழியிலும் நின்று தீர்வு காண்பேன் என்றும் நான் மேலும் உறுதியளிக்கிறேன்.'

## தமிழ்த்தாய் வாழ்த்து

நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரத கண்டமிதில்,
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே
தெக்கணமும் அதிற்சிறந்த திரவிடநல் திருநாடும்;
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந் தமிழணங்கே!
உன்
சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே.

—'மனோன்மணீயம்' பெ. சுந்தரம் பிள்ளை

# பொருளடக்கம்

## செய்யுட்பகுதி


| எண் | | பக்கம் |
|---|---|---|
| I. | வாழ்த்து | 1 |
| II. | அறவுரை | |
| | 1. திருக்குறள் | 3 |
| | 2. பழமொழி | 18 |
| III. | தொடர்நிலைச்செய்யுள் | |
| | 1. சிலப்பதிகாரம் | 22 |
| | 2. சீவக சிந்தாமணி | 30 |
| | 3. கம்பராமாயணம் | 38 |
| | 4. பெரிய புராணம் | 47 |
| | 5. சீறாப்புராணம் | 55 |
| | 6. தேம்பாவணி | 59 |
| | 7. பாஞ்சாலி சபதம் | 63 |
| IV. | மொழிபெயர்ப்புப் பாடல்கள் | 69 |
| V. | மறுமலர்ச்சிப்பாடல்கள் | 74 |
| VI. | பல்சுவைப்பாடல்கள் | 82 |
| VII. | வழிபாட்டுப்பாடல்கள் | 95 |


## மனப்பாடப் பகுதிகள்

| | | அடிகள் |
|---|---|---|
| 1. | வாழ்த்து | 4 |
| 2. | திருக்குறள் (1, 7, 15, 19, 26, 30, 34, 40, 44, 49) | 20 |
| 3. | பழமொழி (1, 4, 6) | 12 |
| 4. | சிலப்பதிகாரம் (28-37) | 10 |
| 5. | சீவக சிந்தாமணி (5, 6) | 8 |
| 6. | கம்பராமாயணம் (10, 11, 12, 19) | 16 |
| 7. | சீறாப்புராணம் (8) | 8 |
| 8. | தேம்பாவணி (9, 10) | 8 |
| 9. | பாஞ்சாலி சபதம் (8) | 8 |
| 10. | கடல் | 14 |
| 11. | இன்பத்தமிழ் | 8 |
| 12. | தென்றல் | 4 |
| | | 120 |

## உரைநடைப் பகுதி


| எண் | | பக்கம் |
|---|---|---|
| 1. | தமிழர் தலைவர் பெரியார்<br>—அறிஞர் அண்ணா | ... 99 |
| 2. | தாய்மொழியில் உயர்தரக் கல்வி<br>—டாக்டர் நாவலர் ச. சோமசுந்தர பாரதியார் | ... 109 |
| 3. | பாரதப் பண்பாடு<br>—டாக்டர் ரா. பி. சேதுப்பிள்ளை | ... 115 |
| 4. | தமிழ்நாட்டுப் பெண்பாலார்<br>மகாமகோபாத்தியாய<br>—டாக்டர் உ. வே. சாமிநாதையர் | ... 118 |
| 5. | இலக்கிய வரலாறு<br>—திரு. மு. சண்முகம் பிள்ளை | ... 128 |
| 6. | தேசிய விடுதலைப் போராட்டம்<br>—டாக்டர் மா. இராமலிங்கம் | ... 140 |
| 7. | மற்றுமொரு புத்தாண்டுப் பிறப்பு<br>—திரு. ஜவஹர்லால் நேரு | ... 147 |
| 8. | கலைச்சுவையும் கலையுணர்வும்<br>—டாக்டர் மு. வரதராசனார் | ... 153 |
| 9. | சுப்பிரமணிய சிவா<br>—திரு. கருப்பையா | ... 157 |
| 10. | சட்டமன்றக் குடியாட்சி<br>—டாக்டர் இராதாகிருஷ்ணன் | ... 164 |
| 11. | அரியணை அளித்த வள்ளல்<br>—திரு. கு. ராஜவேலு | ... 169 |
| 12. | புலமையும் பெண்மையும்—ஆதிமந்தியார்<br>—திரு. பூ. ஆலாலசுந்தரனார் | ... 181 |
| 13. | சுற்றுச் செலவுக் கலை<br>—டாக்டர் தனிநாயக அடிகள் | ... 187 |
| 14. | பன்னாட்டு மன்றம்<br>—திரு. எம். ஆர். அடைக்கலசாமி | ... 199 |
| 15. | நாடோடி இலக்கியம்<br>—திரு. கி. வா. ஜகந்நாதன் | ... 209 |
| 16. | மறைந்த மாநகர்—பழையாறை<br>—திரு. நடன காசிநாதன் | ... 215 |
| 17. | விண்வெளிப் பயணம்<br>—திரு. பெ. நா. அப்புஸ்வாமி | ... 222 |
| 18. | பதினேழாம் நாள் (நாடகம்)<br>—டாக்டர் இரா. குமரவேலன் | ... 233 |

# செய்யுட்பகுதி

## I. வாழ்த்து

### பராபரக்கண்ணி

*அன்பைப் பெருக்கிஎன தாருயிரைக் காக்கவந்த*
*இன்பப் பெருக்கே, இறையே, பராபரமே!* 1

*எவ்வுயிரும் என்னுயிர்போல் எண்ணி இரங்கவும்நின்*
*தெய்வ அருட்கருணை செய்யாய், பராபரமே!* 2

**—தாயுமானவர்**

**குறிப்புரை :**

வாழ்த்தாவது, போற்றுவதற்குரிய ஒரு பொருளின் சீரையும் சிறப்பையும் எடுத்துரைப்பதாகும். முனிவர், அந்தணர், ஆனிரை, மழை, முடியுடை வேந்தர், உலகு என்னும் ஆறனையும் வாழ்த்துதலை 'அறுமுறை வாழ்த்து' என்பர். எல்லாவற்றிற்கும் மேலான ஒப்புயர்வில்லாத இறைவனை வாழ்த்துவது 'கடவுள் வாழ்த்த'ாகும். இங்குத் தரப்பட்டுள்ள வாழ்த்துப் பாடல் கடவுளின் பொதுவான பண்புகளை எடுத்துக்கூறிப் புகழ்வதனால் கடவுளைப்பற்றிய பொது வாழ்த்தாம்.

**தாயுமானவர்** சோழநாட்டிலே இப்பொழுது வேதாரணியம் என வழங்கும் திருமறைக்காட்டில் தோன்றியவர்; வேளாள மரபினர். இவருடைய தந்தையார் பெயர் கேடிலியப்பப்பிள்ளை. இவர் திருச்சிராப்பள்ளியில் கோயில்கொண்டு விளங்கும் தாயு மானவர் திருவருளால் பிறந்தமையால் அவ்விறைவர் பெயரைத் தாமும் பெற்றார். திருச்சிராப்பள்ளியில் பதினெட்டாம் நூற் றாண்டில் அரசு செய்திருந்த விசயரகுநாத சொக்கலிங்க நாயக் கரிடம் இவர் அரசாங்கக் கணக்கராய்ப் பணியாற்றினர். பின்னர்

இவர் திருமூலர் மரபில் வந்த மௌனகுரு என்பவரிடம் ஞானோபதேசம் பெற்றார். அதன் பின், இவர் தம் தொழிலை விடுத்துத் துறவு பூண்டு பல தலங்களுக்கும் சென்று இறைவனைத் தொழுது, உளமுருகிப் பாடினார்; யோகமார்க்கத்தில் தலைசிறந்து விளங்கினார். இறுதியில் இராமநாதபுரத்தைச் சேர்ந்த இலட்சுமிபுரத்தில் இவர் சமாதி யடைந்தார். இவர் பாடிய பாடல்கள் **தாயுமானவர் திருப்பாடல்கள்** எனப் போற்றப்படுகின்றன. பாடப்பகுதி 'பராபரக்கண்ணி' என்னும் பகுதியிலிருந்து எடுக்கப்பட்டுள்ளது.

பராபரம் - எல்லாவற்றிற்கும் மேலான பொருளாகிய இறைவன். கண்ணி – இவ்விரண்டு அடிகள் கொண்டு வரும் செய்யுள் உறுப்பு. இறைவனை விளித்து உருக்கத்துடன் பாடும் இப்பகுதியில் உள்ள கண்ணி ஒவ்வொன்றும் பராபரமே என்னும் விளியுடன் முடிகின்றது; எனவே, பராபரக்கண்ணி என வழங்கப் படுகிறது.

### அருஞ்சொற்பொருள் :

1. ஆருயிர் - அருமையான உயிர்
2. அருட்கருணை - பெருங்கருணை; செய்யாய் - செய்க.

### வினாக்கள் :

1. தாயுமானவர் இறைவரை எவ்வாறு போற்றுகிறார்?
2. இறைவரிடம் தாயுமானவர் வேண்டுவது யாது?

# II. அறவுரை

## 1. திருக்குறள்

### இல்வாழ்க்கை

*வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன், வானுறையும்*
*தெய்வத்துள் வைக்கப் படும்.* 1

### அன்புடைமை

*அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ்? ஆர்வலர்*
*புன்கணீர் பூசல் தரும்.* 2

### விருந்தோம்பல்

*மோப்பக் குழையும் அனிச்சம்; முகந்திரிந்து*
*நோக்கக் குழையும் விருந்து.* 3

### இனியவை கூறல்

*இன்சொல் இனிதீன்றல் காண்பான் எவன்கொலோ*
*வன்சொல் வழங்கு வது!* 4

### செய்ந்நன்றியறிதல்

*எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்; உய்வில்லை*
*செய்ந்நன்றி கொன்ற மகற்கு.* 5

### நடுவு நிலைமை

*'கெடுவல்யான்,' என்ப தறிகதன் நெஞ்சம்*
*நடுவொரீஇ அல்ல செயின்.* 6

### அடக்கமுடைமை

*யாகாவா ராயினும் நாகாக்க; காவாக்கால்,*
*சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு.* 7

### ஒழுக்கமுடைமை

*ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை; இழுக்கத்தின்*
*எய்துவர் எய்தாப் பழி.* 8

### பொறையுடைமை

*திறனல்ல தற்பிறர் செய்யினும், நோநொந்*
*தறனல்ல செய்யாமை நன்று.* 9

### அழுக்காறாமை

*கொடுப்ப தழுக்கறுப்பான் சுற்றம் உடுப்பதூஉம்*
*உண்பதூஉம் இன்றிக் கெடும்.* 10

### புறங்கூறாமை

*பகச்சொல்லிக் கேளிர்ப் பிரிப்பர் நகச்சொல்லி*
*நட்பாடல் தேற்றா தவர்.* 11

### பயனில சொல்லாமை

*பல்லார் முனியப் பயனில சொல்லுவான்*
*எல்லாரும் எள்ளப் படும்.* 12

### ஒப்புரவறிதல்

*ஒத்த தறிவான் உயிர்வாழ்வான்; மற்றையான்*
*செத்தாருள் வைக்கப் படும்.* 13

### புகழ்

*ஈதல் இசைபட வாழ்தல்; அதுவல்ல*
*ஊதியம் இல்லை உயிர்க்கு.* 14

### வாய்மை

*புறந்தூய்மை நீரான் அமையும்; அகந்தூய்மை*
*வாய்மையாற் காணப் படும்.* 15

### வெகுளாமை

*செல்லா விடத்துச் சினந்தீது; செல்லிடத்தும்*
*இல்லதனின் தீய பிற.* 16

### இன்னா செய்யாமை

*நோயெல்லாம் நோய்செய்தார் மேலவாம்; நோய்செய்யார்*
*நோயின்மை வேண்டு பவர்.* 17

### இறை மாட்சி

*செவிகைப்பச் சொற்பொறுக்கும் பண்புடை வேந்தன்*
*கவிகைக்கீழ்த் தங்கும் உலகு.* 18

### கல்வி

*யாதானும் நாடாமால் ஊராமா லென்னொருவன்*
*சாந்துணையுங் கல்லாத வாறு?* 19

### கல்லாமை

*விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்*
*கற்றாரோ டேனை யவர்.* 20

### கேள்வி

*இழுக்க லுடையுழி யூற்றுக்கோ லற்றே*
*ஒழுக்க முடையார்வாய்ச் சொல்.* 21

### அறிவுடைமை

*எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும், அப்பொருள்*
*மெய்ப்பொருள் காண்ப தறிவு.* 22

### குற்றங்கடிதல்

*வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை, எரிமுன்னர்*
*வைத்தூறு போலக் கெடும்.* 23

### பெரியாரைத் துணைக்கோடல்

*பல்லார் பகைகொளலிற் பத்தடுத்த தீமைத்தே*
*நல்லார் தொடர்கை விடல்.* 24

### சிற்றினம் சேராமை

*நிலத்தியல்பான் நீர்திரிந் தற்றாகும் மாந்தர்க்*
*கினத்தியல்ப தாகும் அறிவு.* 25

### தெரிந்து செயல் வகை

*செய்தக்க வல்ல செயக்கெடும்; செய்தக்க*
*செய்யாமை யானுங் கெடும்.* 26

**வலியறிதல்**

ஆகா றளவிட்டி தாயினுங் கேடில்லை
போகா றகலாக் கடை. 27

**காலம் அறிதல்**

அருவினை யென்ப வுளவோ கருவியாற்
கால மறிந்து செயின்? 28

**இடன் அறிதல்**

தொடங்கற்க எவ்வினையும் எள்ளற்க முற்றும்
இடங்கண்ட பின்னல் லது. 29

**தெரிந்து தெளிதல்**

குணநாடிக் குற்றமு நாடி அவற்றுள்
மிகைநாடி மிக்க கொளல். 30

**தெரிந்து வினையாடல்**

வினைக்குரிமை நாடிய பின்றை அவனை
அதற்குரிய னாகச் செயல். 31

**சுற்றந்தழால்**

சுற்றத்தாற் சுற்றப் படவொழுகல் செல்வந்தான்
பெற்றத்தாற் பெற்ற பயன். 32

**பொச்சாவாமை**

இகழ்ச்சியிற் கெட்டாரை உள்ளுக தாந்தம்
மகிழ்ச்சியின் மைந்துறும் போழ்து. 33

**ஊக்கமுடைமை**

உள்ளுவ தெல்லாம் உயர்வுள்ளல்; மற்றது
தள்ளினும் தள்ளாமை நீர்த்து. 34

**ஆள்வினையுடைமை**

அருமை யுடைத்தென் றசாவாமை வேண்டும்;
பெருமை முயற்சி தரும். 35

### இடுக்கண் அழியாமை

வெள்ளத் தனைய இடும்பை, அறிவுடையான்
உள்ளத்தி னுள்ளக் கெடும். 36

### சொல் வன்மை

இணரூழ்த்தும் நாறா மலரனையர் கற்ற
துணர விரித்துரையா தார். 37

### வினைத்திட்பம்

எண்ணிய எண்ணியாங் கெய்துப எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின். 38

### வினை செயல் வகை

தூங்குக தூங்கிச் செயற்பால; தூங்கற்க
தூங்காது செய்யும் வினை. 39

### அவை அறிதல்

நன்றென்ற வற்றுள்ளும் நன்றே முதுவருள்
முந்து கிளவாச் செறிவு. 40

### நாடு

பிணியின்மை செல்வம் விளைவின்பம் ஏமம்
அணியென்ப நாட்டிற்கிவ் வைந்து. 41

### பொருள் செயல் வகை

அறனீனும் இன்பமு மீனும் திறனறிந்து
தீதின்றி வந்த பொருள். 42

### படைச்செருக்கு

கான முயலெய்த அம்பினில் யானை
பிழைத்தவே லேந்த லினிது. 43

### நட்பு

நவில்தொறும் நூனயம் போலும் பயில்தொறும்
பண்புடை யாளர் தொடர்பு. 44

### பகைத்திறம் தெரிதல்

இளைதாக முள்மரம் கொல்க; களையுநர்
கைகொல்லும் காழ்த்த விடத்து. 45

### குடிமை

நகையீகை யின்சொ லிகழாமை நான்கும்
வகையென்ப வாய்மைக் குடிக்கு. 46

### மானம்

பெருக்கத்து வேண்டும் பணிதல்; சிறிய
சுருக்கத்து வேண்டு முயர்வு. 47

### சான்றாண்மை

இன்னாசெய் தார்க்கும் இனியவே செய்யாக்கால்
என்ன பயத்ததோ சால்பு? 48

### குடி செயல் வகை

நல்லாண்மை என்ப தொருவற்குத் தான்பிறந்த
இல்லாண்மை ஆக்கிக் கொளல். 49

### உழவு

ஏரினும் நன்றால் எருவிடுதல்; கட்டபின்
நீரினும் நன்றதன் காப்பு. 50

**திருவள்ளுவர்**

### குறிப்புரை :

தமிழில் தனிப்பெருஞ்சிறப்புடன் விளங்கும் நூல் **திருக்குறள்**. பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றாகிய இது, பாடல் அளவினாலும் பொருளின் திட்ப நுட்பத்தாலும் தலைசிறந்து விளங்குகிறது. உலகில் பல்வேறு மொழியாளரும் தத்தம் மொழியில் இதனை மொழியாக்கம் செய்து போற்றுகின்றனர். எனவே, இஃது உலகப் பொதுமறையாய் இலங்குகின்றது.

திருக்குறள் 3 பால்களையும், **133** அதிகாரங்களையும், அதிகாரத்திற்குப் பப்பத்துப் பாடலாக 1330 குறட்பாக்களையும் கொண்டுள்ளது. குறட்பாவினால் இயன்ற நூலாதலின், 'குறள்' என்பது கருவியாகு பெயராய் நூலுக்கு வழங்கலாயிற்று. 'திரு' என்பது இந்நூல் பெருமை கருதி அமைந்த சிறப்பு அடைமொழி.

மேலும், இந்நூலை **முப்பால், தமிழ் மறை, பொதுமறை, உத்தர வேதம், பொய்யாமொழி, தெய்வநூல்** உள்ளிட்ட பெயர்களாலும் போற்றிப் புகழ்வர்.

'தருமர் மணக்குடவர் தாமத்தர் நச்சர்
பருதி பரிமே லழகர் திருமலையர்
மல்லர் பரிப்பெருமாள் காலிங்கர் வள்ளுவர்நூற்
கெல்லையுரை செய்தா ரிவர்'

என்னும் பழம்பாட்டு, திருக்குறளுக்குத் தருமர் முதலிய பதின்மர் உரை வகுத்தனரெனக் கூறுகிறது. இவருள் மணக்குடவர், காலிங்கர், பரிப்பெருமாள், பரிமேலழகர் என்பார் எழுதிய உரைகள் கிட்டியுள்ளன. இவற்றுள் பரிமேலழகர் உரையே பலராலும் பயிலப்பட்டு வருகிறது.

பொதுமறையாம் திருக்குறளைத் தந்தவர் **திருவள்ளுவர்.** இவர் உலகியல்களைச் செவ்விய முறையில் வகுத்துரைத்து, என்றும் அழியாப்புகழ் பெற்றுள்ளார். இவரைத் **தேவர், பொய்யில் புலவர், பெருநாவலர், செந்நாப்போதார், தெய்வப்புலவர்** உள்ளிட்ட பல பெயர்களால் பாராட்டுகின்றனர்.

திருவள்ளுவர் மயிலையில் பிறந்தார் என்பது செவிவழிச் செய்தி. சிலர், இவர் ஊர் மதுரை என்பர். இவரைப்பற்றி வழங்கும் பிற செய்திகளும் பல்வேறு மாறுபாடுகளுடன் வழங்குகின்றன. இவர் வாழ்ந்த காலம் பற்றிய கருத்து வேறுபாடுகள் ஆராய்ச்சியாளர்களிடையே காணப்படுகின்றன. திருவள்ளுவர் காலம் கி. பி. 2 ஆம் நூற்றாண்டென்பர்.

### அருஞ்சொற்பொருள் :

1. இல் வாழ்க்கை - ஆடவரும் பெண்டிரும் மணம் புரிந்து இல்லத்திலிருந்து வாழும் குடும்ப வாழ்க்கை. வையம் - நிலவுலகம், வாழ்வாங்கு வாழ்பவன் - இல்வாழ்விற்கு ஆன்றோர் வகுத்த நெறி முறைப்படி வாழ்க்கை நடத்துபவன், வான் - வானுலகம், உறையும் - வாழும், தெய்வத்துள் வைக்கப்படும் - தேவர்களுள் ஒருவனாக மதிக்கப்படுவான்.

2. அன்புடைமை - தொடர்புடையார் ஒருவர்மீது ஒருவர் கொள்ளும் பற்று. 'அன்பிற்கும் அடைக்குந்தாழ் உண்டோ?' என இயைக்க. அடைக்கும் தாழ் - அடைத்து வைக்கும் தாழ்ப்பாள், ஆர்வலர் - அன்புடையவர், புன்கணீர் - துன்பத்தால் சிந்தும் கண்ணீர், கணீர் - தொகுத்தல் விகாரம், பூசல் தரும் - பலரறிய வெளிப்படுத்தும். அன்பிற்கும் - 'உம்' அன்பின் சிறப்பினை உணர்த்துவதால் சிறப்பு உயர்வு உம்மையாகும். ஓ - எதிர் மறை வினா.

3. விருந்தோம்பல் - முன் பின் அறியாது புதியராய் வந்தவரை இல்லறத்தார் விரும்பி வரவேற்று உபசரிக்கும் முறை, மோப்ப - மூக்கால் மோந்து பார்க்க, குழையும் - வாடும்,

அனிச்சம் - அனிச்சப்பூ, முகம் திரிந்து - முகம் மாறுபட்டு, நோக்க - பார்க்க, விருந்து - புதியவர்.

4. இனியவை கூறல் - இனிய சொற்களைக் கூறுதல். இன் சொல் - இனிய சொற்கள், இனிதீன்றல் (இனிது+ஈன்றல்) - இனிமையைத்தருதல், காண்பான் - கண்டு அறிகிறவன், வன் சொல் - கடுஞ்சொற்களை, வழங்குவது - சொல்லுவது, எவன் - என்ன பயன் கருதி? ('என்ன' என்னும் பொருள்படும் வினைப் பொருளில் வரும் குறிப்புவினை முற்று), கொல், ஓ - அசை நிலைகள்.

5. செய்ந்நன்றியறிதல் - ஒருவர் செய்த உதவியை மற வாமை. எந்நன்றி - எவ்வகைப்பட்ட அறங்களையும், கொன் றார்க்கும் - சிதைத்தவர்க்கும், உய்வு - விடுபடும் வழி, கொன்ற - மறந்த, மகற்கு (மகன்+கு) - மனிதனுக்கு.

6. நடுவு நிலைமை - எவரிடத்தும் இன்னார் இனியார் என் னும் வேற்றுமை பாராட்டாது ஒரு தன்மையாக நடப்பது. கெடுவல் - கெடக்கடவேன், அறிக - உணர்க, நெஞ்சம் - மனம், நடுவு - விருப்பு வெறுப்பின்றி ஒரு தன்மையில் நிற்பது, ஒரீஇ - நீங்கி, அல்ல செயின் - நடுவுநிலைமையல்லாத செயலைச்செய்தால். நெஞ்சத்தால் நினைப்பதும் செய்வதற்கு ஒப்பாகும் ஆதலால், 'செயின்' என்கிறார். 'கெடுவான் கேடு நினைப்பான்' என்பது பழமொழி.

7. அடக்கமுடைமை - ஒருவன் தன் மனம் மொழி மெய் என்னும் மூன்றையும் தீய வழியில் செல்லாமல் அடக்கிக் காத்தல். யா - எவற்றையும், காவாராயினும் - காக்கமாட்டா ராயினும், நா காக்க - நாவைமட்டுமேனும் காப்பாராக, சோகாப்பர் - துன்பப்படுவர் சொல்லிழுக்குப்பட்டு - சொற் குற்றத்தில் அகப்பட்டு நாவைக் காத்தலாவது, தீய சொற் களைச் சொல்லாதிருத்தல்.

8. ஒழுக்கமுடைமை - உலகத்தில் உயர்ந்தார் நடந்துகாட் டிய நன்னெறியில் செல்லும் தன்மை. மேன்மை - மேம்பாடு, இழுக்கத்தின் - நெறி தவறுதலினால், எய்துவர் - அடைவர், எய்தாப்பழி - அடையக்கூடாத பெரும்பழி.

9. பொறையுடைமை - ஒருவர் அறிந்தோ அறியாமலோ செய்யும் துன்பங்களை மற்றொருவர் பொறுத்துக்கொள்ளும் தன்மை. திறனல்ல - செய்யத்தகாத கொடுஞ்செயல்கள், தன் பிறர் செய்யினும் - தனக்கு மற்றவர் செய்தாலும், நோ - துன் பம், நொந்து - வருந்தி, நோநொந்து - பெரிதும் வருந்தி, அற னல்ல - அறமல்லாத தீய செயல்களை.

10. அழுக்காறுமை - பிறரது செல்வம் முதலியன கண்டு பொறாமை கொள்ளாமை. கொடுப்பது - ஒருவன் பிறருக்குக் கொடுக்கும் பொருள், அழுக்கறுப்பான் - பொறாமைப்பட்டுக் கொடாதபடி தடுப்பவன், சுற்றம் - உறவினர். 'பொறாமைப்படு பவனின் சுற்றம் கெடும்' என்பதால் அவன் கெடுவதும் சொல்லா மலே விளங்கும். 'கொடுப்பது, உடுப்பது, உண்பது' என்பன

வினையாலணையும் பெயர்கள். 'உடுப்பதூஉம், உண்பதூஉம்' என்பவற்றில் குறில், நெடிலாய் அளபெடுத்துள்ளது. இவ்வாறு ஓசை இன்பங்கருதி அளபெடுத்தலை **இன்னிசையளபெடை** என்பர். 'உடுப்பதும், உண்பதும்' என வரினும் பாட்டில் தளை கெடாதிருக்கவும், இங்கு அளபெடுத்தது இன்னிசை நயம் கருதியேயாகும்.

*11.* புறங்கூறாமை - பிறரைக் காணாத இடத்தில் இகழ்ந்து பேசாமை. பகச்சொல்லி - பிரிவு நேரும்படி பேசி. கேளிர் - நண்பரை, நகச்சொல்லி - மகிழுமாறு பேசி, நட்பாடல் - நட்புக் கொள்ளுதல், தேற்றாதவர் - அறியாதவர். 'நகச் சொல்லி நட்பாடல் தேற்றாதவர், பகச்சொல்லிக் கேளிர்ப்பிரிப்பர்,' என இயைக்க.

*12.* பயனில சொல்லாமை - தமக்கும் பிறர்க்கும் சிறிதும் பயன் விளையாத சொற்களைப் பேசாமை. பல்லார் - பலரும், முனிய - வெறுக்கும்படி, எள்ளப்படும் - இகழப்படுவான். அறிவுடையார் பலரும் இகழவே ஏனையராலும் இகழப்படுவனாதலின் 'எல்லாரும் எள்ளப்படும்,' என்கிறார்.

*13.* ஒப்புரவு அறிதல் - உலகியல் நெறி முறையை அறிந்து ஒழுகுதல். ஒத்தது அறிவான் - உலகநடைக்குப் பொருந்தியதை அறிந்து நடப்பவன், உயிர் வாழ்வான் - உயிரோடு கூடி வாழ்பவன் ஆவான், மற்றையான் - உலகவொழுக்கத்தை அறிந்து நடவாதவன், வைக்கப்படும் - சேர்த்துக் கருதப்படுவான்.

*14.* புகழ் - உலகில் அழியாது நின்று நிலவும் கீர்த்தி. ஈதல் - (இல்லார்க்குக்) கொடுக்க, இசைபட வாழ்தல் - புகழ் வளர வாழ்க, அது - அந்தப்புகழ், ஊதியம் - பயனும், உயிர்க்கு - மக்கள் உயிர்க்கு; இப்படி உயிர்க்கு எனப் பொதுப்படக் கூறினும், அது பிறப்பினுள் சிறந்த மக்களுயிரையே குறிக்கும்.

*15.* வாய்மை - வாயினது தன்மை. புறம் - வெளி, தூய்மை - அழுக்கின்மை, காணப்படும் - உண்டாகும். 'மனத்தூய்மை வாய்மையால் உண்டாகும்,' என்பதற்கு எடுத்துக்காட்டாய்ப் 'புறத்தூய்மை தண்ணீரால் ஆகும்' என்பது கூறப்படுகிறது. சொல்லக் கருதிய பொருளையும் எடுத்துக்காட்டிய பொருளையும் இயைபு படுத்தும் உவமவுருபு இப்பாடலில் இல்லை. இவ்வாறு வருவதனை **எடுத்துக்காட்டு உவமையணி** என்பர்.

*16.* வெகுளாமை - பிறர்பால் கோபம் கொள்ளாமை. 'சினம் செல்லா இடத்துத் தீது,' என இயைக்க. சினம் - கோபம், செல்லா இடம் - தான் சினம்கொள்ள இயலாத தன்னைவிட வலியாரிடம், தீது - தீமை பயப்பது, செல்லிடம் - தன்கோபம் செல்லக்கூடிய தன்னிலும் மெலியாரிடம். 'அதனில் தீய பிற இல்,' என இயைக்க. இல் - இல்லை. 'செல்லிடத்தும்' என்பதில் உள்ள உம்மை, முன்னைய 'செல்லாவிடத்து' என்பதனையும் குறிப்பதால் இறந்தது தழுவிய எச்சவும்மை.

*17.* இன்னா செய்யாமை - எவ்வுயிர்க்கும் துன்பம் தருவனவற்றைச் செய்யாதிருத்தல். நோய் - இன்னாதன, நோய் செய்தார் - துன்பம் செய்தார், வேண்டுபவர் - விரும்புபவர். 'தினை

விதைத்தவன் தினையறுப்பான்; வினை விதைத்தவன் வினையறுப்பான்,' என்னும் பழமொழியும் இப்பாடல் கருத்துப் பற்றியதே. 'துன்பம்' எனப் பொருள் தரும் 'நோய்' என்னும் சொல் அதே பொருளில் மீண்டும் மீண்டும் இதில் வருவதால், இது **சொற்பொருட்பின்வருநிலையணி** எனப்படும்.

*18.* இறை மாட்சி - அரசனது பெருமை. செவி கைப்ப - செவி கேட்கப் பொறுததாக, சொல் - அமைச்சர் அல்லது பெரியோரின் சொற்களை, வேந்தன் - அரசன், கவிகை - குடை, கவிகைக்கீழ்த் தங்கும் - ஆளுகைக்கு உட்பட்டிருக்கும்.

*19.* கல்வி - கற்கத் தகுந்த நூல்களைக் கசடறக் கற்றல். யாதானும் - எதுவாயினும். ஆல் - இரண்டு இடத்தும் அசை. என் - என்ன பயன் கருதி? சாந்துணையும் - இறக்கும் வரையிலும், கல்லாதவாறு - கல்லாமலிருக்கும் விதம்.

*20.* கல்லாமை-கற்கத்தகுந்த நூல்களைக் கற்றுக்கொள்ளாமை. விலங்கு - மிருகம், அனையர் - ஒப்பாவர், இலங்கு நூல்-விளக்கமான நூல், ஏனையவர் - கல்லாத மற்றவர். 'கற்றோர் மக்கள் அனையர்; கல்லாதார் விலங்கு அனையர்,' என்பதாம். பாடற்போக்கில் இவ்வொப்புமைச்சொற்கள் 'விலங்கு, மக்கள்' எனவும், 'கற்றோர், ஏனையவர்' எனவும் நேர் நேராக அன்றி நேரெதிராய் அமைந்துள்ளன. ஆதலால், இதனை **எதிர் நிரல் நிறையணி** என்பர். நிரல் நிறையாவது, வரிசைப்படச் சொற்பொருள்கள் அமைதலாம். 'எதிர் நிரல் நிறை' என்பது ஒன்றற்கொன்று மாறி எதிர் எதிராகச் சொற்பொருள் அமைவது.

*21.* கேள்வி - கேட்க வேண்டிய பொருள்களைத் தக்கார் வாயிலாகக் கேட்பது. இழுக்கல் உடையுழி - வழுக்குதலுடைய நிலத்தில், ஊற்றுக்கோல் - ஊன்றுகோல், வாய்ச்சொல் - வாயினின்று பிறக்கும் சொற்கள். இப்பாடல் **உவமையணி.**

*22.* அறிவுடைமை - உண்மை அறிவைப் பெறுதல். கல்வி கேள்விகளால் அறியும் அறிவு கொண்டு ஆய்ந்து காணும் உயரிய அறிவு இங்கே குறிக்கப்படுகிறது. எப்பொருள் - எந்த ஒரு பொருளையும், யார் யார் வாய்க்கேட்பினும் - எவ்வெவர் வாயிலாகக் கேட்டாலும், மெய்ப்பொருள் - உண்மைப் பயன். 'யார்யார்' என்னும் அடுக்கு, இங்குப் பலரையும் குறித்தது. காண்பது - ஆராய்ந்து அறிய வல்லது. யார் - வினாப்பெயர்.

*23.* குற்றங்கடிதல் - குற்றங்களை நீக்குதல். 'ஒருவரிடம் உளவாம் குற்றங்கள் காமம், வெகுளி, கடும்பற்றுள்ளம், மானம், உவகை, மதம் என்னும் ஆறு,' என்பர். வருமுன்னர் - குற்றங்கள் வந்தணுகும் முன்னரே, எரி - நெருப்பு, வைத்தூறு - வைக்கோற் குவியல், கெடும் - அழியும். சிறு நெருப்புப் பெரிய வைக்கோற் போரையே எரித்து அழித்துவிடுதல் போல, சிறிய குற்றமும் ஒருவனது பெருஞ்செல்வ வாழ்வைச் சீர் குலைக்கும். இப்பாட்டில் **உவமையணி** அமைந்துள்ளது.

*24.* பெரியாரைத் துணைக்கோடல் - தீய வழிகளை விலக்கி நல்வழிச்செல்ல வழி காட்டும் பேரறிவுடையாரைத் தனக்குத்

துணையாகப் பெறுதல். பல்லார் - பலர், பத்து அடுத்த - பத்து மடங்கான, தீமைத்து - தீமையுடையது, நல்லார் - பெரியார், தொடர் - நட்பு, கைவிடல் - கொள்ளாமல் நீங்குதல், தொடர் - தொடர்ச்சி (முதனிலைத்தொழிற்பெயர்).

25. சிற்றினம் சேராமை - அற்பர் கூட்டத்தில் பொருந்தியிராமை. இயல்பு - தன்மை, திரிதல் - மாறுபடுதல், அற்றாகும் - அந்த நிலத்தின் தன்மைக்கு ஏற்ப மாறும், இனம் - சேரும் கூட்டம். 'வானத்திலிருந்து மழையாய் வரும் நீர் ஒரே தன்மையுடையதானாலும் அது வந்து சேரும் நிலத்திற்கு ஏற்ப, நிறம், சுவை, மணம் ஆகியவற்றில் வேறுபடுகிறது. அது போல, ஒருவன் தான் சேரும் கூட்டத்தாரின் இயல்புடையவனாக மாறுவான்,' என்பது கருத்து. இஃது எடுத்துக்காட்டுவமை அணி.

26. தெரிந்து செயல் வகை - செய்யும் செயல்களை முன்னாடி ஆராய்ந்து செய்யும் திறம். செய்தக்க அல்ல - செய்யத் தகாதவை, செய - செய்தலால், செய்தக்க - செய்யத்தக்கன.

27. வலியறிதல் - செய்யும் செயல்களுக்கு உரிய வலிமையை அளந்தறிதல். ஆகாறு (ஆகு + ஆறு) - வருவாய், இட்டிதாயினும் - சிறியதாயினும், போகாறு (போகு + ஆறு) - செலவு, அகலாக்கடை - பெருகாத போது.

28. காலமறிதல் - ஒரு செயல் செய்வதற்கு ஏற்ற காலத்தையறிதல். அருவினை - செய்தற்கு அரிய செயல்கள், கருவியான் - ஏற்ற கருவிகளுடன், காலம் அறிந்து செயின் - உரிய காலத்தை அறிந்து செய்வாராயின், உளவோ - உள்ளனவோ? இவ்வினாவிற்கு 'இல்லை' என்பது பொருள். எனவே, இங்கே ஓகாரம் எதிர்மறை வினா.

29. இடன் அறிதல் - செய்வதற்குரிய செயல்களை இடம் அறிந்து செய்தல். தொடங்கற்க - தொடங்காது. ஒழிக, எவ்வினையும் - எந்தச் செயலையும், எள்ளற்க - இகழாதொழிக, முற்றும் இடம் - முடியும் இடம்.

30. தெரிந்து தெளிதல் - ஒருவருடைய குணம் அறிவு முதலியவற்றைச் சீர்தூக்கி அறிதல். குணம் நாடி - ஒருவருடைய குணங்களை ஆராய்ந்து, மிகை நாடி - குணகுற்றங்களுள் எவை மிகுந்துள்ளன என்று கண்டறிந்து, மிக்க கொளல் - மிகுந்தவற்றைக்கொண்டு அவர்தம் நிலையை மதிப்பிடுக, கொளல் - கொள்க ('அல்' ஈற்று வியங்கோள் வினைமுற்று).

31. தெரிந்து வினையாடல் - தாம் ஆராய்ந்து தெளிந்து ஏற்றுக்கொண்டவர்களைக்கொண்டு செயல்களை முற்றுவித்தல். வினைக்கு உரிமை - செயலாற்றுதற்கு உரியனும் தன்மை, நாடிய பின்றை - ஆராய்ந்து துணிந்த பின்பு, அதற்கு - அந்த வினைக்கு, செயல் - செய்க ('அல்' ஈற்று வியங்கோள் வினை முற்று).

32. சுற்றந்தழால் - சுற்றத்தார் தன்னை விட்டு நீங்காமல் அவரைச் சேர்த்துக்கொள்ளுதல். சுற்றத்தான் சுற்றப்பட

ஒழுகல் - தன் சுற்றத்தால் தான் சூழப்படும் வகையில் அதனை ஆதரித்து நடத்தல், பெற்றத்தான் - பெற்றதால்.

33. பொச்சாவாமை - செயலாற்றுதலில் மறவாமை. இகழ்ச்சியின் - சோர்வினால், உள்ளுக - நினைக்க (வியங்கோள் வினைமுற்று), மகிழ்ச்சியின் - உவகையினாலே, மைந்துறும் போழ்து - வலிமையுறும் பொழுது.

34. ஊக்கமுடைமை - மனச்சோர்வின்றி வினையாற்றலில் கிளர்ச்சியுடைமை. உள்ளுவது - கருதுவது, உயர்வு - உயர்ச்சியையே, உள்ளல் - கருதுக (வியங்கோள் வினைமுற்று), தள்ளினும் - கைகூடாது, தவறினாலும், தள்ளாமை - தவறாமை, நீர்த்து - தன்மையுடையது. 'தள்ளினும்' என்பதில் உள்ள உம்மையால் 'பெரும்பாலும் தவறாது' என்பது கருத்து.

35. ஆள் வினையுடைமை - இடைவிடாத முயற்சியுடையனாதல். அருமையுடைத்து - செய்வதற்குக் கடுமையானது, அசாவாமை - தளராமை.

36. இடுக்கண் அழியாமை - துன்பம் வந்த போது மனங் கலங்காமை. வெள்ளத்தனைய - நீர்ப்பெருக்கை ஒத்த, உள்ள - நினைக்க, கெடும் - இல்லையாம்.

37. சொல்வன்மை - ஒன்றனை எடுத்துச் சொல்லும் திறமை. இணர் - பூங்கொத்தின்கண்ணே, ஊழ்த்தும் - மலர்ந்தும், நாறா மலர் - மணம் வீசாத பூவை, அனையர் - ஒத்திருப்பர் கற்றது - கற்ற நூலை, உணர - பிறர் அறியும்வண்ணம், விரித்துரையாதார் - விளங்கச் சொல்லமாட்டாதவர். 'மலர்ந்தும்மணம் வீசாத மலர் அணியப்படாது ஒதுக்கப்படும். அது போல, நூற்கல்வியிருந்தும் பிறர்க்கு விளங்கச் சொல்லும் அறிவிலார் நன்கு மதிக்கப்படார்,' என்பதாம். இஃது **உவமையணி.**

38. வினைத்திட்பம் - வினையை முடித்தற்கேற்ற மனத்திண்மை. எண்ணிய - எண்ணிய பொருள்களை, எண்ணியாங்கு - எண்ணியபடி, எய்துப-அடைவர், திண்ணியர்-வலிமையுடையவர்.

39. வினை செயல் வகை - செயல்களைச் செய்யும் திறமை. தூங்கிச் செயற்பால - நீட்டித்துச் செய்யத்தக்க வினைகளை, தூங்குக - நீட்டிக்க, தூங்காது செய்யும் வினை - நீட்டியாது உடனடியாகச் செய்யத்தக்க காரியங்களை, தூங்கற்க - நீட்டியாதிருக்க. தூங்குக, தூங்கற்க - இரண்டும் வியங்கோள் வினைமுற்று. இவற்றுள் முன்னது உடன்பாடு; பின்னது எதிர்மறை.

40. அவையறிதல் - சபையின் தன்மையறிந்து பேசுதல். நன்று - இவை நல்லவை, என்றவற்றுள்ளும் - என்று சிறப்பித்துச் சொல்லப்பட்டவற்றுள்ளும், முதுவருள் - மூத்தவர் பலரும் வீற்றிருக்கின்ற சபையுள், முந்து கிளவா - முற்பட்டு ஒன்றைச் சொல்லாத, செறிவு - அடக்கம். முற்பட்டப் பேசுதலை விலக்கியமையால் பிற்பட அவர் கருத்தறிந்து பேசலாம் என்பது பெறப்படும்.

41. பிணியின்மை - நோய் இல்லாமை, விளைவு - பயிர் விளைச்சல், ஏமம் - காவல், என்ப - என்று சொல்லுவர்.

**42.** பொருள் செயல்வகை - பொருளைச் செய்தலின் திறம். ஈனும் - கொடுக்கும், தீது இன்றி - கொடுமை இல்லாமல், அறன் - அறம் (மகரத்திற்கு னகரம் போலி).

**43.** படைச்செருக்கு - போர்ப்படையின் வீரமிகுதி. கானம்- காடு, யானை பிழைத்த - யானையை எறிந்து குறி தவறிய, இனிது - நல்லது. வலியில்லாதாரை எதிர்த்து அழித்தலைவிட வலியுடை யாரை வெல்ல இயலாவிடினும் எதிர்த்தல் சிறப்புடையதாகும் என்பதனை இப்பாடலில் வரும் உவமானம் காட்டுகிறது. இக் கருத்தை, 'முயலைக் கொல்ல அம்பு ஏந்துவதைவிட யானையை வீழ்த்த இயலாவிடினும் வேலை ஏந்தி எதிர்த்தல் இனிது,' என்னும் உவமை வாயிலாக விளக்குகிறார். இங்ஙனம் சொல்லக் கருதிய பொருளைப் பிறிதொன்றன்மேலிட்டுச் சொல்லுதலால் இதனைப் **பிறிது மொழிதல் அணி** என்பர்.

**44.** நவில்தொறும் - கற்குந்தோறும், நூல் நயம் - நூற் பொருள் இன்பம் செய்தல், பயில்தொறும் - பழகுந்தோறும், பண்புடையாளர் - நற்குணமுடையவர், தொடர்பு - நட்பு. பண்புடையவர் நட்புப் பழகுந்தோறும் இனிமை தருவதற்கு உவமானமாய்க் கற்குந்தோறும் நூல் இன்பம் பயக்கும் விதம் எடுத்துக் கூறப்படுகிறது. இஃது **உவமையணி.**

**45.** பகைத்திறம் தெரிதல் - பகையினது தன்மையை ஆராய்தல். முள் மரம் - முள்ளுடைய மரத்தை, இளைதாக - இளமையாயிருக்கும் நிலையில், கொல்க - அழிக்க, காழ்த்த விடத்து - முதிர்ந்த காலத்து, களையுநர் - நீக்குபவரது, கை கொல்லும் - கையை அழிக்கும். 'ஒருவர் தம் பகைவரை அவர் வலிமையுறுவதற்கு முன்பே ஒழிக்க வேண்டும்; அப்பகைவர் வலிவடைந்த போது நீக்கக் கருதினால், அவரே தம்மைப் போக்கி விடுவர்,' என்பதே இங்குக் குறிப்பிடப்படுகிறது. இதனை முள் மரத்தின்மேல் வைத்துக் கூறியமையால் இது **பிறிது மொழிதல் அணி**யாம்.

**46.** குடிமை - உயர்குடியிற்பிறந்தாரது பண்பு. நகை - முகமலர்ச்சி, ஈகை - பிறர்க்குக் கொடுத்தல், இன்சொல் - இனிய சொற்களைக் கூறுதல், இகழாமை - பிறரை இகழ்ந்து பேசாமை, வகை - உரிய தன்மை, வாய்மைக்குடி - என்றும் வேறுபடாத உயர்ந்த குடி.

**47.** மானம் - எப்பொழுதும் ஒருவர் தம் நிலையிலிருந்து தாழ்ச்சியுறாமை. பெருக்கத்து - நிறைந்த செல்வம் உண்டாகும் காலத்து, பணிதல் - பணிவு, சிறிய சுருக்கத்து - குறைந்த செல்வ முடைய வறுமைக்காலத்து, உயர்வு - தம் முன்னைய நிலையி லிருந்து தாழாமை.

**48.** சான்றாண்மை - பல வகையான நற்குணங்களாலும் நிறைந்து அவற்றை ஆளும் தன்மை. இன்னா செய்தார் - துன்பந் தருவனவற்றைச் செய்தவர், சால்பு - சான்றாண்மை, என்ன பயத்தது - என்ன பயனை உடையது? 'என்ன' என்னும் வினா

எதிர்மறைப் பொருள் தருவது; 'ஒரு பயனும் இல்லை' என்பது கருத்து.

49. குடி செயல் வகை - ஒருவன் தான் பிறந்த குடியை உயரச் செய்தலின் திறம். ஆண்மை - ஆளுந்தன்மை, ஒருவற்கு - ஒருவனுக்கு, இல் - தான் பிறந்த குடி, இல்லாண்மை - குடியினை ஆளுந்தன்மை, ஆக்கிக்கொளல் - தனக்கு உரிமையாக்கிக் கொள்ளுதல்.

50. ஏர் - ஏரால் உழுதல், நன்று - நல்லது, எருவிடுதல் - எருவினை நிலத்தில் பெய்தல், கட்ட பின் - களையெடுத்த பின், நீர் - நீர் பாய்ச்சுதல், காப்பு - பயிருக்கு ஊறு நேராமல் காத்தல். 'பயிர் விளைய உழுதல்', எருப்பெய்தல், களை கட்டல், நீர் பாய்ச்சல், காத்தல் என்னும் ஐந்தும் வேண்டும்,' என்பது இதில் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

**வினாக்கள் :**

1. திருக்குறள் நூலின் அமைப்பை விளக்குக.
2. திருக்குறளுக்கு உரை இயற்றியவர் எவ்வெவர்?
3. திருவள்ளுவரைக் குறித்து நமக்குத் தெரியவரும் செய்திகள் யாவை?
4. வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படுபவன் எவன்? ஏன்?
5. 'அன்பினை அடைத்து வைக்கும் தாழ்ப்பாள் இல்லை,' என்றது ஏன்?
6. விருந்தினர் மெல்லியல்பை வள்ளுவர் எவ்வாறு விளக்குகிறார்?
7. 'மோப்பக் குழையும் அனிச்சம்,' என்னும் குறளில் அமைந்த அணி நயத்தை விளக்குக.
8. 'வன்சொல் கூறாது இன்சொல் கூற வேண்டும்,' என்பதனை வள்ளுவர் எவ்வாறு அறிவுறுத்துகிறார்?
9. 'உய்வுண்டாம், உய்வில்லை' எனக் குறளாசிரியர் குறிப்பிடுவது எவற்றை? இவ்வாறு கூறுவதன் நோக்கம் யாது?
10. நடுவு நிற்றலை நீங்கிச் செய்யும் செயல் எதற்கு அறிகுறியாகும்?
11. நாவடக்கம் பற்றிக் குறளாசிரியர் கூறுவது யாது?
12. ஒழுக்கத்தாலும் ஒழுக்கந்தவறுதலாலும் விளைவன யாவை?
13. பொறாமை கொள்பவன் எந்நிலையுறுவான்?
14. 'பகச்சொல்லிக் கேளிர்ப் பிரிப்பர்' — யார்?
15. எல்லாராலும் இகழப்படுபவன் யாவன்? ஏன்?

16. 'உயிர்வாழ்வான், செத்தாருள் வைக்கப்படுபவன்' எனப்படுபவர் யார் யார்? எதனுல்?

17. உயிர்க்கு ஊதியமாவது யாது?

18. ஒருவனுக்குப் புறந்தூய்மையும் அகந்தூய்மையும் எவ்வெவற்ருல் உளவாகும்?

19. 'செல்லாவிடம், செல்லிடம்' என்பவற்றை விளக்குக.

20. துன்பம் இல்லாமையை விரும்புபவர் எதனைச் செய்யார்? ஏன்?

21. உலகு யாருடைய ஆட்சிக்குக் கீழ்ப்படிந்திருக்கும்?

22. 'ஒருவன் வாழ்நாள் இறுதி வரையிலும் கற்க வேண்டும்,' என்று வள்ளுவர் கூறக் காரணம் என்ன?

23. கல்லாதார் எதற்கு ஒப்பாவர்? ஏன்?

24. ஒழுக்கமுடையாரது வாய்ச்சொல்லின் சிறப்பை விளக்குக.

25. அறிவுடைமையின் இயல்பு யாது?

26. வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை நிலை என்னும்?

27. நல்லார் நட்பைக் கைவிடுவதால் என்ன நேரும்?

28. 'நிலத்தியல்பான் நீர் திரிந்தற்ருகும்,' என்னும் உவமை எதற்கு எடுத்துக்காட்டப்பட்டுள்ளது? விளக்குக.

29. 'மாந்தர்க்குச் சேர்க்கையால் அறிவு மாறுபடும்,' என்பதை வள்ளுவர் எவ்வாறு விளக்குகின்ருர்?

30. 'செயல்களைத் தெரிந்து செய்தல் வேண்டும்,' என்பதனை வள்ளுவர் எவ்வாறு எடுத்துரைக்கிருர்?

31. 'ஆகாறு, போகாறு' என்பவற்றை விளக்குக.

32. காலமும் இடமும் அறிந்து செயல் புரிவது குறித்து வள்ளுவர் கூறும் அறிவுரைகள் யாவை?

33. ஒன்றைத் துணிவதற்கு முன் எவ்வெவற்றை ஆராய்தல் வேண்டும்?

34. செல்வம் பெற்ருன் கடமை யாது?

35. மகிழ்ச்சியின் மைந்துறும் போழ்து ஒருவன் கருத வேண்டுவது யாது?

36. 'தள்ளினும் தள்ளாமை நீர்த்து' — எது? ஏன்?

37. முயற்சியின் மேன்மை பற்றி வள்ளுவர் கூறுவது யாது?

38. கற்றது விரித்துரைக்கமாட்டாதாரைக் குறளாசிரியர் எதற்கு ஒப்பிடுகிருர்?

39. 'எண்ணிய எண்ணியாங் கெய்துப' — எப்பொழுது?

40. 'தூங்குக, தூங்கற்க' என வள்ளுவர் அறிவுறுத்துவன எவை?

41. விளக்குக :

(அ) 'வெள்ளத்தனைய இடும்பை'

(ஆ) 'முதுவருள் முந்து கிளவாச் செறிவு'

42. நாட்டிற்கு அணியாய் அமைவன யாவை?

43. தீதின்றி வந்த பொருளால் விளையும் நன்மைகள் என்னென்ன?

44. 'கான முயலெய்த' எனத் தொடங்கும் குறளால் வள்ளுவர் கூறும் பொருளை விளக்குக.

45. பண்புடையாளர் நட்பின் வளர்ச்சிக்குக் காட்டும் உவமையை விளக்குக.

46. 'இளைதாக முள்மரம் கொல்க,' என்பதனால் விளக்கப் படும் பொருள் யாது?

47. நற்குடிப் பிறந்தார்க்கு இயல்பான நான்கு குணங்கள் யாவை?

48. பணிதலும் உயர்வும் ஒருவரிடம் எவ்வெப்பொழுது மிக்கமைதல் வேண்டும்?

49. சான்றாண்மையுடையார் எவ்வாறு நடத்தல் வேண்டும்?

50. 'நல்லாண்மை' என்பது யாது?

51. உழவுத்தொழிலின் கூறுகளை விளக்குக.

52. பின் வரும் அதிகாரப் பெயர்களை விளக்குக :
அடக்கமுடைமை, அழுக்காறாமை, பொச்சா வாமை, குடிமை.

53. குறுகத் தறித்த குறள்' - இக்கூற்றினை இரண்டு எடுத்துக்காட்டுகள் தந்து நிறுவுக.

## 2. பழமொழி

### கற்றாரைக் கற்றாரே அறிவர்.

புலமிக் கவரைப் புலமை தெரிதல்
புலமிக் கவர்க்கே புலனாம்;—நலமிக்க
பூம்புனல் ஊர! பொதுமக்கட் காகாதே;
**பாம்பறியும் பாம்பின கால்.** 1

### செல்வமில்லாரோடு சேர்வார் யாருமிலர்.

முட்டின் றொருவர் உடைய பொழுதின்கண்
அட்டிற்றுத் தின்பவர் ஆயிரவர் ஆபவே;
கட்டலர்தார் மார்ப! கலியூழிக் காலத்துக்
**கெட்டார்க்கு நட்டாரோ இல்.** 2

**எவருக்கும் பயன்படாத செல்வம்**

வழங்கலும் துய்த்தலும் தேற்ருதான் பெற்ற
முழங்கு முரசுடைச் செல்வம் – தழங்கருவி
வேய்முற்றி முத்துதிரும் வெற்ப! அதுவன்ரே
**நாய்பெற்ற தெங்கம் பழம்?**

**நாவடக்கமின்மையால் கேடு வரும்.**

பொல்லாத சொல்லி மறைத்தொழுகும் பேதைதன்
சொல்லாலே தன்னைத் துயர்ப்படுக்கும்; – நல்லாய்!
மணலுள் முழுகி மறைந்து கிடக்கும்
**நுணலுந்தன் வாயாற் கெடும்.** 4

**பொறுமையின் பெருமை**

தந்தீமை யில்லாதார் நட்டவர் தீமையையும்
'எந்தீமை' என்றே உணர்பதாம்; – அந்தண்
பொருதிரை வந்துலாம் பொங்குநீர்ச் சேர்ப்ப!
**ஒருவர் பொறையிருவர் நட்பு.** 5

**தமக்குத் துணையாவார் தாமே.**

'எமக்குத் துணையாவார் யாவர்?' என் றெண்ணித்
தமக்குத் துணையாவார்த் தாம்தெரிதல் வேண்டா;
பிறர்க்குப் பிறர்செய்வ துண்டோ?மற் றில்லை;
**தமக்கு மருத்துவர் தாம்.** 6

**—முன்றுறையரையனார்**

**குறிப்புரை :**

பழமொழியாவது, வழிவழியாய் மக்களிடையே வழங்கி வரும் அறிவுரையாகும். இதை மூதுரை, முதுமொழி, உலக வசனம் எனவும் வழங்குவர்.

ஒவ்வொரு பாடலிலும் ஒவ்வொரு பழமொழியைக் கொண்டு அமைந்த நூலும் **பழமொழி** என்று வழங்கப்படுவதாயிற்று. இந்நூலில் 400 பழமொழிப்பாடல்கள் உள்ளதால், **பழமொழி நானூறு** எனவும் இதனை வழங்குவர். இது பதினெண்கீழ்க் கணக்கு நூல்களுள் ஒன்று. இது திருக்குறள், நாலடியார் என்னும் அறநூல்களையொத்த பெருநூலாகும்.

இப்பழமொழி நூற்பாடல்களுள் ஒவ்வொன்றும் இறுதியில் ஒரு பழமொழியைக் கொண்டுள்ளது. பாடலின் மூன்றும் அடியில் பெரும்பான்மை ஆடூஉ முன்னிலையும் சிறுபான்மை மகடூஉ முன்னிலையும் அமைந்திருக்கும். பாடலின் முற்பகுதியில் பழமொழியின் கருத்து விளக்கமாகக் கவிஞர் தரும் பொருள் காணப்படும்.

இதனை இயற்றியவர் **முன்றுறையரையனார்**. இவரது பெயரிலிருந்து இவரை அரசர் எனக் கருதுவர். இவர் சமண சமயத்தைச் சார்ந்தவர். இவர் காலம் கி. பி. 8ஆம் நூற்றாண்டு.

## அருஞ்சொற்பொருள்:

1. புலம் மிக்கவர் - அறிவு மேம்பட்டவர், புலமைதெரிதல் - அறிவினை ஆராய்ந்து தெரிந்துகொள்ளுதல், புலனும் - விளங்கும், நலம் - நன்மை, பூம்புனல் - அழகிய நீர் வளம், ஊர - ஊரை யுடையவனே (ஆடூஉ முன்னிலை), பொதுமக்கட்கு - கல்வியறிவில் லாதவர்களுக்கு, ஆகாது - விளங்காது, பாம்பின கால் - பாம்பி னுடைய கால்களை. இச்செய்யுளில், 'பாம்பினகால் பாம்பு அறியும்,' என்னும் பழமொழி அமைந்துள்ளது. 'பாம்பின' என் பதில் உள்ள அகர ஈறு, ஆறும் வேற்றுமைக்குரிய பன்மை உருபு.

2. முட்டு இன்று - யாதொரு குறைவும் இல்லாமல் (இன்று - 'இன்றி' என்னும் வினையெச்சத் திரிபு), உடைய பொழுது - செல்வமுடையவராயிருக்கும் காலத்தில், அட்டிற்று - சமைத்த உணவு, ஆப - ஆவார்கள் (பகர ஈற்றுப் பலர்பால் வினைமுற்று), ஏ - அசைநிலை, கட்டு - மொட்டாயிருக் கும் நிலை, மார்ப - மார்பனே (ஆடூஉ முன்னிலை), கலி - கிரேதா, திரேதா, துவாபர, கலி என்னும் நான்கு ஊழிகளுள் இறுதி யானது. கலியூழிக்காலம் - கலியுகமாகிய காலத்தில், கெட்டார் - செல்வம் இழந்து வறியராயினார், நட்டார் - நண்பர் (இதில் 'நள்' என்பது பகுதி). 'கெட்டார்க்கு நட்டாரோ இல்,' என்பது பழமொழி.

3. வழங்கல் - பிறர்க்குக் கொடுத்தல், துய்த்தல் - தான் அனுபவித்தல், தேற்றாதான் - அறியாதவன், முரசுடைச் செல்வம் - முரசறைந்து இரவலரை அழைத்து வழங்கும்படியான பெருஞ்செல்வம், வேய் - மூங்கில் (முத்துப் பிறக்கும் இடங்களுள் மூங்கிலும் ஒன்று என்பர்), வெற்ப - மலைநாடனே (ஆடூஉ முன்னிலை), தெங்கம்பழம் - தேங்காய். இதில் அமைந்த பழமொழி, 'நாய் பெற்ற தெங்கம்பழம்,' என்பது.

4. பொல்லாத - தீமை தரும் சொற்களை (குறிப்பு வினையா லணையும்பெயர்), பேதை - அறிவிலி, சொல்லாலே - தன் பேச்சினாலே, துயர்ப்படுக்கும் - துன்பத்திற்குள்ளாக்கிக்கொள் வான், நல்லாய் - நற்குணமுடையவளே (மகடூஉ முன்னிலை), நுணல் - தவளை. 'நுணலும் தன் வாயாற்கெடும்,' என்பது இப்பாடலில் உள்ள பழமொழி.

5. நட்டவர் தீமை - நண்பர் தமக்குச் செய்த தீங்கு, பொரு திரை - மோதுகின்ற அலைகள், பொங்கு - ஒருகாலைக்கொருகாலை பெருகுகிற, பொங்குநீர் - மிகுநீர், (பொருதிரை, பொங்குநீர் - வினைத்தொகைகள்), சேர்ப்ப - கடல் நாடனே (ஆடூஉ முன்னிலை), ஒருவர் பொறை - ஒருவர் பொறுக்கும் பொறுமையால், இருவர் நட்பு - இருவரது நட்பு நிலைபெறும். 'ஒருவர் பொறை இருவர் நட்பு,' என்பது பழமொழி.

6. தெரிதல் - ஆராய்ந்தறிதல். 'தமக்கு மருத்துவர் தாம்,' என்பது பழமொழி.

**வினக்கள்:**

1. பழமொழி நூலுக்குரிய வேறு பெயர் யாது? அதன் காரணத்தை விளக்குக.
2. பழமொழிப்பாடல்கள் எவ்வாறு அமைந்துள்ளன?
3. முன்றுறையரையனாரைப் பற்றித் தெரியவரும் செய்திகள் யாவை?
4. 'கற்றாரைக் கற்றாரே அறிவர்,' என்பதனைப் பழமொழி யாசிரியர் எவ்வாறு விளக்குகிறார்?
5. பின் வரும் பழமொழிகள் எவற்றை விளக்குகின்றன?
   (அ) 'நாய்பெற்ற தெங்கம் பழம்.'
   (ஆ) 'நுணலுந்தன் வாயாற் கெடும்.
6. இருவரிடையே நட்பு நிலை பெறுவது எதனால்?
7. 'தமக்குத் துணை தாமே,' என்பதனை விளக்கும் பழமொழிப்பாடற்பொருளை விளக்குக.
8. பழமொழிச் செய்யுள்களில் பயின்று வரும் ஆடூஉ முன்னிலைகளின் இலக்கிய நயத்தினை விளக்குக.

# III. தொடர்நிலைச்செய்யுள்

## 1. சிலப்பதிகாரம்

### அடைக்கலக்காதை

#### மாதரி, கவுந்தியைத் தொழுதல்

'மாட மதுரை மாநகர் புகு'கென
மாதவத் தாட்டியும் மாமறை முதல்வனும்
கோவலன் றனக்குக் கூறுங் காலை
அறம்புரி நெஞ்சின் அறவோர் பல்கிய
புறஞ்சிறை மூதூர்ப் பூங்கண் இயக்கிக்குப்
பான்மடை கொடுத்துப் பண்பிற் பெயர்வோள்
ஆயர் முதுமகள் மாதரி யென்போள்
காவுந்தி ஐயையைக் கண்டடி தொழலும்,

#### கவுந்தி அடைக்கலம் தருதல்

'ஆகாத் தோம்பி ஆப்பய னளிக்குங்
கோவலர் வாழ்க்கையோர் கொடும்பா டில்லை.
தீதிலள், முதுமகள், செவ்வியள், அளியள்
மாதரி தன்னுடன் மடந்தையை யிருத்துதற்கு
ஏதம் இன்'றென எண்ணின ளாகி,
'மாதரி! கேள்:இம் மடந்தைதன் கணவன்
தாதையைக் கேட்கிற் றன்குல வாணர்
அரும்பொருள் பெறுநரின் விருந்தெதிர் கொண்டு
கருந்தடங் கண்ணியொடு கடிமனைப் படுத்துவர்.
உடைப்பெருஞ் செல்வர் மனைப்புகு மளவும்
இடைக்குல மடந்தைக் கடைக்கலந் தந்தேன்;

#### கவுந்தி பத்தினிப்பெண்டிர் சிறப்புக் கூறுதல்

மங்கல மடந்தையை நன்னீ ராட்டிச்
செங்கயல் நெடுங்கண் அஞ்சனந் தீட்டித்
தேமென் கூந்தற் சின்மலர் பெய்து
தூமடி உடீஇத் தொல்லோர் சிறப்பின்
ஆயமுங் காவலும் ஆயிழை தனக்குத்

தாயும் நீயே யாகித் தாங்கு.இங்
கென்னொடு போந்த இளங்கொடி நங்கைதன்
வண்ணச் சீறடி மண்மக ளறிந்திலள்;
கடுங்கதிர் வெம்மையிற் காதலன் றனக்கு
நடுங்குதுய ரெய்தி நாப்புலர வாடித்
தன்றுயர் காணாத் தகைசால் பூங்கொடி
இன்றுணை மகளிர்க் கின்றி யமையாக்
கற்புக்கடம் பூண்ட இத்தெய்வ மல்லது
பொற்புடைத் தெய்வம் யாங்கண் டிலமால்!
'வானம் பொய்யாது; வளம்பிழைப் பறியாது;
நீணில வேந்தர் கொற்றஞ் சிதையாது
பத்தினிப் பெண்டி ரிருந்தநா'டென்னும்
அத்தகு நல்லுரை அறியா யோநீ?

### கவுந்தி, மாதரிக்கு விடை அளித்தல்

தவத்தோ ரடைக்கலந் தான்சிறி தாயினும்
மிகப்பே ரின்பந் தரும்.அது கேளாய் :
கேட்டனை யாயினித் தோட்டார் குழலியொடு
நீட்டித் திராது நீபோ'கென்றே

### கோவல கண்ணகியருடன் மாதரி தன் இல்லம் புகுதல்

கவுந்தி கூற, உவந்தன ளேத்தி,
முளையிள வெண்பல் முதுக்குறை நங்கையொடு
சென்றஞா யிற்றுச் செல்சுட ரமயத்துக்
கன்றுதே ராவின் கனைகுர லியம்ப
மறித்தோள் நவியத் துறிக்கா வாளரொடு
செறிவளை ஆய்ச்சியர் சிலர்புறஞ் சூழ
மிளையுங் கிடங்கும் வளைவிற் பொறியும்
கருவிரல் ஊகமுங் கல்லுமிழ் கவணும்
பரிவுறு வெந்நெயும் பாகடு குழிசியும்
காய்பொன் னுலையுங் கல்லிடு கூடையும்
தூண்டிலுந் தொடக்கும் ஆண்டலை யடுப்பும்
கவையுங் கழுவும் புதையும் புழையும்
ஐயவித் துலாமுங் கைபெயர் ஊசியும்
சென்றெறி சிரலும் பன்றியும் பணையும்
எழுவுஞ் சீப்பும் முழுவிறற் கணையமும்
கோலுங் குந்தமும் வேலும் பிறவும்

ஞாயிலுஞ் சிறந்து நாட்கொடி நுடங்கும்
வாயில் கழிந்துதன் மனைபுக் கனளால்
கோவலர் மடந்தை கொள்கையிற் புணர்ந்தென்.

—**இளங்கோவடிகள்**

### குறிப்புரை:

முத்தமிழ்க்கூறுகளும் கொண்டு அமைந்த அருமையான தமிழ்ப்பெருங்காப்பியம் **சிலப்பதிகாரம்**. இதனை 'இயலிசை நாடகப் பொருட்டொடர்நிலைச்செய்யுள்' எனப்போற்றுவர். 'நாடகக் காப்பியம்' எனவும் இதனைக் குறிப்பதுண்டு. இஃது ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்று.

இக்காப்பியம் கோவல கண்ணகியரின் கதையைப் பொருளாய்க் கொண்டமைந்தது. கண்ணகியின் சிலம்பு காரணமாய் விளைந்த வரலாற்றை மையமாய்க் கொண்டுள்ளமையினால், இது சிலப்பதிகாரம் என்னும் பெயரைப் பெற்றுள்ளது.

இந்நூல் சொற்சுவை பொருட்சுவை நிரம்பியது. தமிழ் நாட்டு முடிமன்னர் மூவரின் தலைநகரங்களாகிய புகார் மதுரை வஞ்சி என்னும் மூன்று நகரங்களின் சிறப்புகளை இக்காப்பியத்துள் காணலாம். பழந்தமிழ் மக்களின் சீரிய வாழ்க்கையையும் நாகரிக மேம்பாட்டையும் இது நன்கு தெளிவுபடுத்துகிறது. இக்காவியத்தின் சிறப்புக்கருதியே மகாகவி பாரதியார் இதனை 'நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம்' எனப் போற்றுகிறார்.

சிலப்பதிகாரம் பாடியவர் **இளங்கோவடிகள்**. இவர் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனுக்கும் நற்சோணைக்கும் புதல்வராய்ப் பிறந்தவர்; சேரன் செங்குட்டுவனின் இளவல். இளமையிலேயே இவர் துறவு வாழ்க்கையை மேற்கொண்டமையினால், 'அடிகள்' எனப் போற்றப்படுகின்றார். இவர் சமண சமயத்தைச் சார்ந்தவர். இவர் வாழ்ந்த காலம் கி. பி. இரண்டாம் நூற்றாண்டு என்பர்.

சிலப்பதிகாரம் **புகார்க்காண்டம், மதுரைக்காண்டம், வஞ்சிக்காண்டம்** என்னும் முப்பெரும்பிரிவுகளைக் கொண்டது. இவற்றுள் முறையே 10, 13, 7 ஆக 30 காதைகள் உள்ளன. இவற்றுள், பாடப்பகுதியாகிய **அடைக்கலக்காதை** மதுரைக் காண்டத்துள் 15ஆம் காதையாய் அமைந்துள்ளது.

### கதைத்தொடர்பு:

சோழநாட்டின் தலைநகரமாகிய காவிரிப்பூம்பட்டினத்தில் பெருஞ்செல்வனாய் விளங்கிய **மாசாத்துவான்** மகன் **கோவலன்**. இவன் அந்நகரத்து வாழ்ந்த **மாநாய்கன்** என்னும் வணிகன் செல்வப் புதல்வி **கண்ணகி**யை மணந்து, இல்லறம் இனிது நடத்தி வந்தான். இவன் ஊழ்வினை வசத்தால், ஆடற்கலையில் சிறந்து விளங்கிய **மாதவி** என்னும் நாடக மகளிடம் காதல்

கொண்டு, அவள் இல்லத்திற்கே சென்று விட்டான். கண்ணகி, கணவன் பிரிவால் வாடியிருந்தாள். சில ஆண்டுகள் கழித்தபின் கோவலன் தன் பெருஞ்செல்வம் எல்லாம் இழந்துவிட்டான். அப்பொழுது மாதவியின் அன்பு பொய்யானது என்று கருதி, அவளிடம் மாறுபாடு கொண்டவனாய்த் தன்னில்லம் திரும்பி வந்தான்; கண்ணகியிடம் தான் அவளுக்கு இழைத்த கொடுமை குறித்து வருத்தம் தெரிவித்தான். அவள், கணவன் பொருள் இழந்து வருந்துவது உணர்ந்து, தன்னிடமுள்ள காற்சிலம்பை எடுத்துச் சென்று விற்றுப் பயன்படுத்திக்கொள்ள வேண்டினாள்.

கோவலன் பொருளிழந்த நிலையில் தான் தன் நகரில் வாழ விரும்பவில்லையென்றும், பாண்டி நாட்டுத் தலைநகர்க்குச் சென்று சிலம்பை விற்று அப்பொருளை மூலதனமாக வைத்து வாணிகம் செய்ய விரும்புவதாயும், அன்றே தன்னோடு அவளையும் மதுரைக்குப் புறப்படுமாறும் கூறினான். கணவன் சொல்லுக்கு எதிர் உரையாத மாண்புடைய கண்ணகியும் கோவலனுடன் மதுரைக்குப் புறப்பட்டுவிட்டாள்.

கோவலனும் கண்ணகியும் மதுரை மாநகர் நோக்கி நடந்து வரும் வழியில் சமணத் துறவியரான **கவுந்தியடிகள்** என்னும் மூதாட்டியாரைக் கண்டனர். அந்த அம்மையாரும் மதுரை வர விரும்புவதைச் சொல்லி, இவர்களுடன் மதுரைக்குச் சென்றனர்.

மதுரை நகரப் புறஞ்சேரியில் துறவியர் வாழ்ந்து வந்தமையால், கவுந்தியடிகள் அங்கேயே தங்கிவிடத் தீர்மானித்தார். அப்பொழுது அங்கு **மாதரி** என்னும் ஆயர் குல முதுமகள் வந்தனள். கவுந்தியடிகள் அவளிடம் கோவல கண்ணகியரை அடைக்கலமாய்த் தந்து, அவர்களை அழைத்துச் சென்று ஆதரவளிக்குமாறு கூறினர். மாதரி, கோவல கண்ணகியரை அழைத்துக்கொண்டு தன்னில்லம் சேர்ந்தனள்.

## அருஞ்சொற்பொருள் :

அடி 1. மாநகர் - பெரிய நகர்.

2. மாதவத்தாட்டி - பெருந்தவத்தையுடையவராகிய கவுந்தியடிகள், மாமறை முதல்வன் - வேதம் வல்ல அந்தணனை மாடலன்.

4. அறம் புரிநெஞ்சு - துறவறத்தை விரும்பும் மனம், பல்கிய - பெருகிய.

5. மூதூர் - பழைய நகர், 'மூதூர்ப் புறஞ்சிறை,' என இயைக்க. புறஞ்சிறை - மதிலின் பக்கத்திலமைந்த வெளிநகர்ப் பகுதி, பூங்கண் இயக்கி - அழகிய கண்ணையுடைய இயக்கியாகிய பெண் தெய்வம்.

6. பான்மடை - (பால்மடை) பாற்சோறு, பண்பிற் பெயர்வோள் - அன்புள்ளத்தோடு திரும்புகின்றவள்.

7. முதுமகள் - கிழவி.

அடி 8. காவுந்தி ஐயையை - கவுந்தியடிகளை,

9. ஆப்பயன் - பால் தயிர் நெய்.

10. கோவலர் - ஆயர், கொடும்பாடு - கொடுஞ்செயல்.

11. தீது - பொய் பொறாமை முதலிய குற்றம், செவ்வியள் - நேர்மையானவள், அளியள் - அருளுடையவள்.

12. மடந்தை - பெண் (கண்ணகி).

13. ஏதம் - துன்பம்.

15. தாதை - தந்தை (மரூஉ), தன் குலவாணர் - அவன் பிறந்த குலத்தினைச்சார்ந்த மதுரை வணிகர்.

16. அரும்பொருள் - கிட்டுவதற்கு அருமையான பொருள், பெறுநரின் - பெறுபவரைப் போல.

17. கருந்தடங்கண்ணி - கருமையான அகன்ற கண்களையுடைய கண்ணகி, கடிமனை - காவலையுடைய இல்லம்.

19. இடைக்குல மடந்தை - மாதரி.

20. 'மங்கல நன்னீர்,' என இயைக்க, நன்னீர் - பண்புத்தொகை, நீராட்டி - நீராடும்படி செய்து.

21. செங்கயல் நெடுங்கண் - செந்நிறக் கெண்டை மீன் போலும் நீண்ட கண்கள், அஞ்சனம் - கண்ணுக்கிடும் மை.

22. தேமென் கூந்தல் - இனிய மெல்லிய கூந்தல், சின்மலர் - சில பூக்கள்.

23. தூமடி - தூய்மையான மடிப்புடைவை, உடீஇ - உடுத்து, தொல்லோர் - பழையவர்.

24. ஆயம் - தோழியர் கூட்டம், காவல் - காவல்மகளாகிய செவிலித்தாய், ஆயிழை - ஆராய்ந்து எடுத்த ஆபரணமணிந்த கண்ணகி (வினைத்தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை).

25. தாய் - பெற்ற தாய், தாங்கு - காப்பாற்றுவாயாக.

26. போந்த - வந்த ('புகுந்த' என்பதன் மரூஉ), இளங்கொடி நங்கை - இளமையான பூங்கொடி போன்ற கண்ணகி.

27. வண்ணச்சீறடி - அழகிய சிறிய பாதங்கள், சீறடி - (சிறுமை+அடி) பண்புத்தொகை, மண்மகள் - நிலமாகியபெண் (உருவகம்), அறிந்திலள் - கண்டறியாள் (இது வரையில் வீட்டை விட்டு வெளியில் நடந்தறியாதவள் என்பது கருத்து).

28. கடுங்கதிர் - கடுமையான வெயிலெறிக்கும் சூரியன், காதலன் - அன்புள்ள கணவன்.

29. நடுங்குதுயர் எய்தி - நடுங்கும்படியான துன்பம் அடைந்து, நாப்புலர - நா வறள.

அடி 30. தகை சால் பூங்கொடி - பெருமை மிகுந்த பூங்கொடியைப் போன்றவள் (உவமைத்தொகைப்புறத்துப்பிறந்த அன்மொழித்தொகை).

31. இன்றுணை - இனிய வாழ்க்கைத்துணைவியாகிய மனைவி.

32. கடம் பூண்ட - கடமையாய்க் கொண்டுள்ள. 'இத்தெய்வம்' என்றது கண்ணகியை.

33. பொற்புடைத்தெய்வம் - அழகுடைய தெய்வம், கண்டிலம் - யாம் கண்டதில்லை, ஆல் - அசை.

34. வானம் - பருவமழை, பிழைப்பறியாது - தவறியதில்லை.

35. நீணிலவேந்தர் - பேருலகினை ஆளும் அரசர், கொற்றம் - வெற்றி, சிதையாது - அழியாது.

37. அத்தகு - அப்படிப்பட்ட பெருமையுடைய, நல்லுரை -அறநூல்களுரைக்கும் நன்மொழிகள், அறியாயோ - அறியமாட்டாயா?

38. அடைக்கலம் - பாதுகாக்கும்பொருட்டுத் தரப்பட்ட பொருள்.

39. காவிரிப்பூம்பட்டினத்தில் வாழ்ந்த சாயலன் என்ற வணிகன் மனைவி ஒரு சமயம் சமணப்பெரியார் ஒருவர்க்கு அமுது படைத்தாள். அப்பொழுது ஒரு குரங்கு அங்கு வந்து அம்முனிவர் உண்டு எஞ்சிய உணவைப் புசித்தது; அம்முனிவரை நன்றியுடன் பார்த்தது. அது கண்ட் அம்முனிவர், 'இக்குரங்கை உன் பிள்ளையைப்போலப் பாதுகாப்பாயாக!' என்று விருந்து படைத்தவளுக்குச் சொல்லிச் சென்றார். வணிகன் மனைவி அக்குரங்கினை வளர்த்து வந்தாள். சில காலங்கழித்து அக்குரங்கு இறந்துவிட்டது. பின்னர் அவள் தானம் வழங்கும்போது குரங்கின்பொருட்டும் வழங்கி அது நற்பயன் பெறுமாறு வாழ்த்தினள். அதன் பயனாய் அக்குரங்கு வாரணாசியில் அரசன் மகனாய்ப் பிறந்து, பின்பு தெய்வ வடிவம் பெற்றது. இவ்வரலாற்றைக் கவுந்தியடிகள் மாதரிக்கு எடுத்துக்கூறினார்.

40. கேட்டனையாயின் - (மேற்குறிப்பிட்ட கதைவாயிலாக நீ அடைக்கலத்தின் பயனைக்) கேட்டாயானால், தோட்டார் குழலி - (தோடு + ஆர் + குழலி) பூவிதழ்களை அணிந்த கூந்தலையுடைய கண்ணகி.

41. நீட்டித்திராது - நீண்ட நேரம் இங்கே இராமல், போகு - செல்வாயாக.

42. உவந்தனள் - மகிழ்ந்தவளாய் (முற்றெச்சம்), ஏத்தி - (கவுந்தியடிகளைத்) துதித்து.

43. முளை இள வெண்பல் - மூங்கில் முளை போலும் வெண்மையான பற்கள், முதுக்குறை - பேரறிவு, நங்கை - கண்ணகி.

44. சென்ற ஞாயிறு - மறைந்த சூரியன், செல்சுடர் அமயத்து - சூரியன் மறையும் நேரத்தில்.

அடி 45. கன்று தேரா - (கன்று+தேர்+ஆ) கன்றினைத் தேடி வருகின்ற பசு, கனைகுரல் - முழங்கும் குரலோசை.

46. மறி - ஆட்டுக்குட்டி, நவியம் - கோடரி, (ஆட்டுக்குட்டியையும் கோடரியையும் தோளிலே சுமந்து வருகின்றனர்), உறிக்காவாளர் - உறிக்காவடியைத் தாங்கிய ஆயர்.

47. புறஞ்சூழ - பின்னே சூழ்ந்து வர (மாதரி, கோவலன் கண்ணகியருடன் தன்மனை நோக்கிச் சென்ற போது கண்ணகியின் அழகு கண்டு பெண்டிருட்சிலர் சூழ்ந்து வந்தனராம்).

48. மிளை - காவற்காடு, கிடங்கு - அகழி, வளைவிற்பொறி - தானே வளைந்து வில்லைப்போலத் தாக்கும் பொறி.

49. கருவிரல் ஊகம் - கரிய விரலையுடைய குரங்கு போல அமைந்து சேர்ந்தாரைக் கடிக்கும் பொறி, கல்லுமிழ் கவண் - கல்லை வீசி எறியும் கவண் பொறி.

50. பரிவுறு வெந்நெய் - நன்கு காய்ந்து வாரி இறைப்பதனால் சேர்ந்தாரை வருத்தும் நெய், பாகு அடு குழிசி - நெய் போல வாரியிறைப்பதற்குச் செம்பு உருகும் மிடா.

51. காய் பொன் உலை - உருகக் காய்ச்சி எறிதற்குரிய இரும்பு உலைகள், கல்லிடு கூடை - இடங்கணி என்னும் பொறிக்குக் கல்லிட்டு வைக்கும் கூடை.

52. தூண்டில் - மீன் பிடி தூண்டில் வடிவாய் அமைந்து அகழி தாண்டி மதிலைப் பற்றுவாரைக் கோத்திழுக்கும் கருவி, தொடக்கு - கழுத்தில் பூட்டி முறுக்கும் சங்கிலி, ஆண்தலை அடுப்பு - சேவல் வடிவாய் அமைந்த அடுப்புகள் (உச்சியைக் கொத்தி மூளையைக் கவரும் பொறிகள்).

53. கவை - இரும்புக் கவடிகள் (அகழியிலிருந்து ஏறுவாரைத் தள்ளுபவை), கழு - கழுக்கோல், புதை - அம்புக் கட்டுகள், புழை - அம்பு செலுத்தும் ஏவறைகள்.

54. ஐயவித்துலாம் - நெருங்கினோர் தலையை நெருக்கித் திருகும் மரங்கள், கை பெயர் ஊசி - மதிலைப்பற்றுவார் கையைக் குத்தும் ஊசிகள்.

55. சென்றெறி சிரல் - பகைவர்மேல் பறந்து சென்று கண்ணைக் கொத்தும் மீன்கொத்திப் பறவை போன்ற பொறி, பன்றி - மதில்மேல் ஏறினோரைக் கோரைப் பல்லினால் குத்திக் கிழிக்கும் பன்றி வடிவமான பொறி, பணை - மூங்கில் வடிவாய் உள்ள அடிக்கும் பொறி.

56. எழுவும் சீப்பும் - கதவிற்கு வலியாக உள்வாயிற் படியில் நிலத்தில் விழும்படி அமைந்த விடுமரங்கள் (கதவைத் திறக்கும் போது இம்மரம் மேலே எழுந்து செல்லும். அதனால் இது 'எழுவும் சீப்பும்' என்னும் பெயர் பெற்றது), முழுவிறற் கணையம் - மிக்க வலிமை பொருந்திய கணைய மரங்கள்.

அடி 57. கோல் - எறிகோல், குந்தம் - சிறு சவளம் என்னும் ஆயுதம், வேல் - ஈட்டி முதலியன. பிற - இவை போன்ற வேறு மதிற்பொறிகள்.

58. ஞாயில் - கோட்டையின் ஏவறை, சிறந்து - மிகுந்து, நாட்கொடி - நாள்தோறும் பகைவரை வென்று பறக்கவிட்ட கொடி, நுடங்கும் - அசையும்.

59. வாயில் - மதில் வழி.

60. கோவலர் மடந்தை - ஆயர் மகளாகிய மாதரி, புணர்ந்து - பொருந்தி.

**வினாக்கள் :**

1. சிலப்பதிகாரம்—பெயர்க்காரணம் யாது?
2. சிலப்பதிகாரத்திற்கு வழங்கும் வேறு சிறப்புப் பெயர்கள் யாவை? அப்பெயர்களின் காரணத்தையும் புலப்படுத்துக.
3. சிலப்பதிகாரத்தின் சிறப்புகளை விளக்குக.
4. இளங்கோவடிகளின் வரலாற்றை எழுதுக.
5. சிலப்பதிகாரத்தின் அமைப்பினை விளக்குக.
6. மதுரை மாநகர்ப் புறஞ்சேரியில் வாழ்ந்தவர் எத்தகையவர்?
7. மாதரி புறஞ்சேரிக்குச் சென்றது ஏன்?
8. கவுந்தியடிகள் தம்மைத் தொழுத மாதரியிடம் கண்ணகியை அடைக்கலமாய்த் தருதல் தகும் என எண்ணியது எதனால்?
9. கோவலர் வாழ்க்கை எத்தகையது ?
10. கோவல கண்ணகியரை எது வரை அடைக்கலமாய்க் காக்கும்படி மாதரியிடம் கவுந்தியடிகள் வேண்டினர்? ஏன்?
11. கண்ணகியை மாதரியிடம் அடைக்கலமாய்த் தந்த கவுந்தியடிகள் அவளை எவ்வாறு பாதுகாக்க வேண்டும் என்று கூறினர்?
12. கண்ணகியின் சிறப்புக் குறித்துக் கவுந்தியடிகள் யாது கூறினர்?
13. பத்தினிப்பெண்டிர் இருந்த நாட்டின் சிறப்பினைப் பற்றிக் கவுந்தியடிகள் கூறியது யாது?
14. ஆயர் சேரியில் வாழும் மக்களின் இயல்பினை இளங்கோவடிகள் எவ்வாறு எடுத்துரைக்கின்றார்?
15. மதுரை மாநகர் மதிலில் அமைந்திருந்த பொறிகள் யாவை? அவற்றுள் இரண்டன் இயல்பினை விளக்குக.

16. இடஞ்சுட்டிப் பொருளை விளக்குக:

(அ) 'வண்ணச் சீறடி மண்மகள் அறிந்திலள்.'

(ஆ) 'கற்புக்கடம் பூண்ட இத்தெய்வ மல்லது
பொற்புடைத் தெய்வம் யாம்கண் டிலமால்.'

(இ) 'தவத்தோ ரடைக்கலந் தான்சிறி தாயினும்
மிகப்பே ரின்பந் தரும்.'

17. 'நெஞ்சை அள்ளும்' சிலப்பதிகாரப் பகுதியில் உம் நெஞ்சை அள்ளிய ஓர் இடத்தைச் சுட்டிக்காட்டி விளக்குக.

## 2. சீவக சிந்தாமணி

## நாமகள் இலம்பகம்

### சீவக நம்பியின் பிறப்பு

#### விசயை ஏறிச்சென்ற மயிற்பொறி இடுகாட்டில் இறங்குதல்

மோடுடை நகரின் நீங்கி முதுமரந் துவன்றி யுள்ளம்
பீடுடை யவரும் உட்கப் பிணம்பல பிறங்கி யெங்கும்
காடுடை யளவை யெல்லாங் கழுதிருந் துறங்கு நீழற்
பாடுடை மயிலந் தோகை பைப்பய வீழ்ந்த தன்றே. 1

மஞ்சுசூழ் வதனை யொத்துப் பிணப்புகை மலிந்து, பேயும்
அஞ்சுமம் மயானந் தன்னுள் அகில்வயி ரூர்ந்த கோதை
பஞ்சிமேல் வீழ்வ தேபோற் பல்பொறிக் குடுமி நெற்றிக்
குஞ்சிமா மஞ்ஞை வீழ்ந்து கால்குவித் திருந்த தன்றே. 2

#### சீவக நம்பி பிறத்தல்

'உண்டென வுரையிற் கேட்பார் உயிருறு பாவ மெல்லாம்
கண்டினித் தெளிக!' என்று காட்டுவாள் போல வாகி
விண்தொட நிவந்த கோயில் விண்ணவர் மகளிற் சென்றாள்;
வெண்டலை பயின்ற காட்டுள் விளங்கிழை தமிய ளானாள். 3

இருள்கெட இகலி யெங்கும் மணிவிளக் கெரிய ஏந்தி
அருளுடை மனத்த வாகி அணங்கெலாம் வணங்கி நிற்பப்
பொருகடற் பரிதி போலப் பொன்னனான் பிறந்த போழ்தே
மருளுடை மாத ருற்ற மம்மர்நோய் மறைந்த தன்றே. 4

#### தனியளான விசயையின் அவலம்

'வெவ்வாய் ஓரி முழவாக விளிந்தார் ஈமம் விளக்காக
ஒவ்வாச் சுடுகாட் டுயரரங்கின் நிழல்போல் நுடங்கிப் பேயாட

எவ்வாய் மருங்கும் இருந்திரங்கிக் கூகை குழறிப் பாராட்ட
இவ்வா ருகிப் பிறப்பதோ! இதுவோ மன்னர்க் கியல்வேந்தே! 5

'பிறந்த நீயும் பூம்பிண்டிப் பெருமா னடிகள் பேரறமும்
புறந்தந் தென்பாற் றுயர்க்கடலை நீந்தும் புணைமற் ருகாக்காற்
சிறந்தா ருளரேல் உரையாயால் சிந்தா மணியே! கிடத்தியால்!
மறங்கூர் நுங்கோன் சொற்செய்தேன்; மம்மர் நோயின்
[வருந்துகோ!' 6

### சண்பகமாலை என்னும் தோழியின் வடிவில் தேவதை தோன்றுதல்

தேனமர் கோதை மாதர் திருமகன் திறத்தை யோராள்,
'யானெவன் செய்வல்!' என்றே அவலியா இருந்த போழ்தின்
தானமர்ந் துழையின் நீங்காச் சண்பக மாலை யென்னுங்
கூனிய துருவங் கொண்டோர் தெய்வதங் குறுகிற் றன்றே. 7

விம்முறு விழும வெந்நோய் வனத்துறை தெய்வஞ் சேரக்
கொம்மென வுயிர்த்து நெஞ்சிற் கொட்புறு கவலை நீங்க,
'எம்மனை தமியை யாகி இவ்விட ருற்ற தெல்லாஞ்
செம்மலர்த் திருவின் பாவாய்! யான்செய்த தீமை,' என்ருள். 8

'பூவினுட் பிறந்த தோன்றற் புண்ணியன் அனைய நம்பி
நாவினுள் உலக மெல்லாம் நடக்கும்;ஒன் ருது நின்ற
கோவினை அடர்க்க வந்து கொண்டுபோ மொருவன்; இன்னே
காவியங் கண்ணி ஞய்!யாம் மறைவது கருமம்,' என்ருள். 9

### விசயை மறைந்து நின்று மகவை நோக்குதல்

சின்மணி மழலை நாவிற் கிண்கிணி சிலம்பொ டேங்கப்
பன்மணி விளக்கின் நீழல் நம்பியைப் பள்ளி சேர்த்தி
மின்மணி மிளிரத் தேவி மெல்லவே யொதுங்கு கின்ருள்,
நன்மணி யீன்று முந்நீர்ச் சலஞ்சலம் புகுவ தொத்தாள். 10

'நல்வினை செய்தி லாதேன் நம்பி!நீ தமியை யாகிக்
கொல்வினை மாக்கள் சூழக் கிடத்தியோ!' என்று விம்மாப்
புல்லிய கொம்பு தானோர் கருவிளை பூத்த தேபோல்
ஒல்கியோர் கொம்பு பற்றி யொருகணல் நோக்கி நின்ருள். 11

### கந்துக்கடன், சீவகனைக் காணுதல்

நாளொடு நடப்பது வழுக்கி மின்னெடுநர்
கோளொடு குளிர்மதி வந்து வீழ்ந்தெனக்

ஞாளக வுடையினன் கந்து நாமனும்
வாளொடு கனையிருள் வந்து தோன்றினன். 12

புனைகதிர்த் திருமணிப் பொன்செய் மோதிரம்
வனைமலர்த் தாரினன் மறைத்து வண்கையால்
துனைகதிர் முகந்தென முகப்பத் தும்மினன்;
சினைமறைந் தொருகுரல் 'சீவ!' என்றதே. 13

என்பெழுந் துருகுபு சோர ஈண்டிய
அன்பெழுந் தரசனுக் கவலித் தையனை
'நுன்பழம் பகைதவ நூறு வாய்,'என
இன்பழக் கிளவியின் இறைஞ்சி ஏத்தினள். 14

### கந்துக்கடன் இறந்த தன் புதல்வனை இடுகாட்டில் இட்டுச் சீவகனைக் கொண்டு செல்லுதல்

ஒழுக்கியல் அருந்தவத் துடம்பு நீங்கினர்
அழிப்பரும் பொன்னுடம் படைந்த தொப்பவே
வழுக்கிய புதல்வனங் கொழிய மாமணி
விழுத்தகு மகனொடும் விரைவின் ஏகினன். 15

மின்னடு கனையிருள் நீந்தி மேதகு
பொன்னுடை வளநகர் பொலியப் புக்கபின்
தன்னுடை மதிசுடத் தளருந் தையலுக்(கு)
இன்னுடை யருள்மொழி யினிய செப்பினன். 16

### கந்துக்கடன் தன் மனைவியிடம் சீவகனைக் கொடுத்தல்

'பொருந்திய உலகினிற் புகழ்கண் கூடிய
அருந்ததி யகற்றிய ஆசில் கற்பினாய்!
திருந்திய நின்மகன் தீதின் நீங்கினன்!
வருந்தல்நீ யெம்மனை! வருக!' என்னவே 17

கள்ளலைத் திழிதருங் களிகொள் கோதைதன்
உள்ளலைத் தெழுதரும் உவகை யூர்தர
வள்ளலை வல்விரைந் தெய்த நம்பியை
வெள்ளிலை வேலினன் விரகின் நீட்டினன். 18

### மகிழ்ச்சிக்கொண்டாட்டம்

அழுகுரல் மயங்கிய அல்லல் ஆவணத்
தெழுகிளை மகிழ்ந்தெம தரசு வேண்டினன்

கழிபெருங் காதலான் கந்து நாமனென்
றுழிதரு பெருநிதி யுவப்ப நல்கினன். 19

திருமகற் பெற்றெனச் செம்பொற் குன்றெனப்
பெருநல நிதிதலை திறந்து பீடுடை
இருநிலத் திரவலர்க் கார்த்தி யின்னணஞ்
செருநிலம் பயப்புறச் செல்வன் செல்லுமே. 20

—**திருத்தக்கதேவர்**

## குறிப்புரை :

**சீவக சிந்தாமணி**, தமிழிலுள்ள ஐம்பெருங்காப்பியங்களுள் முதன்மையாய் வைத்து எண்ணப்படுவது; சமணப் புலவர்கள் செய்த காப்பியங்களுள் தலையாய சிறப்புடையது; சீவகன் என்பானின் வரலாற்றைப் பொருளாய்க் கொண்டது. சீவகன் தாய் விசயை தன் மகன் பிறந்த போது 'சிந்தாமணியே' என்று விளித்ததாலும் தேவதை 'சீவ' என்று வாழ்த்தியமையாலும் இவனுக்குச் 'சீவக சிந்தாமணி' என்பது பெயராயிற்று. இவனது வரலாற்றையுரைப்பது வாயிலாய்ச் சமண சமயக் கருத்துகளையும் ஆங்காங்கே தருகிறது இந்நூல்.

விருத்தப்பாவினாலாகியது இக்காப்பியம்; 13 இலம்பகங்களும் 3154 செய்யுள்களும் கொண்டது. பாடப்பகுதி, முதல் இலம்பகமான **நாமகள் இலம்பகத்திலுள்ளது**.

சீவக சிந்தாமணி பாடியவர் **திருத்தக்கதேவர்**. இவர் சோழர் குலத்தில் பிறந்தவர்; தென்மொழி வடமொழிப் புலமையிற் சிறந்தவர்; துறவு பூண்டு சமண சமய நெறியில் முனிவராய் இலங்கியவர். இவர் இந்நூலைப் பாடுமுன் தம் ஆசிரியரின் கட்டளைப்படி **நரி விருத்தம்** என்னும் சிறு நூல் ஒன்றும் செய்தார் என்பர். இவரது காலம் கி.பி. பத்தாம் நூற்றாண்டு என்பது ஆராய்ச்சியாளரின் கொள்கை.

## கதைத்தொடர்பு :

ஏமாங்கத நாட்டுத் தலைநகரான இராசமாபுரியில் இருந்து அரசாண்டவன் **சச்சந்தன்**. இம்மன்னன் தன் மனைவி **விசயை**யுடன் இன்பப் பொழுது போக்கினன்; தான் கவனிக்கவேண்டிய அரசகாரியங்களைக் **கட்டியங்காரன்** என்னும் அமைச்சன் பொறுப்பில் ஒப்படைத்துவிட்டான். கட்டியங்காரன் வஞ்சகமாய் அரசனைக் கொன்றுவிட்டுத் தானே அரசனாகக் கருதினன்.

இதற்கிடையில் விசயை கனவு ஒன்று கண்டு, தனக்கும் தன் கணவனுக்கும் இடையூறு நேருமோ என்று அஞ்சினள். அப்போது அவள் கருவுற்றிருந்தாள். கனவின் பயன் உணர்ந்து அரசன் அவளைத் தேற்றினன்.

பின்னர், சச்சந்தன் பறக்கும் மயிற்பொறி ஒன்றைத் தச்சனைக்கொண்டு செய்வித்தான். அந்த மயிற்பொறியைச் செலுத்த விசயை பயின்றாள்.

இதற்கிடையில் கட்டியங்காரன் நல்லமைச்சர் அறிவுரைகளை ஏலாமல், தானே அரசனாகப் போவதாய் முடிவு செய்தான்; சச்சந்தனைக் கொல்வதற்குப் படையெடுத்துச் சென்றான். செய்தி யறிந்த சச்சந்தன் விசயையைத் தேற்றி, அவளை மயிற்பொறியில் ஏற்றி அனுப்பிவிட்டான். பின்பு அவன் கட்டியங்காரனோடு போர் செய்து மடிந்தான். கட்டியங்காரன் அரசனாய் முடிசூட்டிக்கொண்டான். அப்பொழுது முழங்கிய வெற்றி முரசொலி கேட்டு, மயிற்பொறியிற்சென்ற விசயை சோர்வுற்றாள். மயிற்பொறி சுடுகாட்டில் இறங்கியது. அங்கே **சீவக நம்பி** பிறந்தான்.

## அருஞ்சொற்பொருள் :

1. மோடு - பெருமை, முதுமரம் - பழைய மரங்கள், பீடு - பெருமை (இங்கு மனவுறுதி), உட்க - அஞ்சும்படி, கழுது - பேய், பாடு - பக்கம், உடைமயில் - விசை குறைந்த மயிற்பொறி (வினைத்தொகை), பைப்பய - மெல்ல மெல்ல. அன்று, ஏ - அசைகள்.

2. மஞ்சு - மேகம், பிணப்புகை - பிணங்கள் எரிவதால் எழுகின்ற புகை, மலிந்து - நிறைந்து, அகில் வயிறு ஆர்ந்த கோதை - அகில் மணத்தைத் தன்னிடத்தே கொண்ட மலர் மாலை, பஞ்சி - பஞ்சு, பொறி - புள்ளி, குடுமி நெற்றிக் குஞ்சிமா மஞ்ஞை - உச்சியில் கொண்டையையும் மயிரையும் உடைய பெரிய மயில்.

3. 'உயிருறு பாவமெல்லாம் உண்டென உரையிற் கேட்பார்,' என இயைக்க. உரையில் - நூல்களில் உள்ள உரைகளிலே, கண்டு - நேரில் பார்த்து, தெளிக - தெளிவு பெறுக, விண் தொடநிவந்த கோயில் - வானளாவ உயர்ந்த அரண்மனை, விண்ணவர் மகளின் - தேவர் மகளைப்போல, வெண்டலை - வெண்மையான மண்டையோடுகள், பயின்ற - நிறைந்த, விளங்கிழை - ஒளி படைத்த ஆபரணங்களை அணிந்தவளாகிய விசயை (வினைத்தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை). அரண்மனையில் செல்வச் செழிப்புடன் பலர் சூழ வாழ்ந்த விசயை இப்பொழுது சுடுகாட்டில் துணையின்றித் தனிமையிலுள்ளாள் என்பது கருத்து. இது பாவத்தின் விளைவு என்பார், 'காட்சியளவையில் காட்டுவாள் போல,' என உவமை கூறுகிறார்.

4. இருள் கெட இகலி - இருள் நீங்கும்படி ஓட்டி, மணி விளக்கு - அழகிய விளக்கு, அணங்கு எலாம் - தேவதை எல்லாம், பொருகடல் - அலைகள் மறிந்து விழும் கடல், பரிதி - சூரியன், பொன்னனான் - பொன் போலப் பெறுதற்கு அரியவன் (சீவகன்) போழ்தே - பொழுதில், மருளுடை - மயக்கங்கொண்ட, மாதர் பெண்ணாகிய விசயை, மம்மர் நோய் - மயக்கத்துன்பம். 'சீவகன் வீடு பெறுவான் என்பது கருதித் தேவதைகள் வணங்கின;' என்பர்.

5. வெவ்வாய் ஓரி - கொடிய வாயையுடைய நரியின் ஊளை, முழவு - மத்தளம், விளிந்தார் - இறந்தவர், ஈமம்-

பிணம் சுடுதீ, ஒவ்வார் - பிறப்போர்க்குப் பொருந்தாத, உயர் அரங்கில் - உயர்ந்த மேட்டிடத்தில், நுடங்கி - அசைந்து, எவ்வாய் மருங்கும் - எவ்விடத்தும், கூகை - 'கோட்டான்' என்னும் பேராந்தை, குழறிப் பாராட்ட - குழறுகின்ற ஒலியால் பாராட்ட, இவ்வாருகி - இத்தகைய இரங்கத்தக்கதாய், இயல் - தன்மை. 'முழவம் முழக்க, மணி விளக்கம் நின்றொளிர, அரண்மனை அரங்கில் மகளிர் ஆட, மாந்தர் மகிழப் புலவர் போற்றி வாழ்த்தப் பிறக்க வேண்டிய நீ இவ்வாறு சுடுகாட்டில் பிறப்பது பொருத்தமோ?' என்று இரங்கினுள். இப்பாடல் உருவகம்.

6. பிறந்த நீயும் - என் வருத்தம் நீங்கப் பிறந்த நீயும், பூம்பிண்டிப் பெருமான் அடிகள் - அழகிய அசோக மரநிழலில் அமர்ந்த அருகப்பெருமான், புறந்தந்து - பாதுகாத்து, நீந்தும் புணை - நீந்துதற்குரிய தெப்பம், ஆகாக்கால் - ஆகாவிட்டால், சிறந்தார் - துணையாவதற்குச் சிறந்தவர், சிந்தாமணி - தேவருலகில் உள்ள ஒரு சிறந்த இரத்தினம், கிடத்தியால் - (ஒன்றும் உரையாமல்) கிடக்கின்றாய், மறம் கூர் - வீரமிக்க, நும் கோன் - உம் அரசனுன சச்சந்தன், சொல் - சொல்லியதை, செய்தேன் - செய்தவளாகிய யான் (தன்மை ஒருமை வினையாலணையும் பெயர்), மம்மர் - மயக்கம், வருந்துகோ - வருந்துவேனே? இப் பாடலில் துயர்க்கடலை நீந்தும் புணை என்பது உருவகம்.

7. தேன் அமர் கோதை மாதர் - தேன் பொருந்திய மாலை அணிந்த விசயை, திறம் - நற்றிறம், ஓராள் - அறியாதவளாய், எவன் செய்வல் - என்ன செய்வேன், அவலியா இருந்த போழ்தின் - வருந்தியிருந்த சமயத்தில், உழை - பக்கம், சண்பக மாலை என்னும் கூனி - விசயையின் தோழி, தெய்வதம் - தேவதை.

8. விம்முறு - விம்முதலுக்குரிய, விழுமம் வெந்நோய் - தேவியினது விழுமத்தாலே துயர் கொண்ட, கொம்மென - விரைவாக, உயிர்த்து - பெருமூச்சு விட்டு, கொட்புறு கவலை - உள்ளத்தில் சுழன்றுகொண்டிருந்த துன்பம், எம்மனை (எம்+அனை) - எம் தாயே, (அனை - இடைக்குறை விகாரம்), தமியை ஆகி - தனித்து, இடர் - துன்பம், செம்மலர் - செந்தாமரை, திருவின் பாவாய் - திருமகளையொத்த பெண்ணே, பாவை - உவமையாகுபெயர், நீங்க - நீங்குவதாக (வியங்கோள் வினைமுற்று).

9. பூவினுட்பிறந்த தோன்றல் புண்ணியன் - தாமரைப் பூவில் பிறந்த முருகன், நம்பி - ஆடவருள் சிறந்தான் (சீவகன்), நாவினுள் - நாவினின்று பிறக்கும் சொல்லால் (சொல் பிறப்பதற்குக் கருவியான நாவினின்று பிறக்கும் சொல்லைக்குறிப்பதால் கருவியாகு பெயர்), ஒன்ருது நின்ற கோ - பொருந்தாது பகைத்து நின்ற அரசனை (கட்டியங்காரனை), அடர்க்க - கொல்லும்படி, இன்னே - இப்பொழுதே, காவி - நீலமலர், கருமம் - செயல்.

10. சின்மணி - (சில்+மணி) சில மணிகள், கிண்கிணி - காலிலணியும் ஒருவகை ஆபரணம், ஏங்க - ஒலிக்க, மணிவிளக்கு -

மணிகளாகிய விளக்கு, பள்ளி - படுக்கை, சேர்த்தி - கிடத்தி, மின் மணி - ஒளி விடும் மணி, மிளிர - ஒளி செய்ய, தேவி - விசயை, முந்நீர் - கடல் (ஆற்று நீர், ஊற்று நீர், மழை நீர்), சலஞ்சலம் - வலம்புரிச் சங்கம் ஆயிரம் சூழ்ந்துள்ள சங்கு.

11. தமியையாகி - தனித்தவளாய், கொல்வினை மாக்கள் - கொலை எனும் கொடுந்தொழில் புரியும் விலங்குகள், விம்மா - விம்மி ('செய்யா' என்னும் வாய்பாட்டு வினையெச்சம்), புல்லிய - தழுவிய. 'கொம்பு புல்லிய் ஓர் கருவிளை தான் பூத்ததே போல்,' என இயைக்க. ஒல்கி - ஒதுங்கி.

12. நாள் - நட்சத்திரம், வழுக்கி - தவறி, மின்னொடு ஊர் கோள் - மின்னலோடு ஊர்ந்து செல்லுகின்ற மேகம், குளிர் மதி - தண்ணிய திங்கள், காளக உடையினன் - கரிய உடையை அணிந்தவன், கந்து நாமன் - கந்துக்கடன் என்னும் பெயரை உடையவன், கனையிருள் - மிக்க இருள். இஃது உவமையணி.

13. புனைகதிர்த் திருமணி பொன்செய் மோதிரம் - அழகிய ஒளிவிடும் மணி அழுத்திச் செய்த பொன் மோதிரம், வனைமலர்த் தாரினான் - மலரினால் தொடுக்கப்பட்ட மாலையையணிந்த கந்துக் கடன், துனைகதிர் - இருளை நீக்குவதற்கு விரைகின்ற சூரியனது ஒளிக்கிரணம் (வினைத்தொகை), முகப்ப - வாரியெடுக்க, தும்மினான் - (சீவகநம்பி) தும்மினான். தும்முதல் நல்ல நிமித்தம் என்பர். சினை மறைந்து - மரக்கிளை மறைவிலிருந்து, ஒரு குரல் - ஓர் ஒலி, சீவ - வாழ்க.

14. என்பு - எலும்பு, உருகுபு - உருகி ('செய்பு' என்னும் வாய்பாட்டு வினையெச்சம்), சோர - தன்னை மறக்க, ஈண்டிய அன்பு - திரண்ட அன்பு, அரசனுக்கு அவலித்து - சீவகன் தந்தை யாகிய சச்சந்தன் தன் மகனைக் காணாது மறைந்த நிலைக்கு வருந்தி, நுன் - உனது, பழம்பகை - பழைய பகைவனான கட்டியங்காரன், தவ - மிக (உரிச்சொல்), நூறுவாய் - அழிப் பாய், இன்பழக் கிளவியின் - இனிய கனி போலும் இன்சொல் லால், இறைஞ்சி - இறைவனை வணங்கி, ஏத்தினாள் - சீவக நம்பியை வாழ்த்தினாள்.

15. ஒழுக்கியல் அருந்தவம் - ஒழுக்கத்தால் சிறந்த தவம், அழிப்பரும் பொன்னுடம்பு - அழிக்க இயலாத உயர்ந்த தேவ வுடம்பு, வழுக்கிய புதல்வன் - இறந்த மகன், மாமணி விழுத்தகு மகன் - மாமணிபோல மேம்பட்ட மகனாகிய சீவகன், ஏகினான் - சென்றான். சீவகனைக் கந்துக்கடன் பெறுவதற்கு இறந்த தன் மகனுடம்பு காரணமாக அமைவதனால் தவவுடம்பைக் கந்துக் கடன் மகனுக்கு உவமையாக்குகிறார் கவிஞர்.

16. மின் அடு கனை இருள் - ஒளியையும் விழுங்கும் மிக்க இருள், பொன் உடை வளநகர் - செல்வம் நிறைந்த வளமிகும் இல்லம், மதி - அறிவு, சுட - மகவின் பிரிவு வருத்துதலாலே, தையல் — கந்துக்கடனின் மனைவி, இன்னுடை அருள்மொழி - முனிவன் கூறிய இனிய அருள் வார்த்தை.

17. புகழ் கண் கூடிய - புகழ் எல்லாம் திரண்ட, அருந்ததி அகற்றிய - கற்பரசியாகிய அருந்ததியையும் வென்ற, ஆசு இல் கற்பினாய் - குற்றமற்ற கற்பினை உடையாய், தீதின் நீங்கினான் - சாதலிலிருந்து தப்பினான், வருந்தல் - வருந்தாதே, எம் மனை - எம் மனையாளே, மனை - மனைவி (அண்மை விளி), என்னவே - என்று கூற. இப்பாட்டின் பொருள் முடிவுறாமல் அடுத்த பாடலுடன் தொடர்வதால் இது குளகம் எனப்படும்.

18. கள் - தேன், களிகொள் கோதை - களிப்பையுடைய மாலையாள், உள் - உள்ளம், அலைத்து - அலை பாய்ந்து, எழுதரும் - எழும், ஊர்தர - மிக, வள்ளலை - வள்ளலாகிய தன் கணவனை, வல் விரைந்து எய்த - மிகவும் விரைந்து சென்று நெருங்க, வெள்ளிலை வேலினான் - வெண்மையான இலை போன்ற முகப்புடைய வேலையுடைய கந்துக்கடன், விரகின் நீட்டினான் - தந்திரம் செய்து கொடுத்தான்; அதாவது, விசயை அணிந்த திலகத்தை மாற்றித் தன் மகன் என நம்பும்படி கொடுத்தல்.

19. அழுகுரல் - அரசன் சச்சந்தன் மறைந்ததால் ஏற்பட்ட அழுகுரல், மயங்கிய - கலந்தொலித்த, ஆவணத்து - கடைத்தெருவில், எழுகிளை - வளரும் உறவு, கழிபெருங் காதலான் - மிகுந்த அன்பினாலே, உழிதருபெருநிதி - நிலையற்றுச் சுழலும் பெருஞ்செல்வத்தை.

20. திருமகன் பெற்றென - அழகிய மகனை வளர்க்கும் பேறு பெற்றதனால், செம்பொற்குன்று - பொன் மலை, நிதி தலை திறந்து - நிதியறையைத் திறந்து, இருநிலத்து - பெரியவுலகில், இரவலர் - இரப்பவர், ஆர்த்தி - நிரம்பக் கொடுத்து, இன்னணம் - இவ்வாறு (இன்னவண்ணம் என்பதன் மரூஉ), செருநிலம் பயப்புற - போரிலே பகையை வெல்லும் பயன்பெற, செல்வன் செல்லும் - செல்வனாகிய கந்துக்கடன் கொடைக்கடன் பூண்டு ஒழுகினான்.

## வினாக்கள்:

1. சீவகசிந்தாமணிக் காப்பியத்தின் பெயர்ப்பொருத்தத்தை விளக்குக.
2. சீவகசிந்தாமணிக் காப்பியத்தின் அமைப்பை விளக்குக.
3. திருத்தக்கதேவரின் வரலாற்றை எழுதுக.
4. மயிற்பொறி இறங்கிய சுடுகாடு எவ்வாறு வருணிக்கப்பட்டுள்ளது?
5. சீவகன் சுடுகாட்டில் பிறந்த போது அணங்குகள் செய்தது யாது?
6. சீவகன் சுடுகாட்டில் பிறந்தது நோக்கித் தாய் விசயை துன்பமுற்றுக் கூறிய உரைகள் யாவை?
7. இடஞ்சுட்டி விளக்குக :

   (அ) 'சிந்தாமணியே கிடத்தியால்!'

(ஆ) 'செம்மலர்த் திருவின் பாவாய்!
யான்செய்த தீமை!'

(இ) 'சினைமறைந் தொருகுரல் 'சீவ!' என்றதே.'

(ஈ) 'அருந்ததி யகற்றிய ஆசில் கற்பினாய்!'

8. சண்பகமாலை வடிவில் தோன்றிய தேவதை விசயைக்குக் கூறியது யாது?

9. 'நன்மணி யீன்று முந்நீர்ச் சலஞ்சலம் புகுவ தொத்தாள்' — யார்? இவ்வுவமையை விளக்குக.

10. கந்துக்கடன் வந்து தோன்றியதைக் கவிஞர் எவ்வாறு வருணிக்கின்றார்?

11. கந்துக்கடன் இறந்த தன் மகனைச் சுடுகாட்டிலிட்டுச் சீவகனை எடுத்துச் சென்றதற்குக் கவிஞர் கூறும் உவமை யாது? விளக்குக.

12. கந்துக்கடன் தன் மனைவியிடம் யாது கூறிச் சீவகனைக் கொடுத்தனன்?

13. சீவகனைப் புதல்வனாய் ஏற்றெடுத்துச் சென்ற கந்துக் கடன் தன் மகிழ்ச்சியை எவ்வாறு கொண்டாடினன்?

14. 'தன்னுடை மதிசுடத் தளருந் தையல்' — யார்? அவள் ஏன் தளர்ந்தாள்? அவளது சிறப்பைக் கவிஞர் எவ்வாறு எடுத்துரைக்கின்றார்?

15. விளக்குக :

(அ) 'அகில்வயி றார்ந்த கோதை
பஞ்சிமேல் வீழ்வ தேபோல்'

(ஆ) 'புல்லிய கொம்பு தானோர்
கருவிளை பூத்த தேபோல்'

16. பாடப்பகுதியில் காணப்படும் காப்பிய நயத்தினை விளக்குக.

## 3. கம்பராமாயணம்

## சுந்தர காண்டம்

### சூடாமணிப்படலம்

#### அனுமனது விண்ணப்பம்

'கேட்டியடி யேனுரை : முனிந்தருளல்! கேளான்
வீட்டியிடு மேலவனை வேறல்வினை யன்றால்.
ஈட்டியினி யென்பல? இராமனெதிர் நின்னைக்
காட்டியடி தாழ்வென்; அது காண்டியிது காலம். 1

'அருந்ததி! உரைத்தி;அழ கற்கருகு சென்று உன்
மருந்தனைய தேவிநெடு வஞ்சர்சிறை வைப்பில்
பெருந்துயரி னோடுமொரு வீடுபெற லில்லா
திருந்தனள்!' எனப்பகரின் என்னடிமை என்னும்! 2

'வேறினி விளம்பவுள தன்று;விதி யாலிப்
பேறுபெற என்கணருள் தந்தருளு; பின்போய்
ஆறுதுயர்; அஞ்சொலிள வஞ்சி!அடி யென்தோள்
ஏறுகடி'தென் றுதொழு தின்னடிப ணிந்தான். 3

**சீதை மறுத்துரைத்தல்**

'அரிய தன்று;நின் னாற்றலுக் கேற்றதே;
தெரிய வெண்ணினை; செய்வதுஞ் செய்தியே;
உரிய தன்றென ஓர்கின்ற துண்டதென்
பெரிய பேதைமைச் சின்மதிப் பெண்மையால். 4

'பொற்பி றங்கல் இலங்கை பொருந்தலர்
எற்பு மால்வரை யாகிய தில்லெனின்
இற்பி றப்பும் ஒழுக்கும் இழுக்கமில்
கற்பும் யான்பிறர்க் கெங்ஙனங் காட்டுகேன்? 5

'அல்லல் மாக்கள் இலங்கைய தாகுமோ?
எல்லை நீத்த வுலகங்கள் யாவுமென்
சொல்லி னாற்சுடு வேன்!அது தூயவன்
வில்லின் ஆற்றற்கு மாசென்று வீசினேன்!' 6

**அனுமன், சீதையைப் புகழ்ந்து இராமனுக்கு அவள் அறிவிக்கும் செய்தி கேட்டல்**

'நன்று நன்றிவ் வுலகுடை நாயகன்
தன்று ணைப்பெருந் தேவி தவத்தொழில்!'
என்று சிந்தை களித்துவந் தேத்தினன்
நின்ற சங்கை இடரொடும் நீங்கினன். 7

'இருளும் ஞாலம் இராவண னால்;இது
தெருளு நீ;இனிச் சில்பகல் தீங்குறல்!
மருளு மன்னவற் கியான்சொலும் வாசகம்
அருளு வாய்!'என் றடியின் இறைஞ்சினன். 8

### இராமனுக்குத் தெரிவிக்குமாறு சீதை சொன்னவை

'இன்னம் ஈண்டொரு திங்கள் இருப்பல்யான்;
நின்னை நோக்கிப் பகர்ந்தது, நீதியோய்!
பின்னை ஆவி பிடிக்கின்றி லேன்;அந்த
மன்னன் ஆணை! இதனை மனக்கொள்நீ. 9

'ஆரந் தாழ்திரு மார்பற் கமைந்ததோர்
தாரந் தானல ளேனுந் தயாவெனும்
ஈரந் தான்மனத் தில்லையென் றாலுந்தன்
வீரங் காத்தலை வேண்டென்று வேண்டுவாய். 10

'வந்தெ னைக்கரம் பற்றிய வைகல்வாய்
'இந்த இப்பிற விக்கிரு மாதரைச்
சிந்தை யாலும் தொடேன்!' என்ற செவ்வரம்
தந்த வார்த்தை திருச்செவி சாற்றுவாய். 11

### சீதையை அனுமன் தேற்றுதல்

'வினையுடை அரக்கராம் இருந்தை வெந்துகச்
சனகியென் றொருதழல் நடுவண் தங்கலால்
அனகன்கை யம்பெனும் அளவில் ஊதையால்
கனகம்நீ டிலங்கைநின் றுருகக் காண்டியால்!. 12

'ஈண்டொரு திங்களிங் கிடரின் வைகுதல்
வேண்டுவ தன்று;யான் விரைவின் வீரனைக்
காண்டலே குறை;பினும் காலம் வேண்டுமோ?
ஆண்டகை இனியொரு பொழுதும் ஆற்றுமோ? 13

'மத்துறு தயிரென வந்து சென்றிடை
தத்துறு முயிரொடு புலன்கள் தள்ளுறும்
பித்துநின் பிரிவினிற் பிறந்த வேதனை
எத்தனை யுள!அவை யெண்ணும் ஈட்டவோ? 14

'இந்நிலை யுடையவன் தரிக்கும் என்றியேல்,
மெய்ந்நிலை யுணர்ந்துழி மிடைந்த தீதெனில்
பொய்ந்நிலை காண்டி;யான் புகன்ற யாவுமுன்
கைந்நிலை நெல்லியங் கனியிற் காட்டுகேன்!' 15

### அனுமனுக்குப் போக விடையளித்த சீதை தனது சூடாமணியை அவனிடம் அளித்துக் கூறுதல்

'என்னொர் இன்னுயிர் மென்கிளிக் கியார்பெயர் ஈகேன்
மன்ன!' என்றலும், 'மாசறு கேகயன் மாதென்

அன்னை தன்பெய ரா'கென அன்பினொ டந்நாள்
சொன்ன மெய்ம்மொழி சொல்லுதி மெய்ம்மை
[தொடர்ந்தோய்!' 16

என்று ரைத்தினி தித்தனை பேரடை யாளம்
ஒன்று ணர்த்துவ தில்லென எண்ணி யுணர்ந்தாள்;
தன்றி ருத்துகி லிற்பொதி வுற்றது தானே
வென்ற தச்சுடர் மேலொடு கீழுற மெய்யால். 17

வாங்கி னாள்தன் மலர்க்கையின்; அன்னது முன்னா
ஏங்கி னானவ் வனுமனும் 'என்கொலி'தென்னா;
வீங்கி னான்வியந் தான்உல கேழும்வி ழுங்கித்
தூங்கு காரிருள் முற்றும் இரிந்தது சுற்றும். 18

'சூடை யின்மணி கண்மணி யொப்பது; தொன்னாள்
ஆடை யின்கண் இருந்தது பேரடை யாளம்;
நாடி வந்தென தின்னுயிர் நல்கிய் நம்பா!
கோடி,' என்று கொடுத்தனள் மெய்ப்புகழ் கொண்டாள். 19

### அனுமன், இராமனிருப்பிடத்திற்கு மீளுதல்

தொழுது வாங்கினன் சுற்றிய தூசினன் முற்றப்
பழுது ருவகை பந்தனை செய்தனன்; வந்தித்து
அழுது மும்மை வலங்கொ டிறைஞ்சினன்; அன்போ
டெழுது பாவையும் ஏத்தினள்; ஏகினன் இப்பால். 20

—கம்பநாடர்

### குறிப்புரை:

இராமாயணம் என்பதற்கு, 'இராமனது வரலாற்றை உரைக்கும் நூல்,' என்பது பொருள். **கம்பராமாயணம்** என்பதற்குக் 'கம்பரது இராமாயணம்' என்பது பொருள். வடமொழியில் வான்மீகி முனிவர் இயற்றிய 'வான்மீகி ராமாயண'த்தைத் தழுவிக் கம்பர் இப்பெருங்காப்பியத்தைப் பாடினர். எனவே, இவரது நூல், 'வழி நூல்' எனச் சொல்லப்படும்.

கம்பர் தம் பெருங்காப்பியத்திற்கு **இராமாவதாரம்** என்றே பெயரிட்டனர். இக்காப்பியம் இராமபிரானின் தெய்வத்தன்மையையும் அரும்பேராற்றலையும் விளக்குகிறது.

கம்பநாடர் சோழநாட்டில் உள்ள திருவழுந்தூரில் பிறந்தார். இவர் உவச்சர் குலத்தில் ஆதித்தர் என்பார்க்குப் புதல்வராய்த் தோன்றினர் என்பர். இவர் திருவெண்ணெய் நல்லூர்

சடையப்ப வள்ளலால் ஆதரிக்கப்பட்டவர்; சோழமன்னனால் போற்றப்பட்டவர். இவர் வாழ்ந்தது கி. பி. 9 ஆம் நூற்றாண்டு எனச்சிலரும், கி. பி. 12ஆம் நூற்றாண்டு எனச்சிலரும் இருவேறு கருத்துக் கொண்டுள்ளனர். **ஏரெழுபது, திருக்கை வழக்கம், சடகோபரந்தாதி** என்னும் நூல்களும் இவர் பாடினர் என்பர். இவர் பெயரால் சில தனிப்பாடல்களும் வழங்கி வருகின்றன.

கம்பராமாயணம் பல்வகைச் சிறப்புகளும் பாங்குற அமைந்துள்ள பெருங்காப்பியமாகும். 'கம்பநாடன் கவிதையிற்போல் கற்றோர்க் கிதயங் களியாதே,' என இதனைக் கற்றுணர்ந்த புலவர் ஒருவர் பாராட்டுகின்றார். 'கவிச்சக்கரவர்த்தி' என்னும் தனிப்பெருஞ்சிறப்பினையும் இவர் பெற்றுள்ளனர்.

'எத்திக்கும் போற்றும் இராமன் திருக்கதையைத்
தித்திக்கும் செந்தமிழிற் செய்தளித்து—நித்தமும்
அம்புவியில் மக்கள் அமுதம் அருந்தவைத்த
கம்பன் கவியே கவி'

எனக் கம்பர் கவியைப் பாராட்டுகிறார் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை.

கம்பராமாயணம் **பால காண்டம், அயோத்தியா காண்டம், ஆரணிய காண்டம், கிட்கிந்தா காண்டம், சுந்தர காண்டம், யுத்த காண்டம்** என ஆறு காண்டங்களாகிய பெரும்பகுப்பைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு காண்டத்தின் உட்பிரிவுகளாய்ப் பல படலங்கள் அமைந்துள்ளன. பாடப்பகுதி, இக்காப்பியத்தின் ஐந்தாவது காண்டமாகிய சுந்தர காண்டத்தில் ஆறாவதாகிய **சூடாமணிப்படலப்**பகுதியாகும். இக்காண்டத்தில் இராமபிரான் சீதாபிராட்டி இருவருடைய அழகு கூறப்படுவதனால், இப்பகுதி 'சுந்தரகாண்டம்' என வழங்கப்படுகிறது என்பர் சிலர். அனுமனுக்குச் சுந்தரன் என்னும் பெயருள்ளமையினாலும் அவனுடைய அரும்பெருஞ்செயல்களே இக்காண்டத்தில் பெரும்பாலும் உள்ளமையினாலும் 'சுந்தர காண்டம்' என வழங்கப்படுகிறது என்பர் வேறு சிலர்.

'சூடாமணி' என்பது பெண்டிர் தலையில் அணியும் ஓர் அணி வகை. இதனைச் 'சூளாமணி' என்றும் வழங்குவர். சீதாபிராட்டி தன் சேலையில் முடிந்து வைத்திருந்த சூடாமணியை இராமபிரானிடம் சிறந்ததோர் அடையாளமாகத் தருமாறு அனுமனிடம் கொடுத்த வரலாற்றை இப்படலப்பகுதி தெரிவிக்கிறது.

## கதைத்தொடர்பு:

அயோத்தியை ஆண்ட **தசரத சக்கரவர்த்தி**யின் மூத்த புதல்வனாய்த் தோன்றிய இராமன், தந்தையின் வாக்கைக் காப்பாற்றும்பொருட்டுத் தன் மனைவி சீதையுடனும் தம்பி இலக்குமணனுடனும் காட்டிற்குச் செல்கிறான். கோதாவிரி நதிக் கரையில் பஞ்சவடி என்னும் இடத்தில் இவர்கள் தங்கியிருந்த

போது ஒரு பேரிடையூறு நேர்ந்தது; இலங்கை மன்னன் **இராவணன்,** சீதையை வஞ்சகமாய்க் கவர்ந்து சென்று, தன் நகரில் அசோகவனத்தில் சிறை வைத்தான். சீதையைக் காணுமல் அவளிருக்குமிடம் நாடி இராம இலக்குமணர் கிட்கிந்தை மலையை நோக்கிச் சென்றனர்; கிட்கிந்தை மன்னன் **சுக்கிரீவனது** துணையுடன், அவனுடைய வானரப் படைகளை ஏவிப் பல பக்கங்களிலும் சீதையைத் தேடச் செய்தனர். தென்திசைக்குச் சென்றவருள் அனுமனும் ஒருவன். மகேந்திரமலையிலிருந்து அனுமன் கடலைத்தாவி, இலங்கையை அடைந்து, அங்கு அசோகவனத்தில் சீதாபிராட்டியைக் கண்டு, இராமனது துயரைக் கூறினன். சீதை, 'ஒரு மாத எல்லைக்குள் என்னைச் சிறையிலிருந்து இராமன் விடுவிக்கவில்லையெனின், உயிர் துறப்பேன்!' என்று கூறி, இராமபிரானுக்கு அடையாளமாகத் தரும்படி தன் தலையணியாகிய சூடாமணியை அனுமனிடம் கொடுத்தனுப்பினள்.

### அருஞ்சொற்பொருள்:

1. கேட்டி - கேட்பாயாக, உரை - சொல், முனிந்தருளல் - கோபியாதிருப்பாயாக ('அல்' ஈற்று வியங்கோள் வினைமுற்று). கேளான் - பகைவனுன இராவணன், வீட்டியிடுமேல் - கொன்று விடுவானெனில், வேறல் - வெல்லுதல். 'இனிப் பல ஈட்டி என்?' எனக் கொண்டு இயைக்க. இனி - இப்பொழுது, பல ஈட்டி - பல வார்த்தைகளைத் தொகுத்துச் சொல்லி, என் - என்ன பயன்? காட்டி – கொண்டுபோய்க் காண்பித்து, தாழ்வென் - வணங்குவேன், காண்டி - நீ காண்பாயாக, இது காலம் - இப்பொழுது. கேட்டி, காண்டி - இகர விகுதி பெற்ற வியங்கோள் வினைமுற்றுகள்.

2. அருந்ததி - கற்பில் அருந்ததியையொத்த சீதையே, உரைத்தி - உரைப்பாயாக (வியங்கோள் வினைமுற்று), அழகன் - பேரழகனுன இராமன், மருந்து அனைய தேவி - தேவாமிர்தம் போன்ற மனைவி, வஞ்சர் - வஞ்சனைச்செயல்களையுடைய அரக்கர், சிறை வைப்பு - சிறைச்சாலை, ஒரு வீடுபெறலில்லாது - ஒரு வகையாலும் விடுதலை பெற வழியில்லாமல், பகரின் - சொல்வேனுயின், என்னும் - என்ன பயனும்? 'என்னும் உரைத்தி,' என இயைக்க.

3. விளம்ப - சொல்ல, விளம்ப உளதன்று - என் வேண்டுகோள் மறுத்துச் சொல்லத் தக்கதன்று, விதியால் - கட்டளையால், பேறு - இராமபிரானிடத்தில் சீதையைக் கொண்டு சேர்க்கும் பேறு, அருள் தந்தருளு - அருள் செய்வாயாக, ஆறு துயர் (துயர் ஆறு) - துன்பம் தணிவாயாக, அஞ்சொல் இளவஞ்சி – அழகிய சொற்களைக் கூறும் இளவஞ்சிக்கொடி போன்ற தலைவியே, கடிது - விரைவாக, இன்னடி - சீதாபிராட்டியின் இனிய திருவடி (பண்புத்தொகை).

4. அரியதன்று - செய்வதற்கு இயலாத செயலன்று, ஆற்றல் - வல்லமை, தெரிய - விளக்கமாக, எண்ணினை - சிந்தித்துள்ளாய், உரியதன்று - தக்கதன்று, ஓர்கின்றது - நினைக்கின்றது, பேதைமை - அறியாமை, சின்மதி - சிற்றறிவு, பெண்

மையால் • பெண் தன்மையால். பெரிய பேதைமைச் சின்மதி - பெருமை சிறுமை என்னும் மாறுபட்ட சொற்கள் அமைந்தது **முரண் தொடை**.

5. பிறங்கல் - மலை, பொருந்தலர் - பகைவர், எற்பு - எலும்பு ('என்பு' என்பதன் வலித்தல் விகாரம்), மால் வரை - பெரிய மலை, ஆக்கியதில் - ஆக்கப்படவில்லை, இற்பிறப்பு - உயர் குடிப்பிறப்பு, ஒழுக்கு – ஒழுக்கம், இழுக்கமில் - தவறுதல் இல்லாத, காட்டுகேன் - காட்டுவேன்.

6. அல்லல் மாக்கள் – பிறர்க்குத் துன்பம் செய்யும் அரக்கர்கள், இலங்கையதாகுமோ - இலங்கை நகரை மட்டும் சார்ந்ததாகுமோ? எல்லை நீத்த - எல்லையைக் கடந்த, சொல் - சாபமொழி, சுடுவேன் - எரித்திருப்பேன், தூயவன் - குற்றமற்ற இராமன், மாசு - குற்றம், வீசினேன் - விட்டுவிட்டேன்.

7. நன்று நன்று - மிக நன்று (அடுக்குத் தொடர்), உலகுடை நாயகன் - இவ்வுலகத்தைத் தனக்குரியதாக உடைய இராமன், துணை - வாழ்க்கைத்துணைவி, பெருந்தேவி - சிறந்த மனைவி, ஏத்தினன் - துதித்தான், சங்கை - ஐயம், இடர்-துன்பம், நீங்கினன் - நீங்கப்பெற்றவனாகிய அனுமன் (வினையாலணையும் பெயர்).

8. இருளும் ஞாலம் – அறியாமையாகிய இருளையுடைய உலகம், தெருளும் - தெளிவடையும், சில் பகல் - சில நாள், தீங்குறல் – உயிரை மாய்த்துக்கொள்ளாதே ('அல்' ஈற்று எதிர் மறை வியங்கோள்), மருளும் - மயங்கும், மன்னவன் – அரசனான இராமபிரான், வாசகம் - செய்தி. 'விரைவில் இராவணன் அழிந்துபடுவான் என்பதை இராவணனால் இருளடைந்திருக்கிற இவ்வுலகம் தெளியும்,' என்று உலகின்மேல் வைத்து அனுமன் கூறியது **பிறிது மொழிதல்** என்னும் அணியாம்.

9. இருப்பல் - இருப்பேன், பகர்ந்தது - சொன்னது, நீதியோய் - நன்னெறியுடையவனே, பிடிக்கின்றிலேன் - உயிர் வைத்திரேன், மன்னன் - இராமன், ஆணை - சபதம், மனக் கொள் - நினைவில் பதியவை.

10. ஆரம் - மாலை, தாழ் திருமார்பன் - தொங்குகிற அழகிய மார்புடைய இராமன், தாரம் - மனைவி, அலளேனும் - அல்லளாயினும், தயா எனும் ஈரம் - இரக்கம் என்கிற அன்பு, வீரங்காத்தல் - வீரத்தன்மையிற் குறைவுபடாமல் காத்தல், வேண்டு - விரும்புவாய். 'தாரந்தான், ஈரந்தான்' என வரும் 'தான்' இரண்டும அசைநிலை.

11. கரம் பற்றிய வைகல் - திருமணம் புரிந்த நாள், இந்த இப்பிறவி - இந்த உலகத்தில் தோன்றிய இந்தப் பிறப்பு, இரு மாதரை - இரு பெண்டிரை, சிந்தையாலும் தொடேன் - மனத் தாலும் நினையேன், செவ்வரம் - நல்ல வரம், சாற்றுவாய் - சொல்லுவாய். இராமன் தன்னை வந்து மீட்டுச் செல்வானோ என்னும் நம்பிக்கையின்றிச் சீதை இவ்வாறு பேசுகிறாள். ஒருகால்

தன்னை இராமன் கைவிட்டுவிடுவானோ எனும் ஐயத்தால் வெளிப்படுவனவே இச்சொற்கள்.

12. வினையுடை அரக்கர் - பாவச் செயலையுடைய அரக்கர், இருந்தை - கரித்துண்டுகள், சானகி - சனகன் மகள் சானகி (தத்திதாந்த நாமம்), ஒரு தழல் - ஒப்பற்ற நெருப்பு. 'நெருப்புத் தொட்டாரைச்சுடும்; சீதையாம் நெருப்போ, தொட முயல்வாரையும் சுட்டழிக்கும்,' என்பதால் 'ஒப்பற்ற நெருப்பு' என்கிறார். அனகன் - குற்றமற்றவனாகிய இராமபிரான், ஊதை - பெருங் காற்று, கனகம் - பொன், கனகம் நீடிலங்கை - பெரிய இலங்கை யாகிய பொன், காண்டி - காண்பாய். அரக்கரைக் கரித்துண்டு களாயும், அவர்களிடையே தங்கியுள்ள சீதையை நெருப் பாயும், இராமபிரான் அம்பை ஊதைக்காற்றாயும், இலங்கை நகரைப் பொன்னாயும் கவிஞர் உருவகம் செய்கிறார். எனவே, இப்பாட்டு **முற்றுருவக அணி.**

13. ஈண்டு - இங்கே, காண்டலே குறை - பார்ப்ப தொன்றே வேண்டுவது, பினும் - பின்னும், ஆண்டகை - வீரனாகிய இராமன், ஆற்றுமோ - தவிர்ந்திருக்கப் பொறுத் திருப்பனோ (செய்யுமென் வாய்பாட்டு வினைமுற்று).

14. மத்துறு தயிர் - மத்தினால் கடையப்படுகிற தயிர், தத்துறும் - தடுமாறும், புலன்கள் - (சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்னும்) ஐந்துணர்வுகள், தள்ளுறும் - சோர்வடையும், பித்து - மயக்க நிலை, எண்ணும் ஈட்டவோ - எண்ணிச் சொல்லும் அளவினவல்ல (ஓகாரம் எதிர்மறைப்பொருளது).

15. தரிக்கும் - உயிர் வாழ்ந்திருப்பான் (செய்யுமென்வாய் பாட்டு வினைமுற்று), என்றியேல் - என்றாயானால் (முன்னிலை ஒருமை வினைமுற்று), மெய்ந்நிலை - உடம்பின் தன்மை, மிடைந்தது - பொருந்தியது, பொய்ந்நிலை - பொய் பொருந் தியது, காண்டி - காண்பாயாக, கைந்நிலை நெல்லியங்கனியின் - உள்ளங்கையில் உள்ள அழகிய நெல்லிக்கனி போல, காட்டுகேன் - விளக்கமாகக் காணச்செய்வேன்.

16. உயிர் மென்கிளி - உயிர் போன்ற மென்மையான கிளிப்பிள்ளை, பெயர் ஈகேன் - பெயரிடுவேன், கேகயன் மாது - கேகய நாட்டு அரசன் புதல்வியாகிய கைகேயி, சொல்லுதி - சொல்லுவாய்.

17. திருத்துகில் - அழகிய ஆடை, பொதிவுற்றது - பொதிந்து வைக்கப்பட்டது, மெய்யால் - வடிவத்தால், சுடர் - சூரியன் முதலிய ஒளிகளை. (பொதிவுற்றது, **வென்றது - வினையா லணையும் பெயர்கள்).** இப்பாட்டுக் **குளகம்.**

18. **அன்னது - அப்படிப்பட்ட சூடாமணியை, வாங்கினாள் - அவிழ்த்தெடுத்தாள், என்கொல் இது - இது என்ன வியப்பு, ஏங்கினான் - திகைத்தான், வீங்கினான் - உடல் பூரித்தான், உலகேழும் - ஏழு உலகங்களையும், விழுங்கி - தன்னுட்கொண்டு, தூங்கு - தங்குகிற, காரிருள் - கருமையான இருள் (பண்புத்**

தொகை), சுற்றும் இரிந்தது - சுற்றிலும் ஓடி மறைந்தது. இப்பாடல் **உயர்வு நவிற்சியணி.**

**19.** சூடையின் மணி - சூடாமணி, கண் மணி - கண்ணின் கருவிழி, தொன்னுள் - முன்னுளில், நல்கிய - கொடுத்த, நம்பா - ஆடவரிற்சிறந்தவனே ('நம்பன்' என்பதன் விளி), கோடி -நீ கொள்வாயாக, மெய்ப்புகழ் - உண்மையான கீர்த்தி, மெய்ப் புகழ் கொண்டாள் - சீதை.

**20.** சுற்றிய தூசினன் - ஆடையிற்சுற்றியவனுய், பழுதுரு வகை - தவறிவிடாதபடி, பந்தனே செய்தனன் - முடிந்து வைத்தான், வந்தித்து - வணங்கி, வலங்கொண்டு - வலமாகச் சுற்றிவந்து, இறைஞ்சினன் - கீழே விழுந்து வணங்கினன், எழுது பாவை - எழுதிய சித்திரம் போன்ற அழகிய சீதை, ஏத்தினள் - அனுமனே வாழ்த்தினள், இப்பால் - பின்னர், ஏகினன் - புறப்பட்டுச் சென்றனன்.

**வினுக்கள்:**

1. கம்பராமாயணம், சுந்தரகாண்டம் — பெயர்க் காரணங்களே விளக்குக.
2. கம்பநாடரின் வாழ்க்கை வரலாற்றுக் குறிப்பை எழுதுக.
3. கம்பநாடரையும் அவரது காவியத்தையும் ஆன்றோர் எவ்வெவ்வாறு பாராட்டியுள்ளனர்?
4. சூடாமணிப்படலத்தின் முக்கிய நிகழ்ச்சிகள் யாவை?
5. அனுமன் சீதையிடம் செய்த விண்ணப்பம் யாது?
6. இலங்கைச் சிறையிலிருந்து சீதையைத் தானே விடுவித்து அழைத்துச் செல்வதாய்க் கூறிய அனுமனுக்குச் சீதை சொன்ன மறுமொழிகள் யாவை?
7. அனுமன், தன் வேண்டுகோளேச் சீதை மறுத்த போது யாது செய்தான்?
8. இராமனுக்குத் தெரிவிக்குமாறு சீதை சொன்ன செய்திகள் யாவை?
9. இராமன், சீதையைத் திருமணம் செய்துகொண்ட போது அவளுக்குத் தந்த வரம் யாது?
10. 'இன்னும் ஒரு திங்கள் அளவில்தான் உயிருடன் இருப்பேன்,' என்று கூறிய சீதையைத் தேற்ற அனுமன் கூறிய மொழிகள் யாவை?
11. சூடாமணியை அனுமனிடம் கொடுத்த போது சீதை சொன்ன சிறப்பான பழைய நிகழ்ச்சி யாது?
12. சூடாமணியைக் குறித்துச் சீதை சொன்னது யாது?
13. இடஞ்சுட்டி விளக்குக :

    (அ) 'அரிய தன்று;நின் ஞற்றலுக் கேற்றதே!'

(ஆ) 'நன்று நன்றிவ் வுலகுடை நாயகன்
தன்று ணைப்பெருந் தேவி தவத்தொழில்!'

(இ) 'மத்துறு தயிரென'

(ஈ) 'கைந்நிலை நெல்லியங் கனியிற் காட்டுகேன்!'

14. 'வினையுடை அரக்கராம்' எனத் தொடங்கும் பாடலில் அமைந்த உருவகத்தை விளக்குக.

15. 'கம்பன் கவியே கவி' - இதனைப் பாடப்பகுதிப் பாடல்களின் வாயிலாக நிறுவுக.

# 4. பெரிய புராணம்

## கண்ணப்ப நாயனார் புராணம்

### 'திண்ணனார் அன்பின் நன்மை நாளைக் காண்பாய்,' என இறைவன் கூறுதல்

'உனக்கவன்றன் செயல்காட்ட நாளைநீ யொளித்திருந்தால்
எனக்கவன்றன் பரிவிருக்கும் பரிசெல்லாங் காண்கின்றாய்
மனக்கவலை யொழிகெ,'கன்று மறைமுனிவர்க் கருள்செய்து
புனற்சடிலத் திருமுடியா ரெழுந்தருளிப் போயினார். 1

### சிவகோசரியார் உறங்காமல் காத்திருத்தல்

கனவுநிலை நீங்கியபின் விழித்துணர்ந்து கங்குலிடைப்
புனைதவத்து மாமுனிவர் புலர்வளவுங் கண்டுயிலார்
மனமுறுமற் புதமாகி வரும்பயமு முடனாகித்
துணைபுரவித் தனித்தேர்மேற் றோன்றுவான் கதிர்தோன்ற, 2

### சிவகோசரியார் ஒளித்திருத்தல்

முன்னைநாள் போல்வந்து திருமுகலிப் புனன்மூழ்கிப்
பன்முறையுந் தம்பிரா னருள்செய்த படிநினைந்து
மன்னுதிருக் காளத்தி மலையேறி முன்புபோல்
பிஞ்ஞகனைப் பூசித்துப் பின்பாக வொளித்திருந்தார். 3

### திண்ணனார் ஆறும் நாள் வேட்டைக்குப் போதல்

கருமுகி லென்ன நின்ற கண்படா வில்லி யார்தாம்
வருமுறை யாறு நாளில் வருமிர வொழிந்த காலை
அருமறை முனிவ னார்வந் தணைவதன் முன்பு போகித்
தருமுறை முன்பு போலத் தனிப்பெரு வேட்டை யாடி, 4

### திண்ணனார் பூசனைக்கு மலை ஏறுதல்

மாறிலூ னமுதும் நல்ல மஞ்சனப் புனலுஞ் சென்னி
ஏறுநாண் மலரும் வெவ்வே றியல்பினி லமைத்துக்
[கொண்டு
தேறுவார்க் கமுத மான செல்வனார் திருக்கா ளத்தி
ஆறுசேர் சடையார் தம்மை யணுகவந் தணையா நின்றார். 5

### திண்ணனார் தீச்சகுனம் கண்டு வருந்துதல்

'இத்தனை பொழுது தாழ்த்தேன்,' எனவிரைந் தேகு
[வார்முன்
மொய்த்தபல் சகுன மெல்லா முறைமுறை தீங்கு செய்ய,
'இத்தகு தீய புட்க ளீண்டமுன் னுதிரங் காட்டும் ;
அத்தனுக் கென்கொல் கெட்டே னடுத்த'தென் றணையும்
[போதில், 6

### காளத்தியார் வலக்கண்ணில் புண்ணீர் கண்டு திண்ணனார் ஓடி வருதல்

அண்ணலார் திருக்கா ளத்தி யடிகளார் முனிவ னார்க்குத்
திண்ணனார் பரிவு காட்டத் திருநய னத்தி லொன்று
துண்ணென வுதிரம் பாய விருந்தனர் தூரத் தேயவ்
வண்ணவெஞ் சிலையார் கண்டு வல்விரைந் தோடி வந்தார். 7

### திண்ணனாரின் மெய்ப்பாடுகளும் துன்பமும்

வந்தவர் குருதி கண்டார் ; மயங்கினார் ; வாயி னன்னீர்
சிந்திடக் கையி லூனுஞ் சிலையுடன் சிதறி வீழக்
கொந்தலர் பள்ளித் தாமங் குஞ்சிநின் றலைந்து சோரப்
பைந்தழை யலங்கன் மார்பர் நிலத்திடைப் பதைத்து
[வீழ்ந்தார். 8

விழுந்தவ ரெழுந்து சென்று துடைத்தனர் குருதி வீழ்வ(து)
ஒழிந்திடக் காணார் ; செய்வ தறிந்தல ருயிர்த்து மீள
அழிந்துபோய் வீழ்ந்தார் ; தேறி, 'யாரிது செய்தா'ரென்னா
எழுந்தனர் ; திசைக ளெங்கும் பார்த்தன ரெடுத்தார்
[வில்லும். 9

வேடரைக் காணார் ; தீய விலங்குகண் மருங்கு மெங்கும்
நாடியுங் காணார் ; மீண்டும் நாயனார் தம்பால் வந்து
நீடிய சோகத் தோடு நிறைமலர்ப் பாதம் பற்றி
மாடுறக் கட்டிக் கொண்டு கதறினார் கண்ணீர் வார. 10

பாவியேன் கண்ட வண்ணம் பரமனுர்க் கடுத்த தென்னே ?
ஆவியி னினிய வெங்க ளத்தனுர்க் கடுத்த தென்னே ?
மேவினுர் பிரிய மாட்டார் விமலனுர்க் கடுத்த தென்னே ?
ஆவதொன் றறிகி லேன்யா னென்செய்கே ெ'னன்று
[பின்னும், 11

'என்செய்தால் தீரு மோதா னெம்பிரான் றிறத்துத் தீங்கு
முன்செய்தார் தம்மைக் காணேன்; மொய்கழல் வேட
[ரென்றும்
மின்செய்வார் பகழிப் புண்க டீர்க்குமெய் மருந்து தேடிப்
பொன்செய்தாழ் வரையிற் கொண்டு வருவனுன்.' என்று
[போனுர். 12

### திண்ணனுர் மருந்துகள் பிழிந்து வார்த்தல்

நினைத்தனர் வேறு வேறு நெருங்கிய வனங்க ளெங்கும்
இனத்திடைப் பிரிந்த செங்க ணேறெனெ வெருக்கொண்
[டெய்திப்
புனத்திடைப் பறித்துக் கொண்டு பூதநா யகன்பால் வைத்த
மனத்தினுங் கடிது வந்தம் மருந்துகள் பிழிந்து வார்த்தார். 13

### 'ஊனுக்கு ஊன்' என்பதை நினைத்தல்

மற்றவர் பிழிந்து வார்த்த மருந்தினுற் றிருக்கா ளத்திக்
கொற்றவர் கண்ணிற் புண்ணீர் குறைபடா திழியக்
[கண்டும்
'இற்றையி னிலைமைக் கென்னே வினிச்செய ெ'லன்று
[பார்ப்பார்,
உற்றநோய் தீர்ப்ப தூனுக் கூனெனு முரைமுன் கண்டார். 14

### காளத்தியப்பர் கண்ணில் திண்ணனுர் கண்ணை அப்புதல்

'இதற்கினி யென்க ணம்பா லிடந்தப்பி னெந்தை யார்கண்
அதற்கிது மருந்தாய்ப் புண்ணீர் நிற்கவு மடுக்கு ெ,'மன்று
மதர்த்தெழு முள்ளத் தோடு மகிழ்ந்துமுன் னிருந்து தங்கண்
முதற்சர மடுத்து வாங்கி முதல்வர்தங் கண்ணி லப்ப, 15

### குருதி நிற்கக் கண்டு கூத்தாடல்

நின்றசெங் குருதி கண்டார்; நிலத்தினின் றேறப் பாய்ந்தார்;
குன்றென வளர்ந்த தோள்கள் கொட்டினுர் கூத்து மாடி,
'நன்றுநான் செய்த விந்த மதி ெ!'யன நகையுந் தோன்ற
ஒன்றிய களிப்பி னுலே யுன்மத்தர் போல மிக்கார். 16

### காளத்தியப்பர் இடத் திருக்கண்ணில் குருதியைக் காணல்

வலத்திருக் கண்ணிற் றங்க ணப்பிய வள்ள லார்தம்
நலத்தினைப் பின்னுங் காட்ட நாயனூர் மற்றைக் கண்ணில்
உலப்பில்செங் குருதி பாயக் கண்டன ருலகில் வேடர்
குலப்பெருந் தவத்தால் வந்து கொள்கையி னும்பர்மேலார். 17

### குருதி கண்ட கண்ணுக்குத் தன்கண்ணே மருந்தெனல்

கண்டபின், 'கெட்டே னெங்கள் காளத்தி யார்கண் [ணென்று
புண்டரு குருதி நிற்க மற்றைக்கண் குருதி பொங்கி
மண்டுமற் றிதனுக் கஞ்சேன்; மருந்துகை கண்டே னின்னும்
உண்டொரு கண்ணிக் கண்ணை யிடந்தப்பி யொழிப்பே [ன்,'என்று, 18

### காளத்தியப்பர் கண்ணில் தமது காலைக் குறிப்பிற்கு வைத்தல்

கண்ணுதல் கண்ணிற் றங்க ணிடந்தப்பிற் காணு நேர்பா(டு)
எண்ணுவார் தம்பி ரான்றன் றிருக்கண்ணி லிடக்கா [லூன்றி
உண்ணிறை விருப்பி னோடு மொருதனிப் பகழி கொண்டு
திண்ணனூர் கண்ணி லூன்றத் தரித்திலர் தேவ தேவர். 19

### காளத்தியப்பர், 'கண்ணப்ப, நிற்க,' எனல்

செங்கண்வெள் விடையின் பாகர் திண்ணனூர் தம்மை [யாண்ட
அங்கணர் திருக்கா ளத்தி யற்புதர் திருக்கை யன்பர்
தங்கண்முன் னிடக்குங் கையைத் தடுக்கமூன் றடுக்கு நாக
கங்கண ரமுத வாக்கு, 'கண்ணப்ப, நிற்க,'வென்ற. 20

### காளத்தியப்பர் அருள் புரிதல்

பேறினி யிதன்மே லுண்டோ? பிரான்றிருக் கண்ணில் வந்த
ஊறுகண் டஞ்சித் தங்க ணிடந்தப்ப வுதவுங் கையை
ஏறுயர்த் தவர்தங் கையாற் பிடித்துக்கொண் 'டென்வ [லத்தில்
மாறிலாய், நிற்க,' வென்று மன்னுபே ரருள்பு ரிந்தார். 21

—சேக்கிழார்

**குறிப்புரை :**

**பெரிய புராணம்** என்னும் இந்நூல், பெருமை பெற்ற சிவனடியார்களின் வரலாற்றினை உணர்த்துவதாகும். தனியடியார் அறுபத்து மூவர், தொகையடியார் ஒன்பதின்மர் எனச் சிவனடியார் எழுபத்திருவராவர். பெரிய புராணத்திற்குச் சேக்கிழார் இட்ட பெயர் 'திருத்தொண்டர் புராணம்' என்பதே யாகும். இந்நூல், சைவத் திருமுறைகளுள் பன்னிரண்டாம் திருமுறை ஆகும். இஃது இரண்டு காண்டங்களாகப் பிரிக்கப்பட்டுத் திருமலைச் சருக்கம் முதல் வெள்ளானைச் சருக்கம் ஈறாகப் பதின்மூன்று சருக்கங்களையும் 4286 பாடல்களையும் கொண்டுள்ளது. ஈண்டுப் பாடப் பகுதியாக அமைந்த கண்ணப்ப நாயனார் புராணம், மூன்றாம் சருக்கமான இலைமலிந்த சருக்கத்தில் இடம் பெற்றுள்ளது.

பெரிய புராணம் இயற்றியவர் **சேக்கிழார்**. இவர் தொண்டை மண்டலத்தில், புலியூர்க் கோட்டத்துக் குன்றத்தூரில், வேளாளர் மரபில், சேக்கிழார் குடியில் தோன்றியவர். இவருடைய பிள்ளைத் திருநாமம் அருண்மொழித்தேவர் என்பது. இவர் காலத்தில் இருந்த அநபாய சோழன் (இரண்டாம் குலோத்துங்கன்) இவரது புலமைத் திறத்தை வியந்து, இவரைத் தன் முதல் அமைச்சராக்கி, 'உத்தம சோழப் பல்லவன்' என்ற பட்டப் பெயரையும் சூட்டினன். இவ்வேந்தனுடைய வேண்டுகோளுக்கிரங்கி, இவர் இப் புராணம் பாடி முடித்தார். இதனை யறிந்த வேந்தன் உள மகிழ்ந்து, சேக்கிழாருக்குப் பல சிறப்புகள் செய்து, 'தொண்டர் சீர் பரவுவார்,' என்ற சிறப்புப் பெயரையும் சூட்டி இவரைப் பாராட்டினன். சேக்கிழாரின் காலம் பன்னிரண்டாம் நூற்றாண்டின் முற்பகுதி என்பர்.

**கதைத் தொடர்பு :**

பொத்தப்பி நாட்டில் உடுப்பூர் என்ற ஊரில் நாகன் என்ற வேடுவர் தலைவன், தன் மனைவி தத்தை என்பவளுடன் இல்லறம் நடத்தி வந்தான். முருகப்பெருமான் திருவருளால் அவர்களுக்குப் பிறந்த ஆண் குழந்தைக்கு அவர்கள் திண்ணன் என்ற பெயர் சூட்டி வளர்த்து வந்தனர்.

திண்ணனார் வில்தொழிலில் வல்லவராக விளங்கினார். அவர் ஒரு முறை வேட்டைக்குப் போய் ஒரு பன்றியைத் துரத்திச் சென்று கொன்றார். பின்னர்த் திண்ணனார் அருகிலிருந்த திருக்காளத்தி மலைமேல் ஏறி அங்குள்ள காளத்தியப்பரைத் தரிசித்து மனமுருகினார். தம்முடன் வந்த நாணனை நோக்கித் திண்ணனார், 'காளத்தியப்பருக்குப் பச்சிலையும் மாலையும் சாத்தியவர் யார்?' என்று கேட்டார். நாணன், 'ஓர் அந்தணர் காளத்தியப்பரை நீராட்டி மலர் சூட்டி, உணவு ஊட்டுவதை, நான் ஒரு முறை உன் தந்தையுடன் வந்தபோது கண்டேன்,' என்றான். அதைக் கேட்ட திண்ணனார், தாமும் அவ்வாறு பூசை

செய்ய நினைத்தார். பின்னர், திண்ணனார் தம்முடன் வந்த காடன் என்பவன் பதமாக்கிய பன்றி இறைச்சியைச் சுவைத்துப் பார்த்து மிகுந்த உருசியானவைகளை, இலைகளாலான ஒரு தொன்னையில் வைத்துக்கொண்டு பொன்முகலி ஆற்று நீரை வாயில் முகந்து சில மலர்களைப் பறித்துத் தம் குடுமியில் வைத்துக்கொண்டு காளத்தியப்பரிடம் சென்றார். திண்ணனார் தம் வாயில் கொண்டு வந்த நீரை, இறைவன் திருமுடிமேல் கொட்டி, தம் குடுமியில் வைத்துவந்த பூக்களை இறைவனுக்குச் சாத்தினார். பிறகு அவர் தாம் கொண்டுவந்த இறைச்சியினைப் படைத்து அதனைத் திருவமுது செய்யுமாறு இறைவனை வேண்டினார். வனவிலங்குகளால் தேவருக்குத் தீங்கு வருமோ எனக்கருதி, திண்ணனார் இரவு முழுவதும் கண்விழித்துக் காவல் புரிந்தார். பின்னர், பொழுது விடிந்ததும் காளத்திநாதருக்கு இறைச்சி கொண்டுவரும் பொருட்டு அவர் வேட்டைக்குச் சென்றார்.

திண்ணனார் சென்றபின் நாள்தோறும் சைவ ஆகம முறைப்படி திருக்காளத்தியப்பரைப் பூசிக்கும் சிவகோசரியார் என்ற அந்தணர் மலைக்கு வந்து இறைவன் திருமுன்பு, இறைச்சி முதலியன இருக்கக் கண்டு மனம் வருந்தி, அவற்றை நீக்கித் தூய்மை செய்து, வழக்கம்போல் பூசை செய்துவிட்டுச் சென்றார். வேட்டைக்குச் சென்ற திண்ணனார் நல்ல இறைச்சிகளையும் தேனையும் கொண்டுவந்து முன்போல் காளத்திநாதருக்குப் படைத்து, அவற்றை ஏற்றுக்கொள்ளும்படி வேண்டினார்.

சிவகோசரியார் மறுநாளும் காளத்தியப்பர் முன்பு இறைச்சிகள் கிடப்பதைக் கண்டு மனம் வருந்தி இறைவனிடம் முறையிட்டுப் புலம்பினார். ஐந்தாம் நாள் இரவில் காளத்தியப்பர் சிவகோசரியார் கனவில் தோன்றி, 'அன்பனே! நீ அவனைச் சாதாரண வேடன் என்று நினைக்கவேண்டா. அவன் அன்பே வடிவாக உடையவன். அவன் எம்மிடம் வைத்துள்ள பேரன்பை நாளைக் காட்டுவேன். நீ இங்கு மறைந்திருந்து காணலாம்,' எனக் கூறி மறைந்தருளினார்.

### அருஞ்சொற்பொருள் :

*1.* பரிவு - அன்பு, பரிசு - தன்மை, எனக்கு - என்னிடத்தில் (உருபு மயக்கம்), காண்கின்றாய் - காண்பாய் (கால வழுவமைதி), ஒழிகென்று - (அகரம் தொகுத்தல்), முனிவர் - சிவகோசரியார், புனல் - கங்கை, சடிலம் - சடை, புனற் சடிலம் - (இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை).

*2.* கங்குலிடை இரவில், புனை - செய்த, புலர்வு அளவும்- விடியும் வரையும், துனைபுரவி-விரைவாகச் செல்லும் குதிரை (வினைத்தொகை), தோன்றுவான் - சூரியன் (வினையாலணையும் பெயர்), கதிர் - ஒளி, இப்பாடல் குளகம்.

*3.* திருமுகலிப் புனல் - பொன்முகலியாற்றின் நீர், பிஞ்ஞகன் - சிவபெருமான்.

4. கருமுகில் - கரியமேகம் (பண்புத் தொகை), கண்படா- உறங்காத (ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்), வில்லியார்- வில்லையுடைய திண்ணனார், இப்பாடல் குளகம்.

5. மாறு இல்-ஒப்பற்ற, மஞ்சனப் புனல்-அபிஷேகத்திற்கு வேண்டிய நீர், சென்னி - தலை, நாண்மலர் - புதிய மலர், தேறு வார்க்கு அமுதமான செல்வனார் - தன்னை உணர்வார்க்குப் பேரின்பமான முத்தி அளிக்கும் சிவபெருமான், தேறுவார்- (வினையாலணையும் பெயர்), ஆறு - கங்கை, சேர்சடை - (வினைத் தொகை), அணையாநின்றார் - (ஆநின்று - நிகழ்கால இடைநிலை).

6. ஏகுவார்-(வினையாலணையும் பெயர்),தீய புட்கள்-கெட்ட நிமித்தமான பறவைகள், ஈண்ட-விரைய, உதிரம்-இரத்தம், கெட்டேன்-(உறுதிபற்றிவந்த காலவழுவமைதி), அத்தன் - தந்தை.

7. அண்ணலார் - பெருமையினையுடையார், திண்ணனார் பரிவு (ஆறாம் வேற்றுமைத் தொகைநிலைத் தொடர்), துண்ணென- விரைவாக, திடீரென, வல்விரைந்து-(ஒரு பொருட் பன்மொழி), வெஞ்சிலை - (பண்புத்தொகை), சிலையார் - (வினையாலணையும் பெயர்).

8. குருதி - இரத்தம், கொந்து - கொத்து (மெலித்தல் விகாரம்), கொந்தலர் பள்ளித்தாமம் குஞ்சி நின்றலைந்து சோர- கொத்தாக மலர்ந்திருக்கும் மலர்களும் குடுமியினின்றும் நிலத்தில் விழவும், பைந்தழை அலங்கல்-பசிய இலைகளோடு கட்டிய மாலை, பைந்தழை - (பண்புத்தொகை).

9. உயிர்த்து - பெருமூச்சு விட்டு, என்னா - என்று சொல்லி (செய்யா என்னும் வாய்பாட்டு வினையெச்சம்).

10. நாடியும்-தேடியும், நீடிய சோகம்-பெருகிய வருத்தம், நாயனார் - தலைவர், காளத்தியப்பர். மலர்ப்பாதம் - (உவமைத் தொகை), மாடு - பக்கம் (ஏழாம் வேற்றுமைச் சொல்லுருபு), வார - பெருக.

11. என்னோ - (ஓகாரம் இரக்கப் பொருளில் வந்தது), மேவினார் - சேர்ந்தவர், விமலனார் - (மலமற்றவர்) குற்றமற்றவர். இப் பாடல் குளகம்.

12. செய்தார் - செய்தவர் (வினையாலணையும் பெயர்), மின் செய்வார் பகழிப்புண்கள் - ஒளி வீசுகின்ற கூர்மையான அம்பு களாலான புண்கள், பொன்செய் தாழ்வரையில் - பொன் செய்வரைத் தாழ்வில் என மாற்றுக. பொன்-அழகு. (தாழ்வரை, வரைத்தாழ் எனப்படுவதால் இஃது இலக்கணப்போலி) தாழ் வரை - மலையடிவாரம்.

13. செங்கண் - (பண்புத்தொகை), ஏறு - இடபம், வெருக் கொண்டு - அச்சம் கொண்டு, பூத நாயகன் - பூத கணங்களுக்குத் தலைவனான சிவபெருமான், பஞ்ச பூதங்களுக்கும் தலைவர் எனவும் கூறுவர். மனத்தினும் - மனவேகத்திலும்.

14. கொற்றவர்-தலைவர், புண்ணீர்-இரத்தம், இழிய-வழிய; பார்ப்பார்-பார்ப்பவர், ஆராயும் திண்ணனார் (வினையாலணையும் பெயர்), முன்கண்டார் - நினைவின் முன்வர உணர்ந்தார்.

15. இடந்து - தோண்டி, அடுக்கும் - கூடும், மதர்த்து - மகிழ்ந்து, தம்கண்-(ஆறும் வேற்றுமைத் தொகை), சரம்-அம்பு, மடுத்து - ஊன்றி, வாங்கி - எடுத்து, இப்பாடல் குளகம்.

16. மதி - எண்ணம், ஆலோசனை. ஒன்றிய - பொருந்திய, உன்மத்தர் - பித்தர்.

17. வள்ளலார் - திண்ணனார், நலத்தினை - பேரன்பை, உலப்பு இல் - வற்றுதல் இல்லாத, உம்பர் - தேவரினும் (ஐந்தன் உருபு தொக்கது), உம்பர் மேலார் - தேவர்களினும் மேன்மை யுடைய திண்ணனார்.

18. மண்டும் - அதிகமாகின்ற, ஒழிப்பேன் - (இந்தக் கண்ணில் வரும் குருதியையும்) தீர்ப்பேன், இப்பாடல் குளகம்.

19. கண்ணுதல் - நெற்றிக்கண்ணையுடைய சிவபெருமான், காணும் நேர்பாடு - காணத்தக்க முறையை, எண்ணுவார்- ஆராய்பவராகிய திண்ணனார், ஒரு தனிப்பகழி - ஒப்பில்லாத ஓர் அம்பு, தேவதேவர் - தேவர்களுக்கெல்லாம் தலைவரான காளத்திநாதர்.

20. வெள்விடையின் பாகர் - வெண்மையான (இடபம்) இடபத்தைச் செலுத்தும் சிவபெருமான், அங்கணர் - சிவ பெருமான், இடக்கும்-தோண்டும், நாக கங்கணர் - பாம்புகளைக் கைவளைகளாகக் கொண்ட சிவபெருமான், காளத்தி அற்புதர் திருக்கை, அன்பர் கையைத் தடுக்க அவர் வாக்கு மூன்று முறை 'நிற்க' என்றது என்க. மூன்று அடுக்காவது 'நில்லு கண்ணப்ப,' 'நில்லு கண்ணப்ப,' 'நில்லு கண்ணப்ப' என்பது. இச் செய்யுளின் கருத்தினை நக்கீர தேவர் பாடியருளிய 'கண்ணப்ப தேவர் திருமறம்' என்ற நூலில் காண்க.

21. பேறு - பெறத்தக்க பயன், ஊறு - துன்பம், ஏறு உயர்த் தவர் - இடபக் கொடியை உயர்த்தவராகிய சிவபெருமான், வலத்தில்-வலப்பக்கத்தில், மாறு இலாய்-ஒப்பற்றவனே, இலாய்- இல்லாய் (தொகுத்தல் விகாரம்), மன்னுபேர் அருள் - நிலை பெற்ற பெரிய திருவருள்.

**வினாக்கள் :**

1. காளத்திநாதர் சிவகோசரியாரின் கனவில் கூறியவை யாவை ?
2. திண்ணனார் காளத்திநாதருக்குப் பூசை செய்ய எவற்றை எவ்வாறு எடுத்துச் சென்றார் ?
3. தீயசகுனங்களைக் கண்டபோது திண்ணனார் கொண்ட கவலை யாது ?
4. காளத்திநாதர் வலக்கண்ணில் புண்ணீர் சோரக் கண்ட போது திண்ணனார் கொண்ட மெய்ப்பாட்டினையும் வருத் தத்தினையும் சேக்கிழார் எவ்வாறு கூறியுள்ளார் ?
5. திண்ணனார் காளத்திநாதர் கண்ணில் பிழிவதற்காக மருந்து கொண்டுவர வனத்தில் சென்ற முறைக்கும் திரும்பிவந்ததற்கும் கவிஞர் எடுத்தாண்ட உவமைகள் யாவை ?
6. இறைவன் திருக்கண்ணில் புண்ணீர் குறைபடாமல் வழிய, அதனை நீக்கக் கருதிய திண்ணனாரின் நினைவுக்கு வந்த பழமொழி யாது ?
7. தம் கண்ணைத் தோண்டி இறைவனார் கண்ணில் அப்பிய போது புண்ணீர் நின்றதைக் கண்ட திண்ணனார் எம் முறையில் மகிழ்ந்தார் ?
8. காளத்திநாதர் இடக்கண்ணில் புண்ணீர் வருவதைக் கண்ட திண்ணனார் செய்த செயற்கரிய செயல் யாது ?
9. திண்ணனார் தம் மற்றொரு கண்ணைத் தோண்ட முயன்ற போது காளத்திநாதர் அதனை எவ்வாறு தடுத்தார் ?
10. காளத்திநாதர் திண்ணனாருக்கு எம்முறையில் அருள் புரிந்தார் ?

# 5. சீறாப்புராணம்

## விலாதத்துக்காண்டம்

### நபி அவதாரப்படலம்

### மக்கமாநகர் அப்துல்லாவின் அருஞ்சிறப்பு

வரபதி யுலகெலாம் வாழ்த்தும் மக்கமா
புரபதிக் கதிபதி யென்னும் பூபதி
பரபதி யரசர்கள் பணிந்தி றைஞ்சிய
நரபதி அப்துல்லா வென்னும் நாமத்தார் 1

செழுமழை முகிலென அமுதஞ் சிந்திட
வழிகதிர் நபியென வகுத்த பேரொளி
பொழிகரத் தப்துல்லா விடத்திற் பொங்கியே
எழில்தரு திருநுத லிடத்தி லங்குமே. 2

### ஆமினாவின் அருங்குணங்கள்

அயிலுறை செழுங்கரத் தப்துல் லாவெனும்
பெயரிய களிறுக்கோர் பிடியும் போலவர்
உயிரென இருந்தசைந் தொசிந்த பூங்கொடி
மயிலெனும் ஆமினா என்னும் மங்கையே. 3

அறத்தினுக் கில்லிடம்; அருட்கோர் தாயகம்;
பொறுத்திடும் பொறுமையின் பூமிக் கெண்மடங்கு;
உறைபெருங் குலத்தினுக் கொப்பி லாமணி;
சிறப்பினுக் குவமையில் லாத செல்வியே. 4

### ஆமினா வயிற்றில் புகுந்த பேரொளி

இத்தகைக் குலமயில் ஆமி னாவெனும்
முத்தவெண் ணகைக்கனி மொழியும் மோகனச்
சித்திர அப்துல்லா என்னும் செம்மலும்
ஒத்தினி தமுதமுண் டுறையும் நாளினில் 5

திங்க ளாமிற ஜபுமுதற் றேதிவெள் ளியிராத்
துங்க வார்கழல் மகம்மது பேரொளி துலங்கி
எங்கள் நாயகர் அப்துல்லா நுதலிடத் திருந்து
மங்கை ஆமினா வயிற்றினில் தரித்த தன்றே. 6

### அகுமதின் தோற்றம்

கோதறப் பழுத்து மதுரமே கனிந்த
கொவ்வைவா யரம்பையர் வாழ்த்தித்
தீதற நெருங்கி ஏவல்செய் திருப்பச்
செழுங்கம லாசனத் திருந்த
மாதருக் கரசி ஆமினா உதர
மனையிடத் திருந்துமா நிலத்தில்
ஆதரம் பெருக நல்வழிப் பொருளாய்
அகுமது தோன்றினர் அன்றே.. 7

பானுவின் கதிரால் இடருறுங் காலம்
படர்தரு தருநிழல் எனலாய்

ஈனமும் கொலையும் விளைத்திடும் பவநோய்
இடர்தவிர்த் திடும்அரு மருந்தாய்த்
தீனெனும் பயிர்க்கோர் செழுமழை எனலாய்க்
குறைஷியின் திலகமே எனலாய்
மானிலந் தனக்கோர் மணிவிளக் கெனலாய்
மகம்மது நபிபிறந் தனரே. 8

—உமறுப்புலவர்

**குறிப்புரை :**

'சீறு' என்பது அரபுச்சொல். இதற்கு 'வாழ்க்கை வரலாறு' என்பது பொருள். மகம்மது நபியின் வரலாறு கூறுவதால் இது **சீறாப்புராணம்** எனப்பட்டது.

இதன் ஆசிரியர் **உமறுப்புலவர்.** அவர் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள எட்டயபுரத்தில் வாழ்ந்தவர். அவருடைய தந்தையார் பெயர் சேகு முதலியார் என்பது. உமறுப்புலவர் கடிகை முத்துப்புலவரிடம் தமிழ் பயின்றார். சீதக்காதி வள்ளலின் அமைச்சராகிய அப்துல் காசிம், அவரை ஆதரித்தார். அவர் வாழ்ந்த காலம் 17ஆம் நூற்றாண்டாகும்.

**அருஞ்சொற்பொருள் :**

1. வரபதியுலகு - மேன்மை நிலவும் உலகம், மக்கமாபுரம் - மகம்மது நபி அவதாரம் செய்த மெக்கா, மாபுரபதி - பெரிய புரமாகிய நகரம், அதிபதி - தலைவன், பூபதி – பூமண்டலத்திற்குத் தலைவன், பரபதியரசர்கள் - பரமண்டலத்தில் உள்ள அரசர்கள், நரபதி - மக்கள் தலைவன், நாமத்தார் - பெயரினையுடையவர்.

2. செழுமழை - செழிப்பான மழை (பண்புத்தொகை), வழிகதிர் - பொங்கிப்பெருகி வழிகின்ற கிரணங்கள், நுதல் - நெற்றி, தருதிருநுதல் - வினைத்தொகை.

3. அயில் - வேலாயுதம், களிறு - ஆண் யானை, பிடி - பெண் யானை. இங்கே அப்துல்லாவைக் களிறாயும் ஆமினாவை அதற்கேற்பப் பிடியாயும் கூறுகிறார் கவிஞர். உயிரென - உயிரைப்போல, ஒசிந்த - துவண்ட. 'பூங்கொடி, மயில்' என்பன உவமையாகுபெயராய் ஆமினாவைக் குறிக்கும்.

4. இல்லிடம் - இருப்பிடம், தாயகம் - தாய் வீடு.

5. குலமயில் ஆமினா - நற்குடியிற்பிறந்த மயிலை ஒத்தவளான ஆமினா, முத்த வெண்ணகை - முத்துப் போன்ற வெண்மையான பற்கள், சித்திரம் – அழகு, செம்மல் - பெருமையிற்சிறந்தவர்.

6. இறஜபு - இஸ்லாமியர் வழங்கும் மாதங்களுள் ஒன்று, துங்கவர் - தூயவர், கழல் - பாதம், துலங்கி - ஒளி வீசி, தரித்தது - தங்கியது.

7. கோதற - சக்கையில்லாமல், மதுரம் - இனிமை, கொவ்வை வாய் அரம்பையர் - கொவ்வைப்பழம் போன்ற சிவந்த வாயை உடைய அரம்பையர், தீது - குற்றம், கமலாசனம் - தாமரை மலராகிய இருக்கை, கமலாசனத்திருந்த மாதர்-திருமகளை ஒத்த, உதர மனை-வயிருகிய வீடு, ஆதரம்-அன்பு, மாநிலம் - பெரிய உலகம், அகுமது - அகுமது என்னும் திருப்பெயருடைய நபி நாயகம்.

8. பானு - சூரியன், படர்தரு - படர்ந்திருக்கிற, தரு - மரம், ஈனம் - இழிவு, பவ நோய் - பாவம் என்னும் நோய், அருமருந்து - கிடைத்தற்கு அருமையான மருந்து, தீன் எனும் பயிர் - தீன் என்னும் சமயமாகிய பயிருக்கு, எனலாய் - என்று சொல்லும்படியாய், குறைஷி - மகம்மது பிறந்த குலப்பெயர், திலகம் - பொட்டு, மாநிலம் - பெரிய பூமி, (எதுகை நோக்கி 'நி' என்பது 'னி' என்று திரிந்தது), மணி விளக்கு - மாணிக்க விளக்கு.

**வினாக்கள் :**

1. சீருப்புராணம் என்னும் பெயர்க்காரணத்தை விளக்குக.
2. உமறுப்புலவரின் வரலாற்றை எழுதுக.
3. மக்கமாநகரையும் மன்னன் அப்துல்லாவையும் கவிஞர் எவ்வாறு சிறப்பித்துக் கூறுகிறார்?
4. அப்துல்லா, ஆமினா என்பவரின் இணைந்த வாழ்க்கையைக் கவிஞர் எவ்வாறு வருணிக்கின்றார்?
5. ஆமினாவின் உருவ அழகையும் உயரிய குணங்களையும் விளக்குக.
6. ஆமினா வயிற்றுட்புகுந்த பேரொளியைப் பற்றிச் சீருப் புராணம் கூறுவது யாது?
7. மகம்மதுவின் தோற்றத்தைக் கவிஞர் எவ்வாறு புகழ்ந்து போற்றுகிறார்?

# 6. தேம்பாவணி

## வளன் சனித்த படலம்

### தாவீதும் கோலியாத்தும்

### கோலியாத்தின் போர்க்கோலம்

வேலி யாற்கது விடாத்திரு நகரெலாம் நடுங்க,
மாலி யாற்கதிர் வகுத்தவாள் ஏந்தினர் நாப்பண்,
ஆலி யாற்கரிந்து அகல்முகில் உருக்கொடு வேய்ந்த
கோலியாத்தெனும் கொடியவோர் இராக்கதன்
[எதிர்த்தான். 1

### கோலியாத்தின் அறைகூவல்

கூர்த்த போர்செயக் கூடினர்க் கொருவன்வந் தெய்தி,
'சீர்த்த நான்அவன் சிறந்தபோர் தனித்தனி தாக்க,
தோற்ற பாங்கினர் தொழும்பரென் றுருகுவர்,' என்று,
ஆர்த்த ஓகையால் நகைத்திகழ்வு அறைந்தறைந்
[தழைப்பான். 2

### சவுல் அரசன் அறிவிப்பு

தாங்கு வாரிலாச் சாற்றிய உரைகள்கேட் டெவரும்
நீங்கு வாரென நிருபனும் அயரும்தன் னெஞ்சிற்கு
'ஏங்கு வான்எவன்? எதிர்த்தவவ் வரக்கனை வென்றால்,
ஆங்கு நான்அவற்கு என்மகள் அளிக்குவென்!' என்பான். 3

### இளைஞன் தாவீது, கோலியாத்துடன் போர் செய்ய முன்வரல்

இன்ன வாய்ப்பகல் நாற்பதும் இரிந்தபின், அண்ணர்
முன்னர் மூவரே முரண்செயப் போயினர். அவரைத்
துன்ன ஆசையால் தொடர்ந்திளந் தாவிதன் எய்தி
அன்ன யாவையும் அஞ்சினர் அறைதலும் கேட்டான். 4

'கைவ யத்தினால், கருத்திடத் துடலினுங் கோங்கும்
பொய்வ யத்தினன் புகைந்தசொற் கஞ்சுவ தென்னோ?
மெய்வ யத்தினால் விழைசெயம் ஆவதோ? கடவுள்
செய்வ யத்தினால் சிறுவன்நான் வெல்லுவேன்!' என்றான். 5

### தாவீது போர்க்குப் புறப்படுதல்

அரிய ஆண்மையை அதிசயித் தரசன்'நன் றென்று,
விரிய ளாவொளி வேலொடு தனதுபல் கருவி
உரிய போர்செய ஒருங்குதந் தனன்;அவற் றொடுதான்
"திரிய, ஆய்முறை தெரிகிலேன்,' எனமறுத் தகன்றான். 6

தெரிந்த வாய்ந்தஐஞ் சிலையொடு கவண்எடுத் தெவரும்
இரிந்த பாலனை நோக்கிஉள் அதிசயித் திரங்க,
விரிந்த ஆசையால் வேதியர் ஆசியைக் கூறப்
பிரிந்த கால்ஒலி பெருகவாங் கனைவரும் ஆர்த்தார். 7

### கோலியாத்தின் கோபமொழி

"நீய டாஎதிர் நிற்பதோ? மதம்பொழி கரிமேல்
நாய டாவினை நடத்துமோ? கதம்கொடு நானே
வாய டாபிளந் துயிர்ப்பிட மறுகிநீ நுண்தூள்
ஆய டாவுல கப்புறத் தேகுவாய்!' என்றான். 8

### தாவீது கடவுள் துணையால் கவண் வீசி வெல்லுதல்

"வெல்வை வேல்செயு மிடலதுன் மிடலடா! நானே
எல்லை யாதர வியற்றெதி ரிலாத்திறக் கடவுள்
வல்லை யோடுனை மாய்த்துடல் புட்கிரை யாக
ஒல்செய் வேன்!'என உடைகவண் சுழற்றினன் இளையோன். 9

கல்லை யேற்றலும் கவணினைச் சுழற்றலும் அக்கல்
ஒல்லை யோட்டலும் ஒருவரும் காண்கிலர்; இடிக்கும்
செல்லை ஒத்தன சிலைநுதற் பாய்தலும் அன்னான்
எல்லை பாய்ந்திருள் இரிந்தென வீழ்தலும் கண்டார். 10

—வீரமாமுனிவர்

### குறிப்புரை:

தேம்பா அணி என்பது, 'வாடாத பாமாலை' எனப் பொருள்படும்.

'வாடா நறுமலர் வகுத்த அணியெனும்
விடா மதுக்கவி வீக்கிய அணியெனும்
தேவுல கேற்றுந் தேம்பா வணியெனும்
பூவுல கறியப் புகழ்க்கதைப் பெயரென'

வரும் இக்காவியப் பாவுரைப் பதிக அடிகளில் இப்பெயரிட்ட வகையை நூலாசிரியரே விளக்கியுள்ளார்.

யூதேய நாட்டிற்பிறந்து புகழுடன் வாழ்ந்த சூசையப்பர் வரலாறு உரைப்பது இந்நூல். 'பைபிள்' என்னும் **விவிலியத்** திருமறையே இந்நூலின் முதல்நூலாகும். ஆதலால், இது வழி நூலாகும். இது மூன்று காண்டங்களையும் முப்பது படலங்களை யும் கொண்டது. இப்பாடப்பகுதி, முதற்காண்டத்தில் மூன்றும் படலமாகிய **வளன் சனித்த படலம்** என்பதன் ஒரு பகுதியாம்.

இக்காப்பியத்தை இயற்றியவர் **வீரமாமுனிவர்**. இவரது இயற்பெயர் **கான்ஸ்டான்சியுஸ் ஜோசப்பு பெஸ்கி** என்பது. இவர் இத்தாலிநாட்டில் காஸ்திக்கிலியோன் என்னும் ஊரில் பிறந்தவர்; உரோமன் கத்தோலிக்கக் கிறித்தவர்; 18ஆம் நூற்றாண்டின் முற் பகுதியில் வாழ்ந்தவர். கிறித்தவ சமயத்தைப் பரப்பும் பொருட்டுத் தமிழ் நாட்டிற்கு வந்த இவர், சுப்பிரதீபக்கவிராயர் என்பவரிடம் தமிழ் பயின்று கவிஞராய் விளங்கினர்.

## கதைத்தொடர்பு :

யூதேய நாட்டில் பண்டைக்காலத்தில் **இஸ்ரவேலர்** வாழ்ந் தனர். அவர்களுக்கு அரசனாய் விளங்கியவன் **சவுல்**. யூத சமயப் பகைவரான **பிலித்தையர்** என்பவர், இஸ்ரவேலருக்கு எப் பொழுதும் தொல்லை விளைத்து வந்தனர். பிலித்தையர் படையில் **கோலியாத்து** என்னும் கொடியவன் இருந்தான். அவன் எதிர் நின்று போர் புரிய இயலாமல் சவுல் மன்னனும் அவன் படை வீரரும் அஞ்சி நடுங்கினர்.

## அருஞ்சொற்பொருள் :

1. வேலி - மதில், கதுவிடா - அழியாத. 'கதுவிடா வேலியால்,' என இயைக்க. மாலி - சூரியன், நாப்பண் – நடுவில், ஆலி - மழை நீர், அகல் - அகன்ற, வேய்ந்த - தோன்றிய.

2. கூர்த்த - மிகுந்த, சீர்த்த – சிறந்த, தோற்ற பாங்கினர் - தோல்வியுற்ற பக்கத்தார், தொழும்பர் - அடிமையர், ஓகையால் – மகிழ்ச்சியால், அறைந்தறைந்து - பல முறை சொல்லி.

3. தாங்குவார் - பகையை எதிர்த்துத் தாக்குகிறவர், சாற்றிய - சொல்லிய, நீங்குவார் - பின் வாங்கிச் செல்வார், நிருபன் - அரசன், ஏங்குவான் - ஏங்கினவனாய், ஆங்கு - அசை.

4. இன்னவாய் - இப்படிப்பட்ட தன்மையவாய், பகல் நாற்பது - நாற்பது நாள்கள், இரிந்த பின் - கழிந்த பின்பு, அண்ணர் - தமையன்மார், முரண் செய - போர் புரிய, துன்ன - நெருங்கிக்காண, அறைதல் - சொல்லுதல்.

5. கைவயம் – கையின் வல்லமை, கருத்திடத்து - மனதில், உடலின் ஊங்கு - தன் உடலால் மேம்பட்டு எழுகின்ற, பொய் வயத்தினன் - பொய்யான வல்லமையுடையோன், புகைந்த சொற்கு - வெகுண்டு கூறிய உரைக்கு, விழை செயம் - விரும்பிய வெற்றி, செய்வயம் - தரும் திறம்.

6. விரி அளாவு ஒளிவேல்-பரந்து ஒளி செய்யும் வேலாயுதம், திரிய - நடக்க, ஆய்முறை - ஆய்ந்து செலுத்தும் வகை.

7. வாய்ந்த - தகுந்த, ஐஞ்சிலை - ஐந்து கல் (கவணில் வைத்து எறிவதற்காக எடுத்த கல்), இரிந்த பாலன் - எதிர்த்து ஓடுகின்ற இளைஞனை தாவிதன், உள் - மனம், பிரிந்த கால் - பிரிந்த போது.

8. கரி - யானை, கதம் கொடு - சினம் கொண்டு, உலகப் புறத்து - இவ்வுலகத்திற்கு அப்பால் உள்ள உலகிற்கு.

9. வெல் வை வேல் - வெல்வதற்குரிய கூரிய வேற்படை, மிடல் – வலிமை, எல்வை - சமயம், எதிர் இலாத் திறக்கடவுள் - ஒப்பில்லாத எல்லா வலிமையும் பெற்ற கடவுள், வல்கை - வலிய கைத்துணை, புட்கு - பறவைகளுக்கு, ஒல் செய்வேன் - விரைந்து செய்வேன்.

10. கல் ஏற்றல் - கல்லைக் கவணிலே பொருத்துதல், ஒல்லை - விரைவு, செல்லை ஒத்தன - மேகத்தைப் போன்றன, எல்லை-சூரியன், இரிந்தென-ஓடுவது போல. இஃது உவமையணி. கவண் கல் கதிரவனுக்கும் இருள் அரக்கனுக்கும் உவமை.

**வினாக்கள்:**

1. தேம்பாவணி என்னும் காப்பியப் பெயர் அமைந்த காரணம் யாது?
2. தேம்பாவணிக்காப்பியத்தின் முக்கியப் பிரிவுகள் யாவை?
3. வீரமாமுனிவரின் வாழ்க்கைக்குறிப்பை எழுதுக.
4. பிலித்தையர் படை வீரன் கோலியாத்தின் உருவைக் கவிஞர் எவ்வாறு வருணிக்கிறார்?
5. கோலியாத்தின் அறைகூவல் யாது?
6. சவுல் மன்னன் கோலியாத்தின் அறைகூவலைக் கேட்டு அறிவித்தது யாது?
7. தாவீது போர்க்களம் செல்லக் காரணம் யாது?
8. சவுல் மன்னன் அழைப்பை ஏற்றுப் போர் செய்ய முன் வந்த தாவீது கூறியது யாது?
9. தாவீதின் அரிய ஆண்மையைக் கண்டு அதிசயித்த சவுல் என்ன செய்தான்?
10. இடஞ்சுட்டி விளக்குக:
    (அ) 'தோற்ற பாங்கினர் தொழும்பர் என்றுகுவர்.'
    (ஆ) 'திரிய ஆய்முறை தெரிகிலேன்.'
11. கவணுடன் தன்னை எதிர்க்க வந்த தாவீதைப் பார்த்துக் கோலியாத்து வெகுண்டு கூறிய மொழிகள் யாவை?
12. கோலியாத்தின் கோபமொழிக்கெதிராய்த் தாவீது உரைத்தது யாது?

13. கொடியன் கோலியாத்தைச் சிறுவன் தாவீது வென்றது எப்படி? அவனுக்கு அத்தகைய ஆற்றல் எதனால் அமைந்தது?

14. கோலியாத்-தாவீது உரையாடலின் சொல்லாட்சி நயத்தினைப் புலப்படுத்துக.

## 7. பாஞ்சாலி சபதம்

### திரௌபதி தேர்ப்பாகனுக்குச் சொல்லியது

நாயகர் தாந்தம்மைத் தோற்றபின் — என்னை
நல்கும் உரிமை அவர்க்கில்லை; — புலைத்
தாயத்தி லேவிலைப் பட்டபின் — என்ன
சாத்திரத் தாலெனைத் தோற்றிட்டார்? — அவர்
தாயத்தி லேவிலைப் பட்டவர்; — புவி
தாங்குந் துருபதன் கன்னிநான்; — நிலை
சாயப் புலைத்தொண்டு சார்ந்திட்டால் — பின்பு
தார முடைமை அவர்க்குண்டோ? 1

கௌரவ வேந்தர் சபைதனில் — அறங்
கண்டவர் யாவரும் இல்லையோ? — மன்னர்
சௌரியம் வீழ்ந்திடும் முன்னரே — அங்குச்
சாத்திரஞ் செத்துக் கிடக்குமோ? — புகழ்
ஒவ்வுற வாய்ந்த, குருக்களும் — கல்வி
ஓங்கிய மன்னருஞ் சூதிலே — செல்வம்
வவ்வுறத் தாங்கண் டிருந்தனர்! — என்றன்
மான மழிவதும் காண்பரோ? 2

இன்பமுந் துன்பமும் பூமியின் — மிசை
யார்க்கும் வருவது கண்டனம்; — எனில்
மன்பதை காக்கும் அரசர்தாம் — அற
மாட்சியைக் கொன்று களிப்பரோ? — அதை
அன்புந் தவமுஞ் சிறந்துளார் — தலை
அந்தணர் கண்டு களிப்பரோ? — அவர்
முன்பென் வினாவினை மீட்டும்போய்ச் — சொல்லி
முற்றுந் தெளிவுறக் கேட்டுவா! 3

[தேர்ப்பாகன் வந்து சொன்ன செய்தி கேட்ட துரியோதனன் பெருஞ்சினம் கொள்கிறான்; தன் தம்பி துச்சாதனனை ஏவுகிறான். கெட்ட குணமுடைய துச்சாதனன் திரௌபதி ஓலமிட்டு அலறியும் விடாமல், அவள் கூந்தலைப் பற்றி இழுத்து அரச சபையில் கொண்டுவந்து நிறுத்துகிறான். திரௌபதி நீதி கேட்டு அழுகின்றாள். பின்னர், துச்சாதனன் திரௌபதியின் துகிலை உரிகிறான். அவையிலிருந்த சான்றோர் உளம் கொதிக்கின்றனர். துரியோதனாதியரைப் பழிவாங்கப் பாண்டவர் சபதம் செய்கின்றனர்.]

### வீமன் செய்த சபதம்

வீமனெ ழுந்துரை செய்வான்; — 'இங்கு
விண்ணவ ராணை! பராசக்தி யாணை!
தாமரைப் பூவினில் வந்தான் — மறை
சாற்றிய தேவன் திருக்கழ லாணை!
மாமகளைக் கொண்ட தேவன் — எங்கள்
மரபுக்குத் தேவன்கண் ணன்பதத் தாணை!
காமனைக் கண்ணழ லாலே — சுட்டுக்
காலனை வென்றவன் பொன்னடி மீதில் 4

'ஆணையிட் டிஃதுரை செய்வேன்: — இந்த
ஆண்மை யிலாத்துரி யோதனன் றன்னைப்
பேணும் பெருங்கன லொத்தாள் — எங்கள்
பெண்டு திரௌபதி யைத்தொடை மீதில்
நாணின்றி 'வந்திரு' என்றான்; — இந்த
நாய்மக னாந்துரி யோதனன் றன்னை
மாணற்ற மன்னர்கண் முன்னே, — என்றன்
வன்மையி னால்யுத்த ரங்கத்தின் கண்ணே 5

'தொடையைப் பிளந்துயிர் மாய்ப்பேன்! — தம்பி
சூரத்துச் சாதனன் தன்னையு மாங்கே
கடைபட்ட தோள்களைப் பிய்ப்பேன்! — அங்குக்
கள்ளென ஊறு மிரத்தங் குடிப்பேன்!
நடைபெறும் காண்பி ருலகீர்! — இது
நான்சொல்லும் வார்த்தைஎன் றெண்ணிடல்
[வேண்டா:
தடையற்ற தெய்வத்தின் வார்த்தை! — இது
சாதனை செய்க, பராசக்தி!' என்றான். 6

### அருச்சுனன் சபதம்

பார்த்த னெழுந்துரை செய்வான்: — 'இந்தப்
பாதகக் கர்ணனைப் போரில் மடிப்பேன்!
தீர்த்தன் பெரும்புகழ் விஷ்ணு — எங்கள்
சீரிய நண்பன்கண் ணன்கழ லாணை!
கார்த்தடங் கண்ணிஎந் தேவி — அவள்
கண்ணிலும் காண்டிவ வில்லினும் ஆணை!
போர்த்தொழில் விந்தைகள் காண்பாய் — ஹே
பூதல மேஅந்தப் போதினில்!' என்றான். 7

### பாஞ்சாலி சபதம்

தேவி திரௌபதி சொல்வாள்: — 'ஓம்,
தேவி பராசக்தி ஆணை யுரைத்தேன்!
பாவிதுச் சாதனன் செந்நீர், — அந்தப்
பாழ்த்துரி யோதனன் ஆக்கை இரத்தம்,
மேவி இரண்டுங் கலந்து — குழல்
மீதினிற் பூசி நறுநெய் குளித்தே
சீவிக் குழல்முடிப் பேன்யான்! — இது
செய்யுமுன் னேமுடி யேன்!'என் றுரைத்தாள். 8

ஓமென் றுரைத்தனர் தேவர்: — 'ஓம்
ஓம்'என்று சொல்லி உறுமிற்று வானம்.
பூமி யதிர்ச்சிஉண் டாச்சு: — விண்ணைப்
பூழிப் படுத்திய தாஞ்சுழற் காற்று:
'சாமி தருமன் புவிக்கே' — என்று
சாட்சி யுரைத்தன பூதங்க ளைந்தும்:
நாமுங் கதையை முடித்தோம்: — இந்த
நானில முற்றும்நல் லின்பத்தில் வாழ்க! 9

—சி. சுப்பிரமணிய பாரதியார்

### குறிப்புரை:

பஞ்சபாண்டவரின் மனைவியாகிய திரௌபதி பாஞ்சால நாட்டு மன்னன் மகளாதலால், பாஞ்சாலி என்றும் பெயர் பெற்றாள். துரியோதனன் அரசவையிலே அவன் தம்பி துச்சாதனன் அவளைத் தகாதமுறையில் இழுத்துச் சென்று துகில்

உரிந்து அவமானப்படுத்திய போது அவள் உரைத்த சபதம் பற்றிய நிகழ்ச்சியை விவரிப்பதனால், **பாஞ்சாலி சபதம்** என்பது இக்காப்பியத்துக்குப் பெயராயிற்று

பாஞ்சாலியின் சபதம் மகா பாரதக்கதையின் ஒரு பகுதி. இதனைப் பொருளாய்க் கொண்டு மகாகவி **சி. சுப்பிரமணிய பாரதியார்** எளிய நடையில் இனிய சந்தப்பாக்களில் இக்காப்பியத்தைப் பாடியுள்ளார்.

பாஞ்சாலி சபதம், **துரியோதனன் சூழ்ச்சிச்சருக்கம், சூதாட்டச்சருக்கம், அடிமைச்சருக்கம், துகிலுரிதற்சருக்கம், சபதச்சருக்கம்** என்னும் ஐந்து சருக்கங்களைக் கொண்டுள்ளது. பாடப்பகுதி, துகிலுரிதற்சருக்கம், சபதச்சருக்கம் என்னும் இரண்டிலிருந்தும் எடுக்கப்பட்டுள்ளது.

தேசியக்கவிஞர் சுப்பிரமணிய பாரதியார், 1882 முதல் 1921 வரை வாழ்ந்தவர். எட்டயபுரம் அவர் பிறந்த ஊர். சின்னச்சாமி ஐயரும் இலக்குமி அம்மையாரும் அவருடைய பெற்றோர். கவிஞர், எட்டயபுர மன்னரின் ஆதரவு பெற்றவர். இளமையில் அவர்பாலுள்ள கவித்திறன் கண்டு, 'பாரதி' என்னும் சிறப்புப்பெயரால் அவரை வழங்கினர். அவர் 'சுதேசமித்திரன்' நாளிதழின் துணை ஆசிரியராய் விளங்கியவர்; நாட்டுப்பற்றும் மொழிப்பற்றும் ஊட்டத்தக்க இனிய பாடல்களைப் பாடி எழுச்சியூட்டியவர். இதனால், 'தேசியக்கவி' என அவர் போற்றப் படுகிறார். கவிதை பாடுவது போலவே எளிய நயம் வாய்ந்த உரை நடை எழுதுவதிலும் அவர் வல்லவர்.

## கதைத்தொடர்பு :

அத்தினபுரத்திலிருந்து அரசு புரிந்த திருதராட்டிரனுக்குத் **துரியோதனன்** முதலிய நூறு புதல்வரிருந்தனர், அவர்களைக் **கௌரவர்** என வழங்குவர். திருதராட்டிரன் தம்பி பாண்டு மன்னனுக்குத் **தருமன், வீமன், அருச்சுனன், நகுலன், சகாதேவன்** என்னும் ஐவர் புதல்வர் ; அவரைப் **பாண்டவர்** எனவும் **பஞ்சபாண்டவர்** எனவும் வழங்குவர்.

இளமை முதலே பாண்டவர்மீது பொறாமையும் வெறுப்பும் கொண்டவன் துரியோதனன். அவன் பாண்டவர்க்குப் பற்பல வகையில் துன்பங்களை இழைத்து வந்தான். துரியோதனன் அம்மான் பெயர் **சகுனி** என்பது. கர்ணன், துரியோதனனுக்குத் தோழன். அவ்விருவரும் துரியோதனன் சூழ்ச்சிகளுக்குத் தூண்டு கோலாய் அமைந்தனர்.

இந்திரப்பிரத்தத்தைத் தலைநகரமாய்க் கொண்டு சீரோடும் சிறப்போடும் நாடாண்டிருந்த பஞ்சபாண்டவர்களைத் துரியோதனன் வஞ்சகமாய் அத்தினபுரத்திற்கு வரவழைத்தான்; அவர்களைச் சூது விளையாட்டில் ஈடுபடுத்தினான். துரியோதனன் சார்பில் சகுனியும், பஞ்சபாண்டவர் சார்பில் மூத்தவனான தருமனும் சூதாடினர். சூதில் தருமன் நாடு நகரம் சேனை முதலிய எல்லாச்செல்வங்களையும் பணயமாய் வைத்துத் தோற்றான்; தன்

உடன் பிறந்தாரையும் பணயம் வைத்ததோடு தன்னையும் பணயம் வைத்துத் தோல்வியடைந்தான்; இறுதியில் சகுனியின் பேச்சால் மதி மயங்கி, தன் மனைவி திரௌபதியையும் பணயம் வைத்து இழந்தான். எனவே, பஞ்ச பாண்டவர் அடிமை நிலையடைந்தனர்.

**அருஞ்சொற்பொருள் :**

1. நாயகர் - கணவன்மார், நல்கு' உரிமை - பணயமாகக் கொடுக்கும் உரிமை, புலைத்தாயம் - இழி...ான சூதாட்டம், விலைப் பட்டவர் - விற்கப்பட்டுப் பிறர்க்கு உரிமையானவர், புவி - பூமியிலுள்ளார் (இடவாகு பெயர்), தாங்கும் - காப்பாற்றும், துருபதன் கன்னி - துருபதன் மகள்.

2. கௌரவ வேந்தர் - குருகுல மன்னர், சௌரியம் - வீரம், ஒவ்வுற - பொருந்த, குருக்கள் - ஆசிரியர்கள், வவ்வுற - கவர.

3. மன்பதை-மக்கள், மாட்சி - பெருமை, கொன்று - அழித்து, தலை - முதன்மையான, மீட்டும் - திரும்பவும்.

4. விண்ணவர் - தேவர், ஆணை - சத்தியம், மறை சாற்றிய தேவன் - வேதத்தைச்சொன்ன பிரமன், திருக்கழல் - அழகிய கழலணிந்த திருவடி (தானியாகு பெயர்), மாமகள் - இலக்குமி, காமன் - மன்மதன், கண்ணழல் - நெற்றிக் கண்ணிலிருந்து பிறந்த நெருப்பு, காலனை வென்றவன் - யமனை மாய்த்த சிவபெருமான். பிரமன், திருமால், சிவன் என்னும் மும்மூர்த்தி களின் பேரிலும் ஆணையிடுகிறான் வீமன். இப்பாட்டின் பொருள் அடுத்த பாடலுடன் தொடர்வதனால் இது **குளகப்பாட்டாம்.**

5. பேணும் பெருங்கனல் - விரும்பி வளர்க்கும் வேள்வித்தீ, பெண்டு - மனைவி, மாணற்ற - பெருமையில்லாத, யுத்தரங்கம் - யுத்த களம். இதுவும் **குளகப்பாட்டு.**

6. சூரன் - வலியவன, இங்கே 'சூரத்துச்சாதனன்' என்றது இகழ்ச்சிக்குறிப்பு. கடைபபட்ட - கீழான. தோள் ஆடவரின் வீரத்தைக் குறிக்கும் உறுப்பு. துச்சாதனன், முறையான வீரச் செயல் எதனையும் புரியாமல் துகிலுரிதலாகிய கீழான செயலையே செய்தமையால், 'கடைப்பட்ட தோள்கள்' என்றார்.

7. பார்த்தன் - பிருதை என்னும் குந்தியின் புதல்வனை அருச்சுனன் (தத்திதாந்த நாமம்), கார்த்தடங்கண்ணி - கருமையான பெரிய கண்களை உடையவள், தேவி - மனைவி, காண்டிவம் - அருச்சுனனுக்குரிய வில், விந்தை - புதுமை, பூதலமே - பூமியில் வாழ்வோரே (இடவாகு பெயர்).

8. செந்நீர் - இரத்தம், ஆக்கை - உடம்பு, குழல் - கூந்தல்.

9. ஓம் - 'அப்படியே ஆகுக!' எனக் கூறும் குறிப்புச்சொல். பூழி - புழுதி, சாமி - தலைவன், புவி - உலகம், பூதங்கள் ஐந்து - 'நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம்' என்னும் ஐந்து இயற்கைக் கூறுகள், நானிலம் - (குறிஞ்சி. முல்லை, மருதம், நெய்தல் என நான்கு வகை நிலத்தையுடைய) உலகம்.

**வினாக்கள்:**

1. பாஞ்சாலி சபதம் எனப் பாரதியார் தமது சிறு காப்பியத்திற்குப் பெயரிட்டதேன்?

2. பாரதியார் இயற்றிய 'பாஞ்சாலி சபதம் சிறு காப்பியத்தின் அமைப்பை விளக்குக.

3. தேசியக்கவி பாரதியாரின் வாழ்க்கைக்குறிப்பை எழுதுக.

4. சபைக்கு வருமாறு தன்னை அழைக்க வந்த தேர்ப் பாகனுக்குத் திரௌபதி உரைத்தது யாது?

5. வீமன் தன் சபதத்தில் சொன்ன செய்திகள் யாவை?

6. அருச்சுனன் செய்த சபதம் யாது?

7. அருச்சுனன் யார் யார்மேல் ஆணையிட்டுச் சபதம் செய்தான்?

8. பாஞ்சாலி செய்த சபதத்தை எழுதுக.

9. பாஞ்சாலி சபதம் செய்த போது நிகழ்ந்த இயற்கை நிகழ்ச்சிகள் யாவை?

10. பாஞ்சாலியைத் தம் இலட்சியப் புதுமைப் பெண்ணாகப் பாரதியார் எவ்வாறு சித்திரிக்கிறார் ?

# IV. மொழிபெயர்ப்புப் பாடல்கள்

## 1. சுவர்க்க நீக்கம்

[ மில்டன் ]

### தேவ ஆவி துதி

*மக்கள் கைத்த லத்தி யற்றி வைத்த கோவில் யாவினும்*
*மிக்க தென்று வாய்மை தூய்மை மேய நெஞ்ச ஆலயம்*
*புக்க தேவ ஆவியே ! புரிந்து யான்சொ லப்புகும்*
*தக்க காதை முற்றுமே தகத்தெ ரிந்து ளாயரோ !* 1

### சுவர்க்கத்தை மனிதன் இழந்தது

*மற்றிறை கற்பனை வரைக டக்குமா*
*முற்றிய காரணம் முதற்கண் சோறி, ஆழ்*
*பெற்றிய நிரயமும் பிராண லோகமும்*
*உற்றன ஒன்றும்நிற் கொளிப்ப தில்லையால்.* 2

*கருத்தனைப் பகைத்திழி கலகம் அன்னவர்*
*வருத்தனை யறச்செய் வஞ்சம் முன்செய்த*
*ஒருத்தன்யார் என்னில்வெவ் வுரக ரூபம்கொள்*
*திருத்தவிர் நரகம்ஆள் தேவ தூதனே.* 3

*அனையவன் தான்,தன தகச்செ ருக்கினுர்*
*தனையடுஉப் பரற்பிழை தன்க ணத்தொடும்*
*வனையரும் இயற்பர மண்ட லத்தினின்*
*றினையலுற் றிரியுஞ இழிந்து வைகும்நாள்.* 4

*மானவர் வாழ்வுகாண் மனப்பொ ருமையின்*
*வானவன் மாட்டுள வயிரத் திற்கிளர்*
*ஈனவஞ் சத்தினல் யாவ ருக்கும்தாய்*
*ஆனவள் தனைமருட் டியவன் ஆமரோ.* 5

—வெள்ளக்கால் ப. சுப்பிரமணிய முதலியார்.

## குறிப்புரை :

ஆதாம், ஏவாள் என்ற இருவரும் மனுக்குலத்தின் முதல் தகப்பனும் தாயும் ஆவர்; எல்லா நலங்களும் ஒருங்கமைந்த சிங்காரத் தோப்பு அல்லது சுவர்க்கம் என்ற இடத்தில் வாழ்ந்தவர். தாங்கள் இழந்த சுவர்க்கத்தில் மனிதன் வாழ்வதா என்ற பொறாமை ஒருபுறம், செருக்குண்ட தம்மை நரகத்தில் தள்ளிய இறைவன்மீது பழிவாங்க வேண்டும் என்ற வன்மம் ஒருபுறம் பேய்களைத் தூண்டுகின்றன. எனவே, பாம்பு வடிவம் கொண்டு பேய்களின் தலைவன் ஏவாளை ஏமாற்றி, கடவுள் விலக்கிய கனிகளை ஏவாளும் அவளைக் கொண்டு ஆதாமும் தின்னும்படி செய்கிறான். கனிகளைத் தின்ற இருவரும் கடவுளால் சபிக்கப்பட்டு, சுவர்க்கத்திலிருந்து விலக்கப்பட்டு, உலகில் படும் சாவு, நோய், துன்பம் முதலிய தண்டனை அனைத்திற்கும் ஆளாகின்றனர். சுவர்க்கத்தை மக்கள் இழந்த வரலாற்றைக் கூறும் இந்நூல் **சுவர்க்க நீக்கம்** என்ற பெயர் பெற்றது.

இதன் மூல நூலாசிரியர் மில்டன் (John Milton) என்ற ஆங்கிலப் பெருங்கவிஞர் (1608 - 1674). ஏறத்தாழ ஐந்தாண்டு காலமாக உருவான Paradise Lost என்ற இந்நூலைத் தொடங்கும் முன்பே (1658), புலவர்தம் கண்கள் பார்வை இழந்துவிட்டன. இவர், எபிரேயம், கிரேக்கம், இலத்தீன் போன்ற தொன்மொழிகளிலும் ஆங்கிலம், பிரஞ்சு, இத்தாலியம் முதலிய பல தற்கால மொழிகளிலும் சிறந்த பயிற்சியுடையவர். இங்குப் பாடமான பகுதியில், தாம் மேற்கொண்ட நூல் இனிது முடியுமாறு, மேல் நாட்டுப் பெரும்புலவர் பாணியில், கடவுளின் திருவருளை மன்றாடுகிறார். இந்நூலின் கருத்துகள் விவிலியத்திலிருந்தும் கவிஞர்தம் கற்பனை ஆற்றலிலிருந்தும் பெரும்பாலும் உருவானவை.

இவர்தம் கருத்தையும் எடுப்பான நடையையும் ஓரளவு பின்பற்றி முதற்காண்டத்தைமட்டும் **வெள்ளக்கால் ப. சுப்பிரமணிய முதலியார்**, 'சுவர்க்க நீக்கம்' என்ற தலைப்பில் இயற்றியுள்ளார். இங்குப் பாடமாய் வருவன 7, 13, 14, 15, 16 என்ற ஐந்து பாடல்கள்; படிப்பதற்குக் கடினமான நடை. அதனால், நீண்ட முகவுரை, விளக்கவுரை, பதவுரை முதலியவற்றை ஆசிரியர் தந்துதவியிருக்கிறார். அகலிகை வெண்பா, தனிக்கவித் திரட்டு, கம்பராமாயண இன்கவித் திரட்டு முதலியன ஆசிரியர் எழுதிய பிற நூல்களாம்.

## அருஞ்சொற்பொருள் :

1. **கைத்தலத் தியற்றி** - கையால் செய்து, **மேய** - பொருந்திய, **புக்க** - புகுந்துள்ள, **தேவ ஆவியே** - உருவமற்ற கடவுளே, **புரிந்து**-விரும்பி, **தகத் தெரிந்துளாய்**-நன்கு அறிவாய், **அரோ**-அசைச்சொல்.

**2.** இறை கற்பனை - (விலக்கிய கனிகளைத் தின்னலாகாது என்ற) கடவுளது கட்டளை, கடக்குமா - மீறும்படி, முற்றிய - முடித்த, சோறி - சொல்வாய், ஆழ் பெற்றிய நிரயம் - ஆழ்ந்த தன்மையுள்ள நரகம், பிராணலோகம்-வானகம், நிற்கு-உனக்கு.

*3.* கருத்தனை - படைத்த கடவுளை, வருத்தனை-வருமானம், வெவ் - கொடிய, உரகம் - பாம்பு, தேவ தூதன் - முன் தேவ தூதனாய் இருந்து தற்போது பேயாய் மாறியவன்.

*4.* தனை அடூஉ - தன்னைச் சேர்ந்து, பரற்பிழை தன் கணம் - தன்னோடு தேவ துரோகம் செய்த பேய்க் கூட்டம், வினை அரும் - செயற்கரிய, இனையல் - வருத்தம், இரியுணா - இரியுண்டு (ஓட்டப்பட்டு).

5. மானவர் - மாந்தர், பொறாமை - (தான் இழந்த சுவர்க்கத்தை மக்கள் அடைகிறார்களே என்ற) பொறாமை, வானவன் - கடவுள், வயிரம் - வன்மம், மருட்டியவன் - ஏமாற்றியவன்.

**வினாக்கள் :**

1. நூல் இனிது முடிய வழிபடும் கடவுளை எவ்வாறு மில்டன் வேண்டுகிறார்?
2. கடவுள் எங்கு எழுந்தருளியிருக்கிறார் என்று மில்டன் கூறுகிறார்?
3. பேய் மனிதனை ஏன் ஏமாற்றிக் கெடுத்தது?
4. சுவர்க்கத்தை மனிதன் இழந்தது எவ்வாறு?

## 2. இரக்கத்தின் உயர்வு

**[ஷேக்ஸ்பியர்]**

வன்பொறை மருவா மரபின தாகி
வானின் றிழியும் மழைத்துளி போலக்
கொடுப்போ ரெடுப்போ ரெனுமிரு வோரையும்
அடுத்துக் காப்ப தன்புசா ரிரக்கம்!
வலிதினும் வலிதிது! மணிமுடி சூடி
உலகு புரக்கு முரவோற் குரைப்பின்,
இலகொளி முடியினு மிரக்கம் பெரிதே!
அங்கையிற் பொருந்தி யச்சம் விளைக்குஞ்
செங்கோல் புறத்தது சிந்தைய திரக்கம்!

மன்னர் மனமெனு மணியணி பீடத்
தரசுவீற் றிருக்கும் உரைசா லன்பு
தேவ.தேவன் திருக்குணத் தொன்றே!
நீதியோ டன்பு நிலைபெறி னீதி
ஆதியங் கடவு ளருளென நிலவும்!
இறைபே ரருளிங் கெமக்கிலை யாயின்
நெறிநின் றியாரே நீடுவாழ் வெய்துவர்?
அருளினை விழைந்தேம் அருட்செயல் புரிதல்
மரபே யாக மதித்தலுங் கடனே.

—**விபுலானந்த அடிகள்**

**குறிப்புரை :**

ஆங்கில மொழியில் நாடக நூல்களை யாத்துப் பெரும்புகழ் பெற்றவர் **ஷேக்ஸ்பியர்**. இவர் **உலக மகாகவி** எனப் போற்றப் படுபவர்.

ஷேக்ஸ்பியர் நாடகங்களுள் ஒன்றாகிய 'வெனிஸ் நகரத்து வணிகன்' (The Merchant of Venice) என்னும் நாடகத்தை 'மதங்க சூளாமணி' என்னும் பெயரில் **விபுலானந்த அடிகள்** தமிழாக்கம் செய்துள்ளார். அந்நாடகம் பாவும் உரையும் விரவி வரும் முறையில் அமைக்கப்பட்டுள்ளது. அந்நாடகத்தில், 'ஒப் பந்தச் சீட்டில் குறித்த நிபந்தனையிலிருந்து அசையமாட்டேன்,' என்ற வணிகன் சாபலனை நோக்கி விஜயை இரக்கத்தின் பெருமையினை எடுத்துக்கூறும் பகுதியாய் அமைந்த பாடல் இங்குத் தரப் பட்டுள்ளது.

விபுலானந்த அடிகள் பிறந்த ஊர், இலங்கை யாழ்ப்பாணத் திலுள்ள மட்டக்களப்பு. இவர் சாமித்தம்பியாருக்கும் கண்ணம்மையாருக்கும் புதல்வராய் 1892ஆம் ஆண்டு, மார்ச்சுத் திங்கள் 27ஆம் நாள் பிறந்தார். பெற்றோர் இவருக்கு இட்ட பெயர் **மயில் வாகனம்** என்பது. பின்னாளில் இவர் சென்னை இராமகிருஷ்ண மடத்துத் துறவியரான போது விபுலானந்தர் என்னும் பெயரைப் பெற்றார். இவர் அருந்தமிழும் ஆங்கிலமும் நன்கு கற்றவர்; பெரும்புலவர்; அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராய்ப் பணியாற்றியவர்; தமிழிசைக் கலையை ஆராய்ந்து, **யாழ் நூல்** முதலிய அரிய நூல்களை ஆக்கியவர்; கவி பாடும் திறம் படைத்தவர். இத்தகு அறிஞர் பெருந்தகையார் 1949ஆம் ஆண்டு, ஜனவரித் திங்கள் 19ஆம் நாளில் இயற்கை எய்தினர்.

**அருஞ்சொற்பொருள் :**

அடி 1. பொறை - சுமை, மருவா - பொருந்தாத.
2. இழியும் - இறங்கும்.
3. எடுப்போர் - பிச்சையெடுப்பவர்.
6. புரக்கும் - காப்பாற்றும், உரவோன் - வலியவன்.
7. இலகொளி முடி - விளக்கமான ஒளி வீசும் கிரீடம்.
8. அங்கை (அகம் + கை) - உள்ளங்கை.
9. புறத்தது - வேறானது.
10. பீடம் - சிங்காதனம்.
11. உரைசால் - புகழ் மிக்க.
12. தேவதேவன் - தேவர்களுக்குத் தலைவனான இறைவன்.
14. ஆதியங்கடவுள் - முதற்பொருளான கடவுள்.
16. நெறி - நல்ல வழி, நீடு வாழ்வு - நெடுங்கால வாழ்வு.
18. கடன் - கடமை.

**வினாக்கள் :**

1. இரக்கத்தின் உயர்வினைக் கவிஞர் எவ்வாறு எடுத்துரைக்கின்றார்?
2. 'அருட்செயல் புரிதல் கடன்,' என்பதனைக் கவிஞர் எங்ஙனம் புலப்படுத்தியுள்ளார்?

# V. மறுமலர்ச்சிப்பாடல்கள்

## 1. கழுகுமலை நகர் வளம்

தெள்ளுதமி ழுக்குதவு சீலன்—துதி
செப்புமண்ணு மலைக்கனு கூலன்—ஊர்
செழியப் புகழ்விளைத்த கழுகு மலைவளத்தைத்
தேனே! சொல்லு வேனே!
வெள்ளிமலை யொத்தபல மேடை—முடி
மீதினிலே கட்டுகொடி ஆடை—அந்த
வெய்யவன் நடத்திவருந் துய்யஇர தப்பரியும்
விலகும் படி இலகும். 1

முத்தமிழ்தேர் வித்வசனக் கூட்டம்—கலை
முற்றிலுமு ணர்ந்திடுங்கொண் டாட்டம்—நெஞ்சில்
முன்னுகின்ற போதுதொறுந் தென்மலையின் மேவுகுறு
முனிக்கும் அச்சம் சனிக்கும்.
எத்திசையும் போற்றமரர் ஊரும்—அதில்
இந்திரன் கொலுவிருக்கும் சீரும்—மெச்சும்
இந்தநக ரந்தனைய டைந்தவர்க் கதுவும்வெறுத்
திருக்கும் அரு வருக்கும். 2

—**அண்ணாமலை ரெட்டியார்**

### குறிப்புரை:

'சிந்து' என்பது இசைப்பாடல் வகை. முருகப்பெருமானுக்குக் காவடி எடுத்துச் செல்பவர் பாடிச்செல்லுமாறு அமைக்கப்பட்டது **காவடிச்சிந்து**. இப்பாடல் கழுகுமலை முருகன் கோயிலுக்குக் காவடி எடுத்துச் செல்பவர் பாடுவதாய் அமைந்துள்ளது.

**அண்ணாமலை ரெட்டியார்** திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள சென்னிகுளம் என்னும் ஊரிற்பிறந்தவர். சேற்றூர், ஊற்றுமலை ஜமீன்களில் அரசவைப்புலவராய்த் திகழ்ந்தவர். **சங்கரநாராயணன் கோயில் திரிபந்தாதி, நவநீதகிருட்டிணன் பிள்ளைத்தமிழ்** என்னும் செய்யுள் நூல்களையும் இவர் பாடியுள்ளார். இவர் காலம் 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி.

### அருஞ்சொற்பொருள் :

1. தெள்ளு தமிழ் - தெளிவான தமிழ், சீலன் - ஒழுக்கமுடையவன், அண்ணாமலை - இப்பாடலாசிரியர் பெயர். சிந்து, கீர்த்தனை உள்ளிட்ட இசைப்பாடல் பாடுபவர், பாடும் கவிதையில் தமது பெயரையும் அமைப்பது வழக்கம். தேனே - தேன் போன்ற இனிய பெண்ணே, வெள்ளி மலை - வெண்மை நிறமான கயிலை மலை, வெய்யவன் - சூரியன், பரி - குதிரை, இலகும் - விளங்கும். மேடை-உயரமான மாடி வீடு (நெல்லை வட்டார வழக்கு)

2. வித்வ சனம் - கல்வி வல்லார், முன்னுகின்ற போது - நினைக்கின்ற பொழுது, தென்மலை - பொதியமலை, குறுமுனி - அகத்தியர், சனிக்கும் - பிறக்கும், அமரர் ஊர் - தேவர் உலகத் தலைநகரான அமராவதி, அருவருக்கும் - அருவருப்பை உண்டு பண்ணும்.

### வினாக்கள் :

1. கழுகுமலை நகர் வளம் எவ்வாறு சிறப்பிக்கப் பட்டுள்ளது?
2. காவடிச்சிந்தில் இசை நயமே இலக்கிய நயமாக மிளிர்வதை விளக்குக.

## 2. செல்வமும் சிறுமையும்

### (அ) செல்வச்சிறுமியர் களிப்பு

பாகமா கச்செய்த பண்டமுண்போம்!—நன்றாய்ப்
 பக்குவம் வந்த பழங்களுண்போம்!
தாகமா றுற்பல பானகமும்—தாயார்
 தந்திட உண்டு மகிழ்ந்திடுவோம்! 1

காலத்துக் கேற்ற உடையணிவோம்!—வாசம்
 கட்டிய சந்தனம் பூசிடுவோம்!
கோலமாய்ச் சீவிச் சிணுக்கெடுத்து—மலர்
 கூந்தலிற் சூட்டி அழகுசெய்வோம்! 2

பந்துகள் ஆடிப் பழகிடுவோம்!—கழல்
 பாங்கியர் தம்மொடும் ஆடிடுவோம்!
சந்தம் எழக்கும்மி பாடிடுவோம்!—சுற்றிச்
 சப்பாணி கொட்டிச் சிரித்திடுவோம்! 3

ஓடி ஒளித்துக் களித்திடுவோம்!—நாங்கள்
ஒற்றையும் இரட்டையும் வைத்திடுவோம்!
காடியே வட்டுகள் ஆடிடுவோம்!—தோழி
நாணக்கண் பொத்தி நகைத்திடுவோம்! 4

ஊன்னி யெழுமூஞ்சல் ஆடிடுவோம்!—கேட்போர்
உள்ளம் குளிரவே பாடிடுவோம்!
சின்னஞ் சிறுவீடு கட்டிடுவோம்!—அதில்
சித்திர வேலைகள் செய்திடுவோம்! 5

பத்துப் பசுக்கள்எம் வீட்டிலுண்டு—நல்ல
பாலுக்கு யாதொரு பஞ்சமில்லை!
நித்தம் சுகமாக வாழ்ந்திடுவோம்!—இந்த
நீணிலத் தெம்மையொப் பாருமுண்டோ? 6

(ஆ) ஏழைச்சிறுமியர் மனப்புழுக்கம்

நல்லபண் டங்களைக் கண்டறியோம்!—ஒரு
நாளும் வயிறுார உண்டறியோம்!
அல்லும் பகலும் அலைந்திடுவோம்!—பசி
ஆற வழியின்றி வாடிடுவோம்! 7

அன்னப்பால் காணாத ஏழைகட்கு—நல்ல
ஆவின்பால் எங்கே கிடைக்குமம்மா?
என்னப்பா! யாம்படும் பாட்டையெல்லாம்—சென்று
யாரிடம் சொல்லி அழுவோமம்மா? 8

இட்டெலி ஐந்தாறு தின்றேமென்பீர்!—நீங்கள்
ஏதும் கருணையி லீரோ அம்மா?
பட்டினி யாக இறந்திடினும்—நாங்கள்
பாவம் பழிசெய்ய மாட்டோமம்மா! 9

தேயிலை தேயிலை என்பீரம்மா!—இது
தேக்கிலை தானோ தெரியாதம்மா!
வாயும் வயிறும் நிறைந்திடுமோ?—இதில்
வைத்த அமுதம் திகைந்திடுமோ? 10

காப்பிகாப் பியென்று கத்துவீரே!—அதைக்
கண்ணாலே கண்டதும் இல்லைஅம்மா!
சாப்பிடற் கேற்ற உணவிதுவோ?—அன்றிச்
சட்டையோ? தொப்பியோ? கூறும்அம்மா! 11

ஆனைக்கோம் பன்சாதம் உண்டோமென்பீர்! — இதை
    ஆரே உலகினில் நம்பிடுவார் ?
தேனைப் பழித்த மொழியுடையீர் ! — எம்மைத்
    தேராத பித்தர்என் றெண்ணினீரோ ? 12

சோப்புச்சோப் பென்று புகழ்ந்திடுவீர்!—அனல்
    சுட்டுக் கடிக்குங் கிழங்கதுவோ?
காப்புக்கை வீசி நடப்பவரே ! — அதன்
    காரியம் சற்றே உரைப்பீரே! 13

ஆனிஆ டிமாதக் கொந்தலிலே — மந்தை
    ஆடுகள் போலக் கொடுகிநிற்போம் !
வேனிலில் வெந்துடல் வேர்த்திடவே — வெயில்
    வேளை அலைந்து திரிந்திடுவோம் ! 14

சுற்றிய கந்தை ஒருமுழமாம்! — அதில்
    தோன்றிய பீறலும் ஆயிரமாம் !
பற்றும் அழுக்கினைப் போக்கவென்றால் — உடை
    பஞ்சுபஞ் சாகப் பறக்குமம்மா ! 15

ஈரோடு பேனுக் கிடமாச்சு! — கூந்தல்
    ஈந்தஞ் செடியது போலாச்சு !
வாரிமு டிப்பதும் இல்லைஅம்மா ! — எண்ணெய்
    மாதம்மூன் றாக அறியாதம்மா ! 16

புண்ணும் சிரங்கும் நிறைந்ததம்மா ! — அதில்
    போட மருந்தும் கிடையாதம்மா !
கண்ணில் உறக்கமும் இல்லைஅம்மா ! — எங்கள்
    கட்டம் அறிபவர் உண்டோஅம்மா ! 17

—கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை

## குறிப்புரை :

தெள்ளத்தெளிந்த தமிழில் செந்தமிழ் நாட்டுச் சிறுவர் சிறுமியர்க்கு இனிய கவிதைகள் தந்தவர் **கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை**. இவர் கன்னியாகுமரி மாவட்டத்திலே சுசீந்திரத்துக்கு அடுத்த தேரூரில் பிறந்தவர்; கி. பி. 1876 முதல் 1956 வரை வாழ்ந்தவர்; கல்வெட்டு, வரலாறு ஆகியவற்றின் ஆய்வுகளில் தோய்ந்தவர். இவருடைய கவிதைத்தொகுதிகளுள் பெரியது **மலரும் மாலையும்** என்பது. **ஆசிய ஜோதி, உமார் கய்யாம் பாடல்கள், மருமக்கள் வழி மான்மியம், தேவியின் கீர்த்தனங்கள்** இவர் பாடிய பிற கவிதைத் தொகுதிகள். பாடப்பகுதி 'மலரும் மாலையும்' **என்னும்** தொகுதியில் '**சமூகம்' என்னும் பகுதியில் உள்ளது.**

**அருஞ்சொற்பொருள்:**

1. பாகமாகச் செய்த - சுவையாய்ச் செய்த.
2. கட்டிய - சேர்த்த, சிணுக்கு - சிக்கு.
3. கழல் - சிறுமியர் கழற்சிக்காய் வைத்து விளையாடும் விளையாட்டு, பாங்கியர் - தோழியர், சந்தம் - இசை, சப்பாணி கொட்டி - இரண்டு கையையும் சேர்த்துத் தட்டி.
4. ஓடி ஒளித்தல், ஒற்றையும் இரட்டையும், வட்டு. கண் பொத்தல் — விளையாட்டு வகைகள்.
5. உன்னி - உந்தி.
6. நீணிலம் (நீள்+நிலம்) - பெரிய உலகம்.
8. அன்னப்பால் - சோற்று வடிகஞ்சி.
10. திகைந்திடுமோ - நிறையுமோ?
12. ஆனைக்கொம்பன் - நெல் வகைகளுள் ஒன்று.
14. கொந்தல் - கொடுங்குளிர், கொடுகி - குளிரால் நடுங்கி ஒடுங்கி.
15. பீறல் - கிழிசல்.
16. ஈந்தஞ்செடி - ஈச்சஞ்செடி.

**வினாக்கள்:**

1. செல்வச்சிறுமியர் உண்ணும் உணவு வகைகள் யாவை?
2. செல்வச்சிறுமியர் ஆடிய விளையாட்டுகள் யாவை?
3. இட்டெலி, தேயிலை, காப்பி, ஆனைக்கொம்பன் சாதம், சோப்பு—இவை பற்றிக் கவிமணி பாடும் கவி நயத்தை விளக்குக.
4. ஏழைச்சிறுமியர் தமது வாழ்வு குறித்து அறிவிப்பது யாது?
5. கவிமணியின் பாடல்களில் காணக்கிடக்கும் அங்கதச் சுவையினை விளக்குக.

## 3. கடல்

வாழிய கடலே! வாழிய கடலே!
உலகினுக் கியைந்த வொருதுணைக் கருவியே!
அலகிலா உருவம் அடைந்தோய்! நிலத்தினை
ஆக்கி யன்புடன் காக்கும் பரவாய்!

உன்னை யடுத்துவந் துறுநா வாய்களை
நன்னர்ச் செலுத்தும் நங்காய் ! நின்னிளங்
காதற் றலைவனும் மோது காற்றினால்
புனற்கா ரென்னும் புனிற்றிள மகனால்
உயிர்த்தொகை யோடு பயிர்த்தொகை மகிழத்
தாவா இன்பந் தருந்தனித் தாயே !
ஓவா தொல்லென வொலிக்குங் கடலே !
உன்றன் பெருமையு முயர்வுங் கருணையுந்
துன்றுமடி யின்மையுந் தூய்மையும்
என்ற னாலெடுத் தியம்ப வியலுமோ?

—பரிதிமாற்கலைஞர்

### குறிப்புரை :

**வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார்** சென்னைக் கிறித்தவக் கல்லூரியில் தலைமைத் தமிழ்ப்பேராசிரியராய்ப் பணியாற்றியவர்; தம் வடமொழிப் பெயரையே புனை பெயராய்ப் **பரிதிமாற் கலைஞர்** என மாற்றியமைத்துக்கொண்டவர். இவர் இயற்றியுள்ள நூல்களுள் **தமிழ் மொழியின் வரலாறு, மதிவாணன், நாடகவியல்** என்பவை குறிப்பிடத்தக்கவை. இவர் பாடியுள்ள கவிதைகளுள் சிறப்பு வாய்ந்தது **தனிப்பாசுரத்தொகை.** தனித் தனிப் பொருள் குறித்துப் பாடிய 43 பாடல்களின் தொகுப்பு இந்நூல். இதில் உள்ள பாடல்களுள் ஒவ்வொன்றும் 14 அடி அளவினதாய், ஆங்கிலத்தில் உள்ள 'சானெட்டு' என்னும் பா வகையை ஒத்துச் செய்யப்பட்டது. இந்நூற்பாடல்களை **ஜி. யு. போப்பையர்** என்னும் மேனாட்டுப்புலவர் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார். இந்நூலில் உள்ள கடலைப் பற்றிய 23ஆம் பாடல் இங்குத் தரப்பட்டுள்ளது.

### அருஞ்சொற்பொருள் :

இயைந்த - பொருந்திய, அலகிலாவுருவம் - அளவிட இயலாத பரந்த வடிவம், நிலத்தினை ஆக்கி - பூமியினைத் தோற்றுவித்து. 'நீரிலிருந்து நிலமுண்டானது,' என்பது இங்கே குறிக்கப்படுகிறது. பரவாய் - கடலே, நாவாய்கள் - கப்பல்கள், நன்னர் - நன்றாய், காதல் தலைவன் - அன்புள்ள கணவன், புனற்கார் - நீருண்ட மேகம், புனிற்றிளமகன் - அண்மையில் பிறந்த இளங் குழந்தை, தாவா இன்பம் - குறைவுபடாத இன்பம். கடலுக்கு மோது காற்றைக் காதல் தலைவனையும், அதிலிருந்து நீருண்டு பிறக்கும் மேகத்தைப் புதல்வனையும் உருவகம் செய்கிறார் கவிஞர். ஓவாது - ஒழிவு இன்றி, ஒல்லென - 'ஒல்' என்னும் ஓசை உண்டாகுமாறு, துன்றும் - நெருங்கிய, மடியின்மை - சோம்பல் இல்லாமை, இயம்ப இயலுமோ? - சொல்லக்கூடுமோ?

வினாக்கள் :

1. கடலால் விளையும் நன்மைகள் எவை?
2. கடலை எவ்வெவ்வாறு கவிஞர் விளிக்கின்றார்? அவ்வவற்றிற்குரிய காரணத்தையும் விளக்குக.
3. கடலிடத்துக் காணப்படும் பெருங்குணங்கள் யாவை?

## 4. மஹாத்மா! நீ வாழ்க!

வாழ்க, நீ எம்மான் இந்த
வையத்து நாட்டில் எல்லாம்
தாழ்வுற்று வறுமை மிஞ்சி
விடுதலை தவறிக் கெட்டுப்
பாழ்பட்டு நின்ற தாமோர்
பாரத தேசம் தன்னை
வாழ்விக்க வந்த காந்தி
மஹாத்மா! நீ வாழ்க! வாழ்க! 1

அடிமைவாழ்(வு) அகன்றிந் நாட்டார்
விடுதலை ஆர்ந்து, செல்வம்,
குடிமையில் உயர்வு, கல்வி.
ஞானமும் கூடி ஓங்கிப்
படிமிசைத் தலைமை எய்தும்
படிக்கொரு சூழ்ச்சி செய்தாய்!
முடிவிலாக் கீர்த்தி பெற்றாய்!
புவிக்குளே முதன்மை உற்றாய்! 2

—தேசியகவி சுப்பிரமணிய பாரதியார்

குறிப்புரை :

ஆசிரியர் தேசியகவி சுப்பிரமணிய பாரதியாரின் வாழ்க்கைக் குறிப்பைப் 'பாஞ்சாலி சபத'க் குறிப்புரையில் காண்க.

அருஞ்சொற்பொருள் :

1. எம்மான் - எம் தலைவன், வாழ்க வாழ்க - அடுக்குத் தொடர்.

2. ஆர்ந்து - அனுபவித்து, குடிமை - குடிமக்கள் பண்பு, படிமிசை - உலகத்தில், சூழ்ச்சி - உபாயம், முடிவிலா- (இலா - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்).

வினாக்கள் :

1. காந்தியடிகளுக்கு முன்னர் நம் நாடு இருந்த நிலையைக் கவிஞர் எங்ஙனம் எடுத்துக் கூறியுள்ளார் ?

2. காந்தியடிகள் எங்ஙனம் புவிக்குள்ளே முதன்மை உற்றார்?

# 5. இன்பத்தமிழ்

தமிழ்எங்கள் இளமைக்குப் பால் !—இன்பத்
தமிழ்நல்ல புகழ்மிக்க புலவர்க்கு வேல் !
தமிழ்எங்கள் உயர்வுக்கு வான் !—இன்பத்
தமிழ்எங்கள் அசதிக்குச் சுடர்தந்த தேன் !
தமிழ்எங்கள் அறிவுக்குத் தோள் !—இன்பத்
தமிழ்எங்கள் கவிதைக்கு வயிரத்தின் வாள் !
தமிழ்எங்கள் பிறவிக்குத் தாய் !—இன்பத்
தமிழ்எங்கள் வலமிக்க உளமுற்ற தீ !

—பாரதி தாசனார்

குறிப்புரை:

பாரதி தாசனார் 1891இல் புதுச்சேரியில் பிறந்தவர். இவர் தந்தையார் கனகசபை முதலியார். இவரது இயற்பெயர் கனகசுப்புரத்தினம் என்பது. இவர் தேசியக்கவிஞர் சுப்பிரமணிய பாரதியாருடன் நெருங்கிப் பழகியவர். அவரைக் குருவாய்க் கொண்டதால், 'பாரதி தாசன்' என்னும் புனைபெயரை இவர் வைத்துக்கொண்டார். சமுதாயச் சீர்திருத்தக் கருத்துகள் அமைந்த பாடல்கள் பல இவர் பாடியுள்ளமையால், இவரைப் 'புரட்சிக்கவிஞர்' எனப் போற்றுகின்றனர். இவர் பாடிய கவிதைகள் மூன்று தொகுதிகளாய் வெளி வந்துள்ளன. மற்றும் பாண்டியன் பரிசு, குடும்பவிளக்கு, இருண்ட வீடு, அழகின் சிரிப்பு என்னும் கவிதை நூல்களும் இவர் இயற்றியுள்ளார். இவர் எழுதிய உரைநடை நூல்களும் சில உள. இவர் 21-4-1964இல் இயற்கை எய்தினர்.

அருஞ்சொற்பொருள் :

வான் - மழை, அசதி - சோர்வு, வலமிக்க - ஆற்றலிற் சிறந்த.

வினா :

தமிழின் சிறப்புகள் யாவை?

# VI. பல்சுவைப்பாடல்கள்

## 1. புறநானூறு

### (அ) பிறர்க்கு உழைக்கும் பெரியார்

உண்டால் அம்மஇவ் வுலகம்! இந்திரர்
அமிழ்தம் இயைவ தாயினும் இனிதெனத்
தமியர் உண்டலும் இலரே; முனிவிலர்;
துஞ்சலும் இலர்; பிறர் அஞ்சுவ தஞ்சிப்
புகழெனின் உயிரும் கொடுக்குவர்; பழியெனின்
உலகுடன் பெறினும் கொள்ளலர்; அயர்விலர்;
அன்ன மாட்சி அனையர் ஆகித்
தமக்கென முயலா நோன்தாள்
பிறர்க்கென முயலுநர் உண்மை யானே. 1

—கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி

### (ஆ) இனம் இனத்தோடு சேரும்.

பொன்னும் துகிரும் முத்தும் மன்னிய
மாமலை பயந்த காமரு மணியும்
இடைபடச் சேய ஆயினும், தொடைபுணர்ந்து
அருவிலை நன்கலம் அமைக்குங் காலை
ஒருவழித் தோன்றியாங் கென்றும் சான்றோர்
சான்றோர் பாலர் ஆப;
சாலார் சாலார் பாலரா குபவே. 2

—கண்ணகனார்

## 2. நற்றிணை

### மகள் நிலை கண்டு தாய் வியத்தல்

பிரசம் கலந்த வெண்சுவைத் தீம்பால்
விரிகதிர்ப் பொற்கலத் தொருகை யேந்திப்
புடைப்பின் சுற்றும் பூந்தலைச் சிறுகோல்
'உண்'ணென் றோக்குபு புடைப்பத் தெண்ணீர்
முத்தரிப் பொற்சிலம் பொலிப்பத் தத்துற்று

அரிநரைக் கூந்தல் செம்முது செவிலியர்
பரிமெலிந் தொழியப் பந்தர் ஓடி
ஏவல் மறுக்கும் சிறுவிளை யாட்டி
அறிவும் ஒழுக்கமும் யாண்டுணர்ந் தனள்கொல்!
கொண்ட கொழுநன் குடிவறன் உற்றெனக்
கொடுத்த தந்தை கொழுஞ்சோ றுள்ளாள்
ஒழுகுநீர் நுணங்கறல் போலப்
பொழுதுமறுத் துண்ணும் சிறுமது கையளே!

—போதனார்

# 3. தனிப்பாடல் திரட்டு

### (அ) பொன், ஆ, வரை, இலை, காய், பூ

உடுத்ததுவும் மேய்த்ததுவும் உம்பர்கோன் தன்னால்
எடுத்ததுவும் பள்ளிக் கியையப் — படுத்ததுவும்
அந்நாள் எறிந்ததுவும் அன்பின் இரந்ததுவும்
பொன்னா வரையிலைகாய் பூ.

### (ஆ) எண்ணுப்பெயர்ச்சிலேடை

முக்காலுக் கேகாமுன் முன்னரையில் வீழாமுன்
அக்கா லரைக்கால்கண் டஞ்சாமுன் — விக்கி
இருமாமுன் மாகாணிக் கேகாமுன் கச்சி
ஒருமாவின் கீழரையின் றோது.

—காளமேகப்புலவர்

### (இ) யானையைப் பரிசிலாய்த் தந்த இராமனைப் புகழ்தல்

'இம்பர்வா னெல்லை இராமனையே பாடி
என்கொணர்ந்தாய் பாணாநீ?' என்றாள் பாணி.
'வம்பதாங் களபம்' என்றேன்; 'பூசும்' என்றாள்!
'மாதங்கம்' என்றேன்; 'யாம் வாழ்ந்தேம்' என்றாள்!
'பம்புசீர் வேழம்' என்றேன்; 'தின்னும்' என்றாள்!
'பகடு' என்றேன்; 'உழும்' என்றாள் 'பழனந் தன்னை!'
'கம்பமா' என்றேன்; 'நற் களியாம்' என்றாள்!
'கைம்மா' என்றேன்; சும்மா கலங்கினாளே!

—அந்தகக்கவி வீரராகவ முதலியார்

### (ஈ) படிக்காசுப்புலவரின் பாடற்சிறப்பு

*மட்டாரும் தென்களந்தைப் படிக்காசன்*
*உரைத்ததமிழ் வரைந்த ஏட்டைப்*
*பட்டாலே சூழ்ந்தாலும் மூவுலகும்*
*பரிமளிக்கும்! பரிந்தவ் வேட்டைத்*
*தொட்டாலுங் கைம்மணக்கும்! சொன்னாலும்*
*வாய்மணக்கும்! துய்ய சேற்றில்*
*நட்டாலும் தமிழ்ப்பயிராய் விளைந்திடுமே*
*பாட்டிலுறு நளினந் தானே!*

—பலபட்டடைச் சொக்கநாதப்புலவர்

### (உ) பயணில் புகழ்ச்சி

*குன்றும் குழியும் குறுகி வழிநடப்ப*
*தென்று தொலையுமெமக் கெங்கோவே!—ஒன்றும்*
*கொடாதானைக் காவென்றும் கோவென்றும் கூறின்*
*இடாதோ நமக்கிவ் விடி?*

### (ஊ) சோறு கண்ட மூளி யார்?

*'தேங்குபுகழ் நாங்கூர்ச் சிவனேயல் லாளியப்பா!*
*நாங்கள் பசித்திருக்கை ஞாயமோ?'—'போங்காணும்!*
*கூறுசங்கு தோல்முரசு கொட்டோசை யல்லாமல்*
*சோறுகண்ட மூளியார்? சொல்!'*

—இரட்டையர்

## 4. திருவிளையாடற்புராணம்

### தென்றல்

*பொங்கரின் நுழைந்து வாவி*
*புகுந்துபங் கயந்து மூழ்கிப்*
*பைங்கடி மயிலை முல்லை*
*மல்லிகைப் பந்தர் தாவிக்*
*கொங்கலர் மணங்கூட் டுண்டு*
*குளிர்ந்துமெல் லென்று தென்றல்*
*அங்கங்கே கலைகள் தேரும்*
*அறிவன்போல் இயங்கு மன்றே.*

—பரஞ்சோதி முனிவர்

## 5. முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ்

தாலாட்டு

உண்ணெகிழ் தொண்ட ருளத்திருள் சிந்திட
ஒளிவிடு முழுமணியே!
உயர்மறை நூற்கலை முடிவில் முடிந்திடும்
ஒழுகொளி மரகதமே!
விண்ணொடு மண்ணை விழுங்கி அருட்கதிர்
விரியுமி ளஞ்சுடரே!
மெய்ப்புலன் வேய்ந்து சமைத்ததோர் வீட்டை
விளக்கும் விளக்கொளியே!
புண்ணியம் நாறுமோர் பெண்கனி கனியும்
புனித நறுங்கனியே!
புள்ளூ றெனவெம துள்ளத் தடம்நிறை
புத்தமு தக்கடலே!
தண்ணொளி பொங்கிய கருணை நிதியே!
தாலோ தாலேலோ!
சங்கத் தமிழின் தலைமைப் புலவா!
தாலோ தாலேலோ!

—குமரகுருபரர்

## 6. திருவருணைக்கலம்பகம்

சித்து

வீரத்தை யணிமழுவா ருமைபங் காளர்
விளங்கருணைச் சித்தரியாம் விளம்பக் கேள! ஆ
காரத்தை யெமக்கிடு;கஞ் சத்தை யேகோ
கனகமெனக் காட்டிடுவோம்! கரியோ ருக்குத்
தாரத்தைப் பொன்னாக வமைத்தோம்! தம்பி
தாம்பரமும் பொன்னாகச் சமைத்தோம்! இந்தப்
பாரத்தை யாரறிவர்? அயனு கத்தைப்
பசும்பொனிற மாகவுமே பாலித்தோமே!

—எல்லப்ப நாவலர்

## குறிப்புரை :

### 1. புறநானூறு

ஒருவரின் வீரம், வெற்றி, கொடை முதலிய உலகியல் புற நிகழ்ச்சிகளைப் பொருளாய்க் கொண்ட பாடல் 'புறப்பாட்டு' என வழங்கப்படும். இது பெரும்பாலும் அறமும் பொருளும் பற்றி அமைந்திருக்கும்.

**புறநானூறு** என்பது, புறப்பொருளைப்பற்றிய நானூறு பாடல்களைக் கொண்ட நூல். இது வேற்றுமைத்தொகைப் புறத்துப்பிறந்த அன்மொழித்தொகை. இது சங்க காலத்துத் தொகுக்கப்பட்ட 'எட்டுத்தொகை' நூல்களுள் ஒன்று. பல்வேறு சூழ்நிலைகளில் புலவர் பலர் பாடிய பாடல்களை இத்தொகை நூலுட்காணலாம்.

### (அ) பிறர்க்கு உழைக்கும் பெரியார்

**கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி** சங்க காலத்து வாழ்ந்த பாண்டிய மன்னன்; புலவர்களைப் போற்றிப் புரந்து அவர்களுடைய குறைகளை நீக்கியவன்.

இப்புறப்பாட்டு, **பொதுவியல்** திணையில் **பொருண்மொழிக் காஞ்சி** என்னும் துறையைச் சார்ந்தது.

பொதுவியலாவது, வெட்சி முதலிய புறத்திணைகளுக்கெல்லாம் பொதுவான செய்திகளும் முன்னர் விளக்கப்படாத செய்திகளும் இடம் பெறும் இயல்.

பொருண்மொழிக்காஞ்சியாவது, முனிவரும் முனிவரைப் போலச் சிறந்த அறிவுடைய பெரியாரும் தாம் தெளிவாய் ஆராய்ந்து தெளிந்த பொருள்களைப் பிறர்க்குப் பயன்படுமாறு எடுத்துரைப்பதாம்.

## அருஞ்சொற்பொருள் :

**உண்டால் அம்ம** - உண்டு ('ஆல், அம்ம' அசைச்சொற்கள்), **இந்திரர் அமிழ்தம்** - தேவர்களின் உணவாகிய அமுதம், **இயைவ தாயினும்** - கிட்டுவதாயினும், **தமியர் உண்டலும் இலர்** - தனியராய் இருந்து உண்ணவுமாட்டார், **முனிவிலர்** - எவருடனும் வெறுப்பில்லாதவர், **துஞ்சலும் இலர்** - சோம்பியிருத்தலும் செய்யார். 'பிறர் அஞ்சுவது அஞ்சித் துஞ்சலும் இலர்,' என இயைத்துப் பொருள் கொள்க. **அஞ்சுவது** - அஞ்சத்தக்க பொருள், **உலகுடன் பெறினும்** - உலகம் முழுவதும் ஈடாய்ப்பெற்றாலும், **அயர்விலர்** - மனக்கவலையில்லாதவர், **அன்ன** - அப்படிப்பட்ட, **மாட்சி** - பெருமை, **நோன் தாள்** - வலிய முயற்சி, **முயலுநர்** - முயல்பவர், **உண்மையான்** - உள்ள தன்மையினால், 'இவ்வுலகம் பிறர்க்கென முயல்பவர் உள்ளமையான் **உண்டு**,' என்பது பொருள் முடிவு.

## (ஆ) இனம் இனத்தோடு சேரும்.

**கண்ணகனார்** கடைச்சங்க காலத்து வாழ்ந்த புலவர். கோப்பெருஞ்சோழன், பொத்தியார், பிசிராந்தையார் உள்ளிட்ட பலர் இவர் காலத்தில் வாழ்ந்திருந்தவர். பிசிராந்தையாரின் நட்பின் மேன்மையை இவர் இப்பாடலிற்பாடியுள்ளார். இப்பாட்டு, **பொதுவியல்** திணையில் **கையறுநிலை** என்னும் துறை பற்றியது. கையறுநிலையாவது, அரசர் முதலியோர் இறந்ததற்கு இரங்கிப் பாடுவது.

கோப்பெருஞ்சோழன் வடக்கிருந்து உயிர் விடத் துணிந்த போது அச்சோழனின் உயிர் நண்பர் பிசிராந்தையாரும் அங்கு வந்து அவருடன் வடக்கிருந்தார். உலகவாழ்வை வெறுத்து உயர்கதி பெற விரும்பியவர் உண்ணுநோன்பிருந்து உயிர் துறத்தலே வடக்கிருத்தலாகும். பாண்டி நாட்டுப் பிசிராந்தையார் சோழநாடு வந்து, சோழனுடன் வடக்கிருந்தமை குறித்துக் கண்ணகனார் அவர்களுடைய தூய நட்பினை வியந்து பாடுகிறார்.

### அருஞ்சொற்பொருள் :

துகிர் - பவளம், மன்னிய - நிலை பெற்ற, காமருமணி - விரும்பத்தக்க இரத்தினம், இடைபட - அவை தோன்றும் நிலம் ஒன்றுக்கொன்று இடையீடுபடும்படி, சேய ஆயினும் - தொலைவில் உள்ளனவானாலும், தொடை புணர்ந்து - மாலையாய்ச் சேர்ந்து, அருவிலை - அரிய விலைமதிப்பு, நன்கலம் - நல்ல அணிகலம், ஒருவழி - ஓரிடத்தில், தோன்றியாங்கு - தோன்றினாற் போல, சாலார் - கல்வி முதலியன நிரம்பாத சிறியார், பாலராப - பக்கத்தவராவர். இப்பாடலில் **உவமையணி** அமைந்துள்ளது.

## 2. நற்றிணை

இஃது அகப்பொருள் பற்றிய எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று. அகப்பொருளாவது, காதல் வாழ்க்கையை எடுத்துரைப்பதாகும். இப்பொருள்பற்றிய பாட்டை 'அகப்பாட்டு' என்பர்.

9 அடி முதல் 12 அடி வரை உள்ள அகப்பாட்டுகள் நானூறு கொண்டுள்ளது **நற்றிணை**. இவை, குறுந்தொகை, நெடுந்தொகை நூல்களின் பாடல் அடியளவை நோக்க இடைப்பட்டவை.

இப்பாடலைப் பாடியவர் **போதனார்**; கடைச்சங்கப் புலவருள் ஒருவர்.

திருமணம் செய்துகொண்டு கணவன் வீட்டில் வாழும் ஒரு பெண்ணின் இல்லத்திற்குச் செவிலித்தாய் முதன்முதலாய்ச் சென்று பார்க்கிறாள்; அப்பெண்ணின் அறிவும் பண்பும் இல்லற ஒழுக்கமும் கண்டு அத்தாய் வியப்பு அடைகிறாள். பின்பு, அவள் திரும்பி வந்து அந்தப் பெண்ணைப் பெற்ற நற்றாய்க்கு அவளுடைய மகள் நடத்தும் இல்லறப்பாங்கை விளக்கிக் கூறுகின்றாள். இது பற்றியே இப்பாடலை **மனை மருட்சித்துறை** எனவும், **மகள் நிலையுரைத்தது** எனவும் கூறுவர்.

### அருஞ்சொற்பொருள் :

பிரசம் - தேன், வெள்ளைச் சுவைத் தீம்பால் - வெண்மையான நல்ல சுவையுடைய பாலுணவு, விரிகதிர் - பரவுகிற ஒளி (வினைத்தொகை), பொற்கலம் - பொன்னாலாகிய பாத்திரம், புடைப்பிற்சுற்றும் - புடைப்பாகச் சுற்றிய, பூந்தலைச் சிறுகோல் - பூவையுடைய சிறிய அடிக்குங்கோல், ஓக்குபு - ஓங்கி, புடைப்ப - அடிக்க, தெண்ணீர் முத்து - தெளிந்த ஒளியையுடைய முத்து, அரி - சிலம்பில் ஓசைக்காக உள்ளிடும் கல், தத்துற்று - பாய்ந்து, அரி நரைக்கூந்தல் - மெல்லியவாய் நரைத்துள்ள மயிர் முடி, செம்முது செவிலியர் - நல்லொழுக்கமுடைய முதிய வளர்ப்புத் தாய்மார், பரி மெலிந்தொழிய - தங்கள் ஓட்டவேகம் தளர்ந்து போக, பந்தர் - பந்தல் (கடைப்போலி), ஏவல் - கட்டளை, சிறு விளையாட்டி - சிறிய விளையாட்டினையுடையவள், யாண்டுணர்ந்தனள் - எப்படி உணர்ந்தாளோ, கொழுநன் - கணவன், குடி - குடும்பம், வறன் உற்றென - வறுமை அடைந்ததாக, கொழுஞ்சோறு - வளமையான உணவு, உள்ளாள் - நினையாள், நுணங்கு அறல் - ஓடும் நீரில் ஒதுக்கப்படும் கருமணல் (கணவன் வீட்டு உணவின் சிறுமைக்கு இஃது உவமை), பொழுது மறுத்து உண்ணும் - காலந்தவறிச் சாப்பிடும், சிறு மதுகையள் - சிறிய வலிமையுடையவளாயினள்.

## 3. தனிப்பாடல் திரட்டு

புலவர் பலர் பற்பல சூழ்நிலைகளுக்கு ஏற்ப அவ்வப்போது பாடிய பாடல்களின் தொகுதி தனிப்பாடல் திரட்டு எனப்படும். ஒன்றோடொன்று இயைபின்றி இருப்பது பற்றியும் தனிப்பாடல் என்னும் பெயர் பெறுவதாயிற்று.

### (அ, ஆ) காளமேகப்புலவர்

இவர் கும்பகோணம் என வழங்கும் குடந்தை நகரில் பிறந்தவர்; அந்தண மரபினர். இவரது இயற்பெயர் வரதர் என்பதாம். இவர், திருவரங்கம் கோயிலில் மடைப்பள்ளிப் பரிசாரகராய் அலுவல் பார்த்தவர். சிலேடையும் நகைச்சுவையும் அமையப் பாடுதலில் இவர் வல்லவர். திருவானைக்கா உலா, சித்திரமடல், பரப்பிரம விளக்கம் என்னும் நூல்களையும் இவர் இயற்றினர். இவர் காலம், கி. பி. 15ஆம் நூற்றாண்டு.

### அருஞ்சொற்பொருள் :

(அ) உம்பர் கோன் - தேவர் தலைவனாகிய இந்திரன், எடுத்தது - குடையாய் எடுத்துத் தாங்கியது, பள்ளி - படுக்கை, இப்பாட்டு நிரனிறையணி. பொன், ஆ, வரை, இலை, காய், பூ என்னும் ஒவ்வொன்றும் முன்னர்க்கூறிய உடுத்தது, மேய்த்தது முதலியவற்றுடன் நேர்நேராய்ப் பொருந்தும். இப்பாடலில் திருமாலின் அவதாரங்கள் சில அமைந்துள்ளன.

திருமால் உடுத்தது பொன் - பொன்னுடையாகிய பீதாம் பரம், மேய்த்தது ஆ - பசு, எடுத்தது வரை - கோவர்த்தன மலை, படுத்தது இலை - ஆலிலை, எறிந்தது காய் - விளங்காய். இரந்தது பூ - பூமி.

(ஆ) முக்காலுக்கேகாமுன் - மூன்றும் காலைக் கொண்டு (அதாவது, கோலூன்றி) நடப்பதற்கு முன்னம்,முன் நரையில் வீழாமுன் - இனி வரும் நரை தோன்றும் முன்னே, அக்காலரை - அந்த யமன் விடும் காலதூதரை, கால் - உயிர், 'கால், அக் காலரைக் கண்டு அஞ்சாமுன்' என இயைக்க. விக்கி இருமாமுன் - விக்கல் எடுத்து இருமுவதற்கு முன்பே, மாகாணி - பெரிய இட மாகிய மயானம், கச்சி - காஞ்சீபுரம், ஒரு மாவின் கீழரை - ஒரு மாமரத்தின்கீழ் வீற்றிருக்கும் ஏகாம்பரநாதரை, இன்று - இப்பொழுதே, ஓது - துதி செய்.

இப்பாட்டில் முக்கால், அரை, கால், அரைக்கால், மா, மாகாணி என்னும் எண்ணலளவைப் பெயர்கள் விரவிச் சிலேடை யாய் வேறு பொருள் தருதல் நயமுடைத்து.

## (இ) அந்தகக்கவி வீரராகவ முதலியார்

இவர் காஞ்சீபுரத்திற்கு அண்மையிலுள்ள பூதூரில் பிறந் தவர். இவர் தந்தையார் பெயர் வடுகநாத முதலியார் என்பது. இவர் பிறவிக்குருடராயினும், கல்வியைக் கேள்வி வாயிலாய்ப் பெற்றுக் கவிஞரானமையினால், **அந்தகக்கவி** என்று வழங்கப் பட்டனர். இவர் 16ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்; இலங்கைக் குச் சென்று பரராச சிங்கன் என்னும் அரசன்மீது கவி பாடிப் பரிசில் பெற்று மீண்டார். **கழுக்குன்றப்புராணம், சேயூர் முருகன் பிள்ளைத்தமிழ், திருவாரூருலா** என்பவை இவர் செய்த நூல்கள். இவர் பாடிய தனிப்பாடல்கள் சிலவும் உள.

### அருஞ்சொற்பொருள் :

இம்பர் - இவ்வுலகம், வான் - தேவர் உலகம், எல்லை - புகழ்க்கு எல்லை, இராமன் - இப்புலவர்க்குச் சிறப்புச் செய்த வள்ளல்களுள் ஒருவன். புலவர் தம்மைப் பாணனாய் வைத்துத் தம் மனைவியாகிய பாணினி வினவ, அதற்குப் பதிலுரைப்பது போல அமைந்துள்ளது இப்பாட்டு.இதில் யானைக்குரிய பெயர்கள் சிலே டையாய் அமையுமாறு கவிஞர் கவி புனைகின்றார். பாணன் - செல்வரைப் புகழ்ந்து இசை பாடிப் பரிசு பெறும் தொழி லுடையவன், பாணி - பாடல் இசைப்பவள்; பாணன் என்பதன் பெண்பாற்சொல்லாகிய பாடினி என்பது பாணி என மருவியது. என் கொணர்ந்தாய் - என்ன கொண்டுவந்தாய், வம்பு - புதுமை. 'களபம், மாதங்கம், வேழம், பகடு, கம்பமா, கைம்மா' என்பன யானையைக் குறிக்கும் வேறு பெயர்கள். இச்சொற்களுக்கு வேறு பொருள்களும் உண்டு. எனவே, பாணி இவற்றை வேறு வேறு பொருளவாய்க் கொண்டு பேசுகிறாள். களபம் - கலவைச் சாந்தம், மாதங்கம் - உயர்ந்த பொன், பம்பு சீர்-மிகச்சிறப்பான, வேழம் - கரும்பு, பகடு - எருமைக்கடா, பழனம் - வயல், கம்பமா - கம்பை

இடித்துச் செய்த மா, களி - உணவு வகை, கைம்மா - தும்பிக் கையுடைய விலங்காகிய யானை. 'கைம்மா' என்று சொன்ன போதுதான் பாடினிக்குப் பாணன் பெற்று வந்த பொருள் யானை என்பது விளங்கிற்று.

## (ஈ) பலபட்டடைச் சொக்கநாதப்புலவர்

இவர் 18ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் தொண்டை நாட்டில் வாழ்ந்த புலவர்; மதுரைச்சொக்கர்மீதும் மீனாட்சி யம்மைமீதும் பல பாடல்கள் பாடியுள்ளார். இவர் சிவந் தான், செங்குன்றையூரன், வல்லை காளத்தி முதலியார் என்ப வரைப் புகழ்ந்து பாடியவர். **அழகர் கிள்ளை விடுதூது** என்பது இவர் இயற்றிய நூல்களுள் ஒன்று. இவர் படிக்காசுப்புலவரின் பாடற்சிறப்பினைப் புகழ்ந்து பாடிய தனிச்செய்யுள் இங்குத் தரம் பட்டுள்ளது.

### அருஞ்சொற்பொருள் :

மட்டு - தேன், மட்டாரும் தென்களந்தை - தேன் துளிக்கும் சோலைகள் சூழ்ந்த தென்களத்தூர், சூழ்ந்தாலும் - சுற்றினாலும், பரிமளிக்கும் - மணம் வீசும், பரிந்து - விரும்பி, துய்ய - தூய்மை யான, நளினம் - நயம். தான், ஏ - அசைகள்.

## (உ, ஊ) இரட்டையர்

இரட்டையர் சோழநாட்டிலுள்ள ஆலந்துறையில் பிறந்த வராவர். இவருள் ஒருவர் முடவர்; மற்றொருவர் குருடர். முடவரைக் குருடர் சுமந்து சென்றார் என்றும், முடவர் வழி காட்டிச்சென்றார் என்றும் கூறுவர். இவர்கள் இளஞ்சூரியர், முதுசூரியர் என்றும் வழங்கப்பட்டார்கள். இவர்கள் இயற்றிய நூல்கள் **திருவாமாத்தூர்க்கலம்பகம், ஏகாம்பரநாதர் உலா, தில்லைக்கலம்பகம்** என்பன. இவர்கள் பாடியனவாய்ச் சில தனிப்பாடல்களும் வழங்குகின்றன. இவர்கள் காலம் 15ஆம் நூற்றாண்டு.

பாடலின் முற்பகுதியை ஒருவர் பாட, மற்றவர் பிற்பகுதி யைப் பாடி முடிப்பதும் உண்டு. அவ்வகையில் அமைந்த பாடல்கள் இரண்டு இங்குத் தரப்பட்டுள்ளன.

### அருஞ்சொற்பொருள் :

(உ) காட்டு வழியிற்செல்லும்போது இளஞ்சூரியர் வினா வுக்கு முதுசூரியர் கூறிய விடையாயுள்ளது இப்பாட்டு.

கா - கற்பகமரம், கோ - பசு (காமதேனு). கற்பகமும் காமதேனுவும் தம்மிடம் வந்து கேட்பார் விரும்பும் பொருள் களைத் தரும் சிறப்புடையவை என்பர்.

(ஊ) இது நாங்கூர்ச் சிவன் கோயிலில் அப்புலவர்கள் பட்டினி கிடந்தபோது பாடிய பாடல்.

அல்லாளியப்பா - இருள் போன்ற கறையைக் கழுத்திலே கொண்டிருக்கும் நந்தையே, ஞாயமோ - முறையோ. 'அங்குள்ள இறைவனுக்கே நைவேத்தியம் எதுவும் இல்லை; வெற்று இசைக் கருவிகளின் ஓசைதான் உண்டு. அப்படியிருக்க, நமக்கு எங்கே உணவு கிட்டப்போகிறது?' என்பது கருத்து.

## 4. திருவிளையாடற்புராணம்

**பரஞ்சோதி முனிவர்** பதினாறும் நூற்றாண்டில் வாழ்ந்தவர்; வேதாரணியம் எனப்படும் திருமறைக்காட்டில் சைவ வேளாளர் குலத்தில் பிறந்தவர்; மதுரை மடத்தில் தம்பிரானாய் இருந்தவர். இவர் **திருவிளையாடற்புராணம், வேதாரணியபுராணம்** உள்ளிட்ட பல நூல்களைச் செய்துள்ளார்.

'தென்றல்' பற்றிய இந்தப்பாடல், திருவிளையாடற்புராணத்தில் உள்ளது. திருவிளையாடற்புராணம் மதுரையில் கோயில் கொண்டுள்ள சொக்கலிங்கப்பெருமானின் அறுபத்து நான்கு திருவிளையாடல்களை விவரிக்கின்றது.

### அருஞ்சொற்பொருள் :

பொங்கர் - சோலை, வாவி - குளம், பங்கயம் - தாமரைப்பூ, துழாவி - துருவி, கடி - காப்பு. மயிலை, முல்லை, மல்லிகை - மலர் வகை. கொங்கு - தேன், கூட்டுண்டு - கலந்துண்டு, தென்றல் - தெற்குத் திசையிலிருந்து வீசும் காற்று, அறிவன் - அறிவுடையவன்.

## 5. முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ்

பிள்ளைத்தமிழ் என்பது, கடவுளையோ மக்களுள் சிறந்தாரையோ குழந்தையாய்ப் பாவித்துப் பாடப்படும் இலக்கிய வகை. குழந்தைகள் தலை தூக்கித் தவழ்தல், சப்பாணி கொட்டுதல், தொட்டிலிலிட்டுத் தாலாட்டப்படுதல் முதலிய குழந்தைப் பருவ நிகழ்ச்சிகள் இதில் சிறப்பிக்கப்படும்.

**குமரகுருபரர்** தென்பாண்டி நாட்டில் ஸ்ரீவைகுண்டத்தைச் சார்ந்த கைலாயபுரம் என்னும் ஊரில் வேளாளர் குடியில் சண்முக சிகாமணிக் கவிராயருக்கும் சிவகாமியம்மையாருக்கும் மைந்தராய்ப் பிறந்தவர்; பிறந்து ஐந்து வயது வரையில் ஊமையராயிருந்து, திருச்செந்தூர் முருகன் அருளால் பேசும் ஆற்றல் பெற்றவர்; வடக்கே காசிவரையில் சென்றதோடு அங்கே கங்கைக்கரையில் சைவத்திருமடமும் நிறுவியவர்; **கந்தர் கலிவெண்பா, மதுரைக்கலம்பகம், மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ், முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ்** உள்ளிட்ட பல இலக்கியங்களை இயற்றியருளியவர். இவர் காலம் கி. பி. 17ஆம் நூற்றாண்டு.

இங்குள்ள பாடல், முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழின் தாலப்பருவத்திலிருந்து எடுக்கப்பட்டது. முத்துக்குமாரசாமி என்பது வைத்தீசுவரன்கோவில் என இப்பொழுது வழங்கும் புள்ளிருக்கும் வேளூரில் கோயில் கொண்டுள்ள முருகப் பெருமானின் திருநாமம் ஆகும். தாலப்பருவம் - குழந்தையைத் தொட்டிலிலிட்டுத் தாலாட்டுப் பாடும் பருவம்.

### அருஞ்சொற்பொருள் :

உள் - உள்ளம், நெகிழ்தொண்டர் - இளகும் அடியார் (வினைத்தொகை), முழுமணி - முழுமையான பெரிய மாணிக்கம், உயர்மறை - உயர்ந்த வேதம் (வினைத்தொகை), நூல் - பிற நூல்கள், கலை - கலைகளினால் வரும் ஞானம், ஒழுகொளி - மிகுந்த ஒளி, மரகதம் - பச்சைக்கல், அருட்கதிர் - அருளாகிய ஒளி, இளஞ்சுடர் - உதயஞாயிறு, மெய்ப்புலன் - உண்மையறிவு, சமைந்தது - அமைந்தது, புண்ணியம் நாறும் - புண்ணியம் தோன்றுகின்ற, பெண் கனி - பெண்டிருட்சிறந்த உமையம் மையார், புனித நறுங்கனி - தூய நல்ல பழம், புள்ளூர் - புள்ளிருக்கும்வேளூர், உள்ளத்தடம் - மனமாகிய தடாகம் (உருவகம்), புத்தமுது - புதுமையான அமுதம்(பண்புத்தொகை). 'மணியே, மரகதமே, சுடரே, விளக்கொளியே, கனியே, அமுதக் கடலே' என்பன விளிகள். இவையெல்லாம் முருகனைக் குறிக் கும் உருவகங்கள். கருணாநிதி - அருட்செல்வன், தாலோ தாலேலோ - 'உறங்குவாயாக' என நாவசைத்துப்பாடுதல்.

## 6. திருவருணைக்கலம்பகம்

எல்லப்ப நாவலர் 17ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்; சைவ எல்லப்ப நாவலர் எனவும் இவர் சிறப்பிக்கப்படுகிறார்; தருமபுர ஆதீனத்தைச் சேர்ந்தவர். திருவருணைக்கலம்பகம், அருணாசல புராணம், செவ்வந்திப்புராணம், திருவெண்காட்டுப்புராணம் என்பவை இவர் இயற்றிய நூல்களாம்.

பல்வகைப்பட்ட பொருள்களும் பாடல் வகைகளும் விரவி வரப்பாடும் நூல் 'கலம்பகம்'

'சித்து' என்பது கண்டார் வியக்கும்படி பல்வேறு அற்புதங் களைச் செய்யும் வல்லமை படைத்த இரசவாதி தன் திறமையை எடுத்துப் பேசுவதாய்ப் பாடப்படுவது. இரசவாதமாவது, இரும்பு முதலிய தாழ்ந்த உலோகங்களைப் பொன் முதலியன வாக மாற்றுதலாம். இப்பாட்டு எல்லப்ப நாவலர் பாடிய திருவருணைக்கலம்பகத்திலிருந்து எடுக்கப்பட்டது.

## அருஞ்சொற்பொருள் :

மழுவார் - மழுவாயுதத்தையுடையவர் (சிவபெருமான்), உமை பங்காளர் - உமாதேவியை இடப்பாகத்திலே கொண்டவர், அருணை - திருவண்ணாமலை, விளம்பக்கேள் - சொல்லக்கேள், ஆ - (ஆச்சரியத்தைக் குறிப்பது), காரத்தை - படிகாரத்தை. ஆகாரமாகிய உணவை எனக்கு இடு' என்பதும் பொருளாம். கஞ்சத்தை - வெண்கலத்தை, கோகனகம் - ஒளியுள்ள சிறந்த பொன். 'தாமரையைக் கோகனகம் என்னும்படி செய்வோம்,' என்றும் ஆம். கரியோர் - கருநிறம் படைத்த திருமால், தாரத்தைப் பொன்னாக அமைத்தோம் - செம்பும் காரீயமுங்கலந்த உலோகத்தைப் பொன்னாகச் செய்தோம், தாரத்தை - மனைவியை. திருமாலின் மனைவி இலக்குமி; இலக்குமிக்குப் பொன் என்னும் பெயரும் உண்டு. தம்பீ - தம்பி என்பதன் விளி, தாம்பரம் - செம்பு, தாம்பரமும் பொன்னாகச் சமைத்தோம் - செம்பைப் பொன்னாக்கினேம், தம் பீதாம்பரமும் பொன்னாகச் சமைத்தோம் - திருமாலின் பொன்னுடையையும் பொன்னாகச் செய்தோம், இந்தப் பாரத்தை யார் அறிவார் - ஒருவரும் அறிவாரில்லை இந்தப் பெருமையை, அயனாகத்தை (அயன் + நாகத்தை)-இரும்பையும் துத்தநாகத்தையும்,பொன்னாகப்பாலித்தோம் - பொன்னாக மாறச் செய்தோம், அயன் ஆகத்தைப் பொன்னாகப் பாலித்தோம் - பிரமதேவனது உடம்பைப் பொன்னிறமாகச் செய்தோம். (பிரமன் பொன்னிறமானவன்). இச் செய்யுளில் சிலேடைப்பொருள் அமைந்துள்ளது காண்க.

### வினாக்கள் :

1. உலகம் நிலை பெற்றிருப்பது எதனால் என்பதைப் புறநானூற்றுப் பாடல் உரைக்கின்றது?
2. பிறர்க்கென முயலும் பெற்றியரிடம் காணும் அரும் பண்புகள் யாவை?
3. 'சான்றோர் சான்றோர் பாலராப,' என்பதற்குக் கண்ணகனார் எடுத்துக்காட்டும் உவமையை விளக்குக.
4. தன் மகளின் சிறுபிள்ளைச்செயலைக்குறித்துச் செவிலித் தாய் கூறுவது யாது?
5. மகளின் இல்லற வாழ்வு கண்டு செவிலித்தாய் வியந்தது ஏன்?
6. பெண்களின் இல்வாழ்வு எங்ஙனம் இருத்தல் வேண்டும் எனப் போதனார் அறிவுறுத்துகிறார்?
7. 'பொன்னு வரையிலைகாய் பூ,' என முடியும் காளமேகப் புலவர் பாட்டில், அமைந்த நிரனிறைப்பொருளை விளக்குக.

8. 'முக்காலுக் கேகாமுன்' எனத் தொடங்கும் பாடலில் எண்ணுப்பெயர்கள் சிலேடையாய் அமைந்துள்ள பாங்கினை விளக்குக.

9. யானையின் பல பெயர்கள் அந்தகக்கவி வீரராகவர் பாட்டில் அமைந்துள்ள நயத்தினைப் புலப்படுத்துக.

10. யானையின் பெயர்களுள் எதனைக் கேட்டபோது பாணி கலங்கினாள்? ஏன்?

11. படிக்காசுப்புலவரின் பாட்டு நயத்தைக் கவிஞர் எவ்வாறு பாராட்டுகின்றார்?

12. 'இடாதோ நமக்கிவ் விடி?' என்னும் வினாவுக்குத் தரப் படும் விடை யாது?

13. நாங்கூரில் இரட்டையர் பாடிய பாடலின் நயத்தை விளக்குக.

14. தென்றலின் இயக்கத்தைப் பரஞ்சோதி முனிவர் எவ்வாறு சிறப்பிக்கின்றார்?

15. முருகப்பெருமானைக் குமரகுருபரர் எவ்வெவ்வாறு விளிக்கின்றார்? அவற்றுள் இரண்டன் நயத்தினைப் புலப்படுத்துக.

16. சித்தர் தம் ஆற்றலை எங்ஙனம் புகழ்ந்துரைக்கின்றார்?

17. சித்தர் வாக்காய் அமைந்துள்ள சித்துப்பாடலிற் காணும் சிலேடை நயத்தை விளக்குக.

# VII. வழிபாட்டுப்பாடல்கள்

## 1. சிவபெருமான்

வெண்ணிலவும் செங்கதிரும் கண்க ளாக
    வெளிதானே அளப்பருநன் மேனி யாகத்
திண்ணியர்தம் பாவனைபோல் வடிவு காட்டும்
    திருவருட்பே ரானந்தத் தெய்வக் கோவே!
மண்ணிலுளார் அனைவோரும் வாழ்த்தும் தேவே!
    வானிலுளார் மிகவியப்ப, மறைநூல் வாழ,
எண்ணில்வினை யாடல்செயும் இறைவா! போற்றும்
    எவ்வெவர்க்கும் பொதுவாகி இலங்கு வாழ்வே!

—தண்டபாணி சாமிகள்

## 2. திருமால்

ஏழை யேதலன் கீழ்மக னென்று
    திரங்கி மற்றவற் கின்னருள் சுரந்து,
'மாழை மான்மட நோக்கியுன் தோழி;
    உம்பி யெம்பி'என் றொழிந்திலை உகந்து,
'தோழன் நீயெனக் கிங்கொழி,' என்ற
    சொற்கள் வந்தடி யேன்மனத் திருந்திட,
ஆழி வண்ண!நின் னடியிணை யடைந்தேன்
    அணிபொ ழில்திரு வரங்கத்தெம் மானே!

—திருமங்கையாழ்வார்

## 3. அருகன்

மூவா முதலா வுலகமொரு மூன்று மேத்தத்
தாவாத வின்பந் தலையாயது தன்னி னெய்தி
ஓவாது நின்றகுணத் தொண்ணிதிச் செல்வ னென்ப
தேவாதி தேவ னவன்சே வடிசேர்து மன்றே.

—திருத்தக்க தேவர்

## 4. இயேசு கிறிஸ்து

*பொங்குநீ ருலகுக் கெல்லாம் புண்ணியம் பொலியப் பாவச்*
*சங்கடந் தொலைய நாளுந் தனியறந் தழைப்ப வேத*
*மங்கல வோசை மல்க வானவர் மகிழ மீட்டும்*
*இங்குயிர்த் தெழுந்தி ரட்சை யீட்டிய எந்தாய் போற்றி!*

**—எச். ஏ. கிருஷ்ணப்பிள்ளை**

## 5. பராபரக் கண்ணி

*தேடக் கிடையாத திரவியமே! தேன்கடலே!* 1
*ஈடுனக்கும் உண்டோ இறையே பராபரமே!*

*ஏழை முகம்பார்த் தெளியேனை எப்பொழுதும்*
*ஆழாமல் ஆண்டருள்என் அழகே, பராபரமே!* 2

**—குணங்குடி மஸ்தான் சாகிபு**

### குறிப்புரை :

### 1. சிவபெருமான்

**தண்டபாணி சாமிகள்,** தென்பாண்டி நாட்டிலே திருநெல்வேலி நகரில் 1839ஆம் ஆண்டு தோன்றினர். செந்தில் நாயகம் பிள்ளைக்கும் பேச்சிமுத்தம்மைக்கும் புதல்வரான இவரது இயற்பெயர் **சங்கரலிங்கம்** என்பது. இவர் முருகக்கடவுளைத் தம் வழிபடு கடவுளாய்க் கொண்டவர். இதனல் இவர் 'முருக தாசர்' என்றும் 'தண்டபாணி சாமிகள்' என்றும் சிறப்புப்பெயரால் வழங்கப்பட்டார். வண்ணக்கவி பாடுவதில் வல்லவராயிருந்தமையால் இவரை 'வண்ணச் சரபம்' என்றும் போற்றினர். சிறு நூல்களும் பெருநூல்களுமாய் இவர் பாடிய நூல்கள் பல. இவர் தமிழ்ப்புலவர்களின் வரலாருகிய **புலவர் புராணம்** என்னும் நூலை இயற்றினர். கி. பி. 1898இல் இவர் திருவருட்பேறு எய்தினர். இவரது சமாதி விழுப்புரத்தைச் சார்ந்த திருவாமாத்தூரில் உள்ளது.

### அருஞ்சொற்பொருள்:

**கதிர்** - சூரியன். 'வெண்ணிலவும் செங்கதிரும்' என்பது **முரண் தொடை.** அளப்பரு - அளவிடவியலாத, திண்ணியர் - இறைவனைச் சிந்தையில் நிறுத்தும் வலிமை பெற்ற ஞானியர், பாவனை - உள்ளக்கருத்து, போற்றும் - வணங்கும், இலங்கு வாழ்வே - விளங்கிய வாழ்வாய் அமைந்திருப்பவனே.

## 2. திருமால்

இப்பாடல் திருமால் புகழ் பாடும் நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தில் பெரிய திருமொழி என்னும் பகுதியில் உள்ளது. இதனைப் பாடியவர் திருமங்கையாழ்வார். இவர் 8ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்தவர். இவர் திருவாலி நகரத்திலே நீலர் என்னும் படைத்தலைவர்க்கு மைந்தராய்த் தோன்றியவர். 'திருமங்கை மன்னர்' என்றும் இவரை வழங்குவர். இவர் திருவரங்கம் பெரிய கோயில் மூன்றாம் பிராகாரத்தை அமைத்தவர்; திருமால் திருப்பதிகள் பலவற்றையும் புகழ்ந்து உருக்கமாய்ப் பல பாடல்களைப் பாடியுள்ளார். திருக்குறுந்தாண்டகம், திருநெடுந்தாண்டகம், திருவெழுகூற்றிருக்கை, சிறிய திருமடல், பெரிய திருமடல் என்னும் பிரபந்தங்களும் இவர் பாடியனவே.

திருவரங்கத்தில் கோயில் கொண்டுள்ள பெருமானை நோக்கிக் கூறுவது இந்தப் பாடல்.

### அருஞ்சொற்பொருள் :

ஏழை - அறிவிலி, ஏதலன் -அயலான், கீழ்மகன் - தாழ்ந்த குலத்திற்பிறந்தவன், மாழை - மாவடு (மாவடுவும் மானின் மருண்ட பார்வையும் பெண்ணின் கண்ணுக்கு உவமை), மான் மட நோக்கி - மானைப் போல மருண்டு பார்க்கும் பார்வையுடைய சீதை, உம்பி - உன் தம்பி, எம்பி - என் தம்பி, உகந்து - மகிழ்ந்து, இங்கொழி — இங்கே தங்கு. குகன் என்னும் வேடன் பத்தியுடன் வந்து இராமனை வணங்கி வழிபட்டபோது இராமன் அக்குகனைப் பார்த்துச் சொன்னதாக உள்ள செய்தியை ஆழ்வார் இப்பாடலில் எடுத்துரைக்கிறார். ஆழி வண்ண - கடல் போன்ற நிறமுடையவனே, அடியிணை - இரு திருவடிகள், அணி - அழகு, பொழில் - சோலை, அம்மான் - கடவுள்.

## 3. அருகன்

இப்பாடல், 'சீவக சிந்தாமணி'யிலிருந்து எடுக்கப்பட்டது. ஆசிரியர்பற்றிய குறிப்புரையைச் 'சீவக சிந்தாமணி' உரைப் பகுதியில் காண்க.

### அருஞ்சொற்பொருள் :

மூவா முதலா-முடிவும் தோற்றமும் இல்லாத, ஏத்த-போற்ற, தாவாத - கெடாத, தன்னின் எய்தி - தன்னால் பெறுவதனால், ஓவாது நின்ற-தன்னை விட்டு நீங்காது நின்ற, குணத்து-பண்புகளை உடையவனாகிய, ஒண்நிதிச் செல்வன்-சிறந்த நிதியை உடைய செல்வன், என்ப-என்று பெரியோர் கூறுவர், சேவடி-செவ்விய திருவடி, சேர்தும்-வணங்குவோம்.

## 4. இயேசு கிறிஸ்து

இயேசு கிறிஸ்துவைப்பற்றிய இத்துதிப்பாடல், ஹென்றி ஆல்பிரடு கிருஷ்ணப்பிள்ளை பாடிய இரட்சணிய யாத்திரிகம் என்னும் காப்பியத்தில் உள்ளது. இக்காப்பியம் ஆங்கிலப்புலவர் ஜான் புன்யன் என்பார் இயற்றிய பில்கிரிம்ஸ் பிராக்ரஸ் என்னும் நூலைத் தழுவி ஆக்கப்பட்டது.

கிருஷ்ணப்பிள்ளை, பாளையங்கோட்டையை அடுத்த ரெட்டியாபட்டியில் பிறந்தவர்; முப்பது வயதுவரை வைணவ சமயத்தவராயிருந்து பின்பு கிறிஸ்துவ சமயத்தைத் தழுவியவர்; தமிழ்ப் புலமை நிரம்பியவர். சாயர்புரத்திலும் திருநெல்வேலியிலும் இவர் தமிழாசிரியராய்ப் பணி புரிந்தார். இவரது கவிதைச் சிறப்பினால் இவரைக் 'கிறிஸ்துவக் கம்பர்' எனப் பாராட்டுவர். **இரட்சணிய மனோகரம், இரட்சணிய சமயநிர்ணயம்** உள்ளிட்ட சில நூல்களையும் இவர் இயற்றியுள்ளார்.

**அருஞ்சொற்பொருள்:**

பொங்குநீர் - அலைகள் பொங்கி மேலெழுகின்ற நீரையுடைய கடல் (வினைத்தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை), பொலிய - விளங்க, தனியறம் - ஒப்பற்ற அறநெறி, மங்கலவோசை - நல்ல முழக்கம், மல்க - நிரம்ப, மீட்டும் - திரும்பவும். சிலுவையில் மாண்டு கல்லறை அடைந்த பின்னும் உயிர்த்தெழுந்து வந்தார் இயேசு என்பர். ரட்சை - பாதுகாப்பு, ஈட்டிய - உயிர்களுக்காகச் சேர்த்த, எந்தாய் - எம் தந்தையே.

## 5. பராபரக் கண்ணி

**இதனை இயற்றியவர் குணங்குடி மஸ்தான் சாகிபு.** இவரது இயற்பெயர் **அப்துல் சுல்தான் காதிறு** என்பது. **திருப்பாடற்றிரட்டு** என்னும் நூலின் ஒரு பகுதியாய் அமைந்துள்ளது இப்பராபரக் கண்ணி.

இவர் 1800ஆம் ஆண்டில் பிறந்தார்; தமது 17ஆம் வயதுக்குமேல் துறவியராகிப் பல ஊர்களுக்கும் சென்றுவிட்டு இறுதியில் 12 ஆண்டுகள் சென்னையில் தங்கியிருந்தார். இவர் 1847ஆம் ஆண்டில் சென்னையில் சமாதி அடைந்தார்.

**அருஞ்சொற்பொருள்:**

**திரவியம்** - பொருள், ஈடு - ஒப்பு, பராபரமே - கடவுளே.

**வினாக்கள்:**

1. தெய்வக்கோவின் திருவுருவைக் குறித்துத் தண்டபாணி சாமிகள் யாது கூறுகிறார்?
2. ஆழி வண்ணன் அடியிணை அடையத் தம்மை ஊக்கியவை எவை என்கிறார் திருமங்கையாழ்வார்?
3. இறைவன் திருவடிகளை வணங்குதற்குத் திருத்தக்க தேவர் கூறும் காரணம் யாது?
4 இயேசுவின் உயிர்த்தெழலால் விளைந்தவை யாவை?

# உரைநடைப்பகுதி

## 1. தமிழர் தலைவர் பெரியார் *

**[அறிஞர் அண்ணா]**

எனக்கென்று ஒரு வசந்த காலம் இருந்தது. நீண்ட நாள்களுக்குப் பிறகு—ஆண்டு பலவற்றிற்குப் பிறகு—அந்த வசந்த காலத்தை நினைவிலே கொண்டு, இன்றைய கவலை மிக்க நாள்களிலே எழவியலாத புன்னகையைத் தருவித்துக்கொள்கிறேன். பெரியாருக்கு அந்த வசந்த காலம் தெரியும்; இன்று பொறுப்பேற்றுக்கொண்டிருப்பதால் எழுந்துள்ள கவலையும் நன்கு புரியும்.

'வசந்த காலம்' என்றேனே, அந்த நாள்களில் நான் கல்லூரியிலிருந்து வெளியேறி அவருடன் காடு மேடு பல சுற்றி வந்த நிலை அது. அந்தக் காடு மேடுகளில் நான் அவருடன் தொண்டாற்றியபோது, வண்ண வண்ணப் பூக்கள் குலுங்கி, மகிழ்வளித்ததைக் கண்டேன்; நறுமணம் எங்கும் பரவிடக் கண்டேன்.

ஒருவர் தன்னந்தனியராய்ப் புறப்பட்டு, ஓயாது உழைத்து, உள்ளத்தைத் திறந்து பேசி, எதற்கும் அஞ்சாது பணியாற்றி, ஒரு பெரிய சமூகத்தை விழிப்பும் எழுச்சியும் கொள்ளச்செய்வதில் வெற்றி பெற்ற வரலாறு, இங்கன்றி வேறெங்கும் நிகழ்ந்ததில்லை.

அந்த வரலாறு தொடங்கப்பட்ட போது சிறுவன் நான். அந்த வரலாற்றிலே புகழேடுகள் புதிதுபுதிதாய் இணைக்கப்பட்ட நாள்களிலே, ஒரு பகுதியில் நான் அவருடன் சேர்ந்து பணியாற்றியிருக்கிறேன். அந்த நாள்களையே 'என் வசந்தம்' என்று குறிப்பிட்டிருந்தேன்.

பெரியாருடன் இணைந்து பணியாற்றியவர் பற்பலர். ஆயினும், மற்றப் பலரையும்விட அவருடன் இடைவிடாது இருந்

---

* அறிஞர் அண்ணா தமிழக முதல்வராய் இருந்தபோது எழுதப்பட்டது இக்கட்டுரை. எனவே, நிகழ்காலப்பாங்கில் அமைந்துள்ளது.

திருக்கும் வாய்ப்பினைப் பெற்றிருந்தவன் நான். அந்த நாள்கள் எனக்கு மிகவும் இனிமையான நாள்கள். இன்றும் அவைகளை நினைவிற்கொண்டுவரும்போது இனிமை பெறுகிறேன்.

எத்தனை எத்தனையோ கருத்துகளை உரையாடல் வாயிலாக எனக்கு அவர் தந்திருக்கிறார். 'எதையும் தாங்கும் இதயம் வேண்டும்,' என்பதை நான் கற்றுணரும் வாய்ப்பினையும் அவர் தந்தார். பொதுத்தொண்டு ஆற்றுவதில் நான் ஆர்வமும் அகமகிழ்வும் மனநிறைவும் பெற்றிடச் செய்தார் அவர்.

கோபத்துடன் அவர் பலரிடம் பேசிடக் கண்டிருக்கிறேன்; கடிந்துரைக்கக் கேட்டிருக்கிறேன்; 'உன்னை எனக்குத் தெரியும்; போ!' என்று உரத்த குரலில் கூறியதைக் கேட்டிருக்கிறேன். ஒரு நாள்கூட அவர் என்னிடம் அவ்விதம் நடந்து கொண்டதில்லை; எப்போதும் ஒரு கனிவு எனக்கெனத் தனியாக வைத்திருப்பார்; என்னைத் தமது குடும்பத்தில் 'பிறவாப் பிள்ளை' என்று கொண்டிருந்தார்.

நான் கண்டதும் கொண்டதும் அந்த ஒரே தலைவரைத் தான். இப்போது நான் உள்ள வயதில் அவர் இருந்தார், நான் அவருடன் இணைந்தபோது—முப்பது ஆண்டுகளுக்கு முன்பு. அதற்கும் முன்பு முப்பது ஆண்டுகள் அவர் பணியாற்றி வந்திருக்கிறார்.

இந்த ஆண்டுகள் தமிழரின் வரலாற்றிலே மிக முக்கியமான ஆண்டுகள். 'திடுக்கிட வைக்கிறாரே! திகைப்பாக இருக்கிறதே! எரிச்சலூட்டுகிறாரே! ஏதேதோ சொல்கிறாரே!' என்று பலர் ஏசினர்; பேசினர்; பகைத்தனர்; எதிர்த்தனர்; ஆனால், அவர் பேச்சைக் கேட்ட வண்ணமிருந்தனர்—மூலையில் நின்றாகிலும், மறைந்திருந்தாகிலும்.

அந்தப் பேச்சு ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக நடந்தபடி இருக்கிறது. எதிர்த்தவர்கள், ஏளனம் புரிந்தவர்கள், ஏனோதானோ என்றிருந்தவர்கள், தங்களது நிலை தன்னாலே மாறிவிடக் கண்டார்கள். கொதித்தவர்கள் அடங்கினார்கள். மிரட்டியவர்கள் பணிந்தார்கள். அலட்சியம் செய்தவர்கள் அக்கறை காட்டினார்கள்.

அவருடைய பேச்சோ? அது தங்கு தடையின்றி வேகம் குறையாமல், பாய்ந்தோடி வருகிறது, மலைகளைத் துளைத்துக் கொண்டு, கற்களை உருட்டிக்கொண்டு, காடு கழனிகளை வளம் பெறச் செய்துகொண்டு, நுரை நயத்துடன், ஒய்யார நடையுடன். 'அங்கே போகிருர்; இங்கே வருகிருர்; அதுகுறித்துப் பேசுகிருர்; இதுகுறித்துப் பேசுகிருர்,' எனத் தமிழகம் இந்த ஐம்பது ஆண்டுகளாய்க் கூறி வருகிறது.

'மனத்திற்பட்டதை எடுத்துச் சொல்வேன், எது நேரிடினும்,' என்னும் உரிமைப்போரே அவரது வாழ்வு. அதிலே அவர் கண்ட வெற்றி மிகப்பெரியது! அந்த வெற்றியின் விளைவு அவருக்கு மட்டும் கிடைத்துவிடவில்லை. இன்று அனைவரும் பெற்றுள்ளனர் அந்த வெற்றியின் விளைவுகளை. இந்தத் தமிழகத்தில் தூய்மையுடன், மனத்திற்குச் சரி எனப்பட்டதை எவரும் எடுத்துரைக்கலாம் என்னும் நிலை உறுதிப்படுத்தப் பட்டிருக்கிறது. அறிவுப்புரட்சியின் முதற்கட்ட வெற்றி இது. இதற்கு முழுக்க முழுக்கப் பொறுப்பாளர் பெரியார். இந்த வெற்றி கிட்ட அவர் ஆற்றிய தொண்டின் அளவு மிகப் பெரியது!

அவர் நமக்கு இதுவரையில் ஆற்றியிருக்கிற தொண்டுக்கு—அவரால் தமிழகம் பெற்றிருக்கிற வளர்ச்சிக்கு, நல்ல பெயருக்கு—நாம் நமது மரியாதையை—அன்பை—இதயத்தைக் காணிக்கையாக்க வேண்டும்.

தமிழகத்திற்கும் தமிழ்நாட்டு மக்களின் நல்வாழ்விற்கும்—இன்னும் உலகத்திற்கேகூட என்றும் சொல்லலாம்—அவர் செய்திருக்கிற அரிய பெரிய காரியங்களை, ஆற்றியிருக்கிற அருந்தொண்டுகளை, ஏற்படுத்தியிருக்கிற புரட்சிகர உணர்ச்சிகளை, ஓடவிட்டிருக்கிற அறிவுப் புனலைத் தமிழகம் இதுவரை என்றுமே கண்டதில்லை. இதற்குப் பிறகும் இப்படிப்பட்ட மாபெரும் புரட்சி வேகத்தை நாம் காணப்போவதில்லை. வரலாற்றில் பொறிக்கத்தக்க புதிய வரலாறு எனக் கருதும் நிலைமையை அவர் தம்முடைய பொதுத்தொண்டின்மூலம் நமக்கு அளித்திருக்கிருர்.

என்னுடைய நினைவுகள் பல எண்ண அலைகளை நெஞ்சில் ஓடவிட்டுக்கொண்டிருக்கின்றன. எத்தனை இரவுகள், எத்தனை

பகல்கள், எத்தனை காடுமேடுகள், எத்தனை சிற்றாறுகள், எத்தனை பேராறுகள், எத்தனை மாநாடுகள் என எண்ணிப் பார்க்கிற நேரத்தில், ஒரு போர் வீரன் களத்திற்புகுந்து, 'இந்தப் படையை முரியடித்தேன்! அந்தப்படையை வென்றேன்!' எனக் காட்டி, மேலும் மேலும் செல்வதைப்போல, வாழ்நாள் முழுவதும் அவர் களத்தில் நிற்கிற ஒரு மாபெரும் போராட்டமே நம் முன் காட்சி அளிக்கிறது.

முதற்போராட்டம், அவர் உள்ளத்தில் தோன்றியிருக்க வேண்டும். செல்வக் குடியிலே பிறந்த அவர், தம்முடைய செல்வத்தை—செல்வாக்கைக்கொண்டு ஊரை அடக்கி, போக போக்கியத்தில் மிதந்து மகிழ்ந்திருக்கலாம். அப்போதிருந்த பலரும் அப்படிப்பட்ட வாழ்க்கையில்தான் இருந்தனர். அப்படிப்பட்ட வாழ்க்கையிலிருந்து தம்மைத் தனியாக்கிக் கொண்டு, தம்மைப் பிரித்துக்கொண்டு, 'என்னுடைய செல்வம் எனக்கில்லை; என்னுடைய செல்வத்தைக்கொண்டு போக போக்கியத்தில் நான் திளைக்கப்போவதில்லை; பொது வாழ்க்கையில் ஈடுபடப்போகிறேன்,' என்று எண்ணிய நேரத்தில், அவருக்கிருந்த செல்வமும், அவருடைய குடும்பத்துக்கிருந்த செல்வாக்கும், அதனால் அடையக்கூடிய சுகபோகங்களும் அவர் மனத்தில் ஒரு கணம் நிழலாடியிருக்கவேண்டும். அப்போது அவர் உள்ளத்தில் நிச்சயமாக ஒரு போராட்டம் எழுந்திருக்கவேண்டும்.

'செல்வத்தில் புரளலாமா, அல்லது வறுமையில், அறியாமையில் மூழ்கிக்கிடக்கும் தமிழ்ச் சமுதாயத்தின் முன்னேற்றத்துக்கு என்னை நான் ஒப்படைப்பதா?' என்ற போராட்டத்தில் தொண்டுள்ளம் வெற்றியடைந்தது. 'செல்வத்திற்காக அல்லேன் நான். சுகபோகத்திற்காக அல்லேன் நான். என்னிடத்திலுள்ள அறிவு, உழைப்புத்திறன் — என்னிடத்தில் அமைந்திருக்கிற பகுத்தறிவு அனைத்தும் தமிழக மக்களுக்குத் தேவை. தமிழகத்திற்கு மட்டுமல்ல—இயன்றால் இந்தியா முழுவதற்கும் தேவை; வசதிப்பட்டால் உலகத்திற்கே தேவை. வீட்டை மறப்பேன்; செல்வத்தை மறப்பேன்,' என்று அவர் துணிந்து நின்று அந்தப் போராட்டத்தில் முதலில் வெற்றி பெற்றார்.

'இதில் பிரமாதம் என்ன இருக்கிறது?' என்று எண்ணக் கூடும், செல்வம் இல்லாதவர்கள். ஒருவர் கையில் ஒரு பலாப்

பழத்தைக் கொடுத்து, ஒரு மணி நேரம் அவர் அதை உற்றுப் பார்த்துக்கொண்டிருக்கவேண்டுமென்றால், வைத்திருப்பவர் வாயில் நீர் ஊறும்; நேரம் செல்லச்செல்லப் பலாச்சுளையில் மொய்த்துக்கொண்டிருக்கிற ஈக்களோடு சேர்த்துச் சாப்பிடு வாரே தவிர, பார்த்துக்கொண்டேயிருக்கமாட்டார்.

பெரியார் குடும்பத்தின் நிலை எப்படிப்பட்டது? எந்தப் பக்கம் திரும்பினாலும் வாணிகத்தில் ஆதாயம், நில புலன்கள், வீடு வாசல்கள். இவை எல்லாவற்றையும் பார்த்து, 'இவை எனக்குத் தேவை இல்லை,' என்றார். 'என் நாட்டு மக்களுக்கு—அறியாமையில் மூழ்கிக்கிடக்கும் இந்நாட்டு மக் களுக்கு—நல்லது கெட்டது ஆராய்ந்து பார்க்கும் பக்குவம் அற்றுப்போய்க்கிடக்கும் மக்களுக்கு—வேறு ஒரு செல்வத் தைத் தருவேன்; அறிவுச் செல்வத்தைத் தரப்போகிறேன்; சிந் தனைச் செல்வத்தைத் தரப்போகிறேன்; பகுத்தறிவுச் செல்வத் தைத் தரப்போகிறேன்—இவற்றை ஏற்று நடக்கத் தக்க துணிவைத் தரப்போகிறேன். இதைத் தடுக்க எவரேனும் குறுக் கிடுவாரானால், அவர்தம் ஆற்றல்களையும் முறியடிப்பேன். இதுதான் என் வாழ்க்கையின் குறிக்கோள்,' என்று அவர் கிளம்பினார். அதுதான் வாழ்க்கையின் முதற்போராட்டத்தில் அவர் பெற்ற வெற்றி. அதற்குப் பிறகு அவர் சந்தித்த ஒவ் வொரு களத்திலேயும் வெற்றிதான் கிடைத்திருக்கிறது.

அவர் முக்கியமாய்க் கருதுவது, 'தமிழ் நாட்டு மக்களி டையே மனிதத்தன்மை வளரவேண்டும். அவர்கள் நம்பிக் கொண்டிருக்கிற காட்டுமிராண்டித்தனமான கொள்கைகள்—நாட்டைக் காடாக்கத்தக்க கொள்கைகள்—மனிதனை மிருக மாக்கத்தக்க கொள்கைகள்—வெளியுலகத்தாராலே இரண்டு மூன்று நூற்றாண்டுகளுக்கு முன்பே உதறித்தள்ளப்பட்ட உருப்படியற்ற கொள்கைகள்—மறையவேண்டும். இவை நீக்கப்பட்டு, தமிழக மக்கள் துல்லியமான மனத்துடன், தூய் மையான எண்ணத்தில், செயல் திறனில், பகுத்தறிவாளர் களாய், பண்பாளர்களாய்த் திகழவேண்டும்; அதற்கோர் அறிவுப் புரட்சி தேவை,' என்பதே. அவரது நாட்டமெல்லாம் இதிலேயே அமைந்திருக்கிறது. இந்த நாட்டத்தின் உருவந் தான் பெரியார் என்றால், அது மிகையாகாது.

இரண்டு நூற்ருண்டுகளில் செய்து முடிக்கக்கூடிய காரியங்களை இருபதே ஆண்டுகளில் அவர் செய்து முடித்திருக்கிருர். ஐரோப்பாக் கண்டத்தை எடுத்துக்கொண்டால், நாட்டினுடைய விழிப்பிற்கு ஐம்பது ஆண்டுகள், ஆட்சி முறையை மாற்றுவதற்கு ஐம்பது ஆண்டுகள் என்ற அளவில், பகுத்தறிவு மனப்பான்மையைத் தோற்றுவிப்பதற்காக **வால்டேர், ரூசோ,** இப்படித் தொடர்ச்சியாய்ப் பலர் வந்து வந்து இரண்டு மூன்று நூற்ருண்டுகள் பாடுபட்டதால்தான் பகுத்தறிவுப் பாதையில் அந்த நாடுகள் செல்ல இயன்றது.

இப்படி இரண்டு நூற்ருண்டுகளில் செய்ய வேண்டிய காரியங்களைப் பெரியார் இருபதே ஆண்டுகளில் செய்து முடிக்கவேண்டுமென்று கிளம்பினர்; திட்டமிட்டார்; அத்திட்டத்தின் அடிப்படையில் பணியாற்றிக்கொண்டு வருகிருர். ஆங்கிலத்தில் சொல்வார்கள், 'Putting Centuries Into Capsules' என. பல மருந்துகளை உள்ளடக்கிச் சில மாத்திரைகளிலே தருவது போல, பல நூற்ருண்டுகளை இருபது ஆண்டுகளில் அடைத்து, தம் வாழ்நாளிலேயே சாதித்துத்தீர வேண்டுமென—வெற்றி பெற்றுத்தீரவேண்டுமென — அறிவோடும், உணர்ச்சியோடும், நெஞ்சின் ஊக்கத்தோடும் யார் வருகிருர்கள், யார் போகிருர்கள் என்பதைக்கூட இரண்டாம் தரமாக வைத்துக்கொண்டு, எந்த அளவு முன்னேறுகிருேம் என்பதைக் காண்பதிலேயே வாழ்க்கை முழுவதும் அவர் போராட்டக் களத்தில் நின்றிருக்கிருர்.

அந்தப் போராட்டக் களத்தில் அவர் நின்றிருந்த நேரத்தில், சில பகுதிகளில் நான் உடனிருந்து பணியாற்ற வாய்ப்புக் கிடைத்தமைக்காக மகிழ்ச்சி அடைகிறேன். கல்லூரியை விட்டு வெளியே வந்ததும் முதலில் நான் அவரிடந்தான் சிக்கிக் கொண்டேன். கல்லூரியில் படித்த படிப்பையும் அதன் மூலம் என்னென்ன எண்ணங்கள் ஏற்படுமோ அவைகளையெல்லாம் நான் காஞ்சீபுரத்தில் உதறித் தள்ளிவிட்டு, ஈரோட்டில் போய்க் குடியேறினேன். இது எனக்கு நன்ருய் நினைவிருக்கிறது. இதுபற்றி அப்போது என் பாட்டியார், அவரையொத்த மூதாட்டிகளோடு பேசும்போது அடிக்கடி சொல்லுவார். ஆறு மாதம் அல்லது மூன்று மாதங்களுக்கு ஒரு முறை

நான் காஞ்சிக்குச் செல்கிற நேரங்களில் அவர் என்னைப்பற்றி மற்றவர்களிடம் சொல்லும்போது, 'யாரோ ஈரோட்டிலிருந்து வந்த ஒருவன், என் பிள்ளையைப் பிடித்துக்கொண்டு போய் விட்டான்,' எனப் பேசுவார். ஒரு முறை காஞ்சீபுரத்தில் ஆடிசன்பேட்டையிலே நடைபெற்ற ஒரு பொதுக்கூட்டத்தில் பெரியாருடைய பேச்சைக் கேட்ட பிறகு அதே பாட்டியார் சொன்னார் என்னைப் பார்த்து, 'நீ ஈரோட்டிலேயே இரு,' என்று. இத்தனைக்கும் பாட்டியாருக்கு அதிகமாய்ப் படிப்பறிவு இல்லை.

எதனால் இதைச் சொல்கிறேனென்றால், தொடக்கத்தில் பெரியாரிடத்தில் இருந்த காலத்தில் ஏற்பட்ட நிகழ்ச்சிகள் பலப்பல இருக்கின்றன. என்னுடைய வாழ்நாள் முழுவதும் எண்ணியெண்ணி மகிழத்தக்கவை அவை. இப்போது எனக்குக் கிட்டியிருப்பது, இனி எனக்குக் கிட்டக்கூடியது என எந்தப் பட்டியலைக் காட்டினாலும் நான் ஏற்கெனவே பெற்றிருந்ததைவிட இவற்றுள் எதுவும் மகிழ்ச்சியிலோ பெருமையிலோ நிச்சயமாக அதிகமானதாய் இருக்கவியலாது.

வீரமிக்க காரியங்களை—வேறு யாரும் எண்ணிப்பார்க்க இயலாத காரியங்களை — நடத்திக்காட்டி, அதில் நாம் பெற்ற வெற்றிகளை நம்மிடம் பெரியார் ஒப்படைத்திருக்கிறார். அவர் சாதித்த காரியங்கள் மிகப்பெரியவை. என்றாலும், அவருக்கிருந்த துணிவோடு நாம் சாதிக்கவேண்டிய காரியங்கள் நிரம்ப இருக்கின்றன. ஒரு பெரிய மலை பிளக்கப்பட்டிருக்கிறது. கற்பாறைகள் எல்லாம் கீழே உருண்டு வந்து கொண்டிருக்கின்றன. அவைகளையெல்லாம் பக்குவப்படுத்தி அவைகளை எந்தெந்த வடிவத்திலே நாம் செதுக்கவேண்டுமோ அதில் நம்மை நாம் ஈடுபடுத்திக்கொள்ளவேண்டும். பெரியார் அழைக்கிற அழைப்பைக் கேளாத தமிழ் மக்கள் என்றுமே இருந்ததில்லை. அவர் கூப்பிடும் குரலுக்கு ஓடிவரத் துடியாத இளைஞர்கள் இருந்ததில்லை.

30 ஆண்டுகளுக்கு முன்னாலே தமிழகத்தில் பேசுவதற்குக் கூச்சப்பட்டுக்கொண்டிருந்தவைகளை இன்று நமது எட்டு வயதுச் சிறுவன் வெகு தாராளமாய்ப் பேசுகிறான். 20 ஆண்டுகளுக்கு முன்னாலே நம் மனத்தில் பயந்துகொண்டிருந்த தத்துவங்கள், இன்றைய தினம் கேலிக்குரியனவாகுமென நாடே

சொல்கிறது. இரண்டு நூற்றுண்டுகள் பாடுபட்டு உண்டாக்க வேண்டிய பகுத்தறிவுப் புரட்சியை இருபது ஆண்டுகளில் அவர் சாதித்துக்கொடுத்ததால், அது நமக்கெல்லாம் எளிதாய் இருக்கிறது; எல்லாம் சுலபமாய் இருக்கின்றன.

பகுத்தறிவு வாதம் என்பது, அடிப்படை உண்மைகளை, நெறிகளை மறுப்பதாகாது; எதையும் காரணங்கண்டு, ஆராய்ந்து உண்மை காண்பதாகும். போலித்தனமான எண்ணங்களை—செயல்களை அழித்தொழிப்பதுதான் பகுத்தறிவு ஆகும்.

அறிவின் எந்தவொரு துறையேயாயினும், அதில் நமக்கென்று ஒரு முறை இல்லாமல் இல்லை. நம்முடைய வாழ்க்கை முறைகள் அழியாதவை என நாம் கொண்டாடலாம். ஆயினும், அந்த முறைகளை இளமை குன்றாது, தீவிரத் தன்மையோடு கூடியனவாய் வைத்திருக்கவேண்டுமானுல், மாறுதலை ஏற்றுக்கொள்ளத்தக்க—புதிய கருத்துகளை ஏற்றுக்கொள்ளக் கூடிய—இளமை இதயத்தைப் போல நமது இதயம் பசுமையானதாய் விளங்கவேண்டும்.

நாம் நெடுங்காலமாய்ப் பழைய முறைகளிலேயே ஊறி, அவற்றைத் தாங்கி, அவற்றிற்கெதிரான வாதங்களுக்கு எதிர்ப்புக் கூறி, காலத்தைக் கழித்திருக்கிறோம். இதே காலத்தில், உலகத்தின் ஏனைய நாட்டவரெல்லாம் உண்மையை நாடிப் பொறுமையோடு தமது இடைவிடா ஆராய்ச்சி, சோதனைமூலம் பல புதிய முடிவுகளை எய்தியதுடன் உயர்வும் பெற்றுள்ளனர்.

நாமோ, பழம்பெருமையில் அமர்ந்திருப்பதில் திருப்தி அடைகிறோம்; நம்மையறியாமல் இவற்றைப் பாதுகாக்கக் கூடியவராய் இருந்துவந்துள்ளோம். இந்த வகையில், புரையோடிய சமூகக் கருத்துகளைச் சாவடிக்கும் வீரர் பெரியாரைக் குறை கூறத் துணிவதில் சிறிதுகூட அறிவுத்தெளிவு இல்லை. பழம்பெருமை பேசிக்கொண்டு, மூடப்பழக்கங்களில் ஆழ்ந்து அடிமைப்பட்டிருக்கும் சமுதாயத்தைச் சீர்திருத்தி, புரையோடிய சமுதாயக் கருத்துகளை ஒழிக்கப் போராடும் வீரரான பெரியாரைக் குறை கூறிப் பெறும் பயன் என்ன?

பகுத்தறிவே எல்லாருடைய உள்ளங்களையும் தங்கு தடையின்றி ஆளவேண்டும். சாதி ஒழிந்த சமத்துவச் சமுதாயம் அமைக்கும் போர்வீரராக எல்லாரும் முன்வரவேண்டும்; பகுத்தறிவுமூலம் சமுதாயத்தினைச் சீர்படுத்தும் பணியில் ஈடுபடவேண்டும். விஞ்ஞானத்தோடு ஒட்டி வாழ இயலாத மூடப்பழக்கங்களுக்கு எதிராகப் போர் தொடுக்கவேண்டும்.

தமிழகத்தில் இன்று அவரால் ஏற்பட்டுள்ள இந்த நிலையை இந்தியாவில் வேறு எங்கும் காணவியலாது. மற்றப் பகுதியினர் இதுபற்றிக் கேள்விப்படும்போது வியர்த்துப்போகின்றனர்; 'அப்படியா! இயல்கின்றதா? நடக்கின்றதா?' எனக் கேட்கின்றனர், சுற்றும் முற்றும் பார்த்துக்கொண்டு. அரித்துவாரம், கல்கத்தா, பாட்னு, கான்பூர், காசி, இலாகூர், அலகாபாது, அமிர்தசரசு போன்ற பல நகர்களில் என்னையும் உடனழைத்துக்கொண்டு பெரியார் சுற்றுப்பயணம் செய்தபோது, ஒவ்வோர் ஊரிலும் இதைப்போலவே கேட்டனர். யார்? அந்த ஊர்களிலே உள்ள பகுத்தறிவாதியர்.

அந்த இடத்துப் பகுத்தறிவாதிகள் படிப்பார்கள், பெரிய பெரிய ஏடுகளை; எழுதுவார்கள், அழகழகான கட்டுரைகளை; கூடிப்பேசுவார்கள், சிறிய மண்டபங்களில், போலீசின் பாதுகாப்புப் பெற்றுக்கொண்டு! இங்கோ?

இங்கா? இவர் பேசாத நாள் உண்டா? இவர் குரல் கேளாத ஊர் உண்டா? இவரிடம் சிக்கித் திணறாத பழைமை உண்டா? எதைக்கண்டு இவர் திகைத்தார்? எந்த மூடநம்பிக்கை இவரது தாக்குதலைப் பெறாதது?

'ஏ, அப்பா! ஒருவரே ஒருவர்! அவர் நம்மை அக்கு வேறு ஆணி வேருக எடுத்தெடுத்து வீசுகிறாரே!' என்று இந்நாட்டை என்றென்றும் விடப்போவதில்லை என்று எக்காளமிட்டுக் கொண்டிருந்த பழைமை அலறலாயிற்று! புதுப்புதுப் பொருள் கொடுத்தும், பூச்சுமெருகு கொடுத்தும் இன்று பழைமையின் சில பகுதிகள் பாதுகாக்கப்பட்டுவருகின்றன. என்றாலும், விழுந்த அடியால் அடித்தளம் நொறுங்கிப்போய்விட்டிருக்கிறது என்பதனை அறியாதார் இலர்.

எனவேதான், பெரியாருடைய பெரும்பணியை ஒரு தனி மனிதரின் வரலாறு என மட்டுமன்றி, ஒரு சகாப்தம்—ஒரு காலக்கட்டம்—ஒரு திருப்பம் எனவும் நான் கூறுவது வழக்கம்.

அக்கிரமம் தென்படும்போது, பெரும்பாலாருக்கு, 'அது நம்மைத் தாக்காதபடி தடுத்துக்கொள்ளவேண்டும்,' என்னும் எண்ணமும், 'ஒதுங்கிக்கொள்வோம்!' என்னும் பாதுகாப்பு உணர்ச்சியுமே தோன்றும்;' 'எதிர்த்து நிற்கவேண்டும்,' என்னும் எண்ணம் எளிதில் எழுவதில்லை.

அக்கிரமம் எங்கு இருக்கக் கண்டாலும், எந்த வடிவிலே காணப்படினும், எத்துணைப் பக்கப்பலத்துடன் வந்தாலும் அதனை எதிர்த்துப் போரிடத் தயங்குவதில்லை பெரியார். அவர் கண்ட களங்கள் பல! பெற்ற வெற்றிகள் பலப்பல! அவர் தொடுத்த போர் நடந்தபடியேயிருக்கிறது. அந்தப் போரிலே ஒரு கட்டத்தில் அவருடன் இருந்திருக்கும் வாய்ப்பினைப் பெற்ற நாள்களையே நான் 'வசந்தம்' என்று குறிப்பிட்டேன்.

பெரியாரால் ஏற்படுத்தப்பட்ட அறிவுப்புரட்சி, எளிதில் நிற்கப்போவதில்லை. அது போகவேண்டிய தூரத்திற்குப் போய், அடையவேண்டிய சக்தியை—இலக்கைத் தொட்ட பின்புதான் நிற்கும். எப்படி வில்லை விட்டுக் கிளம்பிய கணையின் வேகம், பாயவேண்டிய இடத்தில் பாய்ந்தேதான் நிற்குமோ, அப்படியே அவரிடத்திலிருந்து பிறந்த அறிவுக்கணை, எந்த இலட்சியத்தை அடையவேண்டுமோ, அதை அடைந்தே தீரும்; இதில் யாருக்கும் ஐயம் இல்லை.

**அருஞ்சொற்பொருள் :**

வசந்த காலம் - இளவேனிற்காலம் (சித்திரை வைகாசி மாதங்கள். இயற்கையின் அழகு சிறந்து விளங்கும் காலம் இந்த வசந்த காலமே.), புன்னகை - புன்சிரிப்பு, ஆர்வம் - விருப்பம், புனல்-நீர், போகபோக்கியம் - நுகர்வும் நுகர்பொருள்களும், திளைத்தல் - இடைவிடாமல் நுகர்தல், துல்லியமான - சரியான, நாட்டம் - நோக்கம், புரையோடிய - உள்துளையிட்டு ஆழ்ந்த, அக்கு வேறு ஆணி வேறாய் - ஒட்டுப்பற்றில்லாததாய், இலக்கு - குறியிடம், கணை-அம்பு.

**வினாக்கள் :**

1. பெரியாருடைய தொண்டின் தொடக்கக் காலம் எவ்வாறிருந்தது?
2. அறிஞர் அண்ணா தம் வாழ்வில் 'வசந்தம்' என எந்தக்காலத்தைக் குறிப்பிடுகிறார்? ஏன்?
3. பெரியார் வாயிலாய் அறிஞர் அண்ணா பெற்றவை எவை?

4. 'தமிழரின் வரலாற்றிலே மிக முக்கியமான ஆண்டுகள்' என எப்பகுதியை அண்ணு குறிப்பிடுகிருர்? அந்த நாளில் இருந்த நிலைமை யாது?

5. பெரியாரின் பேச்சு வன்மைகுறித்து 'நாம் அறிவது யாது?

6. பெரியார் ஆற்றிய பொதுத்தொண்டுகளைக்குறித்து அறிஞர் அண்ணு கூறுவது யாது?

7. 'பெரியாரின் உள்ளத்தில் தோன்றியிருக்கவேண்டும். எனச் சொல்லப்படுகிற முதல் போராட்டம் எது?

8. தம் வாழ்க்கைக் குறிக்கோளாய்ப் பெரியார் கொண்டவை எவை?

9. பெரியாரின் சாதனைகளைக்குறித்து அண்ணு கூறுவது யாது?

10. பெரியாரின் தொண்டுகளால் ஏற்பட்ட மாறுதல்களைக் குறித்து அண்ணு யாது கூறுகிருர்?

11. பகுத்தறிவு வாதம்பற்றி அண்ணு தரும் விளக்கம் யாது?

12. பெரியாருடன் தாம் செய்த வடநாட்டுச் சுற்றுப் பயணம் குறித்து அண்ணு யாது கூறியுள்ளார்?

13. பெரியாரின் பெரும்பணியை 'ஒரு திருப்பம்' எனச் சொல்வதன் உண்மையை விளக்குக.

14. அறிவுப் புரட்சியின் வருங்காலம்பற்றி அறிஞர் அண்ணுவின் மதிப்பீடு யாது?

## 2. தாய் மொழியில் உயர்தரக் கல்வி

**(டாக்டர் நாவலர் ச. சோமசுந்தர பாரதியார்)**

உயிர்களின் சிறப்பியல், உணர்தலும் அறிதலும். இன்பமும் துன்பமும் உள்ளிட்ட எல்லாச் சுவைகளும் உணர்வில் எழுவன. நினைப்பு, எண்ணம், சூழ்ச்சி, துணிவு, தூண்டுதல், விலக்குதல் போல்வன யாவும் அறிவின்பாலன. பொறிகளின் துணையால் உணர்ச்சி நிகழும். அறிவின் கருவியாய் உறுதுணையாவன புலன்கள் எனப்படும். பொறியால் உணர்வும், புலனுல் அறிவும் முறையே செயற்படும்.

அறிவும் உணர்வும் அகத்தில் வளர்வன. அவ்விரண்டலால் வாழ்வில் ஒன்றில்லை. ஆக்கமும் கேடும், இன்ப துன்பங்

களும், நுகர்வதும் தவிர்வதும் இந்த அகத்திறன் இரண்டையும் பொறுத்தவை. அவை 'ஆக்கம் பெருக்கும் கருவி' எனப்படும். தொழில் இல்லாதிருப்பது அழிவினில் முடியும் வளர்தலும் தளர்தலும் தொழிலின் இரு திறம். தொழிற்படாதிருப்பது உயிரியல்பு அன்று. செயலறவு உயிர்களின் முடிவு. தளர்தல் சாவுக்கும், வளர்தல் வாழ்வுக்கும் வழி காட்டும் அறிகுறிகள்.

புறத்தில் உடலுறுப்புகளை வளர்க்க உணவு துணையாவது போல, அக உறுப்பாம் உணர்வு அறிவுகளை வளர்க்கும் கருவி கல்வி. உணர்வின் கூறுகள், அகத்தில் சுவைகளும் புறத்தில் மெய்ப்பாடுகளும் ஆம். அவற்றின் கல்வியால் கலைகள், காவியம், ஓவியம், இயல், இசை வளரும்.

அறிவின் பகுதி பகுத்தறிவு, சிந்தனை, சீர் தூக்கல், சூழ்ச்சி, துணிவு போலப் பல திறப்படும். அவற்றுள் ஒவ்வொன்றையும் வகுத்து, நிறுத்து, தொகுத்து, முறைப்படுத்த நூல்கள் துணையாகும். நூல்களை வடமொழியாளர் 'சாத்திரம்' என்பர். அறிவும் உணர்வும் ஒவ்வோர் உயிரின் பண்பொடு செயலாம். ஆதலின், அவை ஒன்றனோடொன்று தொடர்பும் துணைமையும் உடையவையாகும். உணர்வொடு புணரா அறிவும், அறிவொடு செறியா உணர்வும், உயிர்க்கு இயல்பல்ல. அதனால், அறிவும் உணர்வும் அறவே வேறாய்ச் செயற்பட மாட்டா. ஆகையால், கலையும் நூலும் தனித்தனி நிலை உயர இரண்டையும் வளர்ப்பது கல்வி. எனவே, நல்ல அறிவு கல்வியால் வளரும். 'மாந்தர்க்குக் கற்றனைத் தூறும் அறிவு,' என்பது பழைய தமிழ் மறை.

கல்வியைத் தாய் மொழியில் பயில்வதால் தெளிவும் திட்பமும் ஏற்படும். பிறிதொரு மொழியில் அறிவு பெற வேண்டின், தாய் மொழிப் பயிற்சியும் குறையும்; பிற மொழிக் கல்வியும் பெருகி வளராது. தாய் மொழியையே கற்க இயலாதிருப்பவர், அயல் மொழிக் கல்வியைப் பயில முயல்வரோ? ஒரு மொழி கற்பதே அருமையாயிருக்க, இரு மொழி பயிலப் பொருளும் முயற்சியும் போதிய காலமும் பெறுவதெப்படி? எந்த நாட்டிலும் எக்காலத்திலும், எல்லாரிடையுமே அவரவர் தாய் மொழிக் கல்வியே தழையக் காண்போம்.

இந்தியப் பெருநிலம், வந்த அயலாருக்கு அடிமைப் பட்டதால், ஆள்பவரின் ஆங்கிலம் ஆதிக்கம் பெற்றது; தாய் மொழிக் கல்வி ஆதரவின்றித் தளர நேர்ந்தது. அறிவு நூல் ஆக்கம் செறியப்பெறுமல், குறுகி, நம் மொழிகள் வறுமை யுற்றன. அடிப்படை, நடுத்தர, உயர்வு நிலைக் கல்விகளெல் லாம் நாட்டு மொழியில் முன் நடந்து வளர்ந்தன. அரசியல் நோக்கமும் பொருள் தொழில் ஆக்கமும் ஆங்கிலப் பயிற்சி யால் ஓங்கிய நிலையில் தாய் மொழி வளர்ச்சி ஓய்ந்து தேய்ந் தது. 'உயர்தரக் கல்வி தாய் மொழிகளில் இனி இயலுமோ!' என ஐயுறுவாரோடு, 'கூடாது' என்று கூறுபவர்கூட நம்ம வரிடையே நாளும் காண்கிறோம்.

ஓரிரு நூற்றுண்டுகளின் முன் பாரில் ஆங்கிலப் பயிற்சி மிகக் குறைவு. வடமொழி அன்றிப் பிறமொழி எதுவும் எய்தப் பெருத பழைமையும் பெருமையும் மொழி நூல் முடிவும் இலக் கிய வளமும் உடையது தமிழ். காவியச் சுவையிலும் கவி மணிக் குவையிலும் தமிழின் நிலைமை, உலகில் சிறந்த மொழி எதனோடும் ஒக்கவும் உயரவும் உரிமை தந்தது. ஆயினும், புத்துயிர் பெற்ற புதுக் கலை வகையிலும் விஞ்ஞான நூல்களின் வித்தகத் துறையிலும் அரசியலார் தம் ஆங்கிலம் ஒன்றிலே கல்வியை நமக்குத் தந்ததன் விளைவாய்த் தமிழைப் போன்ற தாய் மொழியிலும் நாம் உயர்தரக் கல்வி பயில இயலாததாயிற்று. முதலாம் குறை நம் மொழியில் புதுக் கலைச் சொற்களைப் போதுமளவு இடம் பெற ஆங்கிலச் சொற்களை அப்படியே எடுத்தாளத் துணியின், அம்மொழியறிவே வளருவ தன்றித் தாய் மொழி வளமும் வளர்ச்சியும் குன்றும். வேணவா உடைய மாணவர்க்கெல்லாம் அயல் மொழி பயிலும் துயர் ஒழியாது. இரண்டாம் குறை, நம் தாய் மொழிகளிலே அவ் வக்கலைக்குச் செவ்விய நூல்கள் செய்யப்பெருமை. கலை தொறும் பயில்பவர் நிலைகளுக்கேற்பப் பல தர நூல்களும் நிலவா மொழிகள் உயர்தரக் கல்விக்கு உதவ மாட்டா. அதனல், முதலில் நாட்டு மொழியில் இக்கேட்டை ஒழிக்கக் கலைச்சொல் வளத்தை நாம் பெருக்குதல் வேண்டும். அத னோடும் உடனே பல்வகைக் கலையிலும் நல்லறிவு உயரத் தரம் தரமாகவும் இதம் பதமாகவும் நூல்களை இயற்றித் தாய் மொழி வளர்ச்சி ஓய்ந்தொழியாமல் பேணுதற்கான செயல் முறை வகுத்து ஆம் வழி எல்லாம் முயலுதல் வேண்டும் மொழி

வளமின்றி விழுமிய நூல்களை எழுத இயலாது. நூல் வளமில்லா மொழிகளில் கல்விச் சால்பு உயராது. ஆதலால், இந்தக் குறைகளை நீக்கினாலன்றி, நாட்டு மொழிகளில் உயர் தரக் கல்வியை ஊட்ட இயலாது.

இனி, முறையே நம் மொழிக் குறைகளை நீக்கிப் பொருத்தமான திருத்தமும் செய்து, எல்லாத்துறையிலும் நல்லறிவு ஓங்க உயர்தரக் கல்வியை விரைவில் பரப்புதற்குரிய வழிகளை ஆராய்வோம்:

முன் அறியாத பொருள்களும் கருத்தும் எழுதுங்கால், பழைய நம் மொழிகளில் அதுவதற்குரிய புதிய சொற்களைப் படைத்தல் வேண்டும். இதுவரை இல்லாப் புதுக் கருத்தும் கலைகளும் உலகில் நிலவுகின்றன. பூத பௌதிகங்களும் தனிப்பொருள் கூட்டுப்பொருள்களும் நாள்தோறும் நாட்டில் எண்ணவும் பண்ணவும் ஏற்படுகின்றன. அவற்றிற்கெல்லாம் பழைய நம் மொழிகளில், உரிச்சொல் முதனிலை உள்ளன கொண்டு புதிய சொற்களைப் புனைய இயலுமேல், அவ்வாறு அவற்றை அமைத்துக்கொள்ளலாம். அஃதியலாதெனில், வடசொல் திசைச்சொல் வாய்ப்புள கொள்ளலாம். அயல் நாட்டுப் பிற மொழிச் சொற்களும் வேண்டுமிடங்களில் வாங்கி வழங்கலாம். பிற மொழிச் சொற்களை எடுத்தாளுகையில் தமிழ் எழுத்தியல்பு, மொழி மரபு எதுவும் பிறழ விடாமல் மாற்றி வழங்கலாம். மொழியியல் மரபொடு முழுவதும் முரண எழுத்தையும் சொல்லையும் புகுத்துதல் வழுவாம். அப்படிச் செய்வது தமிழை வதைத்தொரு புது மொழி படைப்பதாகும்.

அன்றியும், புதிதாய் ஆக்கியும் இரவலாய் வாங்கியும் தமிழில் கூட்டும் சொற்களைப் பெயர் வினை இடை உரி வகைகளாக்கிப் பிரிக்கவும் திரிக்கவும் பெருக்கி விரிக்கவும் ஏற்ற முறையில் அமைத்தல் வேண்டும். ஆக்கச் சொல் பொருட்போக்கில், அதன் தொடர்புடைய புதிய கருத்து எழுமேயானால், அச்சொல்லடியாய் அப்புதுக்கருத்தைச் சுட்டுதற்கான சொல்லும் பிறக்கத்தக்கவாறு அதனைச் சிந்தித்து அமையச் செய்வது நல்லது. எவ்வகையானும் தமிழ் மொழியியலின் தகவு கெடாமல், புதிய சொற்களைப் புகுத்துதல் வேண்டும். அன்றேல், வளரும் தொழில்களும் உள்ளமும்

உணர்வும் இனிக்கச்செய்யும் கலைகளும் அறிவும் வளம்பெற மாட்டா.

வானொலி மாட்சியும், நெடிய காதம் பல நூறுடைய சேய்மையில் நடக்கும் செயல் பொருட்காட்சியும், அணு வால் உலகை அழிக்கும் ஆட்சியும், பொறிகளுக்கெட்டாக் கதிரொளி கதுவும் புதுமையும் அறிந்து, அவ்வறிவால் நன்மை ஆக்கவும் தின்மை நீக்கவும் முயல்வதன்றியும், கலைகள் எல்லாம் தலை சிறந்தோங்க நிரம்பிய அறிவைத் தரும் பெருநூல்களைத் தாய் மொழிகளிலே இயற்றச்செய்வதும் இன்றியமையாதது.

ஆங்கிலம், பிரெஞ்சு, செர்மனி முதலிய பிற மொழிகளில் திறம்பட எழுதிய அறிவு நூல் அனைத்தையும் மொழி பெயர்த்து தவுதல் முதற்பெருவேலை. அவ்வம்மொழியிலுள்ள நூல்களைச் செவ்வையாய்க் கற்று, வழுவறத் தத்தம் தாய மொழி பயின்று, விழுமிய நூல்கள் எழுதப் போதிய ஆற்ற லும் பெற்று, மொழிகள் இரண்டிலும் சொல்லின் திட்பமும் பொருளின் நுட்பமும் ஓர்ந்து, சீர் தூக்கி, ஒளிரும் நடை ஒட்பமுடைய அறிஞரைப் பிறமொழி நூல்களைப் பொருள் பெயராமல் மொழி பெயர்த்துதவத் தூண்டுதல் வேண்டும்.

இன்னும், நூலறிவும் மதி நுட்பமும் சாலச் சிறந்த மேதைகள் நுனித்து ஆராய்ந்து தெளிந்த அரும்பொருள்பற்றி அவர்களைக்கொண்டு புதிய நூல்களை ஆக்குதல் வேண்டும். இருவகை நூல்களும் உயர்தரப் பள்ளிகள், பெரிய கல்லூரிகள் எங்கும் கூர்த்த மதியுடையோர்க்கெல்லாம் அருந்திறனுடைய பேராசிரியரால் நித்தமும் பயிற்றப்படுதல் வேண்டும். அயராது இந்த முறை கையாளின் உயர்தரக் கல்விக்கு ஆங் கிலப் பயிற்சியை ஐயிரண்டாண்டில் அறவே விடலாம்.

தாய் மொழியிலே எத்தரக் கல்வியும் எவர்க்கும் தரலாம். நாட்டு மக்கள் புத்தறிவு எய்தாக் கேட்டினை எளிதில் போக்க வும் கூடும். கல்விக்கு அயல்நாடு செல்லும் இளைஞரின் அல்ல லும் ஒழியும். ஏழை இந்தியரின் வாழ்வு உயரும். அஞ்ஞானப் பழி அகன்று, நம்மவர் விஞ்ஞான உலகில் விழுப்புகழ் எய்து வர். உழவும் தொழிலும் வளம்பட நாளும் வாணிகம் வளரும்.

செழித்துச் செல்வமும் தழைத்து, நம் நாடு பண்டைப் பெருமையினும் பத்து மடங்கு வெற்றியும் வீறும் பெற்று உயர்ந்து ஓங்கும். வாழி நம் தமிழ்! வாழியர் இந்தியர்!

## அருஞ்சொற்பொருள் :

சுவை - அனுபவ உணர்வு, எண்ணம் - நினைவில் தோன்றும் தோற்றம், சூழ்ச்சி - ஆராய்ச்சி, பொறி - மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் உணர்கருவிகள், ஆக்கம் - செல்வம் முதலியவற்றின் பெருக்கம், நுகர்வது - அனுபவிக்கும் பொருள், தவிர்வது - விலக்கத் தக்கது, கருவி - துணை, செயலறவு - எவ்விதச் செயலும் செய்ய இயலாத நிலை, கவி மணிக் குவை - பாட்டு என்னும் இரத்தினக்குவியல், தழைய - மேலோங்க, வேணவா - பெருவிருப்பம், நிலவா மொழி - வழங்காத வார்த்தை, விழுமிய-உயர்ந்த, கல்விச் சால்பு-கல்வியின் நிறைவு, உரிச்சொல் முதனிலை - வேர்ச்சொல், புனைய-ஆக்க, வடசொல்-சம்ஸ்கிருத மொழியிலிருந்து தமிழில் வந்து வழங்கும் சொல், திசைச்சொல் - பிற நாட்டு மொழிகளிலிருந்து வந்து வழங்கும் சொல், முரண - மாறுபட, தகவு - தன்மை, கதுவும் - பற்றும், கதிர் - சூரியன், தின்மை - தீமை, திட்பம் - சொற்பொருள்களின் உறுதி, நுட்பம் - ஆழ்ந்தறியும் திறன், ஒட்பம் - அறிவு, கூர்த்த மதி - நுண்ணறிவு, அருந்திறல் - அரிய ஆற்றல், வீறு - எழுச்சி.

## வினாக்கள்

1. அறிவும் உணர்வும் செயலூக்கத்திற்கு எவ்வாறு துணை புரிகின்றன?
2. அறிவு உணர்வுகள் ஆக்கம் பெறும் வழி யாது?
3. அறிவின் பகுதிகள் யாவை?
4. தாய்மொழி வழியாகக் கல்வி பயில்வதே நேரிய முறை என்பதை ஆசிரியர் காட்டும் வகையில் எழுதுக.
5. தமிழ் வளம் பெறுதற்கு ஆசிரியர் கூறும் வழி வகை யாது?
6. உயர்தரக் கல்வி வளர்ச்சிக்குச் செய்யவேண்டுவன யாவை?
7. கலைச்சொல்லாக்கம் பற்றி ஆசிரியரின் கருத்துரை களைத் தொகுத்து எழுதுக.
8. பிற மொழிச் சொற்களை எடுத்தாளும்பொழுது எவ்வாறு எவ்வகை முறையை மேற்கொள்ள ஆசிரியர் அறிவுறுத்துகிறார்?
9. புதுச்சொல்லாக்கம் பற்றி ஆசிரியர் கூறுவது யாது?
10. தமிழில் புது நூல் ஆக்கம்குறித்து ஆசிரியர் தரும் கருத்துரைகளைத் தொகுத்து எழுதுக.

# 3. பாரதப் பண்பாடு

[டாக்டர் ரா. பி. சேதுப்பிள்ளை]

பழம் பெருமை வாய்ந்தது பாரதநாடு. வடக்கே இமயமலைமுதல் தெற்கே குமரிமுனைவரையுள்ள இப் பரந்த நாட்டிலே மொழிகள் பல உண்டு; மதங்கள் பல உண்டு; இனங்கள் பல உண்டு; ஆயினும், பாரதப் பண்பாடு ஒன்றே.

இத்தகைய பண்பாட்டின் ஒருமைப்பாட்டை உணர்த்துகின்றது தமிழிலக்கியம். பாரத நாட்டிலுள்ள வடமொழிக்கும் தென்மொழிக்கும் எந்நாளும் பிணக்கமில்லை. இரு மொழிகளும் இறைவன் அருளால் தோன்றின; ஆன்றோர் சேவையால் சிறந்தன: இம்மை இன்பமும் மறுமையின்பமும் தருவன. ஆதலால், 'இருமொழியும் நிகர் என்னும் இதற்கு ஐயமுளதேயோ?' என்று பாடினார், வடநூற்கடலையும் தென்னூற் கடலையும் நிலை கண்டு உணர்ந்த சிவஞான முனிவர்.

வடநாட்டிலும் தென்னாட்டிலும் 'மதுரை' என்னும் பெயருடைய திருநகரம் உண்டு. வடமதுரையில் அவதரித்தார் கண்ணபிரான்; தென்மதுரையில் புகழ் பெற்றார் திருவள்ளுவர். கண்ணன் அருளிய கீதையும் வள்ளுவர் இயற்றிய குறளும் உலகம் போற்றும் உயரிய ஞான நூல்கள். 'இவ்விரண்டையும் அச்சாக உடையது பாரத ஞானரதம்,' என்னும் கருத்தை அமைத்துப் பாடினார் ஒரு பழங்கவிஞர்.

> 'உப்பக்கம் நோக்கி உபகேசி தோள்மணந்தான்
> உத்தர மாமதுரைக் (கு) அச்சென்ப—இப்பக்கம்
> மாதாநு பங்கி மறுவில் புலச்செந்நாப்
> போதார் புனற்கூடற்(கு) அச்சு.'

என்பது நல்கூர்வேள்வியார் பகர்ந்த நல்லுரை.

முன்னாளில் பாடலிபுத்திரம் என்னும் பெயருடைய இரு நகரங்கள் பாரத நாட்டில் சிறந்து விளங்கின. அவற்றுள் ஒன்று வடக்கே கங்கைக் கரையில் இருந்தது, மற்றொன்று தெற்கே கெடில நதிக்கரையில் இருந்தது. அசோக மன்னன்

காலத்திலே சிறந்து விளங்கிற்று, வட நாட்டுப் பாடலிபுத்திரம். பல்லவ மன்னர் காலத்தில் புகழ் பெற்றுத் திகழ்ந்தது தென்னாட்டுப் பாடலிபுத்திரம். இப் பாடலி நகரங்கள் இரண்டும் கலைக்களஞ்சியங்களாகக் காட்சியளித்தன.

தமிழ்நாட்டுப் பாடலிபுத்திர நகரில் அமைந்த சமணக் கல்லூரியின் பெருமையைக் கேள்வியுற்றார் திருநாவுக்கரசர். கலைஞானக் கோயிலாய் விளங்கிய அக்கல்லூரியை நாடிற்று அவருள்ளம். அப்போது அவருக்குத் தந்தையுமில்லை; தாயுமில்லை; தமக்கையார் ஒருவரே இருந்தார். அவரிடம் விடைபெற்றுப் பாடலிக் கல்லூரியில் சேர்ந்தார் திருநாவுக்கரசர். அவருடைய கலையார்வமும் மதிநுட்பமும் சமணப் பேராசிரியர்களின் உள்ளத்தைக் கவர்ந்தன. கலை பயின்ற மாணவரின் இளமையுள்ளம் சமண சமயத்தில் கவிழ்ந்தது. அது கண்டு மகிழ்ந்த சமண முனிவர்கள் அவரைச் சமண மதத்திலே சேர்த்தார்கள்; 'தரும சேனர்' என்ற பெயரையும் சூட்டினார்கள் என்று அவர் வரலாறு கூறுகின்றது.

இவ்வாறு, சமணசமயத்தில் சிறப்புற்றிருந்த அறிஞர் அவருடைய தமக்கையார் அருளால் மீண்டும் சிவ நெறியை மேற்கொண்டு செந்தமிழ்ப் பாட்டிசைத்துச் செம்மையான தொண்டு புரிந்த செய்தியைத் திருத்தொண்டர் புராணத்தில் காணலாம்.

இத்தகைய சீர்மை வாய்ந்த பாடலி நகரங்கள் இக்காலத்தில் வேறு பெயர் பெற்றுள்ளன. வடநாட்டுப் பாடலி புத்திரம் 'பாட்னா' என்றும், தென்னாட்டுப் பாடலிபுத்திரம் 'திருபபாதிரிப்புலியூர்' என்றும் இப்போது வழங்குகின்றன. 'பாடலி' என்ற வடசொல்லுக்கும் 'பாதிரி' என்ற தென் சொல்லுக்கும் பொருள் ஒன்றே. திருப்பாதிரிப்புலியூரில் கோயில் கொண்டுள்ள ஈசன் 'பாடலீசுரர்' என்றே இன்றும் அழைக்கப்பெறுகின்றார்.

பாரத நாட்டுப் புண்ணியத் தலங்களுள் 'காசி' என்னும் வாரணாசியும், இராமேச்சுரமும் தலைசிறந்தன என்பது தக்கோர் கொள்கை. இந்திய நாட்டுத் தென் கோடியில் உள்ள இராமேச்சுரத்தை நாடி வருவார் வடநாட்டார். காசியிலுள்ள விசுவநாதரை வழிபடச் செல்வர் தென்னாட்டார். வடகாசியின்

வாசி அறிந்த தமிழ் மக்கள் தம் நாட்டிலும் ஒரு காசியை உண்டாக்கினர். 'தென்காசி' என்பது அதன் பெயர். பராக்கிரம பாண்டியன் என்ற அரசன், 'தென்காசி கண்ட பெருமாள்,' என்று சாசனங்களிலே பேசப்படுவதால் அவனே தென்காசியை உருவாக்கி அங்கு விசுவநாதருக்கு ஒரு திருக்கோயிலும் கட்டினான் என்று கொள்ளலாம்.

'ஓங்கு நிலைஒன்ப துற்றதிருக் கோபுரமும்
பாங்குபதி னொன்று பயிறாணும்—தேங்குபுகழ்
மன்னர் பெருமான் வழுதிகண்ட தென்காசி
தன்னிலன்றி உண்டோ தலத்து?'

என்று பராக்கிரம பாண்டியன் செய்த திருப்பணியின் செம்மையைப் பாராட்டுகின்றது ஒரு சாசனப் பாட்டு.

நதிகள் ஒன்றுகூடும் துறைகளைப் புனிதமான இடங்களாகக் கருதிப் போற்றுதல் பாரத நாட்டுப் பண்பு. கங்கையும் யமுனை யும் சரஸ்வதியும் கூடும் இடம் 'திரிவேணி சங்கமம்' என்று வடநாட்டில் அழைக்கப்படுகின்றது. தமிழ் நாட்டில் புண்ணிய நதிகள் கூடுமிடங்கள் பல உள்ளன. அத்தகைய இடங்களை 'முக்கூடல்' என்று வழங்குவர் தமிழ் மக்கள். தென்பாண்டி நாட்டில் பொருநையாறும் சிற்றாறும் கயத்தாறும் ஒன்று சேர்கின்ற இடம் முக்கூடல் என்னும் பெயர் கொண்டு முற் காலத்தில் சிறந்திருந்தது. இந்நாளில் அந்த இடம் சீவலப் பேரி என்று வழங்குகின்றது. காஞ்சி மாநகரத்திற்கு அருகே பாலாறும் சேயாறும் கம்பையாறும் சேர்கின்ற இடம் திரு முக்கூடல் என்னும் பெயர் பெற்றுள்ளது. திரிவேணி சங்கமம் என்றாலும் முக்கூடல் என்றாலும் பொருள் ஒன்றே.

ஐந்து ஆறுகள் பாயும் வள நாட்டிற்குப் 'பஞ்சாப்' என்று பெயரிட்டனர் வடநாட்டார். தென்னாட்டில் அத்தகைய நாடு 'ஐயாறு' என்று அழைக்கப்பெற்றது. திருவையாறு என்பது இப்போது ஓர் ஊரின் பெயராக அமைந்துள்ளது. பஞ்சநதம் என்பதும் அதுவே.

எல்லாம் வல்ல இறைவனை வைத்தியநாதன் என்னும் பெயரால் வழிபடும் வழக்கம் வடநாட்டிலும் உண்டு; தென்னாட்டிலும் உண்டு. சிதம்பரத்திற்கு அருகே வைத்தீஸ்வரன்கோயில் என்னும் சிவஸ்தலம் இருக்கின்றது.

அங்குள்ள ஈசன், 'மந்திரமும் தந்திரமும் மருந்துமாகித் தீரா நோய் தீர்த்தருள வல்லான்,' என்று பாடினர் திருநாவுக்கரசர்.

இங்ஙனம் பல்லாற்றானும் ஒருமையுற்று விளங்கும் பாரதப் பண்பாட்டை ஒல்லும் வகையால் பேணி வளர்த்தல் நல்லறிஞர் கடனாகும்.

**அருஞ்சொற்பொருள் :**

வடமொழி-சமஸ்கிருதம், தென்மொழி-தமிழ், சிவநெறி-சைவ மதம், உப்பக்கம்-அப்பக்கத்தை (வடதிசையை), உபகேசி-நப்பின்னை, தோள் மணந்தான்-தோளை மணந்த கண்ணபிரான், இப்பக்கம் - தென்திசை, மாதாநுபங்கி - திருவள்ளுவர், மறுவில்-குற்றமற்ற, புனற்கூடற்கு அச்சு - நீர்வளத்தையுடைய தென் மதுரைக்கு ஆதாரமாவார். வாசி - தகுதி, சாசனங்கள் - கல் வெட்டுகள்.

**வினாக்கள் :**

1. வடநாட்டிலும் தென்னாட்டிலும் உள்ள மதுரை நகரங்களின் சிறப்பை விளக்குக.
2. பாடலிபுத்திரம் என்னும் பெயர் கொண்ட இரு பழைய நகரங்களின் வரலாற்றை எழுதுக.
3. காசியின் வாசியை அறிந்த தமிழ் மக்கள் செய்தது யாது?
4. ஆறுகள் கூடுமிடங்கள் வடக்கிலும் தெற்கிலும் எவ்வாறு சிறப்பிக்கப்படுகின்றன?
5. இறைவனை வைத்தியநாதனாக வழிபடும் வழக்கத்தை விளக்குக.

## 4. தமிழ்நாட்டுப் பெண்பாலார்

[மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையர்]

ஒரு நாட்டின் சிறந்த நாகரிக நிலையின் உயர்வை அந்நாட்டு மக்களுடைய அறிவு, ஆற்றல், செல்வ நிலை என்பவற்றால் உணரலாகும். இந்த மூன்றுக்கும் உரிய தெய்வங்களாக நாம் முறையே கலைமகள், பராசக்தி, திருமகள் என்பவர்களை வழி படுகின்றோம்.

மக்களில் ஆடவர் எங்ஙனம் நாட்டினது பெருமைக்குக் காரணராக இருக்கின்றார்களோ அங்ஙனமே பெண்டிரும் காரணராகின்றனர். ஒரு நாட்டின் சிறப்புக்குக் காரணமாகிய

முன் கூறிய மூன்றுக்கும் அதிதேவதைகளாக மூன்று பெண் தெய்வங்களை வைத்தமையே இந்தக் கருத்துக்குத் தக்க ஆதார மாகும். அறிவுச் சிறப்பு, ஆற்றலுயர்வு, செல்வ நிலை ஆகிய இவற்றில் பெண்டிரது தொடர்பு எங்ஙனம் இருந்ததென்பதை ஆராய்ந்தால் அவர்களுடைய பெருமை புலப்படும்.

**சங்க காலத்துப் பெண்புலவர்கள்**

அறிவு, ஆடவர் மகளிர் ஆகிய இருவருக்குமே பொது வாகும். இப்பொழுது நமக்குக் கிடைப்பனவும், 1800 வருஷங் களுக்கு முன் இயற்றப்பட்டனவுமாகிய புறநானூறு முதலிய நூல்களால் கடைச்சங்க காலத்தில் பல பெண்கள் நற்புலமை வாய்ந்தவர்களாக இருந்தனர் என்பது தெரியவருகின்றது. ஏறக்குறைய ஐம்பது பெண்பாலரர் இயற்றிய செய்யுட்கள் இப்பொழுது கிடைக்கின்றன. மற்றப் புலவர்களுடைய வாக்குக்கு எவ்வளவு சிறப்பு உண்டோ அவ்வளவு சிறப்பு அவர்களுடைய செய்யுட்களுக்கும் உண்டு.

**முடி பெற்றவர்**

பொன்முடியார் என்ற ஒருவர் வீரனுடைய கடமையைச் சிறப்பித்து ஒரு செய்யுள் கூறியுள்ளார். புலவர்களுக்கு முடி யணிதல் பண்டை வழக்கம். முரஞ்சியூர் முடிநாகராயரென்பவர் முடிபெற்றவரே. பிற்காலத்தில் சேக்கிழாரும், பாரதம் பாடிய வில்லிபுத்தூராழ்வாரும் புலமைக்குரிய முடியைப் பெற்றவர் கள். ஆசிரியருக்குரிய முடியைத் துரோணாசாரியர் பெற்றிருந் தார். பொன்முடியாரும் அவர்களைப் போலவே முடிபெற்றன ரென்பதை அப்புலவருடைய பெயரே தெரிவிக்கும்.

அரசன் முடி புனைகையில் அவன் பெருந்தேவியும் முடி புனைவது வழக்கம். இது பெருங்கதையினாலும் சிலாசாஸனங்க ளாலும் தெரியவரும். புலமையும் தலைமையும் பற்றி ஆடவர் முடிபுனைதலைப்போலவே பெண்டிரும் புனையும் வழக்கம் இவற் றால் வெளியாகின்றது.

**இளமையிற் புலமை பெற்றோர்**

அக்காலத்துப் பெண்புலவர்களிற் சிலர், 'பசலையார்' என முடியும் பெயருடையவர். காமக்கணிப் பசலையார், போந்தைப் பசலையார், மாறோக்கத்து நப்பசலையார் என்பன அத்தகைய

பெயர்கள். பசலையென்பது இளமைக்கு ஒரு பெயர். ஆதலின் இவர்கள் இளமையிலேயே பெரும்புலமை வாய்ந்தவர்களாக இருந்தனரென்று கருதவும் இடமுண்டு.

பாரியின் மகளிர் இருவர் பாடிய செய்யுள் ஒன்று புறநானூற்றில் உள்ளது. தம் தந்தை இறந்ததை நினைந்து பாடியது அது. அவர்கள் தமக்கு வந்த துன்பத்தை அறியாது அருகே சென்ற உப்பு வண்டிகளை எண்ணிக்கொண்டிருந்தனரென்று கபிலர் பாடுகிறார். இதனால் அவர் இளமைப் பருவத்தினரென்று தெரிகின்றது. அப்பருவத்தில் அவர்கள் செய்யுள் இயற்றும் புலமையுடையவராக இருந்தனர்.

**அரச குடும்பத்தினர்**

கரிகாற்சோழனுடைய பெண்ணாகிய ஆதிமந்தியாரென்பவர் சில செய்யுட்கள் பாடியிருக்கிறார். பூதப்பாண்டியனென்னும் அரசனுடைய தேவியாராகிய பெருங்கோப்பெண்டு என்பவர், தம் கணவன் இறந்த காலத்தில் தீப் பாயும்போது பாடிய செய்யுள் ஒன்று புறநானூற்றில் இருக்கிறது. அப்பாடல் அவருடைய புலமையையும் கற்பின் திண்மையையும் வெளிப்படுத்துகின்றது. இவற்றால் அரச குடும்பத்திலிருந்த பெண்களும் தமிழ்ப்புலமை வாய்ந்திருந்தனரென்பதை அறியலாகும்.

**இலக்கணம் இயற்றிய பெண்பாலார்**

இலக்கிய நூல்களைக்காட்டிலும் இலக்கண நூல்களைப் படித்தறிதல் சிரமமானது. இலக்கணநூல் இயற்றுவதற்கோ பரந்த நூலறிவு வேண்டும். இலக்கணம் இயற்றிய புலவர்கள், புலவர்களாற் போற்றப்படும் சிறப்புடையராவர். காக்கை பாடினியார், சிறு காக்கை பாடினியார் என்ற பெண்புலவர் இருவர் செய்யுளைப்பற்றிய இலக்கண நூல்கள் இயற்றியிருக்கின்றனர். யாப்பருங்கல விருத்தியுரை, யாப்பருங்கலக் காரிகையுரை என்னும் நூல்களில் அவ்விருவர் நூல்களிலிருந்தும் பல சூத்திரங்கள் மேற்கோளாகக் காட்டப்படுகின்றன; அந்நூல்கள் முழுவதும் அகப்படவில்லை.

**ஔவையார்**

ஔவையாரைப்பற்றிய பல செய்திகள் நமக்குக் கிடைக்கின்றன. அவருடைய பெருமை அளவற்றது. அவருடைய பெயரை வைத்துக்கொண்டு பெருமை பெற்றோர் பிற்காலத்திலும் இருந்தனர். சங்ககாலத்து ஔவையார், கபிலர், பரணர்

என்பவர்களைப்போன்ற பெருமை வாய்ந்தவர். அவருடைய மனோதைரியம் ஆச்சரியப்படத்தக்கது. அவரை ஆதரித்த அதியமானென்னும் அரசன், ஒருமுறை அவரைத் தொண்டைமானிடம் தூதாக அனுப்பினான். அவர் தொண்டைமானிடம் போன காலத்தில் அவன் தன்னுடைய பெருமையைப் புலப்படுத்தவேண்டுமென்று தன் அரண்மனையைக் காட்டினான்; தன்னுடைய ஆயுதசாலையையும் காட்டி, 'எப்படி இருக்கிறது?' என்று கேட்டான். அவன் போர் செய்தறியானென்பதும் படைக்கலப் பயிற்சிக்கும் அவனுக்கும் நெடுந்தூரம் என்பதும் ஔவையார் தெரிந்துகொண்டார். அவர் சொல்ல ஆரம்பித்தார்: 'என்ன அழகு! இவை எவ்வளவு ஒழுங்காகத் துடைத்து எண்ணெய் பூசி மாலையணிந்து நன்றாக வைக்கப்பட்டிருக்கின்றன! எங்கள் அதியமான் வேல் எவ்வளவோ குறையுடையதாக இருக்கிறது. அவன் ஆயுதங்கள் பகைவரைக் குத்தி நுனி ஒடிந்து இரத்தக்கறையுடன் கொல்லன் பட்டடையிற் கிடக்கின்றன'' என்றார். அவ்வரசனை இவ்வளவு துணிவாகப் பரிகாசம் செய்வதற்கு எவ்வளவு தைரியம் இருக்கவேண்டும்!

ஒரு சமயம் நாஞ்சில் வள்ளுவனென்ற ஓர் உபகாரியை ஔவையார் பார்க்கப் போயிருந்தார். அவன் தன்னிடம் வரும் புலவர்களுக்கு யானையைப் பரிசாகத் தரும் இயல்புடையவன். அதைக்கண்ட ஔவையார் நகைச்சுவை உண்டாக ஒரு செய்யுள் கூறினார். அது யானைப் பரிசு பெற்ற பாணன் ஒருவன் கூறியதாக அமைந்தது: ''இந்த நாஞ்சில் வள்ளுவன் ஒன்றும் அறியாதவன். 'எங்கள் வீட்டில் அரிசியில்லை. கொல்லையிற் கொய்த கீரையைச் சுண்டி அதற்குமேல் தூவும் மாவுக்காகச் சிறிது அரிசி வேண்டும்,' என்று கேட்டேன். அவன் ஒரு மலையைப் போன்ற யானையைக் கொடுத்தான். இப்படிப் பைத்தியக்காரத்தனமான கொடைகூட உலகத்தில் உண்டா! அவன் தன் பெருமைக்குத் தக்கபடி தந்தான்'' என்பது அதன் பொருள்.

**காக்கைபாடினியார் நச்செள்ளையார்**

காக்கைபாடினியார் நச்செள்ளையாரென்பது ஒருவர் பெயர். அன்பர் வருவதைக் குறிப்பித்து நன்னிமித்தமாகக் காக்கை கரைந்ததைப் பாராட்டி இவர் ஒரு செய்யுள் இயற்றியிருக்கிறார். அதனால், காக்கைபாடினியார் என்ற சிறப்பைப் பெற்றார். இவர் ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் என்னும் சேர

அரசனைப் பத்துச் செய்யுட்களாற் பாடி ஆபரணத்துக்குப் பொன்னும் வேறு பொருள்களும் பரிசாகப் பெற்றார். பதிற்றுப் பத்தென்ற சங்க நூலில் அந்தப் பத்துச் செய்யுட்களும் உள்ளன.

**பல சாதியினர்**

குறமகள் குறியெயினி, குறமகள் இளவெயினி என்னும் இரண்டு குறப்பெண்டிரும், வெண்ணிக்குயத்தியார் என்னும் குயவர் குலத்துதித்தவரும் பாடிய செய்யுட்கள் சில உள்ளன. இவர்கள் வரலாற்றால் அக்காலத்தில் எல்லாச் சாதி மகளிரும் நற்புலமை வாய்ந்தவர்களாக இருந்தனரென்று தெரிகின்றது. இவர்களுள் வெண்ணிக்குயத்தியா ரென்பவர் கோவில்வெண்ணி யென வழங்கும் ஊரினர். அது தஞ்சாவூர் ஜில்லாவில் உள்ளது; பாடல் பெற்ற சிவஸ்தலம். மிகப் பெரிய அரசனாகிய கரிகாற் சோழன் வெண்ணிப்போர்க்களத்தில் போர் செய்ததை இப் புலவர் பாராட்டிப் பாடிப் பரிசு பெற்றார்.

**பிற்காலத்துப் பெண்புலவர்**

சங்ககாலத்துக்குப் பிறகு தமிழ் நாட்டில் விளங்கிய பெண் புலவர்கள் பலர். அவர்களுள் பல அருமையான நீதிநூல்களை இயற்றியவராகிய ஔவையார் என்பவருடைய பாட்டுகள் இக் காலத்தில் இளம்பிள்ளைகளுக்கும் மகிழ்ச்சியை உண்டாக்கு கின்றன. மிகச் சுருக்கமாகவும் அகராதி வரிசையாகவும் இயற் றப்பட்ட ஆத்திசூடி, கொன்றைவேந்தன் என்பனவும் வேறு நூல்களும் மிக்க சிறப்புடையன.

ஆண்டாளுடைய பாசுரங்கள் திவ்யப்பிரபந்தத்தில் ஒரு பகுதியாக விளங்குகின்றன. ஸ்ரீரங்கநாதனுக்குப் பூமாலையைச் சூடிக்கொடுத்த நாய்ச்சியாராகிய இவர் பாமாலையையும் பாடிக் கொடுத்தார். ஆனால், இவர் சூடிக்கொடுத்த பூமாலை அக்காலத் தில் ஸ்ரீரங்கநாதனுக்கே பயன்பட்டது. இவர் பாடிக் கொடுத்த பாமாலையோ எவ்வளவோ வருஷங்கள் கடந்தும் வாடாமல் யாவருக்கும் பயன்படுகின்றது.

காரைக்காலம்மையாருடைய பாசுரங்கள் சைவத் திரு முறைகளில் ஒன்றாகிய பதினோராந்திருமுறையிற் சேர்க்கப் பட்டிருக்கின்றன. அத்திருமுறையில், ஸ்ரீ சோமசுந்தரக் கடவுள்

பாடியருளிய ஒரு செய்யுளை அடுத்து இவருடைய செய்யுட்களுக்குச் சைவர்கள் எவ்வளவு சிறப்பளித்தனரென்று தெரிய வருகின்றது. திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரே இவ்வம்மையாரைப் பாராட்டியிருக்கின்றார்.

கரிவலம்வந்த நல்லூரில் இருந்த வரகுணபாண்டியரென்ற ஓரரசருடைய மனைவியார் பெரிய வித்வாஷியாகவும் சிவபெருமானிடத்தில் உறுதியான அன்புடையவராகவும் இருந்தார். அவர் சிவபெருமான்மீது பாடிய செய்யுள் ஒன்று வருமாறு:

ஆக்கையெனும் புழுக்குரம்பை யணைந்தணையாப் பொருளை
அருளொளியைப் பராபரத்துக் கப்புறமா மறிவை
நீக்கமற மயிர்முனைக்கு மிடமறவெங் கெங்கும்
நிறைந்துநின்ற முழுமுதலை நினைவிலெழுஞ் சுடரைப்
பாக்கியங்கள் செய்தநந்தந் தவக்குறைகள் முடிக்கும்
பழவடியார் தமக்குதவும் பசுந்துணர்க்கற் பகத்தை
வாக்குமன விகற்பத்தா லளவுபடா வொன்றை
மாசற்ற வெறுவெளியை மனவெளியி லடைப்பாம்.'

சில பழைய வரலாறுகளில் சோழனும் அவன் மனைவியும் சேர்ந்து பாடிய சில செய்யுட்கள் சொல்லப்படுகின்றன. தமிழ்ப் புலமையில் இருவரும் சமானராக இருந்ததை இவ்வரலாறுகள் உணர்த்துகின்றன.

ஊற்றுமலை ஜமீன்தாரொருவருடைய மனைவியாராகிய பூஜைத்தாயார் என்பவர் தம் கணவர் பகையரசர்களாற் கொல்லப்பட்ட பிறகு தம் ஜமீனை யிழந்து தென்காசியில் தம்முடைய இரண்டு குமாரர்களுக்கும் கல்விப்பயிற்சி செய்வித்து வசித்துவந்தார். ஒருநாள் அவ்விருவருள் இளையவரை மூத்தவர் அடித்தபோது அடிபட்டவர் தம் தாயாரிடம் வந்து அழுதார். அப்பொழுது அவரை நோக்கி மனம் வருந்திப் பூஜைத்தாயார்,

'தேரோடு நின்று தெருவோ டலைகிற செய்திதனை
ஆரோடு சொல்லி முறையிடு வோமிந்த வம்புவியில்
சீரோடு நாமு நடந்துகொண் டாலிந்தத் தீவினைதான்
வாரா தடாதம்பி சிவல ராய மருதப்பனே'

என்னும் செய்யுளைக் கூறினார்.

காஞ்சிபுரத்தில் அம்மைச்சி யென்ற ஒருத்தி இருந்தாள். அவள் தமிழ்ப்புலமை யுடையவள். அவள் வீடு வரதராஜப் பெருமாள் திருத்தேரோடும் வீதியில் இருந்தது. ஒருமுறை அந்தத்தேர் போகும்பொருட்டு அவள் வீட்டைச் சிலர் இடித்து விட்டார்கள். அப்பொழுது அவள் வருந்தி இரண்டு செய்யுட்கள் பாடினாள். அவற்றுள், 'பெருமாளே! பாம்பையுங் குரங்கையும் உமக்கு ஊழியக்காரராகக் கூட்டிவந்தீரே! என்னுடைய வீட்டை இலங்கைக் கோட்டையென்று நினைத்தீரோ?' என்னும் கருத்து டையது ஒன்று. அது வருமாறு :

'பாப்புக் குரங்கைப் படையாகக் கூட்டிவந்தீர்;
தேப்பெருமா ளே!கச்சிச் செல்வரே;—கோப்பமைந்த
கொம்மைச் சிகரிலங்கைக் கோட்டையென்று கொண்டீரோ
அம்மைச்சி வாழு மகம்?'

இதில், தன் வீட்டை இடித்தவர்களைப் பாம்பென்றும் குரங் கென்றும் சமத்காரமாகத் தூஷித்திருப்பது அவளுடைய புலமையின் பயனென்று தெரிகின்றதன்றோ?

கந்தியாரென்ற ஜைன சந்யாசினி ஒருவர் சீவகசிந்தாமணி முதலிய நூல்களிடையே சில பாடல்களைப் பாடிச் சேர்த்திருக் கின்றார். அவர் செய்தது குற்றமாயினும் அச்செயல் அவரு டைய புலமையை அறிவிக்கின்றது, அங்ஙனம் உள்ள செய்யுட் களின்கீழ் ஏட்டுப்பிரதிகளில். 'இவை கந்தியார் பாடல்' என்ற குறிப்பு எழுதப்பட்டிருக்கும்; நச்சினார்க்கினியரும் தம் உரையிற் குறித்திருக்கின்றார்.

கம்பருடைய தாதி ஒருத்தியும், உத்தரநல்லூர் நங்கை, தமிழறியும்பெருமாள் முதலியவர்களும் தமிழ்ப் புலமையுடை யவர்களாகக் காணப்படுகின்றனர்.

**வாதம் புரிந்தோர்**

பெண்களில் அறிவுடையார் பிறரோடு வாதப்போர் நடத்தி யதாகத் தமிழ் நாட்டிற் சில வரலாறுகள் வழங்குகின்றன. குண்டலகேசி யென்னும் ஒரு பெண் பௌத்தமதக் கொள்கை களை நிலைநிறுத்தினாளென்றும், அதன்பொருட்டு அவள் பல இடங்களிற் சென்று அங்கங்கே உள்ள மதநூல்களில் அறி வுடைய வித்துவான்களை வாதுக்கழைத்துச் சொற்போர்

புரிந்தனவென்றும் தெரிகின்றது. அவளுடைய வரலாற்றைக் கூறும் நூலாகிய குண்டலகேசி என்பது தமிழ்க் காப்பியங்களில் ஒன்றாகச் சொல்லப்படுகிறது.

**காப்பியங்களிலுள்ள பெண்கள்**

நீலகேசி என்ற ஜைன நூலில் வரும் நீலகேசியும், சீவக சிந்தாமணியில் வரும் விசயை முதலிய பெண்பாலாரும், பெருங் கதையில் வரும் வாசவதத்தை, மானனீகை முதலியவர்களும் மிகச்சிறந்த கல்வியுடையவர்களாக இருந்தனர் என்று அந் நூலாசிரியர்கள் புலப்படுத்தியிருக்கிறார்கள். இவற்றால் பெண்டிரும் ஆடவரைப் போன்று கல்வியில் உயர்நிலையை அடைய வேண்டுமென்ற கொள்கை அக்காலத்திலும் பரவியிருந்தமை பெறப்படும். கல்வியிற் பெரிய கம்பரும், கோசல நாட்டை வருணிக்கையில்,

'பெருந்த டங்கட் பிறைநுத லார்க்கெலாம்
பொருந்து செல்வமுங் கல்வியும் பூத்தலால்
வருந்தி வந்தவர்க் கீதலும் வைகலும்
விருந்து மன்றி விளைவன யாவையே'

என்று அமைக்கின்றார். அழகு, கல்வி, செல்வம் என்னும் மூன்றையும் பெண்கள் உடையவர்களாக இருத்தல் ஒரு நாட்டின் சிறப்புக்கு ஆதாரம் என்ற அப்புலவர் கொள்கை இச்செய்யுளால் வெளியாகின்றது.

**சங்கீதப் பயிற்சி**

பெண்கள் சங்கீதப் பயிற்சி உடையவர்களாக இருந்தனரென்பது யாவரும் அறிந்த விஷயம். பழங்காவியங்களிலும் சங்க நூல்களிலும் உள்ள செய்யுட்களைப் பார்த்தால் அக்காலத்தில் பெண்மணிகளுக்கு இருந்த சங்கீதப்பயிற்சியின் மிகுதி புலப்படும். மலையைச் சார்ந்த இடங்களில் வாழ்ந்த குறப்பெண்கள் தினை காவல் செய்யும்போது பாடுவதும், அந்தப் பாட்டினாற் கிளிகள் மயங்கி விழுவதும், சுனைகளில் நீராடிவிட்டு மயிரை உலர்த்திக்கொண்டே குறிஞ்சிப்பண்ணைப் பாடுவதும், அந்தப் பாட்டைக் கேட்டு மயங்கிய யானை தினைப்பயிரை மேய்வதை மறந்து நிற்பதும், வீரப்பெண்கள் தம் கணவர் போர்க்களத்திற் புண்பட்டபோது அப் புண்ணினால் உண்டாகும் வருத்தம் தோன்றாமல் இருக்கும்படி இன்னிசை பாடுவதும், விறலியரென்ற

வகையினராகிய மகளிர் பாடிப் பெரிய அரசர்களிடத்திற் பரிசு பெறுவதும், கோயில்களில் மகளிர் பாடி வணங்குவதும், யாழ் வாசிப்பதும், காலத்திற்கேற்ற பண்ணுல் அன்பர்களுக்குத் தம் உள்ளக் கருத்தைக் குறிப்பிப்பதும், சங்கீதத்தில் வாதிட்டு வெல்வதுமாகிய செய்திகள் பலவற்றை அவைகளிற் காணலாம்.

மதுரையில் பாணபத்திரர் என்பவருடைய மனைவி இலங்கையிலிருந்து வந்த இசைப்பயிற்சியுடைய பெண் ஒருத்தியோடு பாடி வென்றதாக ஒரு வரலாறு உண்டு. இப்பொழுது வழங்கும் தேவாரங்களுக்குப் பண் அமைத்துக் கொடுத்தவர் இராஜேந்திரப்பட்டணத்திலிருந்த ஒரு பெண்மணியே. சங்கீதத்துக்கு அதிதேவதையை மாதங்கி என்னும் பெண் தெய்வமாகவே வணங்கி வருகின்றோம்.

சங்கீதப் பயிற்சியோடு சாகித்திய சக்தியும் சில பெண்பாலாரிடம் இருந்தது. இராகபாவங்களையும் சிறந்த அர்த்தத்தையும் உள்ளடக்கிய பல கீர்த்தனங்களை மாயூரத்தம்மாள் என்ற ஒருவர் பாடியிருக்கிறார். கனம் கிருஷ்ணையர் முதலிய சிறந்த சங்கீத வித்துவான்கள் அக்கீர்த்தனங்களைப் பாராட்டிப் பேசுவார்களாம். அவரைப்போன்ற பல பெண்களுடைய கீர்த்தனங்கள் தமிழ்நாட்டில் வழங்கிவருகின்றன.

**கலைகளிற் பயிற்சி**

முத்தமிழ்களில் ஒன்றாகிய நாடகம் பெண்களையே பிரதானமாகக் கொண்டு நடைபெற்று வந்தது. மாதவியென்ற நாடகக் கணிகையின் ஆடலுககு அங்கமாகப் பலர் இருந்து பாடியும் வாத்தியம் வாசித்தும் சிறப்பித்த வரலாறு சிலப்பதிகாரத்திற் காணப்படுகிறது. திருக்கோயில்களில் தொண்டு புரியும் பெண்கள் நாட்டியக்கலையை வளர்த்துவந்தனர். சில தலங்களில் தனியே நாடகங்கள் இயற்றப்பட்டு அவர்களால் நடிக்கப்பெற்று வந்தன தஞ்சாவூர்ப் பிருகதீசுவரர் ஆலயத்தில் பழைய காலத்தில் இராஜராஜ நாடகமென்பதும், பிற்காலத்தில் சரபேந்திர பூபால குறவஞ்சி நாடகமென்பதும் நடந்துவந்தன. இப்பொழுதும் குறவஞ்சி நாடகம் அங்கே நடைபெறுகின்றது. இப்படியே வேறு தலங்களுக்கும் குறவஞ்சிகள் உண்டு.

தமிழ்ப்பிரபந்தங்களில் ஒருவகையான உலாவென்பது நாடகக்கணிகையரைப் பற்றியதேயாகும். இவர்கள் தளிப் பெண்டுகளெனவும் வழங்கப்படுவர். பழைய காலத்தில் ஒவ்வொரு கோயிலிலும் உலா, கட்டியம், எச்சரிக்கை, ஊஞ்சல், லாலி, அம்மானை முதலியன சொல்லி வழிபடுவது இவர்கள் வழக்கம். இவர்கள் அறுபத்து நான்கு கலைகளிலும் வல்லவர்களாக இருந்தனரென்று மணிமேகலை முதலிய நூல்கள் உணர்த்துகின்றன.

நம்முடைய நாட்டில் வைத்தியம், சோதிடம், சித்திரம், சிற்பம் முதலிய கலைகளிலும் பெண்டிர் தேர்ந்த அறிவுடையவர்களாக இருந்தனர். இப்பொழுதும் பல குடும்பங்களிலுள்ள முதிய பெண்டிர் கடினமான வியாதிகளுக்குச் சில சுலபமான பச்சிலை மருந்தைக் கொடுத்துப் போக்கிவிடுகிறார்கள். நாள், நட்சத்திரம், திதி முதலியன அவர்களுக்கு நன்றாகத் தெரியும். சிலருக்கு மந்திர ஜபமும், அதனால் பல நோய்களை நீக்கும் ஆற்றலும் இருக்கின்றன. சித்திரக்கலையில் அவர்களுக்குள்ள அறிவை அவர்கள் எழுதும் கோலங்கள் புலப்படுத்தும். பாசியாலும், நூலாலும், மலர்களாலும் அக்காலத்துப் பெண்டிர் பல வகைச் சித்திரங்களை அமைத்தனர்; ஓலை முதலியவைகளால் பலவகையான பெட்டிகள் முடைந்தனர். இப்பொழுதும் தனவணிகர் நாட்டில் இவ்வழக்கம் இருந்துவருகிறது. மிகப் பொறுமையாக மாதக்கணக்கில் இடைவிடாது முயன்று மெல்லச் செய்யும் சித்திரவேலைகளுக்குப் பெண்களே தகுதியுடையவர்கள்.

**அருஞ்சொற்பொருள் :**

வாக்கு-சொல், முடி-கிரீடம், தீப்பாய்தல்-உடன்கட்டையேறுதல், புலப்படுத்த-காட்ட, பட்டடை-பட்டறை, கொல்லன் உலைக்களம்; சுண்டி - சமைத்து, நன்னிமித்தம் - நல்ல சகுனம், பாசுரங்கள்-பாடல்கள், திவ்யப்ரபந்தம்-வைணவப் பாடல்களின் தொகை நூல், திருமுறை - சைவப்பாடல்களின் தொகை நூல், விதூஷி-கல்வியறிவு மிக்கவர், சமானர்-சமமானவர், சமத்காரம்-சொல் திறமை, வாதப்போர் - சொற்போர், சாகித்திய சக்தி-இசைப்பாடல் இயற்றும் சக்தி, கீர்த்தனங்கள்-இசைப்பாடல்கள், தனவணிகர் நாடு-நாட்டுக்கோட்டையார் வாழும் செட்டிநாடு.

**வினாக்கள் :**

1. பண்டைக் காலத்திலிருந்த முடி அணியும் வழக்கத்தை விளக்குக.
2. இளமையில் புலமை பெற்றிருந்த பெண்டிர் யாவர்?
3. மன்னர் குடும்பத்துப் பெண்டிரும் புலமை படைத்திருந்ததை எடுத்துக்காட்டுக.
4. மகளிர் இலக்கண நூல் இயற்றியதுபற்றி நாம் அறிவது என்ன?
5. ஔவையாரின் பெருமையினைப் பத்து வாக்கியங்களில் விளக்குக.
6. பிற்காலத்தில் பெண்புலவர்கள் பாடிய பக்திப் பாடல்கள் யாவை?
7. காஞ்சிபுரத்து அம்மைச்சியின் பாடலில் காணப்படும் நயத்தை விளக்குக.
8. பௌத்த, ஜைனப் பெண்பால் புலவர்கள்பற்றிச் சிறு குறிப்பு வரைக.
9. பெண்டிரின் இசையறிவினை எடுத்துக்காட்டுக.
10. மகளிர் பெற்றிருந்த பிற கலைப்பயிற்சிகள் யாவை?

# 5. இலக்கிய வரலாறு

## (திரு. மு. சண்முகம் பிள்ளை)

### இலக்கியத்தின் பொது இயல்

இலக்கியம் என்பது நுண்கலைகளுள் ஒன்றாகும். உண்மையும் அழகும் பொருந்தியனவாய் மக்களுக்கு இன்பத்தை விளைவிப்பன எல்லாம் நுண்கலைகளாகும். இலக்கியம் என்பது விரிந்த பொருளில் மக்களினத்தார் எழுதிய அனைத்தையும் குறிக்கலாம். வரலாறு, அறிவியல், மெய்ப்பொருளியல், கவிதை, கதை, நாடகம் முதலியன எல்லாம் இப்பெயரால் வழங்கப்படலாம். ஆயினும், சுருங்கிய பொருளில் அழகுணர்ச்சி ததும்ப எழுதப்பெற்றவற்றையே இலக்கியம் என்பது குறிக்கும். இன்ப துன்பங்கள் விரவிக் கிடக்கின்ற இந்த நனவுலகத்திலிருந்து விடுபட்டு இன்பமயமாயுள்ள கனவுலகத்திலே சிலகாலமேனும் நம்மை மகிழ்ந்து வாழும்படி செய்வதே இலக்கியத்தின் சீரிய மாண்பாகும்.

மேலும், ஓர் இலக்கியம் அதனை ஆக்கிய ஆசிரியனது உள்ளக் கோட்பாடுகளை வெளிப்படுத்துவதோடு அவன் வாழ்ந்த காலத்திலிருந்த மக்களின் கருத்துகளையும் உணர்ச்சிகளையும் வெளிப்படுத்தும் கண்ணாடியாகவும் விளங்குகிறது.

**தமிழ் இலக்கியத்தின் தொன்மை**

தமிழ் இலக்கியங்கள் ஈராயிரம் ஆண்டுக்கு மேற்பட்ட தொன்மை வாய்ந்தவை. கிறித்தவ ஆண்டின் தொடக்கத்திற்குப் பல நூற்றாண்டுகள் முன்பாகவே இயல், இசை, நாடகம் என்னும் மூவகையிலும் இலக்கியங்களும் அவற்றின் இயல்புகளை விளக்கும் இலக்கணங்களும் தோன்றியுள்ளன. கால வெள்ளத்தில் அப்பண்டை நூல்களுள் பல மறைந்த போதிலும் சங்க இலக்கியங்கள், தொல்காப்பியம் முதலியவற்றால் முத்தமிழ் இலக்கியவளம் நமக்குப் புலனாகிறது.

**நாட்டுச் சூழலும் இலக்கியமும்**

நாட்டின் சூழலுக்கும் மக்களின் வாழ்க்கைக் குறிக்கோளுக்கும் ஏற்றவகையில் இலக்கியங்கள் காலந்தோறும் தோன்றியுள்ளன. பண்டை நாளில் தமிழகத்தில் ஆண்ட முடியுடைவேந்தர், குறுநில மன்னர்கள் ஆட்சித் தொடக்கமாக இந்நாளில் நாம் பெற்றுள்ள குடியாட்சிவரையில் எத்தனையோ அரசுகள் மாறிமாறி வந்துள்ளன. வேதநெறிப்பட்ட சமயங்கள், சமணம், பௌத்தம், சைவம், வைணவம் என்று இவ்வாறு பற்பல சமயங்கள் பண்டை நாளிலிருந்து ஒவ்வொரு காலத்து மக்களிடையே ஓங்கியிருந்த காலமும் உண்டு. பின்னாளில் வந்து புகுந்த இசுலாம், கிறித்தவம் ஆகியவையும் மக்களிடையே வந்து ஒன்றியுள்ளன. மக்களுடைய பழக்க வழக்கங்களும் குறிக்கோள்களும் அவ்வக்காலத்திற்கு இயைய அமைதல் இயல்பே. எனவே, நாட்டுச் சூழலுக்கு ஏற்ப இலக்கியங்களும் அவ்வப்போது பிறந்தன என்பது மனங்கொள்ளத்தக்கது.

இவற்றையெல்லாம் கால அடைவில் பார்ப்பது ஒரு முறை. பொருளடிப்படையில் தொகுத்துப் பார்ப்பது மற்றொரு முறை. பொருளடிப்படை முறையில் கல்வியாளர் பெரிதும் போற்றும் சிறப்புடை இலக்கியங்கள் பலவற்றின் வரலாறு இங்கு வகுத்துரைக்கப்படுகிறது.

### தமிழ்ச் சங்கங்கள்

பண்டை நாளில் முப்பெரும் வேந்தர்களாகிய சேர சோழ பாண்டியர்களும் அவர்களுக்குட்பட்டிருந்த குறு நில மன்னர்களும் புலவர்களைப் புரந்து போற்றிச் சிறப்பித்தனர். அந்நாளில் அரசர்களைச் சிறப்பித்தும் காதல் வாழ்க்கையையும் போர் நிகழ்ச்சிகளையும் குறித்தும் பாடல்கள் பல தோன்றின. மூவேந்தர்களுள் தமிழ்ச்சங்கம் நிறுவிப் புலவர்களை ஒருங்கு கூட்டுவித்து இலக்கியச் செல்வங்களைத் தொகுத்துவைத்த பெருமை பெற்றவர் பாண்டியர்களாவர். முதல், இடை, கடை என மூன்று சங்கங்கள் ஒன்றன்பின் ஒன்றாய் அமைந்து தமிழ் வளர்த்தமை குறிப்பிடத்தக்க தனிச் சிறப்பாகும். கடைச்சங்க காலத்தில்—ஏறத்தாழ கி.பி. 3ஆம் நூற்றாண்டளவிலே—சங்கத்தார் தொகுத்து வைத்த இலக்கியங்களையே 'சங்க இலக்கியங்கள் என்று போற்றுவர்.

### சங்க இலக்கியங்கள்

சங்க இலக்கியங்களைப் பத்துப் பாட்டு, எட்டுத்தொகை என இருபெருங்கூறாகப் பகுத்துரைப்பர். பத்துப்பாட்டுகளாவன; திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, முல்லைப்பாட்டு, மதுரைக்காஞ்சி, நெடுநல்வாடை, மலைபடுகடாம் என்பனவாம். திருமுருகாற்றுப்படைக்குப் 'புலவராற்றுப்படை' என்னும் ஒரு பெயரும் உண்டு. மலைபடுகடாம், 'கூத்தராற்றுப்படை' எனவும் வழங்கும். இவையெல்லாம் நீண்ட ஆசிரியப்பாக்களால் அமைந்தவை. மதுரைக் காஞ்சியில் சிற்சிலவிடத்தும் பட்டினப் பாலையில் மிகுந்தும் வஞ்சியடிகள் விரவி வருகின்றன. வஞ்சியடிகள் மிக்கு வருவதால் பட்டினப்பாலையை 'வஞ்சிநெடும் பாட்டு' எனவும் வழங்குவர்.

### பத்துப்பாட்டு

இப்பாடல்கள் எல்லாம் அகம், புறம் என இருபெரும் பொருட்பகுதியுள் அடங்கும். அகம் என்பது காதல்பற்றிக் கூறும் பகுதி: புறம் என்பது அறமும் பொருளும்பற்றிப் புறத்தே நிகழும் ஒழுக்கத்தைக் கூறும் பகுதி.

பத்துப்பாட்டுள் நேர்பாதி ஆற்றுப்படைகள். ஆற்றுப் படையாவது பெருஞ்செல்வத்தைக் கொடையாளி ஒருவனிடம் பரிசாகப் பெற்றுத் திரும்பும் கூத்தர் முதலியோர் வழியிலே எதிர்ப்பட்ட இரவலரைக் கண்டு, அக்கொடையாளியின் பெருமை கூறி அவனிடம் சென்று தாம் பெற்றது போலப் பெருஞ்செல்வம் பெறுமாறு வழிப்படுத்தி உரைப்பதாகும். முல்லைப்பாட்டு, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை என்னும் மூன்றும் அகத்திணை ஒழுக்கம் பற்றியன. நெடுநல்வாடை அகப் பொருட்செய்தி பொதிந்ததாயினும் பாண்டியனது அடையாளப் பூவைக் கூறினமையால் இதனைப் புறத்திணைப் பாற்படுத்து வர். மதுரைக் காஞ்சி வீடுபேறு நிமித்தமாகப் பல்வேறு நிலையாமைகளை எடுத்துக் கூறும் 'காஞ்சித்திணை' என்னும் புறப்பொருட் பகுதியைச் சார்ந்தது.

**எட்டுத்தொகை**

எட்டுத்தொகை நூல்களாவன: நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு, புறநானூறு என்பனவாம். இவையெல்லாம் புலவர் பெருமக்கள் பலர் பாடிய பாடல்களைப் பாவகையாலும் பொருள் வகையாலும் அடிவரையறையாலும் பாகுபாடு செய்து அமைக்கப்பட்டனவாகும். இதனாலேயே இவற்றைத் 'தொகை நூல்கள்' என்பர். இவற்றுள் கலித்தொகை, பரிபாடல் என்னும் இரண்டும் முறையே கலிப்பா, பரிபாடல் என்னும் பாவகைகளால் அமைந்தவை. ஏனையவையெல்லாம் ஆசிரியப் பாவினால் அமைந்த தொகை நூல்களாகும். பதிற்றுப்பத்தும் புறநானூறும் புறப்பொருள்பற்றியவை. பரிபாடலில் அகப் பொருள், புறப்பொருள் இரண்டும்பற்றிய பாடல்கள் உள. ஏனைய குறுந்தொகை முதலிய ஐந்தும் அகப்பொருள் பற்றியனவாம். பாட்டு தொகை நூல்களால் பண்டைத் தமிழகத்தின் நாட்டு வரலாறு, மக்கள் வாழ்க்கை நிலை, அவர் களின் சமய நோக்கம், அவர்கள் கொண்டிருந்த குறிக்கோள்கள் முதலியவை எல்லாம் தெரியவருகின்றன.

சங்க இலக்கியங்களுக்கு இலக்கணமாக விளங்குவது தொல்காப்பியர் இயற்றிய தொல்காப்பியம் என்னும் இலக் கணப் பெருநூல். இஃது எழுத்ததிகாரம், சொல்லதிகாரம்,

பொருளதிகாரம் என்னும் முப்பெரும் பகுப்புடையதாய் அமைந்து, நம்மொழி இலக்கிய வரலாறுகளின் இயல்புகளை நன்கு எடுத்துரைக்கின்றன.

**தமிழ் முதற்காப்பியங்கள்**

சிலப்பதிகாரம், மணிமேகலை இரண்டும் சங்ககாலத் தமிழகத்தைப் படம் பிடித்துக் காட்டும் தமிழ் முதற்காப்பியங்கள் ஆகும். இவை முறையே புகார் எனப்படும் காவிரிப்பூம் பட்டினத்தில் வாழ்ந்த கோவலன்-கண்ணகியர் வரலாற்றையும், கோவலனுக்கும் மாதவிக்கும் பிறந்த மணிமேகலை என்பவளின் வரலாற்றையும் உரைப்பன. மூவேந்தர் நாடுகள்பற்றியும் வேற்று நாடுகள்பற்றியும் பற்பல செய்திகள் இவற்றில் ஆங்காங்கே காணப்படுகின்றன. காவிய அமைப்பு, பாவியல், மொழிநடை முதலியவற்றில் இந்த இரு காவியங்களுக்கும் பெரிதும் ஒப்புமை உண்டு. இதனால், இவற்றை 'இரட்டைக் காப்பியங்கள்' எனவும் வழங்குவர்.

**பதினெண்கீழ்க்கணக்கு**

அகம், புறம்பற்றிய இலக்கியங்களோடு மக்களின் நல் வாழ்வுக்கு வழிகாட்டும் அறநூல்களும் தோன்றியுள்ளன. உலகப் பொதுமறையாய்ப் போற்றப்படும் திருவள்ளுவர் வழங்கிய திருக்குறள் பிறந்தது இச்சங்ககாலத்தில்தான். திருக்குறளை யடுத்து நாலடியார், நான்மணிக்கடிகை, திரிகடுகம், சிறுபஞ்சமூலம், இனியவை நாற்பது, இன்னா நாற்பது, முதலிய அறநூல்கள் எழுந்தன. மற்றும் ஐந்திணை ஐம்பது, ஐந்திணை எழுபது முதலிய அகப்பொருள் நூல்களும், களவழி நாற்பது என்னும் புறப்பொருள் நூலும் தோன்றின. இவையெல்லாம் வெண்பாவினால் அமைந்த நூல்களாகும். இவற்றுள் பலவும் சங்க நூல்களை அடுத்து வந்தமையால், 'சங்கம் மருவிய நூல்கள்' எனவும் கூறப்படும். திருக்குறள் உட்படப் பதினெட்டு நூல்களை ஒரு தொகையாகப் பதினெண்கீழ்க்கணக்கு என்னும் பெயரால் வழங்குவர்.

'நாலடி நான்மணி நானாற்ப தைந்திணைமுப்
பால்கடுகங் கோவை பழமொழி மாமூலம்
இன்னிலைய காஞ்சியோ டேலாதி என்பவே
கைந்நிலையும் ஆம்கீழ்க் கணக்கு.'

என்னும் தனிப்பாடல் பதினெட்டு நூல்களையும் ஒருசேரத் தெரிவிக்கிறது.

**காரைக்காலம்மையாரும் முதலாழ்வார்களும்**

அறநூல்களை அடுத்துச் சைவ, வைணவ சமயங்கள் பக்திநெறி பரப்பி மேலோங்கின. பக்திப் பாடல் பதிகங்களும் பிரபந்தங்களும் தோன்றலாயின. இதற்கு முதல் வழிகாட்டியா யிருப்போர் காரைக்காலம்மையாரும் முதலாழ்வார்களாகிய பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார் முதலியோரு மாவர். அம்மையார் திருவாலங்காட்டில் விளங்கும் சிவபெருமான்மீது பதிகம் பாடினார். பதிகம் என்பது பத்துப் பாடல்கள் கொண்ட பகுதியாகும். இவர் பாடிய பதிகம் தேவாரப் பதிகங்களுக்குக் காலத்தால் முற்பட்டமையால், இதனை 'மூத்த திருப்பதிகம்' என்று போற்றுகின்றனர். ஒரு பாடலின் இறுதியை அடுத்து வரும் பாடலின் முதலாகக் கொண்டு அமையும் அந்தாதிமுறை பழமையானதே. இந்த வகையில் அற்புதத் திருவந்தாதி, இரட்டை மணிமாலை என்னும் பிரபந்தங்களையும் அம்மையார் பாடியுள்ளார். இவர்தம் பாடல்கள் இறைவன்பால் ஈடுபாடும் உருக்கமுமுடையன முதலாழ்வார் மூவரும் அந்தாதிப் பிரபந்தம் பாடித் திருமால் திருப்புகழைப் போற்றியுள்ளனர்.

**பன்னிரு திருமுறை**

திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் மூவரும் பாடிய பதிகப்பாமாலைகளைத் 'தேவாரம்' என்று போற்றுவர். இறைவனிடம் தம் குறை தீர்க்க வேண்டி முறையிட்டுப் பாடிய பாடல்களாதலின் தேவாரம் முதலிய சைவ இலக்கியங்களைத் 'திருமுறைகள்' என்பது வழக்கு. மூவர் தேவாரமும் சைவத் திருமுறைகளுள் முதல் ஏழு திருமுறைகளாக வகுக்கப்பட் டுள்ளன. மாணிக்கவாசகரின் திருவாசகமும் திருக்கோவை யாரும் எட்டாம் திருமுறையாகும். 'திருவாசகத்திற்கு உருகார் ஒரு வாசகத்திற்கும் உருகார்' என்னும் பழமொழி இந் நூற்பாட்ல்களின் உருக்கத்தைப் புலப்படுத்தும். ஒன்பதாம் திருமுறையான திருவிசைப்பாவும் திருப்பல்லாண்டும் தோத்திரப் பதிகங்களே. திருமூலர் வழங்கிய திரு மந்திரம்பத்தாம் திருமுறையாகும் பதினோராந்திருமுறையில் 'திருவாலவாயுடையார் திருமுகப்பாசுரம்' முதலாக நாற்பது

பிரபந்தங்கள் உள்ளன. இது பற்றியே இதற்குப் 'பிரபந்த மாலை' என்று ஒரு பெயரும் உண்டு. இந்தப் பதினொரு திருமுறைகளையும் தொகுத்து அளித்தவர் நம்பியாண்டார் நம்பி என்பவராவர். சேக்கிழார் பாடிய 'பெரிய புராணம்' என வழங்கும் 'திருத்தொண்டர் புராணம்' அறுபத்து மூன்று நாயன்மார்களின் வரலாறு கூறுவது. சிவனடியார் பக்தித்திறம் உரைக்கும் இப்பெருநூல் பின்னல் பன்னிரண்டாம் திருமுறையாகப் போற்றப்பட்டுச் சைவத் திருமுறைகள் பன்னிரண்டு ஆயின.

**திவ்வியப்பிரபந்தம்**

திருமாலடியார்களாகிய முதலாழ்வார் மூவர், பெரியாழ்வார், ஆண்டாள், குலசேகரர், திருமங்கையாழ்வார், நம்மாழ்வார் முதலியோரின் பாசுரங்களைத் தொகுத்தளித்தவர். நாதமுனிகளாவர். முதலாயிரம், பெரிய திருமொழி, திருவாய்மொழி, இயற்பா என நான்கு ஆயிரமாய் அவர் அமைத்திருப்பதனல், 'நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம்' எனவும் வழங்குவர். இவற்றுள் முதல் மூன்று ஆயிரங்களும் இசைப் பாக்களாம். இயற்பாவில் அந்தாதி, விருத்தம், ஆசிரியம் முதலிய பாவகைகள் இடம் பெற்றுள்ளன. நாலாயிரத்தில், 'திருப்பல்லாண்டு' முதலாக இருபத்து நான்கு பிரபந்தங்கள் உள.

**சமண இலக்கியங்கள்**

சைவ வைணவ இலக்கியங்கள் ஒருபாலாகச் சமண சமயத்தவரும் தருக்கநூல்கள், காவியங்கள் முதலியவற்றை இயற்றியுள்ளனர். பிங்கலகேசி, நீலகேசி முதலியன இவர்கள் ஆக்கிய தருக்க நூல்கள். பெருங்கதை, சீவக சிந்தாமணி, சூளாமணி என்பவை இவர்கள் படைத்த ' பெருங்காப்பியங்கள். தமிழ் முதற்காப்பியங்களாகிய சிலப்பதிகாரம், மணிமேகலையோடு, சீவகசிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி என்பவற்றையும் உடன்சேர்த்து 'ஐம்பெருங்காப்பியங்கள்' என்பர். இவற்றுள் வளையாபதியும் குண்டலகேசியும் முற்றும் கிட்டப்பெறவில்லை. பின்னுளில் யசோதரகாவியம், உதயணகுமார காவியம், நாககுமாரகாவியம் முதலிய சிறுகாவியங்களையும் இவர்கள் இயற்றியுள்ளனர். திருக்கலம்பகம், திருநூற்றந்தாதி, அப்பாண்டைநாதர் உலா முதலிய பல பிரபந்தங்களையும் இவர்கள் தந்துள்ளார்கள்.

**இராமாயணமும் பாரதமும்**

இராமாயணம் பாரதம் என்பவை வடமொழியில் பேரிதிகாசங்கள் என்று போற்றப்படுபவை. இந்த இரு பெரு நூல்களிலும் அமைந்த சரித்திரங்கள் நீண்ட நெடுங்காலமாகப் பாரதமக்கள் அறிந்தனவாகும். சங்க இலக்கியங்களிலும் பிற நூல்களிலும் இராமாயண-பாரத வரலாறுகள் சிற்சில அங்கங்கே தென்படுகின்றன. கம்பர் இயற்றிய பெருங்காவிய மாகிய 'இராமாவதாரம்' கம்பராமாயணம் என்று போற்றப படுகிறது. கம்பரின் இக்காவியப் படைப்பு கர்விய உலகிலேயே மிகச் சிறந்ததாகும். தமிழுலகில் இவர் 'கவிச்சக்கரவர்த்தி' எனப் புகழப்படுகிறார்.

பெருந்தேவனார் செய்த பாரதம் பழமையானது. பிற்காலத்தில் வில்லிபுத்தூரரும், நல்லாப்பிள்ளை என்பாரும் பாரதம் பாடியுள்ளனர். இவை முறையே வில்லிபுத்தூரர் பாரதம், நல்லாப்பிள்ளை பாரதம் என ஆசிரியர் பெயரோடு சேர்த்து வழங்கப்படுகின்றன. வேறு சிலரும் பாரதப் பகுதி களைப் பாடியுள்ளனர். பாரதத்தில் கிளைக்கதைகளாக இடம் பெற்ற நளன், அரிச்சந்திரன் முதலியோர் சரிதங்கள் சிறு காவியங்களாயும் பிறந்துள்ளன. நளவெண்பா, நைடதம், அரிச்சந்திர வெண்பா, அரிச்சந்திர புராணம் முதலியன குறிப் பிடத்தக்கவை. கண்ணன் திருவவதார சரிதங்களைக் கூறும் பாகவதமும் தமிழில் செவவைச்சூடுவார், வரதராச ஐயங்கார் என்போர்களால் தனித்தனி இருவேறு காவியங்களாய் வந் துள்ளது.

**புராணங்கள்**

தெய்வம்பற்றிய புராணங்களும் தல புராணங்களும் தமிழில் மிகப் பலவாகும். கச்சியப்ப சிவாசாரியரின் 'கந்த புராணம்' முருகப்பெருமானின் அவதார சரிதங்களை உரைக் கிறது. இவவாறே விநாயகரைப்பற்றிப் பின்னாளில் கச்சியப்ப முனிவர், 'விநாயக புராணம்' பாடினார். தில்லைத்தலம்பற்றிய 'கோயிற்புராணம்,' மற்றும் 'காஞ்சிப் புராணம்,' 'தணிகைப் புராணம்' முதலியனவாக வந்துள்ள தலபுராணங்கள் பற்பல. மதுரைமாநகரைக் குறித்து வந்துள்ள திருவாலவாயுடையார் பாடிய 'பழைய திருவிளையாடற் புராண'மும், பரஞ்சோதி

முனிவரின் 'திருவிளையாடற் புராண'மும் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கன. பிற்காலத்தில் தலபுராணங்களையும் பிரபந்தங்களையும் மிகுதியாகச் செய்தவர்களுள் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் குறிப்பிடத்தக்கவராவர்.

**சிறுபிரபந்தங்கள்**

கோவை, உலா, தூது, பிள்ளைத்தமிழ், பரணி, கலம்பகம், பள்ளு, குறவஞ்சி என்பவை சிறுபிரபந்தங்களுள் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவை. பதிகம், அந்தாதி போன்றவை மிகப் பழமையானவை என்பது முன்பு கூறப்பட்டது. கோவை நூல்களுள் பாண்டிக்கோவை, திருக்கோவையார், தஞ்சை வாணன் கோவை என்பன சிறந்தனவாம். கம்பர் காலத்தில் வாழ்ந்தவராகக் கருதப்படும் ஔவையார், ஒட்டக்கூத்தர் ஆகியோர் ஆக்கிய பிரபந்தங்களும் உள. ஒட்டக்கூத்தர் உலா, கோவை, பிள்ளைத்தமிழ், பரணி முதலியன பாடியுள்ளார். இவர் பாடியவற்றுள் பலவும் இவர் காலத்து வாழ்ந்த விக்கிரமன் இராசராசன், குலோத்துங்கன் என்னும் அரசர்களைப்பற்றியனவாகும். செயங்கொண்டார் பாடிய கலிங்கத்துப்பரணி குலோத்துங்க சோழனின் கலிங்கப்போர்பற்றிய போர்ப் பாடலாகும்.

முன்னுளிற் போலவே தெய்வத்தைப்பற்றிய பிரபந்தங்கள் புலவர் பெருமக்கள் பலராலும் இயற்றப்பட்டுள்ளன. திருமாலைக்குறித்துப் பிள்ளைப்பெருமாளையங்கார் பாடிய பிரபந்தங்கள் முற்படக்கூறத் தக்கன. சைவப் புலவர்களாகிய குமரகுருபரர், சிவப்பிரகாசர், அருணகிரிநாதர், தத்துவராயர், தாயுமானவர், சைவ எல்லப்ப நாவலர், இராமலிங்க சுவாமிகள், பாம்பன் குமரகுருதாச சுவாமிகள், தண்டபாணி சுவாமிகள், மாம்பழக்கவிச்சிங்க நாவலர் முதலியோர் பாடிய பிரபந்தங்கள் புலவர் பெருமக்களால் பெரிதும் போற்றப்படுவனவாம்.

**மக்கட்பிரபந்தங்கள்**

அரசர்கள், தெய்வங்களைப் பாடியதோடு மக்களைப் பொருளாகக் கொண்டு பாடப்பட்ட சிறுபிரபந்தங்களும் பல. இவற்றுள் பள்ளர் வாழ்க்கையைச் சித்திரிக்கும் பள்ளு, குறவர் வாழ்க்கையை அடியொற்றிய குறவஞ்சி என்பவை குறிப்பிடத்தக்கனவாம். இவ்வகை நூல்களுள் 'முக்கூடற்பள்ளு'ம்

'குற்றுலக் குறவஞ்சி'யும் சிறப்பாகப் போற்றப்படுவன வாகும். நாடகங்களும் மக்கள் மத்தியில் பெருவழக்காய்ப் பிறந் துள்ளன. இராசராசேசுவர நாடகம் தஞ்சைக்கோயிலில் நடிக்கப்பட்டதாகத் தெரியவருகிறது. இசை நாடகங்கள் கோயில் விழாக்களை ஒட்டிச் சிறப்பெய்தி வளர்ந்துள்ளன. பல்வேறு நாடகக்குழுக்கள் தமிழகத்தில் நாடகத் தமிழைப் பேணி வளர்த்துவந்துள்ளன. நடிப்பதற்கேயன்றிப் படித்து இன்புறுதற்காகவும் சிற்சில நாடகங்கள் செய்யப்பெற்றன. பேராசிரியர் சுந்தரம் பிள்ளை இயற்றிய 'மனோன்மணீய நாடகம்' இவ்வகையில் தலைசிறந்து விளங்குகிறது. பெண்கள் படித்து மகிழ்வதற்காக 'அம்மானைப்பாடல் வகையில் 'அல்லியரசாணி மாலை, 'பவளக்கொடி மாலை,' 'தேசிங்குராசன் கதை' முதலியனவாகப் பற்பல நூல்கள் வெளிவந்துள்ளன

**கல்வி மறுமலர்ச்சி**

ஆங்கில அரசு வேரூன்றியபின் நாட்டுக் கல்விமுறையில் வளர்ச்சி தோன்றியது. மேனுட்டுக் கல்விமுறை பரவியது. ஒருசிலர் படித்துவந்த நிலைமை மாறிக் கல்வி அனைவருக்கும் உரித்தாகும் என்னும் கொள்கை பிறந்தது. அச்சு யந்திரங்கள் நிறுவப்பட்டன. இதனால், பழைய நூல்களும் புது நூல்களும் அச்சில் வெளியாயின. மேனுட்டுப் பாதிரிமார்கள் சமய பரப்பும் நோக்குடன் தமிழ்ப்பணிகளும் புரிந்துள்ளனர் வீரமாமுனிவரின் 'தேம்பாவணி'யும் மற்றும் அவர் பாடிய 'கித்தேரியம்மாள் அம்மானை' 'திருக்காவலூர்க் கலம்பகம்' முதலியனவும் சிறபபான இலக்கியங்களாகும். நவீன முறையில் அகராதியைத் தொகுத்தளித்து அகராதி முயற்சி களுக்கு வழிகாட்டிய பெருமையும்இவரைச்சாரும். பெயரகராதி, பொருளகராதி, தொகையகராதி, தொடையகராதி என நால் வகைக் கூறுகளாய் அமைத்துச் 'சதுரகராதி' என்னும் பெயரில் இவர் தந்துள்ளார். நம் நாட்டுக் கிறித்தவப் புலவர்களும் இலக்கியங்கள் யாத்துள்ளனர். இவர்களுள் எச். ஏ. கிருஷ்ணப் பிள்ளை இயற்றிய 'இரட்சணிய யாத்திரிகம்,' 'இரட்சணிய மனோகரம்' ஆகியவை குறிப்பிடத்தக்கன. இசுலாமியப் புலவர் களும் பல நூல்களை இயற்றியுள்ளனர். உமறுப்புலவர் செய்த 'சீறப்புராணம்' சிறப்பான காவியமாகும். குணங்குடி மஸ்தான்

தக்கலை பீர்முகம்மது முதலியோர் பாடிய துதிப்பாடல்களும் போற்றத்தக்கனவாம்.

**உரைநடை வளர்ச்சி**

உரைநடை தமிழில் முற்காலத்திலும் இருந்தன. என்றாலும் அவையும் ஒருவகையில் 'உரைப்பாட்டு' என்னும் வகையில் பாடல்போன்ற நடையிலேயே அமைந்திருந்தன. பழைய இலக்கிய இலக்கணங்களுக்கும் சமயநூல்களுக்கும் எழுதிய விளக்கவுரைகளில் உரைநடை நெகிழ்ந்து வந்துள்ளது. என்றாலும், இக்காலத்தில் காண்பது போன்ற உரைநடை வளர்ச்சி மேனாட்டுக் கல்வியின் தொடர்பால் ஏற்பட்டதே யாகும். நாவல் எனப்படும் நவீனங்களாகிய புனை கதைகளும் சிறுகதைகளும் இன்றைய இலக்கியங்களில் சிறப் பிடம் பெறுகின்றன. பத்திரிகைகளின் வளர்ச்சியும் பெருக்கமும் இத்தகைய இலக்கியங்கள் வளரப் பெரிதும் துணைபுரிகின்றன.

**வளரும் இலக்கியம்**

தேசிய எழுச்சிக் காலத்தில் நாட்டுப்பற்றை மக்களுக்கு ஊட்டும் பாடல்களும், கதைகளும், வரலாற்றுப் புனைவுகளும் பிறவும் மிகுதியாய் எழுந்தன. தேசியப் பாடல்கள் பாடி மக்களைத் தட்டியெழுப்பிய பணியில் தேசியகவி சுப்பிரமணிய பாரதியாரின் தொண்டு மிகவும் போற்றத்தக்கதாகும். நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம்பிள்ளை, கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை, ச. து. சுப்பிரமணிய யோகியார், பாரதிதாசன், சுவாமி சுத்தானந்த பாரதியார் முதலியோர் கவிதைகளில் இலக்கியப் புதுமைகள் காணப்படும். இப் பொழுது நமது இலக்கியம் புதுமலர்ச்சி பெற்று வளர்ந்துவரும் காலமாகும். பல்வேறு துறைகளிலும் புதுப்புதுப் படைப்புகளை அறிஞர் பெருமக்கள் ஆக்கியளித்து வருகின்றனர். இலக்கியம் நாளும் வளர்ந்துகொண்டே இருக்கிறது.

## அருஞ்சொற்பொருள் :

நுண்கலை-அழகுணர்ச்சியைத் தூண்டும் கலை, கவின்கலை ; மெய்பொருளியல் - கடவுளியல் உண்மைகளை ஆராயும் நூல், ததும்ப-நிறைய, நிரம்பி வழிய ; நனவுலகம்-விழிப்புநிலை, நடைமுறை உலகம் ; கோட்பாடு-கொள்கை, தொன்மை-பழமை, காலவெள்ளம்-காலமிகுதி, சூழல்-நடப்பு நிலை, குறிக்கோள்-உயர்ந்த லட்சியம், உயர்ந்த நோக்கம் ; முடியுடைவேந்தர்-பேரரசர், புரந்து-பேணி, காப்பாற்றி ; ஏறத்தாழ-கிட்டத்தட்ட, வழிப்படுத்தல்-வழியில் செல்லுமாறு செய்தல், வழிகாட்டியனுப்புகை; நிமித்தம்-காரணம், பொருட்டு ; ஆங்காங்கே-அங்கு அங்கு, பற்பல இடங்களில்; பொதுமறை-பொதுவேதம், தனிப்பாடல்-விடுகவி, பிறவற்றோடு தொடர்பின்றி ஒரு தனிப்பொருளை பற்றிக் கூறும் பாட்டு ; பிரபந்தம்-நூல், இரட்டைமணிமாலை-வெண்பா, கட்டளைக்கலித்துறை என்னும் இருவகையான பாடல்கள் இருபது கொண்ட அந்தாதி நூல் ; உருக்கம்-அன்பு, மனநெகிழ்ச்சி ; பாசுரம்-தெய்வத்திருப்பாடல், திவ்விய பிரபந்தம்-தெய்வத்தன்மை படைத்த நூல்; தென்படுகின்றன-புலப்படுகின்றன, தெரியவருகின்றன ; கவிச்சக்கரவர்த்தி-கவிஞர்களுள் தலையாயவர்; கிளைக்கதை-பெருங்கதை ஒன்றின் தொடர்பாக அமையும் சிறுகதை; திருவவதாரம்-தெய்வப் பிறப்பு; தில்லை-சிதம்பரம்; தஞ்சை-தஞ்சாவூர்; அம்மானைப் பாடல்-மகளிர்க்கு ஏற்ற பாடல், மகளிரை விளித்துப் பாடும் பாடல் ; புனைகதை-கற்பனைக்கதை, கட்டுக்கதை.

## வினாக்கள் :

1. இலக்கியத்தின் தனிப் பண்புகள் யாவை?
2. இலக்கிய வளர்ச்சி எவற்றைப் பொறுத்து அமைகிறது?
3. நாட்டுச் சூழலுக்கு ஏற்ப நம் இலக்கியம் எவ்வாறு அமைந்துள்ளது?
4. தமிழ்ச்சங்கங்கள்பற்றித் தெரியவருவன யாவை?
5. சங்க இலக்கியங்கள் எனப்படுபவை யாவை ?
6. பத்துப்பாட்டின் பொருளமைதி, பாவமைதிபற்றிக் கூறுக.
7. எட்டுத்தொகை நூல்கள் யாவை?
8. பாவகையாலும், பொருள் வகையாலும் எட்டுத்தொகை நூல்கள் எவ்வாறு அமைந்துள்ளன?
9. தொல்காப்பியத்தின் வரலாறு கூறுக.
10. தமிழ்முதற் காப்பியங்கள் எவை? அவற்றால் தெரிய வருவன யாவை?

11. இரட்டைக் காப்பியங்கள் என வழங்குவது எவற்றை? ஏன்?
12. பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் அறநூல்கள் எவையெவை?
13. 'சங்கம் மருவிய நூல்கள்' என்பது எவற்றை? ஏன்?
14. காரைக்காலம்மையார் பாடியவை எவை?
15. முதலாழ்வார்கள் யாவர்?
16. பன்னிருதிருமுறைகள்பற்றி விளக்குக.
17. திவ்வியப் பிரபந்தத்தைத் தொகுத்தவர் யார்? அவர் எவ்வாறு தொகுத்துள்ளார்?
18. சமணர் இயற்றிய காவிய நூல்கள் எவை?
19. ஐம்பெருங்காப்பியங்கள் யாவை?
20. தமிழில் இராமாயண பாரத நூல்களைச் செய்தவர் யார் யார்?
21. பாரதக் கிளைக்கதைகளைப் பின்பற்றி வந்த சிறு காவியங்கள் யாவை?
22. புராணங்களின் இயல்புகளை விவரிக்க.
23. சிறுபிரபந்தங்களுள் சிறந்தவை எவையெவை?
24. அரசர்களைக் குறித்துப் பிரபந்தம் பாடியோர் யாவர்?
25. பிரபந்தங்களை மிகுதியாகச் செய்தவர்கள் யார் யார்?
26. 'பள்ளு,' 'குறவஞ்சி நூல்கள்'பற்றி விளக்கம் தருக.
27. கல்வி மறுமலர்ச்சிக் கால நிகழ்ச்சிகளைக் கூறுக.
28. வீரமாமுனிவரின் தொண்டுகள் யாவை?
29. இன்றைய உரைநடை இலக்கியம்பற்றிக் கூறுக.
30. தேசிய எழுச்சிக் கால இலக்கிய நிலைபற்றி விவரிக்க.

# 6. தேசிய விடுதலைப் போராட்டம்

## (டாக்டர் மா. இராமலிங்கம்)

நம் இந்திய நாடு ஒரு காலத்தில் ஆங்கிலேயர்களுக்கு அடிமைப்பட்டுக் கிடந்தது. வெள்ளையர்களின் வேட்டைக் களமாக இருந்த பாரதம் வீறு கொண்டு எழுந்து, தன்னைப் பூட்டியிருந்த தளைகளையெல்லாம் உடைத்து நொறுக்கிவிட்டு, விடுதலை பெற்ற திருநாடாக உலக அரங்கில் இன்று தலை நிமிர்ந்து நிற்கிறது. இந்த நிலை எப்படி உருவாயிற்று? இது மந்திரத்தாலோ மாயத்தாலோ திடும் என விளைந்ததன்று. இதற்காக

நாம் பல ஆண்டுகள் போராடினோம்; பல ஆயிரக்கணக்கான வீரர்களைப் பலிகொடுத்தோம்; கண்ணீரும் செந்நீரும் சிந்தினோம். நாம் பெற்றிருக்கும் விடுதலை வாழ்வு, கடந்த காலத்தில் நம் அரும்பெரும் தலைவர்கள் செய்த தியாகத்தின் விளைவு. சுதந்திரத்தின் மதிப்பையும், நாம் அதற்காக ஈந்த விலையையும் அறிந்தாலன்றி, பெற்ற சுதந்திரத்தைப் பேணிக் காக்கும் பொறுப்புணர்ச்சி நமக்கு வாரா. தேசிய விடுதலைப் போராட்ட வரலாற்றை இந்திய நாட்டுக் குடிமக்கள் ஒவ்வொருவரும் தவறாமல் அறிந்துகொள்ளவேண்டும்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில், 1885ஆம் ஆண்டு ஆலன் ஆக்டேவியன் ஹியூம் என்பார் ஆங்கிலேயர்களுக்கும் இந்தியர்களுக்கும் உறவுண்டாக்கும் பெருநோக்கில் குழு ஒன்றை அமைத்தார். மக்களின் குறைகளை அரசிடம் எடுத்துக் கூறவும், அரசின் கருத்தை மக்களிடம் உணர்த்தவும் அவரால் அமைக்கப்பட்ட குழுவே 'காங்கிரஸ்' ஆகும். சுரேந்திரநாத் பானர்ஜியின் தலைமையில் கூடிய அக்குழுவில் எழுபத்திரண்டு உறுப்பினர்கள் இருந்தனர். அக்குழுவின் வளர்ச்சியே பின்னாளில் இந்திய தேசிய இயக்கமாக வடிவம் கொண்டது. இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில்தான் தேசிய இயக்கம் போராட்டக் களத்தில் அடிபெயர்த்து வைத்தது.

தேசியப் போராட்ட வரலாற்றை இரு காலப் பகுதிகளாகப் பிரித்துக் காட்டலாம். முன்னது திலகர் காலம்; பின்னது காந்தியடிகள் காலம். 1901 முதல் 1918 வரை தேசிய இயக்கம் திலகர் தலைமையில் இயங்கியது. அதற்குப் பின் அண்ணல் காந்தியடிகள் போராட்டத் தலைமையை ஏற்றார். அரசியல் உலகில் காந்தியடிகளின் நுழைவு புதிய திருப்பத்தை உண்டாக்கியது.

பால கங்காதர திலகர் அஞ்சா நெஞ்சினர்; 'மராட்டியச் சிங்கம்' என்று அழைக்கப்பட்ட பெருமைக்குரியவர். "சுதந்திரம் எங்கள் பிறப்புரிமை" என்று முதன்முதல் முழங்கியவரும் அவரே. அவரது எழுத்தும் பேச்சும் விடுதலை வேட்கையை நாட்டு மக்களிடையே தூண்டியது. அவர் மற்றத் தலைவர்களிடமிருந்து பெரிதும் வேறுபட்டு விளங்கினார். தாதாபாய் நௌரோஜி, சித்தரஞ்சன தாஸ் போன்றோரின் மிதவாதப்

போக்கை அவர் ஏற்கவில்லை. போராட்டத்தின் மூலமே சுதந்திரத்தைப் பெற முடியும் என்பது அவர் நம்பிக்கை. எனவே, தீவிர வாதிகளைக் கொண்ட ஒரு மாநாட்டினை 1907 ஆம் ஆண்டு அவர் சூரத்தில் கூட்டினார். அதற்கு முன், 1905 ஆம் ஆண்டு கர்சான் பிரபு இந்திய நாட்டு மக்களின் விருப்பத்திற்கு மாறாக, வங்காளத்தை இரு கூறுகளாகப் பிரித்தபோது திலகர் சீறி எழுந்தார்; தம் எதிர்ப்பைப் புலப்படுத்தினார்.

வடக்கே திலகர், விபின சந்திரபாலர் போன்றோர் தேசிய விடுதலைப் போராட்டத்தில் தலைமை ஏற்ற நேரத்தில் தமிழ் நாட்டில் வ. உ. சிதம்பரனாரும் சுப்பிரமணிய சிவாவும் தேசிய இயக்கத்தை வளர்க்கும் திருப்பணியில் ஈடுபட்டிருந்தனர். கவியரசர் சுப்பிரமணிய பாரதியார் வீரம் செறிந்த தம் கவிதைகளால் விடுதலைக் கனலை மக்களிடையே மூட்டிவந்தார். இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில், முதல் பதினெட்டு ஆண்டுக் காலத்தில், மிதவாதிகளும் தீவிரவாதிகளும் தம்முள் ஒற்றுமை குன்றி நின்றதால் தேசிய இயக்கம் போதிய வலிமை பெறவில்லை.

இந்தச் சமயத்தில், அண்ணல் காந்தியடிகள் தென்னாப்பிரிக்காவிலிருந்து இந்தியாவிற்குத் திரும்பி வந்திருந்தார். மக்களின் நிலை கண்டு மனம் நெகிழ்ந்தார். பாழ்பட்டு நின்ற பாரததேசத்தை வாழ்விக்க உறுதிபூண்டார். தேசிய இயக்கமும் அவரது தலைமையை விரும்பி ஏற்று ஆணைக்கு அடங்கி நின்றது.

ஆங்கிலேய அரசு நாட்டில் கிளர்ச்சி செய்வோரை அடக்குவதற்காகச் சில கருத்துரைகளை வழங்குமாறு ஒரு குழுவை அமைத்தது. அக் குழுவின் தலைவர் ரவுலட் என்னும் நீதிபதி. ரவுலட் குழுவின் அறிக்கை கிளர்ச்சி செய்வோரை விசாரணை இன்றியே தண்டிக்கும் உரிமையை அரசுக்குப் பரிந்துரை செய்தது. ரவுலட் சட்டம் நடைமுறைக்கு வந்தது. கலகக்காரர்களை அடக்குவதற்கே இச் சட்டம் என்று கூறிக்கொண்டு, தேசிய இயக்கத்தை ஒடுக்குவதற்கு அரசு முயன்றது. காந்தியடிகள் இவ்வுண்மையைப் புரிந்து கொண்டார். ரவுலட் சட்டத்தை எதிர்த்து நாடெங்கும் சென்று சொற்பொழிவாற்றினார். இந்திய மக்களின் எதிர்ப்பைத் தெரிவிக்கும் பொருட்டு

1919ஆம் ஆண்டு ஒரு மாபெரும் ஹர்த்தால் (கடையடைப்பு) நடத்தப்பட்டது. காந்தியடிகளின் தலைமை அசைக்கமுடியாத வலிமை பெற்றுவிட்டது என்பதை இக்கடையடைப்புப் போராட்டம் எடுத்துக்காட்டிற்று. இதைத் தொடர்ந்து அரசியல் வானில் மேகமூட்டமும், மின்னலும், இடியும் மாறிமாறி எழுந்தன. காந்தியடிகளின் திருவுருவம் ஆங்கிலேயருக்குச் சிம்மசொப்பனம் போல் அதிர்ச்சி தந்தது.

1920ஆம் ஆண்டு காங்கிரஸ் மாநாடு பஞ்சாப் மாநிலத்தில் அமிர்தசரஸ் என்னுமிடத்தில் கூடுவதாக இருந்தது. ஆங்கில அரசின் கைக்கூலியான கவர்னர் மைக்கேல் ஒட்வியர் அதைத் தடுக்கத் திட்டமிட்டார். தேசிய இயக்கத்தை அடக்கு முறையால் ஒடுக்கிவிட்டால் சுதந்திர வேட்கையை அழித்துவிடலாம் என்று கனவு கண்டார். ஜாலியன் வாலாபாக் என்னுமிடத்தில் நடந்த ஒரு பொதுக்கூட்டத்தை அவர் திட்டமிட்டுக் கலைக்க முயன்றபோது அவரது அதிகார வெறிக்குப் பல்லாயிரக்கணக்கான மக்கள் பலியானார்கள். குற்றமறியாப் பொதுமக்களைப் பறவைகளைச் சுடுவதுபோல் சுட்டு வீழ்த்தினர். வரலாற்று ஏடுகளில், குருதிக்கறை படிந்த இப் பகுதியைத் தான் 'பஞ்சாப் படுகொலை' என்று அழைக்கிறோம்.

அண்ணல் காந்தியடிகள் உயிர்ச் சேதம் கண்டு உள்ளம் கலங்கினர். ஜாலியன் வாலாபாக்கில் பெருக்கெடுத்தோடிய இரத்த ஆறு அவரைத் தீவிர சிந்தனையில் ஆழ்த்தியது. கத்தியில்லாமல், இரத்தமில்லாமல், அன்பு நெறியின் மூலமே சுதந்திரத்தை அடையவேண்டும் என்று உறுதிபூண்டார். உண்மை, இன்னுசெய்யாமை போன்ற அறங்களை நாட்டு மக்களுக்கு எடுத்துரைத்தார், சத்தியாக்கிரகம் என்னும் கொள்கையைத் தெளிவுபடுத்தினர். அதன் விளைவாக ஒத்துழையாமை இயக்கம் பிறந்தது. இப் புதிய போராட்ட முறையால் நாட்டில் அமைதியான பெரும்புரட்சி உருவாயிற்று. நாட்டு மக்கள் அரசாங்கத்தோடு ஒத்துழைக்க மறுத்தனர்; வழக்கறிஞர்கள் நீதி மன்றத்தை விட்டு வெளியேறினர்; மாணவர்கள் கல்வி நிலையங்களைத் துறந்தனர். ஆங்கில அரசு செயலிழந்து செய்வதறியாது திகைத்தது.

காந்தியடிகளின் அன்புப் போராட்டத்தில் அவருக்குத் துணையாக நின்றவர்கள் பலர். மோதிலால் நேரு, ஜவஹர்லால் நேரு, மௌலானா அபுல்கலாம் ஆசாத், சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார் முதலியோர், அவர் இட்ட கட்டளையைச் செய்துமுடிக்கத் தயாராய் இருந்தனர். இந்திய மக்களின் வெளிநாட்டு மோகத்தைத் தவிர்த்து நாட்டுப்பற்றை ஊட்ட எண்ணிய காந்தியடிகள், அந்நியத் துணிகளைத் துறக்கும்படி மக்களை வேண்டிக்கொண்டார். வெளிநாட்டுத் துணிகள் பல இடங்களில் தீயிட்டுக் கொளுத்தப்பட்டன. இங்கிலாந்து இளவரசர் இந்தியாவிற்கு வருகை தந்தபோது காங்கிரஸ் அதில் கலந்து கொள்ளாமல் ஒதுங்கி நின்றது. 'அந்நியத் துணி பகிஷ்காரத்'தின் மூலம் தம் எதிர்ப்பைத் தெரிவித்தது. நாட்டின் மூலை முடுக்கெல்லாம் நடந்த இப்போராட்டத்தில் பல்லாயிரக் கணக்கானோர் சிறை சென்றனர்; இராணுவத்தின் கொடுமையால் உயிரிழந்தனர்.

1928ஆம் ஆண்டில் இந்திய அரசியல் சீர்திருத்தம்பற்றி ஆராய்வதற்காக ஆங்கில அரசு சைமன் என்பாரின் தலைமையில் ஒரு குழுவை நியமித்தது. அக்குழுவில் இந்தியர் ஒருவருக்கும் இடமில்லை. இது வெறும் கண்துடைப்பு வேலையே என்றறிந்த காந்தியடிகள் சட்ட மறுப்பு இயக்கத்தைத் தொடங்கினார்.

அரசினரின் விதிமுறைகளை மீறிக் கடலுக்குச் சென்று உப்பெடுக்கும் போராட்டம் உருவாயிற்று. காந்தியடிகள் தம் தொண்டர்களுடன் தண்டி என்னும் இடத்திற்குச் சென்று உப்பெடுத்தார். வரலாற்றுப் புகழ் படைத்த இத் தண்டி யாத்திரை 1930ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் பன்னிரண்டாம் நாள் நடந்தது. தமிழகத்தில் அப் போராட்டத்திற்குத் தலைமை ஏற்றவர் இராஜாஜி. அவரும் சர்தார் வேதரத்தினமும் வேதாரணியக் கடற்கரையில் சட்டத்தை மீறி உப்பெடுத்தனர். இப்போராட்டத்தால் தேசியத் தலைவர்கள் நாடெங்கும் கைது செய்யப்பட்டனர். சிறை இருப்புக்கும், சித்திரவதைக்கும் ஆளாயினர். ஆங்கில அரசு ஆட்டங்கொடுத்தது.

காந்தியடிகளின் அன்புநெறிப்பட்ட போராட்டம் ஓயவில்லை, ஒழியவில்லை. அவரது கட்டளையை எதிர்பார்த்துக் கொண்டு நாடு காத்திருந்தது.

சைமன் குழுவிற்கு நாட்டில் ஆதரவு இல்லாததால், ஆங்கில அரசு ஒரு வட்டமேஜை மாநாட்டை இங்கிலாந்தில் கூட்ட முயன்றது. இம் மாநாட்டில் கலந்துகொள்ள காங்கிரஸ் மறுத்து விட்டது. எனினும், அப்போது வைசிராயாக இருந்த இர்வின் பிரபு அரும்பாடுபட்டுக் காந்தியடிகளுடன் ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டார். இதனால் 1931இல் காங்கிரசின் சார்பில் காந்தியடிகள் வட்டமேஜை மாநாட்டில் கலந்துகொள்ள இங்கிலாந்துக்குப் பயணமானார். அங்கே அவரது கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்படவில்லை; ஏமாற்றத்தோடு திரும்பினார்.

1935ஆம் ஆண்டு இந்திய அரசியல் சட்டம் பாராளு மன்றத்தில் நிறைவேறியது. அது மைய அரசில் கூட்டாட்சி முறையையும், மாநிலங்களில் தன்னாட்சி முறையையும் ஏற்படுத்தியது. இச்சட்டமும் காங்கிரசுக்குத் திருப்தி அளிக்கவில்லை. எனினும், இச்சட்டம் நடைமுறைக்கு வந்தபோது காங்கிரஸ் தேர்தலில் கலந்துகொண்டு வெற்றிபெற்றது: ஏழு மாநிலங்களில் அமைச்சரவையை ஏற்படுத்தியது.

1939ஆம் ஆண்டு இரண்டாவது உலகப் பெரும்போர் தொடங்கியது. அப்போது நாட்டுமக்களின் ஒப்புதலைப் பெறாமல் ஆங்கில அரசு இந்தியாவையும் போரில் ஈடுபடுத்திற்று. காந்தியடிகள் இதை விரும்பவில்லை. அவர், காங்கிரஸ் அமைச்சர்கள் மாநில அரசுப் பொறுப்பிலிருந்து வெளியேற வேண்டுமெனக் கட்டளையிட்டார். அமைச்சர்கள் வெளியேறினர். இதைத் தொடர்ந்து பரவலான புரட்சி ஆங்காங்கே வெடித்தது.

சுதந்திர வீறுகொண்ட மக்கள் இனியும் அடங்கி ஒடுங்க விரும்பவில்லை. சிறு தீயாய்க் கனிந்துகொண்டிருந்த புரட்சி எரிமலையாய்க் குமுறி வெடித்தது. 1942இல் நடந்த ஆகஸ்டுப் புரட்சி ஆங்கில அரசின் கட்டுகளை மீறி எங்கும் பரவிற்று. "வெள்ளையனே வெளியேறு!" என்ற குரல் நாடெங்கும் எதிரொலித்தது. இளைஞர்கள் போர்க்கோலம் கொண்டனர். "செய்து முடிப்போம் அல்லது செத்து மடிவோம்" என்று வஞ்சினம் புகன்றனர்.

'இதந்தரு மனையின் நீங்கி
இடர்மிகு சிறைப்பட் டாலும்
விதந்தரு கோடி இன்னல்
விளைந்தெனை அழித்திட் டாலும்
பதந்திரு இரண்டும் மாறிப்
பழிமிகுந் திழிவுற் றாலும்
சுதந்திர தேவி! நின்னைத்
தொழுதிடல் மறக்கி லேனே!'

என்னும் தேசியகவி சுப்பிரமணிய பாரதியாரின் வாக்கே அவர்தம் நெஞ்சில் மந்திரமாய் ஒலித்துக் கொண்டிருந்தது.

கொதிக்கும் பாலை நீர் விட்டு அடக்கலாம். கொந்தளிக்கும் கடலை எந்த நீர் கொண்டு விளாவ முடியும்? நிலைமை கட்டுக் கடங்காமற் போயிற்று. 'இனியும் இந்தியாவை ஆள முடியாது' என்னும் உண்மையை வெள்ளையர்கள் விரைவில் உணர்ந்தனர். உடன்பாட்டுப் பேச்சு நடத்தவும் ஒத்துக்கொண்டனர்.

ஆங்கில அரசு மூவர் அடங்கிய குழு ஒன்றை இந்தியாவிற்கு அனுப்பிச் சிக்கலைத் தீர்க்க முயன்றது. இக்குழு இந்தியர்களின் உரிமைக்குரலை மறுக்க வழியின்றி ஏற்றது. இந்தியர்களுக்கு ஆட்சியுரிமை அளிக்கும்வரை வைசிராய் ஒருவரின்கீழ் இருந்து இந்தியரே ஆண்டுவரலாம் என்று ஆங்கில அரசு கூறிற்று. 1946இல் பண்டித ஜவஹர்லால் நேரு இடைக்காலச் சர்க்காரை அமைத்தார்.

காலம் கனிந்தது; உலக அரசில் இருந்த அரசியல் சூழ்நிலைகளும் மாறின. ஆங்கில அரசு விடுதலை தர முன்வந்தது.

1947ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்கள் பதினைந்தாம் நாள் இந்தியத்தாயின் அடிமை விலங்கு உடைத்தெறியப்பட்டது. அடிமை இருளில் மூழ்கியிருந்த நாம் சுதந்திரஞாயிற்றின் ஒளிக் கதிர்பட்டு, புதுவாழ்வு பெற்றோம். விடுதலை பெற்ற இந்திய நாட்டின் பிரதமராக நேரு பொறுப்பேற்றார். எங்கும் சுதந்திரம் என்பதே பேச்சாயிற்று.

கடந்த காலத்தின் வீரம் செறிந்த இத் தியாக வரலாறு நம் பொறுப்புணர்வை நாளும் வளர்க்குமாக!

அருஞ்சொற்பொருள்:

வீறு-எழுச்சி, செந்நீர்-இரத்தம், கனல்-நெருப்பு, ஊர்த் தால்-கடையடைப்பு, குருதி-இரத்தம், இடர்-துன்பம், இன்னல்-துன்பம், விளாவுதல்-கலத்தல், ஞாயிறு-சூரியன்.

வினாக்கள்:

1. தேசிய இயக்கம் எப்படி உருவாயிற்று?
2. பாலகங்காதர திலகர் பற்றி நீவிர் அறிவன யாவை?
3. காந்தியடிகளின் ரவுலட் சட்ட எதிர்ப்புப்பற்றி எழுதுக.
4. 'பஞ்சாப் படுகொலை' யாவது யாது?
5. சிறுகுறிப்பு வரைக:
   (அ) ஒத்துழையாமை இயக்கம்
   (ஆ) அந்நியத் துணிப் புறக்கணிப்பு
   (இ) சட்ட மறுப்பு இயக்கம்
6. 1942-ஆகஸ்டுப் புரட்சி பற்றி நீவிர் அறிந்தவற்றை வரைக.
7. நம் நாடு விடுதலை பெற்றது எப்போது?

## 7. மற்றுமொரு புத்தாண்டுப் பிறப்பு

(திரு. ஜவஹர்லால் நேரு—
தமிழாக்கம்: திரு. ஒ. வி. அளகேசன்)

புத்தாண்டுப் பிறப்பு நாள்,
1-1-1933.

அன்புள்ள இந்திரா,

இன்றைக்குப் புத்தாண்டு பிறக்கிறது. நாம் வசிக்கும் இப் பூமி சூரியனை இன்னுமொரு சுற்றுச் சுற்றிவிட்டது. அதற்குச் சிறப்பான நாள்களோ, விடுமுறை நாள்களோ இல்லை. அகன்ற வெளியில் ஒரே வேகமாக அஃது ஓடிக்கொண் டிருக்கிறது. அதன்மீது ஊரும் எண்ணற்ற சிற்றுயிர்களாகிய நமக்கு என்ன நேருமோ என்று அது கவலை கொள்வதில்லை. ஆனால், நாமோ - ஆடவரும் பெண்டிரும் - கடவுள் படைப்பி லேயே நம்மைவிட மேலானவர்கள் இல்லை என்றும், நாமே இவ் வுலகத்தின் ஆணியென்றும் முட்டாள்தனமாக எண்ணிக் கொண்டு ஒருவரை யொருவர் வெட்டி மடிகிறோம். நிலமகள்

தன் குழந்தைகளாகிய நம்மைப் புறக்கணிக்கிறாள். ஆனால், நம்மை நாம் புறக்கணிப்பதற்கில்லை. புத்தாண்டு பிறந்த நாளாகிய இன்று பலர் தங்களுடைய வாழ்க்கைப் பயணத்தில் சற்றே ஓய்வெடுத்துக்கொண்டு சென்ற காலத்தையும் வரும் காலத்தையும் பற்றி ஆர அமரச் சிந்தித்துத் தீரத் தெளிய முயல்வது இயல்பு. ஆகவே, நானும் இன்று சென்ற காலச் சிந்தனையில் மனத்தை ஓட்டிவிட்டிருக்கிறேன். சிறையில் இஃது எனக்கு மூன்றாவது தொடர்ச்சியான புத்தாண்டுப் பிறப்பு. இடையில் நான் பல திங்கள் வெளி உலகில் உலவிக் கொண்டிருந்தேன் என்பது உண்மையே. இன்னும் பின் தள்ளிப் பார்த்தால் கடந்த பதினோர் ஆண்டுகளில் ஐந்து புத்தாண்டுப் பிறப்புகளுக்கு நான் சிறையில் இருந்திருக்கிறேன். இன்னும் எத்தனை காலம் சிறையிலிருந்து இன்னும் எத்தனை ஆண்டுப் பிறப்புகளை நான் சிறையில் கழிக்க வேண்டியிருக்குமோ!

ஆனால், சிறைச்சாலை மொழியில் நான் இப்போது ஒரு 'கறுப்புக் குல்லா;' அதுவும் சரியான 'கறுப்புக் குல்லா.' எனக்குச் சிறை வாழ்க்கை பழக்கமாகிவிட்டது. என்னுடைய சிறை வாழ்க்கை என் வெளியுலக வாழ்க்கைக்கு முற்றிலும் மாறானது. வெளியில் என்னுடைய வாழ்க்கை ஒரே வேலைமயம்; சுறுசுறுப்பு மயம்; வெளியில் சுற்றுப் பயணமும் பொதுக் கூட்டங்களும் மேடைப்பேச்சுக்களுமாக என் பொழுது போய்க் கொண்டிருக்கும். இங்கோ, எல்லாம் மாறாயிருக்கின்றன. 'ஓம் சாந்தி; சாந்தி; சாந்தி' தான். சிறையில் இடப் பெயர்ச்சிக்கு இடமேது? இங்கு நான் நீண்ட நேரம் இப்பக்கம் அப்பக்கம் அசையாமல் ஒரே இடத்தில் உட்கார்ந்து கொண்டிருக்கிறேன். நெடுநேரம் பேசாமல் அமைதியாகவும் இருக்கிறேன். நாள்களும் வாரங்களும் மாதங்களும் ஓடிக் கொண்டே இருக்கின்றன. அவை ஒன்றில் மற்றொன்று கலந்து விடுகின்றன. அவற்றைப் பிரித்தறியக் கூடியது எதுவும் இங்கு நிகழ்வதில்லை.

சிறையில் சென்ற காலம் புகையுண்ட ஓவியம் போலக் காட்சி அளிக்கிறது. அதில் விளங்கித் தோன்றுவது ஒன்றுமில்லை. சிறையில் நேற்றைய தினம் என்பது கைதியான தினந்தான். இடையில் மனத்தைக் கவரக் கூடியது ஏதேனும் இருந்தால்தானே! எல்லாம் ஒரே சூனியம். சிறை வாழ்க்கை மர வாழ்க்கை. மரம் ஒரே இடத்தில் வேரூன்றி விடுகிறது.

அஃது இடம் விட்டு இடம் பெயர்வதில்லை; பேசுவது இல்லை; அதைப்பற்றி நினைப்பாருமில்லை; பேசுவாருமில்லை. அதைப் போலத்தான் சிறையிலிருப்பதும். சிறையிலிருப்பவர்களுக்கு வெளியுலக நிகழ்ச்சிகள் வேடிக்கையாகவும் சிறிது திகைப்பே உண்டு பண்ணுவனவாகவும் இருக்கின்றன. அவை தூரத்தே நிகழும் வெறும் மாயத் தோற்றங்களாக அவர்கள் கண்களுக்குத் தென்படுகின்றன. ஆகவே ராபர்ட் லூயி ஸ்டீவென்சன் எழுதியுள்ள கதையில் வரும் டாக்டர் ஜெகில், மிஸ்டர் ஹைட் என்னும் பாத்திரங்களைப் போல, நாங்களும் சுறுசுறுப்பும் சும்மா இருப்பதும் ஆகிய இரு இயல்புகளையும் இருவகை வாழ்க்கைகளையும் இரண்டு உருவங்களையும் உடையவர்கள் ஆகிறோம்.

நாள் செல்லச் செல்ல எல்லாம் பழக்கமாகிவிடுகின்றன. சிறை வாழ்க்கையும் அப்படித்தான். சிறையின்மாறுபாடில்லாத செயல் நாளாவட்டத்தில் முறை ஆகிவிடுகிறது. ஓய்வு உடம்புக்கு நல்லது. அமைதி மனத்துக்கு நல்லது. மன அமைதியினின்றே நற்சிந்தனைகள் பிறக்கின்றன. 'ஓய்வு நல்லது தான். ஆனால், அளவுக்கு மீறினால் அதுவும் பொறுக்க முடியாததாகிவிடும்' என்னும் பொருளுள்ள ஒரு பிரெஞ்சுப் பொன்மொழி உண்டு. சிறையில் உனக்குக் கடிதங்கள் எழுதும் இவ் வேலை எனக்கு எவ்வளவு ஆறுதலாய் இருந்துவந்திருக்கிறது என்பது இப்போது உனக்கு விளங்கியிருக்கும் என்று நம்புகிறேன். இக் கடிதங்கள் உனக்குப் பிடிக்காமலிருக்கலாம்; அலுப்பும் சலிப்பும் உண்டாக்கலாம். ஆனால், இவை என்னுடைய சிறை வாழ்க்கையின் சூனியத்தைப் போக்கி எனக்கு அளவற்ற இன்பத்தைக் கொடுத்துள்ளன. சரியாக இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர், ஆண்டுப் பிறப்பன்று, நைனிச் சிறையில் நான் இவற்றை எழுதத் தொடங்கினேன். அங்கிருந்து விடுதலையாகி வெளியிலிருந்தபோது எழுதவில்லை. மீண்டும் சிறைக்கு வந்ததும் தொடர்ந்து எழுதலானேன். சில சமயம் வாரக் கணக்காக ஒன்றும் எழுதமாட்டேன். சில சமயம், நாள்தோறும் தவறாமல் எழுதுவேன். எழுதும் ஆர்வம் பிறக்கும்போது, கையில் பேனாவையும் காகிதத்தையும் எடுத்துக்கொண்டு உட்கார்ந்துவிட்டால் அது தன்பாட்டில் ஓடிக்கொண்டே இருக்கும். அப்போது நான் ஒரு தனி உலகில் சஞ்சரிப்பேன். அந்த உலகில் என் கண்ணாகிய நீதான் எனக்குத் துணை. அங்கே சிறைக் கட்டும் சிறைக்

காவலும் இல்லை. ஆகவே, இக் கடிதங்கள் எழுதுவதை நான் சிறையிலிருந்து தப்பித்துக்கொள்ளும் நேரமாகக் கருதுகிறேன்.

இப்போது நான் எழுதும் கடிதத்தின் எண் 120. ஒன்பது மாதங்களுக்கு முன் பரில்லி சிறையிலேதான் இக் கடிதங்களுக்கு எண் குறிக்கத் தொடங்கினேன். இதுவரையில் எழுதியிருப்பவையே இவ்வளவு ஆகிவிட்டனவே என்று எனக்கே வியப்பாயிருக்கிறது. இக்கடிதங்கள் அனைத்தும் மலை போல உன் தலைமீது விழுகிறபோது நீ என்ன நினைப்பாய்? என்ன சொல்லுவாய்? ஆனால், இவ்வாறு நான் சிறையிலிருந்து தப்பித்துக் கொண்டு புறம்போந்து சஞ்சரிப்பதுபற்றி நீ மனத்தாங்கல் அடையமாட்டாய் என்று நம்புகிறேன். என் செல்வமே! நான் உன்னைப் பார்த்து ஏழு மாதங்களுக்கு மேல் ஆகிவிட்டனவே! அந்தக் காலம் ஏழு யுகம் போலல்லவோ எனக்குத் தோன்றுகிறது!

என்னுடைய கடிதங்களில் உள்ள கதை இன்பமானதன்று. சரித்திரமே இன்பமானதன்று. மனிதன், தான் என்னமோ மிகப் பெரிய முன்னேற்றம் அடைந்துவிட்டதாகப் பெருமை பாராட்டிக் கொண்டாலும், இன்னும் சண்டைபோடும் சுயநல விலங்காகத்தான் இருக்கிறான். ஆயினும், மனிதனுடைய போர்க் குணம், சுயநலம், ஈவிரக்கமற்ற அரக்கத்தன்மை என்னும் நீண்ட இரவினிடையில் முன்னேற்றம் என்னும் ஒளி இடைவிடாது மின்னிக் கொண்டுதான் இருக்கிறது. நன்மை வாதத்தில் நான் ஓரளவு நம்பிக்கை உடையவன். அஃதாவது, 'எல்லாம் நன்மைக்கே,' என்னும் எண்ணம் கொண்டவன். ஆனால், நன்மை வாதம், நம்முடைய குற்றங் குறைகளை நாம் தெரிந்துகொள்ளாதபடி நம்மைக் குருடாக்கிவிடக் கூடாது. அறிவற்ற நன்மை வாதம் நம்மை ஆபத்திலேதான் கொண்டுவிடும். ஏனெனில், உலகத்தின் இறந்த காலத்தையும்,நிகழ்காலத்தையும் உன்னிப் பார்க்கும்போது நன்மை வாதத்துக்கு அதிக இடம் இருப்பதாகத் தோன்றவில்லை. இலட்சியவாதிக்கும், குருட்டு நம்பிக்கை கொள்ளாதவனுக்கும், இவ் வுலகம் அவ்வளவு நலமான இடமன்று. பல்வகை வினாக்கள் எழுகின்றன. அவை ஒன்றிற்கும் நேரான விடை கிடைப்பதில்லை. பல்வகை ஐயங்கள் தோன்றுகின்றன. அவை எளிதில் தீர்வதில்லை. உலகில் இவ்வளவு அறியாமையும் துன்பமும் மலிந்திருக்கக்

காரணம் என்ன? இது மிகவும் பழைய கேள்வி. இக் கேள்வி 2500 ஆண்டுகளுக்கு முன் நம் நாட்டில் தோன்றிய இளவரசன் சித்தார்த்தனை வாட்டியது. அவன் ஞான ஒளி பெற்றுப் புத்தனுகுமுன் இக் கேள்வியைப் பல முறை திருப்பித்திருப்பிக் கேட்டுக்கொண்டான் என்று சொல்லப்படுகிறது. அவன் பின்வருமாறு கேட்டுக்கொண்டானும்:

'பரப்பிரமம் உலகைப் படைத்து அதைத் துன்பத்தில் நிலை பெறுத்துகிறது என்பது எப்படிப் பொருந்தும்? அ∴து எல்லாம் வல்லதாயிருந்து, உலகை இவ்வாறு விட்டு வைக்குமாயின் அதை நல்லதென்று சொல்ல முடியாது. அன்றி அ∴து எல்லாம் வல்லது அல்லதாயின் அதன் இறைமைக்கு இழுக்கு நேரிடுகிறது.

நமது சொந்த நாட்டில் உரிமைப் போர் நடந்து வருகிறது. ஆயினும், நம்முடன் பிறந்த நம் நாட்டவர் பலர் அதைப்பற்றிச் சிந்திக்காமல் தங்களுக்குள் சொற்போரும் மற்போரும் நிகழ்த்துகிருர்கள். அவர்கள் நாட்டின் பரந்த நன்மையை மறந்து சாதி என்றும், மதம் என்றும், வகுப்பு என்றும், குறுகிய நினைவு கொள்ளுகிருர்கள். சிலர் விடுதலை நினைப்பு அறவே நீங்கியவர்களாய்ப் பகைவன் காலில் விழுந்து பணிந்து எச்சில் நச்சும் நாய்வாழ்வு வாழ்ந்துவருகிருர்கள்.

சட்டத்தின் பெயராலும் ஒழுங்கின் பெயராலும் கொடுங் கோன்மை கோல் ஓச்சுகிறது. அதற்குப்பணிய மறுக்கிற வர்களை அது மிதித்து நசுக்குகிறது. ஏழைஎளியவர்க்குப் புகலிட மாயிருக்க வேண்டிய சட்டமும் ஒழுங்கும் அவர்களை வருத்து வோர் கையில் ஆயுதமாய் விளங்குவது விந்தையே. இக் கடிதத் தில் ஏற்கெனவே சில மேற்கோள்கள் எடுத்தாண்டிருக்கிறேன். 18ஆம் நூற்ருண்டில் வாழ்ந்த பிரெஞ்சுத் தத்துவ அறிஞராகிய மாண்டெஸ்கியு எழுதிய ஒரு நூலில் ஈண்டு நான் கூறும் கருத் தையே கூறியிருக்கிருர். அவரைப்பற்றி முன் கடிதங்களுள் ஒன்றில் கூறியுள்ளேன். அவருடைய கூற்று நமது தற்கால நிலைக்கு மிகவும் பொருத்தமாக இருக்கிறது.

இக் கடிதம் ஒரே அழுகையும் புலம்பலும் ஆகிவிட்டது. புத்தாண்டுப் பிறப்பன்று எழுதும் ஒரு கடிதம் துக்கத்தில் தோய்ந்திருப்பது சிறிதும் தகாது. உண்மையில் நான் சிறிதும்

வருத்தப்படவில்லை. நான் ஏன் வருத்தப்பட வேண்டும்? ஒரு பெரிய இலட்சியத்துக்காகப் போராடும் இன்பம் நமக்கு இல்லையா? நாம் பெற்றுள்ள தலைவரைப் போன்ற ஒரு தலைவரை உலகில் வேறு யார் பெற்றிருக்கிறார்கள்? அவர் ஒப்புயர்வற்ற உத்தமர்; அன்புமிக்க தோழர்; நெறிபிறழா வழிகாட்டி; அவருடைய பார்வை நமக்குப் பலமளிக்கிறது. அவருடைய பரிசம் நம்மைப் பரவசமாக்குகிறது. 'வெற்றி செயலுக்குண்டு' என்னும் உறுதியை நாம் பூண்டுள்ளோம். இப்பவோ பின்னையோ அதை நாம் அடையவே போகிறோம். கடப்பதற்குத் தடைகளும் வெல்வதற்குப் போர்களும் இல்லையெனில் வாழ்க்கை கசந்து போய்விடும். அதில் சுவையோ பொலிவோ இராது.

என் அன்பே! நீயோ வாழ்க்கையின் வாயிலில் நின்று கொண்டிருக்கிறாய். துக்க நினைவென்பதே உனக்கு ஆகாது. புன்முறுவலும் அமைதியும் பூத்த முகத்துடன் நீ வாழ்க்கையை எதிர்கொள்ளவேண்டும்; வாழ்க்கையின் துன்பங்களையும் நீ வரவேற்க வேண்டும். ஏனெனில் அவற்றை வென்று முன்னேறுவதில் இன்பம் உண்டன்றோ?

சரி குழந்தாய்! போய் வருகிறேன்.

## அருஞ்சொற்பொருள்:

சிற்றுயிர் (சிறுமை+உயிர்)-சிறிய வாழ்நாளை உடைய உயிர்கள்; புறக்கணிக்கிறான்-கைவிடுகிறான், முற்றிலும்-முழுவதும், பெயர்ச்சி - மாறுதல், இறைமை - தலைமை, போந்து - வந்து. பிறழா-தவறாத.

## வினாக்கள்:

1. புத்தாண்டுப் பிறப்பன்று மக்கள் சிந்திக்க வேண்டுவது யாது?
2. வெளியுலக வாழ்க்கைக்கும் சிறை வாழ்க்கைக்கும் உள்ள வேறுபாடுகளை ஆசிரியர் எங்ஙனம் விளக்கியுள்ளார்?
3. சிறைவாழ்வின் சூனியத்தைப் போக்க ஆசிரியர் மேற்கொண்ட செயல்கள் யாவை?
4. 'எல்லாம் நன்மைக்கே' என்ற கொள்கையைக் குறித்து ஆசிரியர் கூறுவன யாவை?
5. நேரு அவர்கள் காந்தியடிகளின் தலைமையைக் குறித்துக் கூறுவது யாது?

## 8. கலைச்சுவையும் கலையுணர்வும்

### (டாக்டர் மு. வரதராசனர்)

புலன்களுக்கும் புலன்களின் வாயிலாக மனத்திற்கும் இன்பம் தருவதைக் குறிக்க முன்னோர் ஒரு சொல்லைத் தேடினர். அதைத் தமிழில் 'சுவை' என்றனர். அதுவே கலை தரும் இன்பம் எனலாம். வாழ்க்கையில் உள்ள அனுபவத்திற்கு ஏற்ப அச் சுவையைப் பலவகையாகப் பாகுபாடு செய்தனர்.

தொல்காப்பியனர் அவை புலப்படும் வகையை விளக்கு மிடத்து, எட்டு வகை மெய்ப்பாடுகள் எனக் கூறியுள்ளார்.

'நகையே அழுகை இளிவரல் மருட்கை
அச்சம் பெருமிதம் வெகுளி உவகை என்று
அப்பால் எட்டே மெய்ப்பாடு என்ப.'

இந்த எட்டும் வாழ்க்கையில் வெவ்வேருக இருப்பினும், கலைத்துறையில் இவை யாவும் அளிக்கும் பயன் ஒன்றே. அதுவே கலையின்பம் எனப்படுவது. அக்கலையின்பத்திற்கு உரிய கவர்ச்சித் தன்மையையே அழகு (beauty, aesthetics) என்ற சொல்லால் ஐரோப்பிய அறிஞர் வழங்கிவருகின்றனர்.

"அழகைப்பற்றி விளக்கும் அறிஞர் ஒவ்வொருவரும் தம் விருப்பம்போல் எடுத்துரைக்கின்றனர். தம் விருப்பு வெறுப்பு களை அகற்றி நடுநிலையில் நின்று 'அழகு இன்னது' என்று தெளிவாகக் கூறல் வேண்டும். அத்தகைய முயற்சி இன்று வளர வில்லை. அதனல், அழகைப்பற்றியும் அழகை உணரும் மன நிலைபற்றியும் அதன் மதிப்பீடுபற்றியும் தவருன கருத்துகள் பல இடம்பெற்றுள்ளன. எதிர்காலத்தில், நடுநிலையான ஆராய்ச்சியின் பயனுக உண்மைகள் தெளிவாகும் போது, இக்காலத்தினரின் கொள்கைகள் மதிப்பிழந்து போகும்," என்கிருர் அறிஞர் ஜே. ஏ. ரிச்சர்ட்ஸ்.

கலையைப்பற்றியும் கலை நல்கும் அழகு விருந்து பற்றியும் ஏ. சி. பிராட்லே என்னும் ஆராய்ச்சியாளர் விளக்குமிடத்து, அஃது இந்த நனவுலகத்தின் ஒரு பகுதி அன்று என்றும், அது முழுமையும் உரிமையும் உள்ள ஒரு தனி உலகம் என்றும் கூறுகின்ருர். ஆயின், அறிஞர் ஜே. ஏ. ரிச்சர்ட்ஸ் அத்தகைய

கருத்துகளை வெறுத்துரைக்கின்றார். அவ்வாறு உணர்ச்சி வயப்பட்டுப் புனைந்து கூறுவதால் உண்மை காண்பதற்கு இடர்ப்பாடுகள் பெருகும் என்பது அவருடைய கருத்து.

அழகாகக் கலையைப் படைத்து மகிழ்விப்பது வேறு. அந்த அழகு இன்னது என்று விளக்குவது வேறு. அவ்வாறு விளக்கும் போது, உணர்ச்சி வயப்பட்டு மயங்காமல், அறிவியல் நெறியில் நின்று ஆராய்ந்து தெளிவாகக் கூறுதலே கடமையாகும்.

கண்ணுக்குப் புலனாகும் கவர்ச்சித் தன்மையை மட்டும் அழகு என்று பிற இடங்களில் வழங்குகிறோம். ஆனால், கலைத் துறையில் அழகு என்பது மிக விரிவான பொருளில், செவி முதலிய புலன்களுக்கு உரிய கவர்ச்சித் தன்மையையும் குறிக்க வழங்குகிறது. இனிமை மிகுந்த ஓசையையும் நயமான அசைவையும் குறிக்கவும் அழகு என்ற சொல்லே வழங்குகிறது. புலன்களுக்கு இன்பம் தருவனவற்றையெல்லாம் 'அழகு' எனக் குறிக்கின்றனர்.

அக்கருத்தின்படி, ஓவியத்திலும் சிற்பத்திலும் மட்டுமல்லாமல், இசையிலும் இலக்கியத்திலும் அழகு உண்டு என்பர். உணர்ச்சிக்கு ஏற்றவாறு பொருந்த அமைந்த ஒலி நயத்தை அழகானது என்பர். உரிய இடத்தில் தக்க பொருளில் அமைந்த சொல்லையும் அழகான சொல் என்பர்.

அழகு எங்கு உள்ளது? பொருள்களில் உள்ளதா? பொருள்களைப் புலன்கள் வாயிலாக நுகரும் மனத்தில் உள்ளதா? இதில் கருத்து வேறுபாடு உண்டு. அழகு, பொருள்களின் பண்பு அன்று என்றும், கலையின் பண்பு அல்லது கலைஞரின் மனத்தின் பண்பு எனக் கூறவேண்டும் என்றும் ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர். பொருள்களில் அழகு இல்லை என்பதும், புலன்களின் வாயிலாக மனமே அவற்றில் அழகை அமைத்துக் கொள்கிறது என்பதும் அவர்களின் கொள்கைகள்.

இத்தாலி நாட்டில் நெடுங்காலம் வரையில் மலைக்காட்சி அழகு உடையதாகப் போற்றப்படவில்லை. அக்காலத்தினர் மலையை வெறுத்தனர்; போக்குவரத்துக்கு இடையூறானது என்றும் ஆபத்தும் களைப்பும் விளைப்பது என்றும் அதை ஒதுக்கினர்; கலை மறுமலர்ச்சி ஏற்பட்ட பிறகே அந்நாட்டினர்

மலைக்காட்சியை அழகுள்ளதாகப் போற்றிப் பாராட்டக் கற்றனர் என்பர்.

ஆகவே, கலைப்பயிற்சியால் அழகுணர்ச்சி வளர்கிறது என்றும், மனம் பொருள்களிடத்தில் அழகைப் படைத்து மகிழ்கிறது என்றும், மனத்தின் அனுபவத்தை விட்டுப் பொருள்களிடத்தில் தனியே அழகு இல்லை என்றும் கொள்ளலாம்.

நாவால் உணரும் சுவையை எடுத்துக்காட்டாகக் கொண்டு இதனை ஆராய்வோம். சுவை எங்குள்ளது ? உணவில் இடும் உப்பில் உள்ளதா ? நாவில் உள்ளதா ?

உப்பில் உள்ளது எனின், உப்பு இட்டு உண்ணக் கற்றதற்கு முன் நா உணவில் சுவை காணவில்லையா ? சிலர் சிறிது உப்புச் சேர்த்து மகிழவும், வேறு சிலர் சிறிது கூடுதலாகச் சேர்த்து மகிழவும் காரணம் என்ன ? சுவை இன்பம் உப்பில் இருப்பதாயின், இவ்வேறுபாட்டிற்கு இடமில்லையே. ஆகவே, ஓர் அளவாக உப்புச் சேர்த்துப் பயின்ற நாவின் பழக்கம் சுவை இன்பத்திற்குக் காரணமாக இருக்கக் காண்கிறோம். அந்த அளவாக உப்புச் சேர்த்தலை ஏன் சுவை இன்பம் என்று கொள்கின்றோம் ? காரணம் நமக்குத் தெரியாது. நாவிற்கே தெரியும்.

அவ்வாறே, ஓவியத்தைக் கண்டோ இசையைக் கேட்டோ மகிழும்போது, நம் மகிழ்ச்சிக்குக் காரணம் என்ன என்பது நமக்கே தெரிவதில்லை. மகிழ்கின்றோம் என்பது தெரியும்; மகிழ்ச்சிக்குக் காரணம் தெரியாது. கலைஞர்க்கும் தெரியாது: கலைமனத்திற்குத் தெரியும். ஆயின், அந்த மனத்திற்கும் அதை விளக்கிக் கூறல் தெரியாது.

சுவை உணர்வு எல்லோருக்கும் இயற்கையாய் அமைந்திருப்பது போலவே கலை உணர்வும் எல்லோருக்கும் இயற்கையாக அமைந்திருக்கிறது. சிலர் நுட்பமான சுவை வேறுபாடுகளையும் உணர வல்லவர்களாக இருத்தல் போல் ஒருசிலர் கலைத்திறன் மிக்கவர்களாக உள்ளனர். நாவின் சுவை உணர்வு, உண்டு பயிலும் பயிற்சியால் வளர்வது போல், கலைத்திறனும் கலைப் பயிற்சியால் வளர்வது உண்டு.

நுகரும் தகுதி எல்லோருக்கும் உண்டு; பயிற்சியும் திறனும் ஒரு சிலர்க்கே உண்டு. எல்லோருக்கும் தகுதி இருத்தலால்தான் எல்லோரும் உணவின் சுவையை உணர

முடிகின்றது. எல்லோருக்கும் கலை உணர்வு ஓரளவு இருப்பதால்தான் இசை, ஓவியம் போன்ற கலைகளை எல்லோரும் போற்ற முடிகிறது. ஒரு சிலர்க்கே பயிற்சியும் திறனும் மிகுதியாய் இருப்பதால் அவர்கள் மட்டுமே சுவையாகச் சமைக்க வல்லவர்களாகவும் சுவை நுட்பம் உணர்பவர்களாகவும் இருக்கிறார்கள். இசை, நாடகம் முதலிய கலைகளிலும் ஒருசிலரே படைக்கும் கலைஞராகவும் திறனாய்வாளராகவும் விளங்குகின்றனர்.

உணவை மேற்போக்காக நுகர்வோர் பலராகவும், ஆய்ந்து நுகர்வோர் சிலராகவும், படைத்து மகிழ்வோர் ஒருசிலராகவும் இருத்தல் போலவே, கலையிலும் மேற்போக்காக நுகர்வோரும் ஆழ்ந்து நுகர்வோரும் படைத்து நுகர்வோரும் உள்ளனர். அவர்களுக்குள் கலைத்திறனில் வேறுபாடு இருந்தபோதிலும், எல்லோருக்கும் கலை உணர்வு சிறிதளவேனும் அமைந்திருத்தல் உண்மையாகும். அவை ஒரு சிறிதும் அமையப்பெறாதவர்கள், கலையை மேற்போக்காகவும் நுகர்தல் இயலாது.

கலைக்கு உரிய உணர்வு நம் உள்ளத்தே ஓரளவு அமைந்திருத்தலால்தான் சிறந்த கலைஞர்களின் படைப்புகளையும் நாம் ஓரளவு உணர முடிகின்றது. ஓவியம், நாடகம், இசை, பாட்டு முதலிய எல்லாக் கலைகளுக்கும் இந்த உண்மை பொருந்துவதாகும்.

**அருஞ்சொற்பொருள் :**

நல்கும்-வழங்கும், நனவுலகம்-விழித்திருக்கும் நிலையில் நாம் காணும் உலகம், திறனாய்வாளர்-விமர்சகர்.

**வினாக்கள் :**

1. சுவை புலப்படும் வகையைத் தொல்காப்பியர் எவ்வாறு விளக்கிக் கூறியுள்ளார் ?
2. அழகுபற்றி அறிஞர் ஜே. ஏ. ரிச்சர்ட்ஸ் கூறுவது யாது ?
3. அழகு என்பதன் விரிவான பொருளை விளக்குக.
4. அழகு எங்கு உள்ளது? எடுத்துக்காட்டுடன் விளக்குக.
5. நாவின் சுவை உணர்வைப்பற்றி ஆசிரியர் யாது கூறுகிறார் ?
6. மேற்போக்காக நுகர்வோர், ஆழ்ந்து நுகர்வோர், படைத்து மகிழ்வோர்—இவரிடையேயுள்ள நுட்பமான இயல்புகளை விளக்குக.

# 9. சுப்பிரமணிய சிவா

## [திரு. கருப்பையா]

நல்லதைச் செய்யும் நாட்டம் உடைய மக்கள் வாழும் நாடு சிறப்புப் பெறும். பல நூற்றாண்டுகளாக நிலவிய அரசியல் அடிமைத்தனத்தையும் அடக்குமுறையையும் நீக்கும் சீரிய பணியில் தம்மை முழுமையாக ஈடுபடுத்திக்கொண்ட சுப்பிரமணிய சிவா போன்ற தியாகசீலர்களால் நமது நாடு பெருமை பெற்று விளங்குகின்றது.

தமிழ்நாட்டுத் தலைவர்களில் சுப்பிரமணிய சிவா எவருக்கும் இரண்டாமவர் அல்லர். அவரைப்போன்ற தியாகிகள் அனைத் திந்திய அளவிலேகூடப் பலர் இல்லை. அவரது தியாகமும் தொண்டும் ஈடு இணையற்றவை. அவரது வாழ்க்கை வரலாறு விடுதலை இயக்கத்தின் தொடக்கக்காலக் காவியம். வட இந்தியாவில் உறுதியான தேசிய எழுச்சியை உருவாக்கிய வர்கள் பால கங்காதர திலகர், விபின் சந்திர பாலர், லாலா லஜபதி ராய் என்றால், தென்னிந்தியாவில் வ. உ. சிதம்பரனாரும் சுப்பிரமணிய சிவாவும் சுப்பிரமணிய பாரதியாரும் அந்தப் பணியைச் செய்தார்கள்.

சுப்பிரமணிய சிவா வீரம் செறியும் பேச்சாளர்; எடுத்ததை இனிதே முடிக்கும் செயல்வீரர்; அவரது தீரச் செயல்கள் அன்னிய ஆட்சியாளரைக் கதிகலங்க அடித்தன. அவரது வீரம் மராட்டிய மாவீரன் சிவாஜியை நினைவுபடுத்தும்; அவரது சமய மறுமலர்ச்சிப் பணி சுவாமி விவேகானந்தரை நினைக்கத் தோன்றும்; அவரது நாட்டுப் பற்று திலகர் பெருமானுக்கு இணையானவர் அவர் என்பதை எடுத்துக் காட்டும். 1908ஆம் ஆண்டிலேயே 'இந்திய நாடு முழு உரிமை பெற வேண்டும் என்பதே எனது லட்சியம்,' என்று முழங் கியவர் அவர். அவரது துறவிக்கோலமும் துடிதுடிப்புப் பேச்சும் சமயக் கருத்துகளைத் தேசிய வீரக்கனலாக்கிய அதிசயத் திறனும் துணிவும் தமிழ்நாட்டில் தேசிய உணர்ச்சி வெள்ளத்தைத் தோற்றுவித்தன.

மதுரை மாவட்டத்தில் வத்தலக்குண்டு என்ற ஊரில் 1884ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்கள் 14ஆம் நாளன்று சுப்பிரமணிய சிவா பிறந்தார். அவர் தந்தையாரின் பெயர் ராஜமையர்; தாயாரின் பெயர் நாகம்மாள். தாய்வழிப் பாட்டனர் அய்யம்பாளையம் என்னும் கிராமத்தில் கிராம அதிகாரியாக இருந்தார். சுப்பிரமணிய சிவா குழந்தைப் பருவத்தில் அவரிடம் வளர்ந்தார்; பின்னர் மதுரை நகரில் சேதுபதி உயர்நிலைப் பள்ளியில் படித்தார். குடும்பத்தினர் வறுமை மிகுந்து திருவனந்தபுரம் சென்றூர்கள். அங்கு அவர் தொடர்ந்து படித்தார். 1899ஆம் ஆண்டில் அவருக்குத் திருமணம் நடந்தது.

அவர் பள்ளியில் படித்த காலத்தில் இலக்கிய அறிவைத் திறம்பட வளர்த்துக்கொண்டார். பள்ளியில் மன்றங்கள் அமைத்துச் செயலாளராகப் பணியாற்றினர். அவருக்கு இயற்கையிலேயே அமைந்திருந்த சமயப்பற்று மேலும் வளர்ந்தது. நல்ல உடற்கட்டு வாய்ந்த அவர் துணிவு மிக்கவராகவும் விளங்கினர். பாரதியாரைப்போல அவர் மீசை வைத்துக்கொண்டார்.

சுப்பிரமணிய சிவாவின் உறவினர் ஒருவர் திண்டுக்கல்லில் பற்றற்ற ஞானியாக வாழ்ந்தார். பள்ளிக்கூடத்தில் கோடைக் கால விடுமுறை விடப்பட்டபோது, திண்டுக்கல்லில் இருந்த தமது தாய்மாமன் வீட்டிற்குச் சென்ற சிவா அந்த ஞானியின் அருட்பார்வைக்கு ஆளானர். அவர் சிவாவின் வாழ்க்கையில் துறவு நெறியைப் புகுத்தினர். கேரளத்தில் உள்ள கொட்டாரக் கரையில் ஒரு துறவி இருந்தார். அவர் சிவாவை வேதாந்த நெறியில் ஈடுபடுத்தினர். சிவா குடும்பப்பற்றைத் துறந்து வீட்டை விட்டு வெளியேறிவிட்டார். 1906ஆம் ஆண்டு வரையில் அவர் துறவியாகச் சுற்றித் திரிந்தார்; இராஜ யோகமும் சிறிது பயின்றூர்.

1906ஆம் ஆண்டில் வங்காளப் பிரிவினையை எதிர்த்து நாடு முழுவதும் கிளர்ச்சி நடந்தது. திலகர் கடுங்காவல் தண்டனை பெற்றூர்; லாலா லஜபதி நாடு கடத்தப்பட்டார்; விபின் சந்திர பாலர் சிறைபுகுந்தார். வடக்கே வீசிய தேசிய அலைகள் தெற்கே வந்து மோதின. சுப்பிரமணிய சிவா தேசிய

இயக்கத்தில் இரண்டறக் கலந்துவிட்டார். பாரத நாட்டின் அடிமைத்தளையை நீக்கவேண்டும் என்ற ஒரே சிந்தனையோடு அன்று முதல் அவர் பணியாற்றத் தொடங்கினர்.

திருவனந்தபுரத்தில் 'தர்ம பரிபாலன சமாஜம்' என்ற அமைப்பை ஏற்படுத்தி அதன் சார்பில் அரசியல் கூட்டங்களை அவர் நடத்தினர். உடைகளில் 'வந்தேமாதரம்' என்று நூலால் இழையோடச் செய்தார். அவர் பேச்சுகள் மக்கள் மனத்தைக் கவர்ந்தன. திருவனந்தபுரத்திலிருந்து சிவா வெளியேற வேண்டும் என்று அன்றைய மன்னராட்சியில் அதிகாரிகள் உத்தரவிட்டார்கள்.

சிவா கால்நடையாகவே கிராமம் கிராமமாகச் சென்று கூட்டங்களில் பேசினர். ஒரு வேட்டி, சட்டை, தலைப்பாகை, கைத்தடி இவையே அவரது உடைமைகள். திருநெல்வேலி மாவட்டம் முழுவதும் சிவாவின் சிம்மக்குரல் முழங்கியது. தூத்துக்குடியில் வ. உ. சிதம்பரனரும் சிவாவும் சந்தித்தார்கள். நெருப்பும் காற்றும் போல அவர்கள் இருவரும் இணைந்தார்கள். சுதேசி வெள்ளம் எங்கும் பெருக்கெடுத்து ஓடியது. அதே சமயத்தில் பாரதியாரும் சென்னையிலிருந்து தூத்துக்குடி வந்திருந்தார். சிவாவும் பாரதியாரும் சந்தித்தார்கள். சிவாவின் வீரத்தைக் கண்ட பாரதியார் சிவாவைச் 'சிவாஜி' என்று பட்டஞ்சூட்டிப் பாராட்டினர்.

சுதேசி இயக்கத்தின் வியப்புக்குரிய வளர்ச்சியைக் கண்ட அன்னிய ஆட்சியாளர் வ. உ. சிதம்பரனர், சுப்பிரமணிய சிவா ஆகிய இருவர் மீது வழக்குத் தொடர்ந்தார்கள். திருநெல்வேலியில் வழக்கு விசாரணை நடந்தது. விபின் சந்திர பாலர் விடுதலையான தினத்தன்று இருவரும் திடீரென்று கைது செய்யப்பட்டார்கள். இச்செய்தி காட்டுத்தீப்போல எங்கும் பரவியது. கடைகள் அடைக்கப்பட்டன. தொழிலாளர் வேலைநிறுத்தம் செய்தார்கள். தடையை மீறிக் கூட்டங்கள் நடத்தப்பட்டன. பாளையங்கோட்டைச் சிறையிலே வைக்கப்பட்டிருந்த வ. உ. சி. யையும் சிவாவையும் விடுதலை செய்ய மக்கட்பெருங்கூட்டம் திரண்டது. காவல்துறையினர் துப்பாக்கியால் சுட்டனர். கிளர்ச்சியும் கொந்தளிப்பும் ஒருவாறு அடங்கின.

இவையனைத்துக்கும் சிவாவும் சிதம்பரனாரும் பொறுப்பாளர்கள் என்று அன்னியராட்சி கருதியது. இரு தலைவர்கள் மீதும் இராஜத்துரோக வழக்குத் தொடரப்பட்டது. இரு தலைவர்களும் கைது செய்யப்பட்டார்கள். வழக்கு நடைபெற்றது. சிவா தமது வாக்குமூலத்தில், 'இந்தியநாட்டின் முழு விடுதலையே எனது இலட்சியம்,' என்று குறிப்பிட்டிருந்தார். சிவா அன்று அளித்த வாக்குமூலத்தை இன்று படித்தாலும் அது நம் உள்ளத்தை உருக்கும்.

சிதம்பரனாருக்கும், சிவாவுக்கும் ஆறு வருடச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. சிவா திருச்சிச் சிறையில் அடைக்கப்பட்டார். அங்குக் கம்பளி மயிர் வெட்டும் மிகக் கடுமையான வேலை சிவாவுக்குத் தரப்பட்டது. கம்பளி மயிரைச் சுண்ணும்பில் ஊறப்போட்டுக் காயவைத்து வெட்டவேண்டும். வெட்டும்போது சுண்ணும்புத் தூசு சிதறி உடல்மீது படியும். பயில்வான் போல இருந்த சிவாவின் உடல், இந்தக் கடின வேலையால் மெலிந்தது.

சிதம்பரனார் சிறையில் செக்கிழுத்தார். ஆனால், சிவா சிறையை விட்டு வெளியேறிய பின்னரும் சிறைவாசத்தின் வெளி அடையாளமாகக் கடும் தொழுநோயைப் பரிசாகப் பெற்று வாழ்நாள் முழுவதும் வருந்தினர்.

1912ஆம் ஆண்டு சிறையிலிருந்து வெளிவந்த சிவா தம் மனைவியுடன் சென்னை மயிலாப்பூரில் சிறிது காலம் வாழ்ந்தார். அப்போது சிதம்பரனாரும் மயிலாப்பூரில் வாழ்ந்துவந்தார். சுப்பிரமணிய பாரதியாரும் குடும்பத்துடன் அப்போது அங்கேயே வாழ்ந்துவந்தார். மூவரும் அடிக்கடி சந்தித்து அரசியல் தொடர்பாகப் பேசுவார்கள்.

சிவா சென்னையில் வசித்தபோது, 'ஞானபானு' என்ற திங்கள் இதழை வெளியிட்டுவந்தார். பாரதியார் அவ்விதழில் அடிக்கடி எழுதுவதுண்டு. இரண்டு ஆண்டுக் காலம் அப்பத்திரிகை நடைபெற்றது. பின்னர், 'பிரபஞ்ச மித்திரன்' என்ற வார இதழைச் சிவா தொடங்கிச் சிறிது காலம் வெளியிட்டார். அதில் பல நகைச்சுவைக் கட்டுரைகளை அவர் எழுதினர்.

சிவா சிறையில் இருந்தபோது, 'சச்சிதானந்த சிவம்' என்ற நூலை எழுதினார். சிறையிலிருந்து வெளிவந்த பின்னர், 'இராமானுஜ விஜயம்,' 'பக்த விஜயம்' போன்ற அரிய நூல்களை வெளியிட்டார். இராமகிருஷ்ண பரமஹம்சர், சுவாமி விவேகானந்தர் ஆகியோரின் நூல்களைச் சிவா மொழிபெயர்த்து வெளியிட்டார். 'சிவாஜி,' 'தேசிங்கு' போன்ற நாடகங்களையும் அவர் எழுதினார். ஏறத்தாழ முப்பது நூல்களுக்கு மேல் அவர் எழுதியிருக்கிறார். 1919ஆம் ஆண்டில் 'இந்திய தேசாந்திரி' என்ற வார இதழை அவர் தொடங்கினார். ஆனால், அது நீண்ட காலம் வெளிவர ஆட்சியாளர் விட்டுவைக்கவில்லை.

சிவா இளம் வயதிலேயே சிலம்ப வித்தையில் தேர்ச்சி பெற்றிருந்தார். பிற்காலத்தில், அவர் திருவானைக்காவில் சிறிதுகாலம் தங்கி, சிலம்பப்பயிற்சி நிலையத்தினையும் அரசியல் பள்ளியையும் நடத்தி இளைஞர்களைத் தேசிய அணியில் திரட்டினார்.

சுப்பிரமணிய சிவா திலகர் பெருமானிடம் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தவர். ஒவ்வோர் ஆண்டும் திலகரின் பிறந்த தினத்தை அவர் சிறப்பாகக் கொண்டாடுவார். திருவல்லிக் கேணிக் கடற்கரைக்குத் 'திலகர் கட்டம்' என்று பெயரிட்டுக் கூட்டம் நடத்தியவர் அவரே.

சிவா தொழிலாளர் இயக்கங்களிலும் பங்குகொண்டார். 1920ஆம் ஆண்டில் 'டிராம்' வண்டித் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தின்போதும், மதுரை 'ஹார்வி' பஞ்சாலைத் தொழிலாளர் வேலை நிறுத்தத்தின்போதும் சிவா அரிய பணியாற்றினார்.

1920ஆம் ஆண்டில் கல்கத்தா நகரில் லாலா லஜபதி ராய் தலைமையில் நடந்த காங்கிரஸ் பேரவைச் சிறப்புக்கூட்டத்தில் சிவா கலந்து கொண்டார். அங்கிருந்து திரும்பியதும் சென்னையில் 'சுயராச்சிய சங்கம்' என்ற அமைப்பைத் தொடங்கினார்.

1921ஆம் ஆண்டில் தைத்திங்கள் முதல் நாளன்று சுப்பிரமணிய சிவா துவராடை அணிந்து தியானத்தில் ஆழ்ந்தார். பாரத நாட்டில் பிறந்தவர்கள் அனைவரும் பாரத சாதியினர் என்றும், அவர்கள் வழிபடும் தெய்வம் பாரத

அன்னை என்றும், இக்கொள்கையைப் பரப்பப் 'பாரத ஆசிரமம்' என்ற அமைப்பைத் தொடங்குவது என்றும் தியானத்திற்குப் பிறகு அவர் உறுதி பூண்டார்.

சிவாவின் சுற்றுப்பயணங்களும், சூறுவளிப் பேச்சுகளும் நிற்கவில்லை. புதுக்கோட்டையில் அவர் பேசியபோது புதுக்கோட்டை மன்னரின் செயல்களை வன்மையாகக் கண்டித்தார். மன்னராட்சி அவர்மீது தடை விதித்தது. பல இடங்களில் அவர் சொற்பொழிவுகளுடன், நாடகங்களையும் நடத்தி மக்களிடையே தேசிய உணர்ச்சியை வளர்த்தார். 'தேசிங்கு நாடகம்,' 'சிவாஜி நாடகம்' ஆகியவை அவர் நடித்த நாடகங்கள் ஆகும்.

ஒருமுறை காந்தியடிகள் காரைக்குடிக்குச் சென்ருர். அங்கு அவரை வரவேற்க எவரும் முன்வரவில்லை. சிவா துள்ளியெழுந்தார். வரவேற்புப் பொறுப்பை ஏற்றுக்கொண்டு வீடுவீடாகச் சென்று பணம் திரட்டி, காந்தியடிகளுக்கு மிகச் சிறந்த வரவேற்பை அளித்தார்.

1921ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்கள் 28ஆம் நாளன்று சிவா மீண்டும் கைது செய்யப்பட்டார். இராஜத்துரோகக் குற்றஞ் சாட்டப்பட்ட அவருக்கு இரண்டு ஆண்டுக் கடுங்காவல் சிறையும் ரூ. 500 அபராதமும், அத்தொகையைச் செலுத்தத் தவறினல், மேலும் ஆறு மாதக் கடுங்காவலும் விதிக்கப்பட்டன. அவ்வழக்கில் சிவா அளித்த வாக்குமூலத்தில் தாய்த்திரு நாட்டைத் தெய்வமாகத் தாம் மதிப்பதாகவும், இந்தியா விடுதலை பெறவேண்டும் என்று தாம் உறுதியாக விரும்புவதாகவும் கூறினர்.

சிவா திருச்சிச் சிறையில் அடைக்கப்பட்டார். அவரது உடல் நலம் மிகவும் குன்றியதால் விடுதலை செய்யப்பட்டார். ஆனல், பத்து மாதங்களில் மீண்டும் கடுந்தண்டனைக்குட் படுத்தப்பட்டார்.

1923ஆம் ஆண்டில் சிவா தற்போது தருமபுரி மாவட்டமாக விளங்கும் பகுதியில் பலவிடங்களிலும் சுற்றுப்பயணம் செய்து சொற்பொழிவாற்றினர். பாப்பாரப்பட்டி என்ற ஊரில் சின்னமுத்து முதலியார் என்ற அன்பரின் விருப்பப்படி

சிவா அங்கேயே தங்கிப் பாரத அன்னைக்கு ஓர் ஆலயம் எழுப்ப முடிவு செய்தார். பாப்பாரப்பட்டிக்கு அருகில் 'பாரதபுரம், பாரத ஆசிரமம், பாரததேவியின் ஆலயம்' ஆகியவை அமைக்கப்பட்டன. தேசபந்து சித்தரஞ்சன் தாசர் 1923ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 22ஆம் நாளன்று பாரததேவியின் ஆலயத்திற்கு அடிக்கல் நாட்டினார்.

சிவாவின் உடல்நிலை மேலும் மோசமடைந்தது. அவர் தொழுநோய் கண்டவர் என்றும், எனவே அவர் இரயிலில் ஏறக்கூடாது என்றும் அன்னியராட்சி தடை விதித்தது. சிவா மனம் தளரவில்லை. குதிரை வண்டி, கட்டை வண்டி மூலமாகவும், கால்நடையாகவும் ஊர் ஊராகச் சென்று தேசியப் பிரசாரத்தைத் தொடர்ந்து செய்தார்.

இவ்வாறு, அல்லும் பகலும் தாய்த்திருநாட்டின் விடுதலைக்கு அயராது அரும்பாடுபட்ட தியாகச்செம்மல் சிவா 1925ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 23ஆம் நாளன்று தமது நாற்பத் தோராம் வயதில் அமரரானார்.

மாணவர்களே! சற்றுச் சிந்தியுங்கள். ஒரு பக்கம் கடும் பிணி; மற்றொரு பக்கம் வறுமை; அந்நியராட்சியின் அடக்கு முறைக் கொடூரம்; தீவிரவாதி என்பதால் மிதவாதிகளின் ஆதரவற்ற நிலை. இவ்வளவையும் சகித்துக்கொண்டு சிவா அயராமல் உழைத்தார்; நாடு விடுதலை பெறவேண்டும் என்று முழக்கமிட்டார்; இளைஞர்களிடையே நாட்டுப் பற்றை வளர்த் தார். அவரைப்போன்ற தேசியத் தொண்டர்களின் அடிச்சுவட் டில் ஒவ்வொருவரும் தேசியப்பற்றுடன் தொண்டு புரிந்தால் நமது பாரதம் உலக அரங்கில் சிறந்து விளங்குதல் திண்ணம்.

**அருஞ்சொற்பொருள் :**

நாட்டம்-விருப்பம், அருட்பார்வை-கருணை மிகுந்த பார்வை, சீலம்-நெறி, கனல்-நெருப்பு, தளை-கட்டு, இலட்சியம்-குறிக் கோள், இன்னல்-துன்பம்.

**வினாக்கள் :**

1. சுப்பிரமணிய சிவாவின் தியாகமும் தொண்டும் ஈடு இணையற்றவை என்று ஆசிரியர் ஏன் குறிப்பிடுகின்றார்?
2. சிவா தம் வாழ்க்கையில் எங்ஙனம் துறவு நெறியை மேற் கொண்டார்?

3. சிதம்பரனர், சிவா ஆகியோர்மீது வழக்குத் தொடரப் பட்டது ஏன் ?
4. சிவாவின் எழுத்துப் பணியை விவரி.
5. சிவா, பாரத ஆசிரமம் அமைத்தது ஏன் ?
6. சிவா துணிவு மிக்கவர் என்பதனை மூன்று எடுத்துக் காட்டுகளுடன் விளக்குக.
7. விடுதலை இயக்கத்தினைச் சிவா எவ்வாறு வளர்த்தார் ?
8. சிவாவின் சிறந்த பண்புகளை விளக்குக.

## 10. சட்டமன்றக் குடியாட்சி

**[டாக்டர் இராதாகிருஷ்ணன்—**
**தமிழாக்கம் : திரு. க. திரவியம் ஐ. ஏ. எஸ்.]**

மக்கள், அதிகாரம் என்று பொருள்படும் இரு கிரேக்கச் சொற்களிலிருந்து 'ஜனநாயகம்' என்பதைக் குறிக்கும் ஆங்கிலச் சொல் தோன்றியது. 'மக்களின் ஆட்சி' என்பதே அதன் பொருள். ஜனநாயகத்தை நாம் பல கோணங்களிலிருந்து காணலாம். அதை ஒரு வாழ்க்கை நெறியாக மதிக்கலாம்; ஓர் ஆட்சிமுறையாகக் கருதலாம்; சமூக, பொருளாதார நலன்களை வளர்க்கும் ஒரு சாதனமாகக் கொள்ளலாம்; பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் ஒரு முறையாகக் காணலாம்.

"இலட்சியத் தெளிவும் தீர்க்க தரிசனமும் இல்லாவிடில் மக்கள் அழிவார்கள்," என்று ஹீப்ரு ஞானி கூறினர். மக்களாட்சி நமக்கு இலட்சிய நோக்கு அளிக்கின்றது; வாழ்க்கை நெறியைக் காட்டுகின்றது; சில கொள்கைகளையும் குறிக்கோள்களையும் ஒழுக்க விதிகளையும் முறைகளையும் ஏற்றுக் கொள்ளுமாறு நம்மை அழைக்கின்றது.

தனி மனிதனின் உயர்வு, மனிதத்துவத்தின் புனிதத்துவம் ஆகியவையே மக்களாட்சியின் ஆதாரக் கொள்கை. ஊர், பேர் அறியா ஒரு கூட்டமாக உலகம் மாறிவருகிறது. அதில் மனிதன் தன் தனிநிலையையே பறிகொடுத்து, கூட்டத்தில் ஒரு சிறு துளியாகிவிட்டான். ஆனல், உயிர்ச் சக்தி இயக்குவதும் ஓங்குவதும் தனி மனிதனிடம்தான். பேருண்மையை உணரும் வாய்ப்பு அளிக்கப்படுவது தனி மனிதனுக்குத்தான். வேதனைப்

படுவதும் விவேகம் கற்பதும் இன்ப துன்பம் அனுபவிப்பதும் வெறுப்புக்கொள்வதும் பொறுத்தருள்வதும் தனி மனிதன்தான்.

தங்கள் வாழ்வில் நிலைகொள்ளாது, மேலும் உயரத் துடித்த மனிதர்களே உலகம் முன்னேற்றம் அடைந்துள்ளதற்குப் பொறுப்பானவர்கள். மனித் சமுதாயத்தால் ஒதுக்கப்பட்ட குற்றவாளிகளிடமும் சமூகத் துரோகிகளிடமும்கூட அவர்கள் ஒவ்வொருவரிடமும் ஆன்மா ஆட்சி செலுத்துகிறது. மனிதன் உள்ளத்தில் சுடர் வீசும் அந்த ஆன்ம ஒளி மங்காது மறையாது காப்பதுதான் அரசின் கடமை. தனி மனிதனை மதித்துப் போற்றுவதே ஜனநாயக சமூகத்தின் தார்மிக அடிப்படை.

மக்களின் குரலுக்கு மக்களும் ஆள்வோரும் செவிசாய்த்து, ஆட்சியில் அதை நிறைவேற்றவேண்டும். மக்களின் கருத்தை நாம் எவ்வாறு அறிவது? கோபமோ கிளர்ச்சியோ மக்களின் உண்மையான கருத்தைப் பிரதிபலிப்பதில்லை. மக்களின் கருத்தை அறிவதற்கும் மக்கள் தங்கள் கருத்தை வெளியிடுவதற்கும் சட்டமன்ற ஜனநாயகமே சிறந்த சாதனமாகத் தோன்றுகிறது.

மக்களாட்சி என்பது மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதிகள் ஆட்சிப் பொறுப்பை ஏற்று நடத்துவது. இன்றைய நிலையில், மக்கள் அனைவரும் ஆட்சியில் நேரடியாகப் பங்குகொண்டு நிர்வாகம் நடத்துவது சாத்தியமில்லை. கிராமப் பஞ்சாயத்துகள்கூடப் பிரதிநிதித்துவ முறையைத்தான் ஏற்றுள்ளன.

அரசியல் சட்டத்தைத் திருத்தவும் மாற்றவும் மக்களுக்கு உரிமை அளிக்கின்றது ஜனநாயகம். அரசியல் சட்டம் அமலில் உள்ளவரை – அது மக்களின் பிரதிநிதிகளால் மாற்றப் படும்வரை – அச்சட்டத்தை ஏற்று, அதற்குப் பணிவது அனைவருடைய கடமையுமாகும்.

வயது வந்தோர் அனைவருக்கும் நாம் வாக்குரிமை அளித்துள்ளோம். இது வெற்றிகரமாக நடக்கவேண்டுமானால், மக்கள் அனைவரிடமும் கல்வியறிவு பரவவேண்டும். அப்பொழுதுதான், வாக்காளர் நாட்டின் நலனையும் தங்கள்

கடமையையும் நன்கு உணர்ந்து சுயநலனுக்கேற்ற முறையில் அல்லாது, பொது நலனுக்கேற்ற முறையில் தங்கள் வாக்கைப் பயன்படுத்த முடியும். நம்முடைய வாக்காளர் பலருக்குப் பள்ளிப் படிப்புக் கிடையாது. என்றபோதிலும் அவர்கள் பகுத் தறிவும் பொது அறிவும் மிக்கவர்கள்; இயல்பாகவே வாய்மை யிலும் நேர்மையிலும் பற்றுதலும் ஈடுபாடும் கொண்டவர்கள்.

சமூக, பொருளாதாரப் பிரச்சினைகள்பற்றி மக்கள் தெளிவான முடிவுக்கு வரவேண்டுமானால் அப்பிரச்சினைகள் பற்றிய எல்லா விவரங்களையும் தெரிந்துகொள்ளவும் பல்வேறு கருத்துகளைக் கேட்கவும் அவர்களுக்கு வாய்ப்பு இருக்க வேண்டும். மக்களுக்குத் தகவல் கொடுக்கும் சாதனங்களைச் சுயநலச் சக்திகள் அடக்கவோ அடைக்கவோ முயலக்கூடாது. மக்களுக்குக் கருத்துச் சுதந்தரமும் அந்தக் கருத்தை வெளியிடச் சுதந்தரமும் வேண்டும். பலாத்காரத்தில் ஈடுபடும் குற்றவாளி களைத்தான் நாம் அடக்கவேண்டும். மக்கள் என்ன நினைக்கிறார் கள் என்பது அவர்கள் சொந்த விவகாரம். அவர்கள் என்ன செய்கிறார்கள் என்பதைப்பற்றித்தான் பொதுமக்கள் கவலைப் படவேண்டும்.

மக்களுக்கும் அரசாங்கத்துக்குமிடையே தொடர்பாகவும் உறவாகவும் இயங்குவது சட்டசபை. மக்கள் மன நிலையை அறிவதும் உருவாக்குவதும் அம்மன்றத்தில்தான். தலைவர்கள், பொதுமக்கள் கருத்தை ஆதரிப்பது மட்டுமல்லாமல் அக் கருத்தை உருவாக்கவும் உதவுகிறார்கள். 'உங்கள் பிரதிநிதி உங்களுக்காக உழைக்கக் கடமைப்பட்டவர் மட்டுமல்லர்; அவர் தம் அனுபவ அறிவின் பயனை உங்களுக்கு அளிக்கவேண்டும். உங்கள் கருத்துக்குப் பணிந்து அவர் தமது தெளிந்த முடிவை விட்டுக்கொடுத்தால், அது உங்களுக்குச் செய்யும் சேவையா காது. துரோகமேயாகும்,' என்று சிறந்த அரசியல் தத்துவ அறிஞரான எட்மண்ட் பர்க் கூறியது புகழ் பெற்ற ஒரு வாசகம். மக்கள் வாக்குகளைப் பெறவேண்டும் என்ற கவலையில் நாம் பொதுமக்கள் கருத்தைப் பிரதிபலிப்பதுடன் நிறுத்திக்கொண்டால், நாம் சட்டசபையில் கூறுவது மட்டமான, தரம் குறைந்த, பொறுப்பற்ற பேச்சாக இருக்கும். நாம் செய்வதெல்லாம் பொதுமக்கள் ஆதரவைப் பெறுமா என்ப

தைப்பற்றிக் கவலைப்படக்கூடாது. அது நியாயமானதா என்பதைப்பற்றியே கவலைப்படவேண்டும்.

கூடிப்பேசி, விவாதித்து, முரண்பட்ட கருத்துகளிடையே உடன்பாடு காண முயல்வதே ஜனநாயக வழி. கருத்து வேறு பாடு ஏற்படும்போது, 'என்னுடன் ஒத்துப்போ; இல்லையேல் உதைப்பேன்,' என்றும் கூறலாம். அல்லது 'வாருங்கள்; கூடிப் பேசி உடன்பாடு காணலாம்,' என்றும் கூறலாம். பிந்தியதே ஜனநாயக வழி. வெறுப்பைவிட அன்பு உயர்ந்தது; பூசலை விட ஒத்துழைப்புச் சிறந்தது; பலவந்தத்தைவிடச் சம்மதமே சிலாக்கியம் என்று நம்புவது ஜனநாயகம். இன்றைய உலக நிலையில் பலாத்காரத்தில் இறங்குவது ஜனநாயக நெறியிலிருந்து கோழைத்தனமாகத் தப்புவதாகும். எதிர்காலத்துக்கு நாம் செய்யும் துரோகமாகவும் அது வளரக்கூடும்.

பல பிரச்சினைகள் நம்மை எதிர்நோக்கிநிற்கின்றன. சுதந்தர உணர்வை வளர்க்கவேண்டுமானால், தடைகளிலிருந்தும் சமூகக் கட்டுப்பாடுகளிலிருந்தும் விடுதலை பெறுவது அவசியம். பொருளாதார வாழ்வைச் சீராக அமைப்பதன் மூலமும் சமூக உறவுகளைத் தகுந்த முறையில் வளர்ப்பதன் மூலமும் நாம் பொருளாதார, சமூக நிர்ப்பந்தங்களிலிருந்து நம்மை விடு வித்துக்கொள்ளலாம். கை விலங்குகளையும் கால் கட்டுகளையும் விட மிகக் கொடிய அடிமைத்தனத்தில் நம் நாட்டு மக்களில் இலட்சக்கணக்கானவர் சிக்கி வாடுகின்றனர். வாங்கி விற்கும் சந்தைப் பொருள்களாக மனிதர்கள் சில சமயங்களில் நடத்தப் படுகிறார்கள். நம் ஏழ்மை, பல நூற்றாண்டுகளாகப் பெருகித் திரண்டுள்ள ஏழ்மை, வறுமை, பட்டினி, பிணி, அறியாமை ஆகியவற்றிலிருந்து நாம் நமது குடிமக்களை விடுவிக்கும்வரை நமது ஜனநாயகம் சொல்லளவில்தான் இருக்கமுடியும்.

புதிய வாழ்வு காண அழைப்புவிடுப்பது ஜனநாயகம். நாம் நம்முன் கொண்டுள்ள இலட்சியங்கள் நடைமுறையில் ஈடேறவேண்டும். 1947ஆம் ஆண்டில் நடந்தது ஒரு புரட்சி யின் தொடக்கம். அப்புரட்சியை நாம் தொடர்ந்து நடத்த வேண்டும். தனி மனிதன் ஒவ்வொருவனும் நியாயமாகவும் தடையின்றியும் வளர்ச்சியடைய வாய்ப்பிருப்பதே அனைவரும் வளர்ச்சியடைவதற்கு அடிப்படையாகும். இதனை ஏற்றுக்

கொள்ளும் ஆக்கல் திறன் படைத்த ஒரு சமூகத்தை உருவாக்கும் வகையில் அரசியல் சட்டம் வளைந்துகொடுத்துப் பயன் படாவிடில் அச்சட்டம் முரிந்துவிடும்.

ஜனநாயகத்திற்கு இரண்டு அம்சங்கள் உண்டு. தனி மனிதனை உருவாக்கி வளர்ப்பது ஒன்று; உலகை ஒன்று சேர்ப்பது மற்றொன்று. உடைமைகள் அனைத்திலும் உயர்ந்தது சுதந்தரம் என்று எல்லோரும் போற்றினால்தான் புதிய சமுதாயம் தோன்ற முடியும். மனித இனம் முழுவதும் ஒரே சமுதாயமாக வாழும் உயர்ந்த இலட்சியம் சிறிதுசிறிதாக மக்கள் உள்ளத்தில் உருவாகிவருகிறது.

ஆக்கல் திறன் படைத்த சமுதாயம் – ஒற்றுமை குலையாத ஜனநாயகம் ஆகியவைபற்றிய இலட்சியத் தெளிவு மங்கினால் நம் சமுதாயமே தேயும். இந்த இலட்சியப்பற்று வளர்ந்தால் நாம் முன்னேற முடியும். ஆக்கல் திறன் படைத்த சமுதாயத்தை நிலைநாட்ட நாம் நம் உள்ளத்தில் ஜனநாயக உணர்வை வளர்க்கவேண்டும். 'மக்கள் ஆன்ம உணர்விலே அளவற்ற சக்தி குடிகொண்டுள்ளது,' என்று காந்தியடிகள் எடுத்துக்காட்டினார். 'அந்தச் சக்தி, பிறரைக் கொல்ல மக்கள் பயன்படுத்தும் ஆயுதங்களில் அன்று; தங்கள் உயிரை அர்ப்பணிக்க மக்கள் சித்தமாயிருப்பதில்தான் அந்தச் சக்தி உள்ளது,' என்று அவர் அறிவுறுத்தினார்.

'ஒரு நாட்டு மக்கள் தழைப்பது அரசியல் சட்டத்தினாலோ அதிகார நிர்பந்தத்தினாலோ சட்டம் வகுத்துத்தரும் அறிஞராலோ அன்று. அவர்கள் தர்ம வழி நின்று ஒருவருக்கொருவர் ஒத்துழைப்பதால்தான் உயர முடியும்,' என்று மகாபாரதச் செய்யுள் ஒன்று உணர்த்துவது நம் நினைவிற்குரியது.

### அருஞ்சொற்பொருள் :

தீர்க்கதரிசனம்-வரவிருப்பதை முன்கூட்டியே உணரும் ஆற்றல், ஹீப்ரூ-எபிரேய மொழி, விவேகம்-அறிவாற்றல், தார்மிக-அற, கோஷம்-குரல் முழக்கம், அமல்-நடைமுறை, பிரச்சினைகள்-சிக்கல்கள், சாதனங்கள்-கருவிகள், பலாத்காரம்-வன்முறை, விவகாரம்-நடத்தை, வாசகம்-வாக்கு, பூசல்-போர், பலவந்தம்-கட்டாயப்படுத்துதல், சிலாக்கியம்-சிறந்தது, நிர்ப்பந்தங்கள்-கட்டாயமானவை, சித்தமாயிருத்தல்-தயாராக இருத்தல்.

**வினாக்கள் :**

1. மக்களாட்சி நமக்கு அளிப்பவை யாவை?
2. தனி மனிதனின் சிறப்பு நிலையினைக் கூறுக.
3. மக்களின் கருத்தை அறியும் வழி யாது?
4. வாக்காளரின் தகுதிகள் யாவை?
5. கருத்துச் சுதந்தரத்தின் இன்றியமையாமையை விளக்குக.
6. சட்டசபையில் மக்கள் பிரதிநிதிகள் எவ்வாறு செயற்பட வேண்டும்?
7. உண்மையான ஜனநாயகத்தின் பயன்கள் எவ்வாறு இருக்கும்?
8. ஆன்ம சக்திபற்றிக் காந்தி அடிகள் யாது கூறியுள்ளார்?

## 11. அரியணை அளித்த வள்ளல்

### [திரு. கு. ராஜவேலு]

தெள்ளு தமிழ்ப் புலவர்கள், பூ என்று புகன்றால் அது தாமரையைக் குறிக்கும்; ஊர் என்று பகர்ந்தால் அது உறையூரைக் கூறுவதாகவே அமையும். இவ்வாறே வள்ளல்கள் என்று அவர்கள் இசைத்தால் கடையெழு வள்ளல்கள் எழுவரையே சுட்டிக்காட்டும். சங்கப் பாவாணர்கள், இவ்வேழு வள்ளல்களைத் தேனும் பாலும் வான் அமுதும் கலந்த பாக்களால் சுவை சொட்டப் பாடியுள்ளனர். பள்ளத்தைக் கண்டவுடன் பைம்புனல் பாய்ந்து செல்வதைப் போன்று இக்கொடை வள்ளல்களை எண்ணியவுடன் அவர்கள் நெஞ்சில் சுவை பழுத்த பாக்கள் அலைமோதி மலர்ந்தன. வள்ளன்மை செல்வந்தர் களின் அருள் ஒழுகும் ஈரநெஞ்சத்தை மட்டும் விளக்கிக் காட்ட வில்லை. அது புலவர்களின் தேனொழுகும் கற்பனைக் காவினை யும் மலர்த்திக் காட்டியது.

பறம்பிற் கோமான் பாரி – கொல்லியாண்ட வல்வில் ஓரி – மாரி ஈகை மறப்போர் மலையன் – அமிழ்து விளை தீங்கனி ஒளவைக்கு அளித்த அதியன் – பெருங்கல் நாடன் பேகன் – திணி தோள், ஆர்வ நன்மொழி ஆய் – நளிமலை நாடன் நள்ளி ஆகிய இவ்வேழு பெருமக்களையே கடையெழு வள்ளல்கள் என்று அடை பல கொடுத்து அறிஞர்கள் ஓதுகின்றனர்.

இவர்கள் அனைவரும் குறுநில மன்னர்கள். வறுமை நோய் தீர்க்கும் அருமருந்தாக இவர்கள் ஆற்றிய கொடைத்திறன் பெருஞ்சிறப்பு வாய்ந்தது. இவர்களைப் போல், தண்டமிழ் நாட்டில் வரையாது வழங்கிய முடிமன்னர்களும் பலர் வாழ்ந் தனர். இல்லையென்று வந்த இரவலர்க்கும் – இல்லாமையெனும் பொல்லாமையால் நலிந்த புலவர்க்கும் – இசைவல்ல பாணர்க் கும் – விறல்பட ஆடும் மயில் போன்ற சாயலையுடைய கூத்தர்க்கும் அருங்கலனும் பெருங்களிறும் கொடுத்து அவர்கள் வாட்டத்தை ஓட்டினர்.

பண்டைத் தமிழகத்தின் சமுதாய மரபுகள் மிகவும் போற்றத்தக்க முறையிலே வகுக்கப்பட்டு அனைவராலும் பின் பற்றப்பட்டுவந்தன. இல்லறத்திற்கும் அரசியலுக்கும் அறமே அடிப்படைக் கொள்கையாக விளங்கியது. மனையறமும் அரசியல் அறமும், இல்லோர் வறுமை தீர்ப்ப தையே தலையாய அறமாகப் பேணி வந்தன. இதனால், நாட்டில் ஒருசிலரிடம் செல்வம் குவிதலும் பலரிடம் வறுமை உறைதலும் தவிர்க்கப்பட்டன. இத்துடன், கலைகளை வளர்ப்பதிலும் கலைஞர் களைப் புரப்பதிலும் கவிஞர்களைப் போற்றி ஆதரிப்பதிலும் செல்வர்களும் குறுநில மன்னர்களும் பெருநில முழுதாளும் வேந்தர்களும் ஒருவரையொருவர் போட்டிபோட்டுக்கொண்டு அறச்செயலாற்றினர்.

முடியுடை மூவேந்தர்களிலே சேர அரசர்கள் ஆற்றிய கொடைத்திறனைப் புறநானூறு, பதிற்றுப்பத்து முதலிய சங்க நூல்கள் பரக்கக் கூறுகின்றன. இவர்களின் வள்ளன்மையைப் படிக்கும்போது நம்மையறியாமலே நம் உள்ளம் வியப்படை கிறது. அவர்களுடைய கடல்போன்ற கருணை நெஞ்சம் ஆற்றிய கொடைத்தன்மைக்கு நிகராக உலக வரலாற்றிலே எங்ஙனும் சான்று இருப்பதாகத் தெரியவில்லை.

ஒரு தேரின் செல்வமதிப்பு மிகக்குறைவாக இருக்கலாம். ஆனால், பூத்த ஒரு முல்லைக்கொடி, படருவதற்குக் கொம்பில்லாமல் காற்றால் எற்றுண்டு அலைவதைக் கண்டு, அக்கொடி துன்பப் படுவதாக எண்ணி வருந்தினனே பாரி. அவனுடைய நெஞ்சின் உயர்விற்கு எந்தப் பொருளைக் கூறமுடியும்? எந்த வள்ளலைக் கூறமுடியும்? தான் ஏறிச்சென்ற தேரை அதன் அருகிலே

நிறுத்தி, 'முல்லைக்கொடியே! இத்தேரைக் கொள்வாயாக,' என்று சொல்லிக் கொடுத்தானே, அவனுடைய அருள் உள்ளத்திற்கு இணை ஏது? இவ்வாறு, பிறர் துன்பங்கண்டு, உள்ளம் நீராக உருகும் பண்புடையவர்கள் பலர் அக்காலத் தமிழகத்தில் தழைத்திருந்தனர். 'செல்வத்துப் பயன் ஈதல்,' என்பதே அக்காலத் தமிழ் மக்களுடைய தலையாய அறம். இல்லறமே அவர்களுடைய அகவாழ்க்கைக்கும் புறவாழ்க்கைக்கும் நல் நெறியாக நின்று விளங்கியது.

வள்ளன்மையிலே, வானுற வளர்ந்த புகழையுடைய அரசர்களிலே, சேரமான் தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை என்பவன் துருவ மீனைப் போன்று தனித்து நின்று விளங்குகிறான். இவனுடைய வளன், ஆண்மை, கைவண்ணம் முதலிய நற்பண்புகளை மோசி கீரனாரும், அரிசில் கிழாரும் உள்ளம் உவந்து பாராட்டியுள்ளனர். இப்பேரரசனின் தந்தை பெயர் செல்வக்கடுங்கோ வாழியாதன். தாய், வேளாவிக்கோமான் பதுமன் தேவி. பட்டத்தரசியின் பெயர் வேண்மாள் அந்துவஞ் செள்ளை. தனயன், இளஞ்சேரல் இரும்பொறை. கல்வி, கேள்வி, வீரம், ஈரம், அரசியல் சூழ்ச்சி முதலியவற்றில் சிறந்து விளங்கிய அவன், தன் குடும்ப வாழ்விலும் இதய மகிழ்ச்சியோடு இனிது வாழ்ந்தான்.

நீர் நிறைந்த ஏரியைப் பறவைகள் நாடி வருவதைப் போன்று பண்டைத் தமிழகத்தில் தமிழின் சுவையறிந்த அறமன்னர்களைத் தேடி, அறிஞர் செல்லுவது இயல்பாக இருந்தது. தன்னை நாடி வந்த புலவர்களைத் தார்வேந்தரும் அகமகிழ்ந்து வரவேற்றனர். அவர்களால் பாடப்படுவதை அவர்கள் பெறற்கரும் பேறாகக் கருதினர்; அரியாசனத்திற்கு நிகரான சரியாசனம் தந்து, பற்பல பரிசில்களை அளித்துச் சான்றோர்களைப் பெருமைப்படுத்தினர்; அவர்களின் அறிவுரையைச் செவிமடுத்துக் கேட்டனர்; அறம் திறம்பாத ஆட்சி நடத்தினர். இதனால் நாட்டில் அறிவிற்கும் அறிவுடையோருக்கும் பெருமதிப்பு ஏற்பட்டது. 'கற்கை நன்றே கற்கை நன்றே, பிச்சை புகினும் கற்கை நன்றே,' என்ற முறையில் கல்வியின்பால் ஆர்வம் நிறைந்து வளர்ந்தது.

ஒருநாள், மோசி கீரனார் என்னும் மாசிலாப் புலமை மிக்க சான்றோர், சேரன் பெருஞ்சேரலாதனைக் காணச் சென்றார்; காடும் மலையும், கனல் கக்கும் சுரமும் கடந்து, அவன் திரு மாளிகையை அடைந்தார். வழிநடை வருத்தத்தால் அவருடைய உடல் சோர்ந்து தளர்ச்சியடைந்திருந்தது. ஓய்வுவேண்டி, அவர் உடலம் மாறாடியது. அப்போது வறிதேகிடந்த ஒரு கட்டில் அவருடைய கண்ணில் பட்டது.

எண்ணெயின் நுரையை முகந்து தூவியதைப் போன்று வெண்மையான மலர்களை அக்கட்டிலின்மீது தூவியிருந்தார்கள். கீரனார், அக்கட்டிலின் மீதேறிப் படுத்தார். சிறிது நேரத்தில் மிகுந்த துயிலில் ஆழ்ந்துவிட்டார். நேரம் கழிந்தது. புலவர் வந்திருப்பதை அறிந்த சேரன் அவரைக் காண வந்தான். ஆழ்ந்த உறக்கத்தில் அவரைக் கண்ட காவலன் ஒரு கணம் திகைத்தான். மறுகணம் அவருடைய உடலிலே அரும்பிய வியர்வைத்துளிகளைக் கண்டான். சட்டென ஒரு விசிறியை எடுத்து அவருக்குப் பக்கத்தில் நின்று விசிறினான். குளிர்ந்த காற்றினால் அவருடைய தூக்கம் கலைந்தது. கண் விழித்து நோக்கினார். அண்மையில் காவலன் நின்று பாவலராகிய தமக்கு விசிறுவதைக் கண்டார்; துணுக்கென எழுந்தார்; ஒரு நொடியில் நடந்த நிகழ்ச்சிகள் அனைத்தையும் அறிந்தார்.

தாம் இதுவரை படுத்துத் துயின்ற கட்டில் வெறும் கட்டில் அன்று. வெற்றி முரசு வைக்கும் கொற்றம் குறித்த கட்டில் என்பதை உணர்ந்தார். இக்கட்டிலில் அமர்வதோ, ஏறிப் படுப்பதோ தெய்வ நிந்தனையாகும்; அரச குற்றமாகும். இக் குற்றத்தைச் செய்தவர்கள் கொலைத் தண்டனைக்கு உரியவர்கள். இக்குற்றத்தைச் செய்த கவிஞரை அரசனே நேரில் கண்டு விட்டான். விசாரணையே தேவையில்லை. தன்னுடைய கூரிய வாளுக்கு அவரை இரையாக்கியிருக்கலாம். ஆனால், இக் காவலன் முறை செய்த விதமோ உள்ளத்தை நெகிழ்விப்பதாய் இருந்தது. படுத்துத் துயில்பவர் கற்றுத் துறைபோகிய நற்றமிழ்ப் புலவர்; அசதியால் ஆராயாது தவறு இழைத்து விட்டார். எண்ணிச் செய்த பிழையன்று. எனினும், தண்டனை தரவேண்டும். இல்லெனில், அவ்வரசன் செங்கோல் அரசனாகக் கருதப்படமாட்டான். மதியிலிகளுக்கே உடல் துன்புறும்

வகையில் தண்டனை அளிக்கவேண்டும். ஆனால், மதியுடையவர்களுக்கோ உள்ளம் நோவுறும் வகையில் தண்டனை அளித்தால் அதுவே சாலும்.

'இன்னுசெய் தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்து விடல்.'

அக்காலத்தில் அரசனுக்கு இழைத்த குற்றம் அரச நீதிக்குச் செய்த குற்றம். அரச நெறிக்குச் செய்த பிழை அரசனுக்குச் செய்த பிழையாகும். அரசனுக்கும் அரசநீதிக்கும் எவ்வித மாறுபாடும் – வேறுபாடும் கருதாது ஒன்றாக மதிக்கப்பட்ட காலம் அது.

அரசியல் நீதிக்கு – சட்டத்திற்கு இன்னாதை செய்த புலவரை அரசன், அவர் நாணுமாறு அவர் உவக்கும் வண்ணம் விசிறி கொண்டு வீசி, இனிய செயலைச் செய்து, அவரைத் தண்டித்து விட்டான். காவலனின் செயலைக் கண்ட பாவலரின் நெஞ்சம் பாகாய் உருகியது; கண்ணில் நீராய் ஓடியது.

போர்க்களத்தில் வெற்றி முரசு கொட்டும் கொற்றவனே! முரசுகட்டில் என அறியாது, அதன்மீது ஏறித் துயின்ற என்னை இரு கூறாக நீ வெட்டி வீழ்த்தியிருக்கவேண்டும். அவ்வாறு செய்யாமல் வாளாவிருந்ததே, நீ தமிழ் முழுதும் அறிந்தமைக்கு எடுத்துக்காட்டாக விளங்குகிறது; தமிழ்ப் புலவர்களைப் போற்றிப்புரக்கும் உன் வள்ளன்மைக்குச் சான்றாக நிற்கிறது. அத்துடன் அமையாது, என்னை அணுகி நின்று முழவுபோலும் வலிமையுடைய உன் தோள்கள் அசைய விசிறி நின்றனையே, இஃது எதனால்?

'இம்மண்ணுலகில் புகழை நிலை நிறுத்தியவர்க்கல்லது பொன்னுலகத்தில் இடன் இல்லை என்பதைச் சான்றோர்மூலமாக அறிந்த உன் கேள்வி ஞானத்தாலா, இன்னுசெய்த என்னை இவ்வாறு நன்னயம் செய்து பெருமைப்படுத்தினாய்?' என்று வியப்பால் விரிந்த கண்களுடன் – உவப்பால் பொங்கியெழுந்த உள்ளத்துடன் பாலால் வடித்த சொற்களைக் கொண்டு அவனைப் பாராட்டினர்.

நாட்டை ஆள்வதற்கு வேண்டிய அருந்திறல் சூழ்ச்சி உரைக்கும் அமைச்சர்களைப் போன்று இவ்வரசன் அரசியல்

சூழ்ச்சி மிக்க பண்பாளன் என்று அரிசில் கிழார் புகழ்ந்து கூறியுள்ளார்.

'மன்பதை காப்ப அறிவு வலியுறுத்தும்
நன்றறி உள்ளத்துச் சான்றோர் அன்ன நின்பண்பு,'

என்னும் அடிகள் அவருடைய பொய்யா நாவிலிருந்து பிறந்தவையாகும்.

இப்பொறையனின் வேறு பல நற்பண்புகளையும் அரிசில் கிழார் மிக அருமையாகப் பாராட்டியுள்ளார். இவன் படையெடுத்துச் சென்றவிடமெல்லாம் வெற்றியல்லது வேறொன்றும் கண்டதில்லை. இவ்வெற்றித் திரு அவனை வந்து அடைந்ததற்கான அடிப்படைக் காரணங்களை அரிசில் கிழார் கற்பனையழகும் தமிழின் கனிந்த சுவையும் கலந்து இனிது விளக்குகிறார். இப்புலவரின் வாயிலாகவே நாம் இச்சேரமானின் செல்வச் சிறப்பையும், ஆண்மையின் உயர்வையும் கைவண்மையின் பெருக்கையும் பரக்க அறிகிறோம்.

வழிப் போக்கன் ஒருவன், இவ்வானவனின் கொற்றத்திற்கு அடிப்படையாக விளங்கும் படையின் பரப்பையும் வன்மையையும்பற்றி வினவுகிறான். அவனுக்கு விடையளிக்கும் முகமாக இப்பார்த்திபனின் படைவலிமையை வனப்புற வருணித்துள்ளார்.

'வழிமேற்செல்லும் பயணிகளே! இப்பெருஞ்சேரல் இரும்பொறை எத்துணைப் பெரும் படையை வைத்திருக்கிறான், என்று கேட்கிறீர்கள். சொல்லுகிறேன், கேளுங்கள். விரைந்து செல்லுதற்கு ஏற்றவாறு சக்கரங்கள் பண்ணப்பட்ட தேர்கள், குதிரைகள், காலாட்படை வீரர்கள் இவர்களின் பரப்பு எண்ணுவதற்கு எனக்கு அரிதாக இருந்ததால் நான் எண்ணவில்லை,' என்று கூறுகிறார். விறலியை ஆற்றுப்படுத்தும் வகையில் அவனுடைய குதிரை, யானை முதலியவற்றின் பெருக்கைக் கூறுகிறார். இச்சேரன், அதியமானுடன் அரும்போர் ஆற்றி, அவனுடைய தகடூரை அழித்த காலையில், சேரலாதனின் குதிரைகள், கொங்கர்களின் ஆட்டு மந்தையைப் போன்று அளவற்று இருந்தன. யானைகளோ

அவர்களுடைய ஆநிரைகளைப் போன்று — பசுக்கூட்டத்தைப் போன்று பரந்திருந்தன என்று பாநலம் மிளிரக் கூறுகிறார்.

'யாடுபரந் தன்ன மாவின்
ஆபரந் தன்ன யானையோன்,'

என்பது அவருடைய கற்பனை வனப்பு நிறைந்த கவிச் சொற்க ளாகும்.

செல்வச் சிறப்பும் படை மாண்பும் கொண்ட அவன், அருங்குணச் செம்மலாகவும் விளங்கினான். பகைவர்கள் பணிந்து திறை கொடுத்தால் போதும். அதை ஏற்றுக் கொண்டு அவர்களை நலியாது அவன் அப்பாற்சென்று விடுவான். இப்பெருங்குணநலனை அரிசிலார் ஓர் அழகிய உவமை வாயிலாக விளக்குகிறார்.

'மெய்ந்நடுங்கி, நின்னை வருத்தும் தெய்வமெனத் தெவ்வர் எண்ணித் தொழுதால் அவர்களின் உயிரை அவர்களுக்கே உரிமையாக்கிவிட்டுச் செல்லுகிறாய். பிறரை வருத்தித் தாக்கும் இயல்புடையது பேய். ஆனால், அதற்குப் பலி கொடுத்துத் துதித்தால், அப்பேய் அப்பலியை ஏற்றுக்கொண்டு, தாக்கிய வனுக்கு ஊறு ஏதும் செய்யாது அப்பாற்போய்விடும். நீயும் அத்தன்மையுடையாய்,' என்று போற்றுகிறார்.

அண்ணல் யானை, அணிதேர், புரவி, ஆட்பெரும் படையுடன் கூடிய நாற்பெரும் படையும் கொண்ட வானவன் படையும் அவனுடைய பகைவரின் படையும் புயலைப்போல் சீறி, கடலைப் போல் கொந்தளித்து, புயற்காற்றைப்போல் பாய்ந்து, மலை போல் மோதி அரும்போர் செய்கின்றன. அப்பெரும் போரைக் காணப் புலவர் செல்லுகின்றார். சேரமான் பெருஞ்சேரல், எதிரி களின் தறுகண்மை மிக்க அணிவகுப்பை உடைத்துக் கடுங்கண் யானைப் படையை வென்று முரசு கொட்டி ஆரவாரிக்கின்றான்.

போர்க்களம் எங்கும் அமைதி நிலவுகிறது. புண்பட்ட களிறுகள் போரில் ஏற்ற புண்ணால் பெருந்துன்பமடைகின்றன. அப்புண்ணை ஆற்றி அவற்றின் நோயைத் தணிக்கும் பணியிலே பொறையனின் மறக்கள வீரர்கள் ஈடுபட்டிருக்கின்றனர். அக் காட்சியைப் புலவர் இனியதோர் உவமைமூலம் விளக்குகிறார்.

கடல் வாணிபத்தில் ஈடுபட்டிருக்கும் பெருவாணிகர்கள் மரக்கலங்களில் ஏற்றிச்சென்ற பண்டங்களைப் பிற நாடுகளில் விற்றபின்னர், தாய்நாட்டுக்குத் திரும்பி வருவர். அவர்களின் மரக்கலங்கள் கடலில் செல்லும்போது பெருங்காற்றாலும் பேரலைகளாலும் தாக்கப்பட்டு அவற்றின் கட்டுகள் தளர்ந் திருக்கும். கரையில் அம்மரக்கலங்களைச் சேர்த்து, அவற்றைச் செப்பனிடுவர். இக்காட்சியைப்போன்று காயம்பட்ட யானை களுக்கு மருத்துவம் பார்க்கும் காட்சி இருந்ததாம். எவ்வளவு வனப்பான உவமை! இதழ்கள் விரிந்து தண்டாமரை மலர்ந்ததைப் போன்ற கற்பனை!

இப்போர்ப் பாசறையின்கண்ணே சேரமான் பெருஞ் சேரலாதன் வீற்றிருக்கின்றான். இங்கும் அவனைத் தேடி, வறுமைவாய்ப்பட்ட இரவலர்கள் வருகின்றனர். அவர்களைக் கண்ட அரசன், போரில் பகைவரிடமிருந்து தான் கவர்ந்த எண்ணிறந்த களிறுகளை அவர்களுக்கு வரம்பிலாது அளிக் கிறான். இவ்வள்ளன்மை முற்பகலில் நடக்கிறது. பிற்பகலிலே பின்னும் பல இரவலர்கள் அவனை நாடி வருகின்றனர். அவர் களுக்குக் கொடுப்பதற்குக் களிற்றுக் கணம் இல்லை. ஆனால், குதிரைக் கூட்டம் நிறைந்திருக்கிறது. அவற்றையெல்லாம் அளவிலாது இரப்பவர் கூட்டம் இதயக் குளமாக மகிழ்ச்சி யோடும் வண்ணம் அளிக்கிறான். இவ்வாறு அவனுடைய கைவண்மை–கொடைத்திறம் போர்க்களத்திலும் இடையீடின்றி நடக்கின்றது. தனக்கென எதையும் இருத்திக்கொள்ளாமல் அனைத்தையும் பிறருக்கு வாரி வழங்குகிறான். யானைகளையும் குதிரைகளையும் இரவலர்க்குச் சிதறுகிறானும் அப்பெருவள்ளல்.

> ‘பெருங்கடல் நீந்திய மரம்வலி யுறுக்கும்
> பண்ணிய வினைஞர் போலப் புண்ணொரீஇப்
> பெருங்கைத் தொழுதியின் வன்துயர் கழிப்பி
> இரந்தோர் வாழ நல்கி யிரப்போர்க்கு
> ஈதல் தண்டா மாசிதறு இருக்கை
> கண்டனென் செல்கு வந்தனென்.’

அரிசில் கிழார் அவனை நோக்கி, ‘நீ குதிரைகளையும் யானைகளை யும் இரவலர்க்குச் சிதறுவதைக்காண வந்தேன்; கண்டேன்; சென்றுவருகின்றேன்,’ என்று நாடகத் தமிழன் நயமெல்லாம் விளங்க நவின்றுள்ளார்.

போர்க்களத்திலே இப்பொறையன் உயிரை ஒரு பொருட் டாக மதிக்கமாட்டான். இரவலர்களின் நடுவிலே எதனையும் என்றும் வரைதலையறியான். மெய்ம்மையே பேசும் செவ்விய நாவினையுடையவன் அவன். இவனைச் சேர்ந்த புகழ் மடந்தை, கனவிலும் பிறரைச் சேர நினையாளாம். அத்தனை புகழ் படைத்தவன் அச்சேரவேந்தன்.

சேரன் பெருஞ்சேரலாதனிடம் அமைந்த இவ்வருங்குணங் களையெல்லாம் கண்டு அரிசில் கிழார் ஆச்சரியம் அடைந்ததாகக் கூறவில்லை. மடங்கலன்ன வீரம், மாரியன்ன ஈகை, ஞாயி றன்ன நீதி, திங்களன்ன அருளுடைமை முதலியனவெல்லாம் அரசகுடியில் பிறந்த அவனுக்கு இயல்பாகவே வந்த அரும் பண்புகள். நட்டவர் குடியை உயர்த்துவதும், பற்றலர் குடியைப் பெயர்க்குவதும் பரம்பரையாக அவனுக்குக் கைவந்த கலை. தோன்றும்போதே புகழுக்கு வேண்டிய மாண்புடைக் குணங் களுடன் அவன் தோன்றினன்.

பின், அரிசில் கிழார் அவனுடைய எந்தக் குணத்தைக் கண்டு விம்மிதமும் வியப்பும் அடைகிறார்? அவனுடைய அருமறை ஞானத்தையும் ஆன்ற ஒழுக்கத்தினையும் கண்டு வியப்படை கிறார். தன்னுடைய சீலத்தால் அருமறை அந்தணனையும் உயர் செந்நெறியில் ஈடுபடவைத்த அவன் சால்பைக் கண்டு விம்மிதம் அடைகிறார்.

சேரன் பெருஞ்சேரலாதனின் புரோகிதர் மெத்தப் படித்தவர்; நான்கு மறைகளையும் ஐயந்திரிபு அறக் கற்றவர்; பிறர்க்கு எடுத்துக்கூறும் திறமையும் வாய்ந்தவர்; மற்றவரை நன்னெறியில் செலுத்தும் மாண்புடை ஆற்றல் வாய்ந்தவர்; நல்ல ஒழுக்கமும் உடையவர்; முழுதுணர் ஞானமுடையவர்; நரையும் முதுமையும் எய்தப்பெற்றவர். இன்ன சிறப்பு களெல்லாம் அமைவரப்பெற்றவராயினும் அவரிடத்திலே ஆன்று அவிந்து அடங்கும் சால்பில் ஏதோ ஒரு குறைபாடு இருந்தது. தம்முடைய அரசனைப் போன்று வளமும் மாண்பும் கொண்ட வாழ்வு, தமக்கில்லையேயென்று ஏங்கினர். அரசனின் படிமவொழுக்கம் கண்டு அமைதியிழந்தார். தம்முடைய மனக் குறையைத் தமது முழுதுணர் ஞானத்தால் போக்கிக்கொள்ள முடியாது நின்றார்.

தனது புரோகிதரின் நிலையை நன்கு உணர்ந்தான் அரசன். ஓதியுணர்ந்தும் பிறர்க்குரைத்தும் நின்ற அவர், தானடங்காப் பேதையைப்போல் இருப்பதைக் கண்டான். 'கொடையும், பண்பு நலனும், செல்வமும் மகப்பேறும், தெய்வவுணர்வும் பிறவும் முன்னைத் தவமுடையார்க்கேயுளவாகும் என்பதை அவருக்கு அறிவுறுத்தினான். தன் ஒழுக்க நியதிகளால் அவ் வுண்மை, அவர் நெஞ்சிலே பசுமரத்தாணிபோல் பதியுமாறு செய்தான். இப்பெருஞ்சிறப்புகளை அடைவதற்கு நாட்டில் வாழ்வதைவிடக் காடுநோக்கிச் சென்று அங்கே நோற்பது தான் சிறந்த நெறியாகும் என்பதையும் எடுத்துக்காட்டி அவரை அனுப்பிவைத்தான். அருமறை வல்ல அந்தணனையும் ஆன்ற உயர்நெறிக்கு ஆளாகும்வண்ணம் அவனுடைய மருளை நீக்கித் தெளிய வைத்த அவனுடைய மறையறிவும் தவவொழுக்கமுமே தம்மை விம்மிதமடையச்செய்கின்றன என்று கூறுகிறார் புலவர்.

'முழுதுணர்ந்து ஒழுக்கும் நரைமூ தாளனை
வண்மையும் மாண்பும் வளனும் எச்சமும்
தெய்வமும் யாவதும் தவமுடை யோர்க்கென
வேறுபடு நனந்தலை பெயரக்
கூறினை பெரும, நின் படிமையானே!'

என்று அவனை வியந்து போற்றுகிறார்.

மிதிலை நகரத்து மன்னன் ஜனகனை, 'ராஜரிஷி' என்று ஆன்றோர்கள் கூறுவர். அவனோடு ஒருங்குவைத்து எண்ணும் அளவிற்கு உயர்ந்த மெய்ந்நெறி வாழ்க்கையை நடத்தி வந்துள்ளான் இச்சேரன். இன்ன காரணம்பற்றியே, இவனுக்கு உவமையாக வேறோர் அரசனைக் கூற இயலாது என்று அரிசில் கிழார் அறைகிறார். உயர்ந்தவர்களும் அறிவுகுறைந்த வர்களும் உனக்கு உவமையாக உன்னையே கூறுவரே யன்றிப் பிறரைக் கூறார் என்று புகழ்கிறார். இங்ஙனம் சேரமானின் இணையிலாப் பெருமையைப் பத்துப் பாடல்களிலே செஞ்சொற்கவியின்பம் மணக்கப் பாடினார்.

அரிசில் கிழாரின் இனிய தமிழ்ப் பாடல்களைச் செவிமடுத்துக் கேட்ட சேரன் விம்மிதம் அடைந்தான். சொற்சுவை, பொருட் சுவை, ஓசை நயம், கற்பனைச் செறிவு, உவமைத் திறன் முதலிய

செம்பொருள் அனைத்தும் நிறைந்த அவருடைய அமுதப் பாடல்களுக்கு என்ன பரிசளிப்பது என்று எண்ணினான்.

உடனே, தன்னுடைய அரசி வேண்மாள் அந்துவஞ்செள்ளையுடன் அரண்மனையினின்றும் வெளியே வந்தான். புலவரை நோக்கி, 'சான்றோய்! இக்கோயிலில் உள்ள பொருள் அனைத்தும் உமக்கே உரியன. எடுத்துக்கொள்ளும்,' என்று செப்பினான். அத்துடன் அமையாது ஒன்பது நூறாயிரம் காணம் (பொற்காசு) கொடுத்தான். இறுதியிலே, மற்றுமொரு செயற்கரிய செயலையும் செய்தான். தன்னுடைய அரசு கட்டிலையும் அரியாசனத்தையும் அவர்க்கே உரிமையாக அளித்தான்.

அரசனின் எல்லையற்ற கொடை வளத்தைக் கண்டு புலவர் மலைத்து நின்றுவிட்டார். உலகம் தோன்றிய நாள் முதற் கொண்டு இன்றுவரை யாரும் செய்திராத அரிய கொடையை மிக எளிதாகச் செய்துவிட்டானே. எவ்வளவு பெரியவன்! எவ்வளவு அரியவன் இவன்! தன் தந்தையின் கொடையையும் மிஞ்சிவிட்டானே! இவனுடைய தந்தையாகிய செல்வங்கடுங்கோ வாழியாதன், கபிலர் என்னும் செந்நாப்புலவர்க்குச் சிறுபுற மென நூறாயிரம் காணம் கொடுத்தான். அப்பால், நன்று என்னும் குன்றேறி நின்று தன் கண்ணிற்கண்ட நாடெல்லாம் காட்டிக் கொடுத்தானும்.

இவனோ, இன்று தன் தந்தையையும் விஞ்சி உயர்ந்து விட்டான். அரச செல்வத்தையும் — அரசாளும் உரிமையையும் ஒரு புலவர்க்குத் தானமாகத் தந்துவிட்டான். என்னே இவனுடைய உள்ளத்தின் உயர்ச்சி! என்னே இவனுடைய கொடைச் சிறப்பு! என்னே இவனுடைய தமிழின் சுவையறிவு!

வியப்பால் மலைத்துநின்ற பெரும்புலவர் சிறிது உணர்வு வரப்பெற்றார். அரசனை நோக்கிப் பேசினார்: 'அரசே! உன்னிடமிருந்து இவ்வளவு பெற்றும் இன்னும் நான் ஓர் இரவலனாகவே உன்முன் நிற்கிறேன்,' என்றார்.

அவருடைய சிந்தையின் ஓட்டத்தை அறியாத சேரன், 'செந்நாப்புலவரே, இன்னும் வேண்டியது என்ன? விரும்பியது என்னுயிராயினும் விரைந்து கொடுப்பேன்,' என்றான்.

'வாய்மை தவறாத வானவர் மரபில் வந்தவனே! நீ எனக்கு அளித்த அரசுகட்டிலை நீ ஏற்றுக்கொண்டு, இந்நிலவுலகை அரசாளவேண்டும். இதுவே நான் வேண்டும் பரிசு,' என்றார்.

சேரனுக்கு வேறு வழி இல்லாது போய்விட்டது. 'ஆன்ற தமிழ்ப் புலவீர்! என்னுடைய அமைச்சராக இருந்து நீங்கள் எனக்குச் செந்நெறி காட்டவேண்டும். அதற்கு இணங்கினால் யானும் அரசாட்சியை ஏற்றுக்கொள்ளுகிறேன்!' என்றான்.

சான்றாண்மை மிக்க அரிசில் கிழாருக்கும் வேறு நெறி தெரியவில்லை. அரசனின் விருப்பப்படியே அமைச்சுத் தொழில் பூண்டார்; அவனுடைய ஆட்சியில் போரும் பூசலும் வாராது தம் அறிவின் துணைகொண்டு காத்தார். வள்ளலும் கவிச் செம்மலும் இணைந்து நாட்டில் நல்லறம் தவழ ஆட்சி நடத்தினர்.

**அருஞ்சொற்பொருள் :**

களிறு-ஆண்யானை, புரத்தல்-காத்தல், பேறு-பயன், அடையத்தக்கது, இல்லோர்-செல்வமில்லாதவர், ஏற்றுதல்-மோதுதல், வளன்-செல்வம், ஈரம்-அருளுடைமை, சான்றோர்-கல்வி, கேள்வி, ஒழுக்கம் முதலியவற்றில் உயர்ந்தோர், துணுக்கென-திடுக்கிட்டுச் சட்டென, பொன்னுலகம்-இந்திரலோகம், அரசியல் சூழ்ச்சி-அரசியல் தந்திரம், கொற்றம்-வெற்றி, வெற்றித்திரு-விஜயலட்சுமி, வானவன்-சேரன், பொறையன்-சேரமான் பெருஞ்சேரல் இரும்பொறை, ஆநிரை-பசுக்கூட்டம், யாடு-ஆடு, திறை-கப்பம், அண்ணல்-பெருமை மிக்க, தறுகண்-அஞ்சாத வீரம், கவர்ந்த - கைப்பற்றிய, வரம்பிலாது-அளவில்லாது, இரவலர்-யாசிப்பவர், மாசிதறு-அலட்சியமாகத் தெளிப்பதைப் போன்று குதிரை, யானை முதலியவற்றை இரவலர்க்கு வரையாது அளித்தல், இருக்கை-பாசறை, தண்டாத-குறையாத, தொழுதி-கூட்டம், காணம்-பொற்காசு, சிறுபுறம்-சிறுகொடை, மருள்-மயக்கம், திரிபுணர்ச்சி, தெவ்வர்-பகைவர்.

**வினாக்கள் :**

1. மோசி கீரனார் செய்த பிழை யாது ?
2. சேரன், கீரனாரின் பிழையை எங்ஙனம் சீர்படுத்தினான்?
3. சேரமானின் மறக்களக் கொடையை அரிசில் கிழார் எவ்வண்ணம் வருணித்துள்ளார் ?
4. அரிசில் கிழார் கூறிய இரண்டு உவமைகளைக் கூறி விளக்குக.
5. சேரன் பெருஞ்சேரலாதனிடம் உள்ள எப்பண்பைப் புலவர் மிக உயர்ந்ததாக எண்ணி வியப்படைகிறார் ? விளக்கிக் கூறுக.
6. பெருஞ்சேரலாதனின் பெரும் பண்புகளைத் தொகுத்துக் கூறுக.
7. அரிசில் கிழாருக்குச் சேரன் வழங்கிய பரிசில்கள் யாவை? புலவர் அவற்றை எங்ஙனம் ஏற்றார் ?

# 12. புலமையும் பெண்மையும் — ஆதிமந்தியார்

### [திரு. பூ. ஆலாலசுந்தரனார்]

புலமை என்பது அறிவுடைமையால் பெறும் பண்பாகும். கல்வி என்பது அறிவுடைமையினைக் கூர்மை செய்யும் கருவியாகும். கல்வியும் அறிவுடைமையும் ஆண், பெண் என்ற இருபாலாரும் பெறவேண்டிய பொருள்களாம். தலைவன் தலைவி ஆகிய இருவரும், 'ஒத்த பண்பும், ஒத்த அன்பும், ஒத்த செல்வமும், ஒத்த கல்வியும் உடையராய் இருத்தல்வேண்டும்,' என இறையனார் அகப்பொருள் உரையில் நக்கீரனார் கூறியபடி ஆண், பெண் என்ற இருபாலாரும் கல்விகற்றல்வேண்டும் என்பது பெறப்படுகின்றது. பெண்களின் பொது இயல்புகளைக் கூறப்புகுந்த தொல்காப்பியனார் அடக்கம், மறை புலப்படாமல் நிறுத்தும் உள்ளம், நேர்மை, செயத்தகுவன கூறுதல், அறிவுடைமை, உள்ளக் கருத்தறிதலருமை ஆகிய இந்த ஆறு குணங்களும் பெண்களுக்குரிய பொது இயல்புகள் என்பர். ஈண்டுக் கூறப்பட்டுள்ள பெண்பாலரின் இயல்புகளில் அறிவுடைமையும் ஒன்று என்பது நோக்கத்தக்கது.

நந்தம் நாட்டில் ஆண்களைப்போலப் பெண்களும் கல்வி கற்றுப் புலமையுடன் விளங்கினர் என்பது அன்னார் பாடியுள்ள பாக்களால் அறியக்கிடக்கின்றது. வேதங்களுள் பழமையான இருக்கு வேதத்தில் விசுவாவரை, உலோபாமுத்திரை, வாக்தேவியார் முதலிய பெண்பாற்புலவர் பாடிய பாக்கள் உள்ளன. இதிகாச காலத்தும் பெண்கள் புலமையுடன் விளங்கினர் என்பது இராமாயணம், பாரதம் முதலிய இதிகாசங்களால் அறியலாகும். கடைச்சங்க காலத்தில் ஔவையார், வெள்ளி வீதியார், காக்கை பாடினியார் நச்செள்ளையார் முதலிய பெண்பாற்புலவர் பாடிய பாக்கள், அக்காலத்தில் விளங்கிய பெண்பாற்புலவர்களின் புலமை நலத்தினை எடுத்துக்காட்டும் சான்றுகளாக விளங்குகின்றன.

இனிக் கம்பர் காலத்தும் பெண் கல்வி விளங்கிற்று என்பதனை அவர் பாடியுள்ள இராமயணத்துள் நாட்டுப் படலத்துள் வந்துள்ள பின்வரும் பாட்டினால் அறியலாகும்:

'பெருந்த டங்கட் பிறைநுத லார்க்கெலாம்
பொருந்து செல்வமுங் கல்வியும் பூத்தலால்
வருந்தி வந்தவர்க் கீதலும் வைகலும்
விருந்து மன்றி விளைவன யாவையே.'

—நாட்டுப் படலம்-36

சைவ, வைணவப் பெரியார்களின் பாக்களை நோக்குவோம். அவர்களுள்ளும் புலமை மிக்க பெண்பாற்புலவர் விளங்கினர். அறுபத்து மூன்று நாயன்மார்களுள் ஒருவரான காரைக் காலம்மையார் பாடியருளிய திருவாலங்காட்டு மூத்த திருப் பதிகம், திருவிரட்டை மணிமாலை, அற்புதத் திருவந்தாதி ஆகிய இம்மூன்றும் பதினோராம் திருமுறையில் காணலாம். வைணவ சமயத்தைச் சார்ந்த பன்னிரு ஆழ்வார்களுள் ஆண்டாள் அம்மையார் பாடியருளிய திருப்பாவையும் நாச்சியார் திரு மொழியும் நாலாயிரப் பிரபந்தத்தில் இடம்பெற்றுள்ளன.

கடைச் சங்க நூலாகிய எட்டுத்தொகையுள் நற்றிணை, குறுந்தொகை, பதிற்றுப்பத்து, அகநானூறு, புறநானூறு ஆகிய இந்நூல்களில் ஏறக்குறைய 35 பெண்பாற்புலவர்கள் பாடிய 160 பாக்கள் கிடைத்துள்ளன. இவற்றுள் ஔவையார் பாடியனவாக 59 பாக்களும், வெள்ளி வீதியார் பாடியனவாக 13ம், காக்கைபாடினியார் நச்செள்ளையார் பாடியனவாக 12ம், ஒக்கூர் மாசாத்தியார் பாடியனவாக 8ம், நழார்க்கிர னெயிற்றியார் பாடியனவாக 8ம், மாறோக்கத்து நப்பசலையார் பாடியனவாக 8ம் கச்சிப்பேட்டு நன்னாகையார் பாடியனவாக 6ம், நக்கண்ணையார் பாடியனவாக 6 பாக்களும் கிடைத் துள்ளன. இவர்களைத் தவிர்த்து, மற்றப் பெண்பாற்புலவர் அனைவரும் ஆறுக்குக் குறைந்த பாக்களையே பாடியுள்ளனர். ஏறக்குறைய 18 பெண்பாற்புலவர் ஒவ்வொருவரும் ஒரே ஒரு பாட்டினைப் பாடியுள்ளனர். எனவே, இத்தகையாரது வரலாற்றினைப்பற்றி அறிதற்குக் குறிப்புகள் பல இல்லை. இவ்வாறு ஒரே பாட்டுப் பாடிய பெண்பாற்புலவருள் ஆதிமந்தி யாரும் ஒருவராவர். மேலே காட்டிய எட்டுத்தொகை நூல்களே யன்றித் திருவள்ளுவ மாலையிலும் சில பெண்பாற்புலவரின் பாடல்களைக் காணலாம்.

ஆதிமந்தியார் பாடியதாகக் குறுந்தொகையுள் 'மள்ளர் குழீஇய,' எனத் தொடங்கும் ஒரே பாடல் கிடைத்துள்ளது. ஆனால், ஆதிமந்தியாரைப்பற்றிய சில குறிப்புகள் அகநானூறு, சிலப்பதிகாரம், பட்டினத்துப் பிள்ளையார் புராணம் ஆகிய இந்நூல்களுள் காணலாகும். வரலாற்றுக் குறிப்பினை எடுத்துக்கூறுவதில் வல்லவரான பரணர் அகநானூற்றில் தாம் பாடிய பாக்களுள் ஆறு பாக்களில் ஆதிமந்தியாரைப்பற்றிய குறிப்புகளைக் கூறியுள்ளார். இது காறும் கூறிய நூல்களிலுள்ள பாக்களின் துணைகொண்டு ஆதிமந்தியாரின் வரலாற்றினை ஆராய்வோம்.

சோழன் கரிகாலன் என்பான் சோழ நாட்டை ஆண்ட முடியுடை மன்னருள் முதன்மை பெறுதற்குரிய பெருமை வாய்ந்தவன். இவன் உருவப்ப∴றேரிளஞ்சேட்சென்னியின் மகன் என்பது பொருநராற்றுப்படையால் போதரும். உழுவித்து உண்ணும் வேளாளனும், மன்னர்க்குப் பெண் கொடுக்கும் உரிமையுடையோனுமாகிய நாங்கூர் வேளிடை, இவன் பெண்கொண்டு இல்வாழ்க்கையினை நடத்திவந்தான். இக்கரிகாலனது மகள் ஆதிமந்தியார். இளமைமுதல் புலமை நலம் மிகுந்த அழகுமிக்க ஆதிமந்தி உரிய பருவத்தில் ஆட்டனத்தி என்ற சேர அரசனை மணந்தார். இவனது பெயர் சங்க நூலில் 'அத்தி' எனவும் 'ஆட்டனத்தி' எனவும் குறிக்கப் பட்டுள்ளது. அத்தி நடனக் கலையில் வல்லவனாதலின் கூத்தன் என்று பொருள்படும் 'ஆட்டன்' என்ற அடைமொழியினைப் பெற்று 'ஆட்டனத்தி' எனவும், 'பொருநன்' எனவும் அழைக்கப் பட்டான். சேரர்க்குக் கூத்தாடுதல் வழக்கம் என்பது ஆடு கோட்பாட்டுச் சேரலாதன் துணங்கைக் கூத்து ஆடினன் என்று பதிற்றுப்பத்தில் வருதல் கொண்டு தெளியலாம்.

சோழ நாட்டில் ஆண்டுதோறும் காவிரிப் புதுப்புனல் விழா நடைபெறுவதுண்டு. சோழன் கரிகாலன் தனது அமைச்சர் களுடனும் சுற்றத்தாருடனும் கழார் என்னும் ஊரிலுள்ள காவிரித் துறையில் நடைபெறும் காவிரிப் புதுபுனல் விழாவினைக் காணுதற்குச் சென்றான். கரிகாலன் புதுப்புனல் விழாக் கொண்டாடும் இச்செய்தியினை இளங்கோவடிகள் சிலப்பதி காரத்துள் கடலாடு காதையுள் குறிப்பிடுதல் காண்க. காவிரிப் பூம்பட்டினத்தில் நடந்த இந்திரவிழாவிற்குப்பின் மக்கள்

கடலில் நீராடச் சென்றனர். அப்போது கடற்கரையிலுள்ள ஆரவாரம் கரிகால் வளவன் காவிரியில் புதுப்புனல் விழாக் கொண்டாடும் சிறந்த நாளினைப் போன்றது எனக் கூறியுள்ளார் இளங்கோவடிகள். ஆதிமந்தியும் அவளது கணவன் ஆட்டனத்தியும் புதுப்புனல் விழாவிற்குச் சென்றனர்.

ஆட்டனத்தி கச்சினையும், கழலினையும், தேன் ஒழுகும் தாரினையுடைய மார்பினையும், சுருண்ட குழலினையும் உடையவனாய் விளங்கினான். புனல் விழாவில் கலந்துகொள்ளக் கருதிய ஆட்டனத்தி இன்னிசை இயம்ப, தன் அழகிய வீரக்கழல் காலில் புரள, கரிய கச்சில் கோத்துக் கட்டிய அழகிய பொன்னாலாகிய பாண்டில் மணிகள் ஒலிக்க, காவிரி யாற்றில் இறங்கி, பல வகையான நடனங்கள் ஆடி அந்நீரில் நீந்துவானாயினான். ஆட்டனத்தியின் நடனங்களைக் கண்ட கரிகாலன் முதலியோர் கழிபேர் உவகை கொண்டனர். அதுபோழ்து, ஆட்டனத்தியின் அழகைக் கண்டு விரும்பிக் காவிரி அவனை அழைத்துக்கொண்டு போய்க் கடலுள் மறைத்துவிட்டது.

தம் கணவனைக் காணப்பெறாத ஆதிமந்தி கழிபெருந் துன்பம் கொண்டார். அவர் தம் எதிரே வருபவர்களையெல்லாம் நோக்கித் தமது கணவனின் தோற்றம் உடை முதலியவற்றை எடுத்துக்கூறி,'எனது கணவனைக் கடல்கொண்டு ஒளித்ததோ? புனல்கொண்டு ஒளித்ததோ? அன்றி அவன் எங்கேனும் நடனம் செய்யப் போயிருக்கின்றானோ? எனப் பலவாறு புலம்பி, அவனைக் கண்டுபிடிக்கும்பொருட்டுப் பல ஊர்கள்தோறும் திரியலுற்றார். தமது கணவனைத் தேடுதற்குச் சென்ற ஆதிமந்தி வீரர் குழுமியுள்ள விழா நிகழும் இடங்களிலும், மகளிர் துணங்கைக் கூத்தாடும் இடங்களிலும் சென்று, எனது காதலனைக் கண்டீரோ?' எனக் கேட்டுக்கொண்டே காவிரியின் கரையோரமாய்ச் சென்று கடற்கரை அடைந்து அங்கும் நின்று புலம்புவாராயினர். இச்செய்தியினை ஆதிமந்தியார் பாடிய குறுந்தொகைச் செய்யுளால் அறியலாகும். 'மாட்சிமை மிக்க எனது காதலனை யான் வீரர் கூடியுள்ள சேரி விழாவின் கண்ணும், மகளிர் தம்முள் தழுவி ஆடுகின்ற துணங்கைக் கூத்தின்கண்ணும் ஆகிய எவ்விடத்தும் தேடியும் கண்டேனில்லை. யானும் ஆடுகின்ற களத்திற்குரிய ஒரு மகளே. எனது கையிலுள்ள சங்கு வளையல்கள் நெகிழும்படி எனக்குப் பிரிவுத்

துன்பத்தைத் தந்த பெருமைமிக்க தலைவனும் ஆடுகின்ற களத்திலுள்ள ஒருவனே,' எனப் பொருள்படும் கீழ்க்காணும் குறுந்தொகைச் செய்யுளை நோக்குக.

'மள்ளர் குழீஇய விழவி னானும்
மகளிர் தழீஇய துணங்கை யானும்
யாண்டுங் காணேன் மாண்டக் கோனை
யானுமோர் ஆடுகள மகளே என்கைக்
கோடீர் இலங்குவளை நெகிழ்த்த
பீடுகெழு குரிசிலுமோர் ஆடுகள மகனே!'

—குறுந்தொகை-31

கடற்கரையின் அருகே வந்து தம் காதலனின் பிரிவு குறித்துக் கலங்கும் ஆதிமந்தியாரின் அவலத்தினையும் கற்பின் திண்மையினையும் கண்ட கடல், ஆதிமந்தியார்பால் இரக்கம் கொண்டு, ஆட்டனத்தியைக் கரையில் கொணர்ந்து காட்ட, துன்பத்தில் ஆழ்ந்திருந்த ஆதிமந்தியார் அதனைக் காணாது வருந்துவாராயினர். இதனைக் கண்ட மருதி என்ற ஒரு பெண்மணி ஆதிமந்தியாரிடத்தே இரக்கம்கொண்டு தன் உயிர்க்கு அஞ்சாது கடலில் சென்று தேடி ஆதிமந்தியாருக்கு அவரது கணவனைக் கொணர்ந்து காட்டித் தான் உயிர்விட்டுப் பொன்றாப் புகழ் எய்தினாள். தம் கற்பின் திண்மையால் கணவனைப் பெற்ற ஆதிமந்தியார் மகிழ்ச்சி கூர்ந்து மருதியினை மனமார வாழ்த்தித் தம் கண்மணியனைய காதலனுடன் இன்புற வாழ்ந்துவருவாராயினர். இதுவே ஆதிமந்தியாரின் வரலாற்றின் சுருக்கமாகும்.

தலைவனைப் பிரிந்த தலைவி கொண்ட துன்பத்திற்கும் கற்பின் திண்மைக்கும் ஆதிமந்தியாரை உவமையாகக் கூறுதலைத் தமிழ் இலக்கியத்துள் பல இடங்களில் காணலாகும். எடுத்துக் காட்டாக, அகம் 45ஆம் பாடலில் தலைவனைப் பிரிந்து வருந்தும் வெள்ளிவீதியார் என்ற பெண்பாற்புலவர், தமது துன்பத்தினை ஆதிமந்தியார் கொண்ட துன்பத்தோடு ஒப்பிட்டுக் கூறியதனைக் காண்க. பாண்டியன் மயங்கி விழ, கண்ணகி, நடுங்கி வீழ்ந்த பாண்டிமாதேவியை விளித்து, 'கற்புடை மகளிர் பிறந்த புகார் நகரத்தில் யான் பிறந்தேன். யான் கற்புடை மகள் என்பது

உண்மையாயின் இம்மதுரை மாநகரை அழிப்பேன்,' என்று வஞ்சினம் கூறுங்கால் புகாரிலுள்ள ஏழு கற்புடைப் பெண்டிரைக் குறிப்பிடும்போது அவருள் ஆதிமந்தியாரை ஒருவராக வைத்துக் கூறுதல் ஈண்டு நோக்கத்தக்கது.

கண்ணகிவாயிலாக, இளங்கோவடிகள் ஆதிமந்தியாரின் கற்பின் மாண்பினைப் பாராட்டுகின்றார். சிலப்பதிகாரத்துள் கூறப்பட்டுள்ள கற்புடை மகளிர் எழுவர் வரலாறும் பட்டினத்துப் பிள்ளையார் புராணத்தில் பூம்புகார்ச் சருக்கத்திலும் கூறப்பட்டுள்ளது. இதுகாறும் கூறியவற்றால், ஆதிமந்தியார் என்பார் புலமையுடனும் கற்பின் திண்மையுடனும் விளங்கிய காரிகையார் என்பது பெறப்படுகின்றது. இவ்வம்மையாரைப்போன்ற பல கற்பரசிகளின் வரலாறு தமிழ் இலக்கியத்துள் காணப்படுதலால் அவ்வரலாறுகளைப் பொதுவாக ஆடவரும் சிறப்பாகப் பெண் மக்களும் படித்துப் பயன் பெறுவார்களாக.

### அருஞ்சொற்பொருள் :

மறைபுலப்படாமல்-இரகசியம் வெளிப்படாமல், நேர்வு-நடுவு நிலைமை, நந்தம்-நம்முடைய, தடங்கண்-பரந்த கண், நுதலார்-நெற்றியுடையவர், பூத்தல்-உண்டாதல், வைகலும்-நாள்தோறும், போதரும்-விளங்கும், துணங்கை-ஒரு வகை ஆடல், புனல்-நீர், கச்சு-மார்பில் அணியும் பட்டை, கழல்-வீர கண்டை மணி, தார்-மாலை, இயம்ப-ஒலிக்க, மள்ளர்-வீரர், குழீஇய-கூடியுள்ள, தழீஇய-தழுவிய, யாண்டும்-எவ்விடத்தும், மாண் தக்கோன்-பெருமை மிக்க தலைவன், கோடு ஈர்-சங்கை அறுத்துச் செய்த, இலங்குவளை-விளங்குகின்ற வளையல்கள், பீடுகெழு-பெருமை மிக்க, குரிசில்-தலைமகன், அவலம்-துன்பம், திண்மை - வலிமை, பொன்றா - அழியாத, கூர்ந்து - மிகுந்து, வஞ்சினம்-சபதம், மாண்பு-பெருமை, காரிகை-பெண்.

### வினாக்கள் :

1. தொல்காப்பியரின் கருத்துப்படி பெண்களுக்குரிய இயல்புகள் யாவை ?
2. வேத காலத்திலும் இதிகாச காலத்திலும் கடைச்சங்க காலத்திலும் பெண்கள் கல்வி பெற்று விளங்கினர் என்பதற்கு நாம் அறியக் கிடக்கும் சான்றுகள் யாவை ?
3. பெண்கல்வியின் சிறப்பினைக் கம்பர் எவ்வாறு பாராட்டியுள்ளார் ?
4. சைவ, வைணவப் பெரியார்களுள் புலமை மிக்க பெண்பாற்புலவர்கள் யாவர் ? அன்னார் பாடியுள்ள நூல்கள் யாவை?

5. எட்டுத் தொகையில் பாடியுள்ள பெண்பாற்புலவருள் எவரேனும் அறுவர் பெயர்களை எழுதி, அவர்கள் பாடிய நூல்களின் பெயர்களையும் பாடியுள்ள பாக்களின் எண்ணிக்கையினையும் குறிப்பிடுக.
6. ஆதிமந்தியாரின் வரலாற்றினை நாம் அறிந்துகொள் வதற்கு உறுதுணையாக விளங்கும் நூல்கள் யாவை?
7. காவிரிப் புதுப்புனல் விழாப்பற்றி இளங்கோவடிகள் எம் முறையில் விளக்கியுள்ளார்?
8. ஆட்டனத்தியின் தோற்றத்தினையும் அவன் காவிரி யாற்றுப் புதுப்புனல் விழாவில் ஆடிய நடனங்களையும் விளக்கி வரைக.
9. தன் கணவனைக் காணப் பெருத ஆதிமந்தியார் எவ்வாறு வருந்தினர்?
10. ஆதிமந்தியாரின் பிரிவுத் துன்பத்தினையும், கற்பின் திண்மையினையும் வெள்ளிவீதியாரும், இளங்கோவடி களும் எவ்வெம்முறைகளில் குறிப்பிட்டுள்ளனர்?

# 13. சுற்றுச் செலவுக் கலே

## [டாக்டர் தனிநாயக அடிகள்]

புது இடங்களுக்குச் செல்வதிலும், புது மக்களைக் காண்பதிலும், பழைய பண்பாடுகளின் நிலைக்களன்களைப் பார்வையிடுவதிலும் அளவற்ற இன்பத்தைப் பெற்று வருகின்றேன்.

என் முதற்சுற்றுச் செலவுகள் நான் சிறுவனுக இருந்த காலத்திலேயே தொடங்கின. ஐம்பது ஆண்டுகளுக்கு முன் (1919) என் அன்னையாருடன் ஊர்க்காவற்றுறையிலிருந்து யாழ்ப்பாணம் சென்ற நினைவு மிகவும் தெளிவாக இன்றும் எனக்கு உளது. அக்காலத்தில் பொறிவண்டிகள் எங்கள் பகுதியில் இல்லை. எனவே, யாழ்ப்பாணப் பட்டினத்திற்குச் செல்லும் மக்கள் சிறு படகில் (மச்சுவா என்று சொல்வார் கள்) ஏறி, மூன்று மணிக் காலம் பிரயாணஞ்செய்து யாழ்ப் பாணத் துறைமுகத்தில் இறங்குவர். ஊர்க்காவற்றுறை அக்காலத்தில் பெரும் துறைமுகமாக விளங்கியது. வேற்று நாடு செல்லும் மரக்கலங்கள் ஏறக்குறைய ஐயாயிரம், அத் துறைமுகத்தில் பதிவுசெய்யப்பட்டு இருந்தன. எண்ணிறந்த படகுகளும் கப்பல்களும் அவ்வழகிய கடற்பரப்பில் நங்கூரம் பாய்ச்சப்பட்டிருந்ததை நான் கண்டிருக்கின்றேன்.

அத்துறைமுகப் பக்கத்திற்குச் சென்றால், பண்டங்களை இறக்குமதி செயவோரின் ஆரவாரமும் மரக்கலங்களைப் பழுது பார்ப்போரால் பயன்படுத்தப்படும் சம்மட்டியின் ஒலியும், காய்ச்சப்படும் தாரின் எழுச்சிதரும் மணமும், புது மரக்கலங்களை இழைப்போரின் காட்சியும் புலன்களுக்குப் புத்துணர்ச்சி அளிக்கும். மாலுமிகள் கூட்டங்கூட்டமாக நின்று தம் பிரயாணங்களைப்பற்றிப் பேசிக்கொண்டிருப்பர். துறைமுகத்தை அடுத்த தெருக்களில் வாழும் மக்கள் அனை வரும் கடல் வாணிகத்திலும், கப்பலோட்டுவதிலும் சிறந்தவர். எனவே, சிறுவனாகவே பிற நாடுகளைப்பற்றிக் கேட்டும் வேற்று நாடு செல்லுங்கலங்களையும் மாலுமிகளையும் கண்டும் நான் வளர்ந்துள்ளேன்.

கடற்கரை மணலில் என் நண்பரோடு நான் சாய்ந்து கொண்டு, முதிர்ந்து நரைத்த மாலுமியொருவர் தம் பிரயாண அனுபவங்களைக் கூறக் கேட்டுக்கொண்டிருப்பேன். பள்ளிக்கூட விடுமுறை சமயத்தில், யாழ்ப்பாணத்திலிருந்து வரும்பொழுது ஊர்க்காவற்றுறைக்கு அண்மையில் வந்ததும், கணக்கற்ற பாய்மரங்கள் காரைத் தீவிலுள்ள பனை மரங்களின்மேல் தோன்றுவதைக் கண்டு என் மனம் புத்துணர்ச்சி பெறும். இன்று அறிவியலும் அரசியலும் செய்த மாற்றங்களால் ஊர்க்காவற்றுறையில் மரக்கலங்களுமில்லை; மாலுமிகளும் இல்லை. பண்ட ஏற்றுமதி இறக்குமதியின் ஆர்ப்பாட்டமுமில்லை.

எட்டு ஆண்டுச் சிறுவனாக நான் கட்டுமரத்தில் முதல் முதல் ஊர்க்காவற்றுறையிலிருந்து நெடுந்தீவிற்குச் சென்றேன். பன்னிரு ஆண்டுகள் படைத்தவனாக என் தந்தையாருடனும் தம்பியுடனும் தென்னிந்தியாவில் சுற்றுச் செலவு செய்தேன். என் இருபத்தோராவது ஆண்டில் ஐரோப்பாவிற்கு நான் முதன்முதல் செல்லநேரிட்டது. ஐந்து ஆண்டுகள் ஐரோப்பாவிலும், ஈராண்டுகள் இங்கிலாந்திலும், ஓராண்டு வட அமெரிக்கா தென் அமெரிக்காவிலும், ஒன்பது ஆண்டுகள் மலேசியாவிலும் வாழ்ந்துள்ளேன். மேற்கூறிய பிரயாணங்களோடு மத்திய ஆசியா, ஐரோப்பா, அமெரிக்கா, தென் கிழக்கு ஆசியா முதலிய பாகங்களில் பன்முறை சென்றிருக்கின்றேன். பல காரணங்களின்பொருட்டு உலகின் பல நாடுகளில் கல்வி பயின்றும், ஆராய்ச்சியில் ஈடுபட்டும்,

தமிழ்த் தூது நிகழ்த்தியும் வந்துள்ளேன். நான் கண்ட நாடுகளைப்பற்றி எனக்குத் தோன்றும் கருத்துகளையும் ஆங்காங்கே நான் கண்ட காட்சிகளையும் நான் பட்டறிந்த அநுபவங்களையும் ஒன்றுசேர்த்து, கட்டுரைகளாக ஆக்கியுள்ளேன். இன்னும் பல கருத்துகளையும் காட்சிகளையும் அனுபவங்களையும் பற்றி நான் எழுதியிருத்தல் கூடும். ஆயினும், சுற்றுச் செலவைப்பற்றிய விரிந்த செய்திகள் மக்களுக்குச் சலிப்பை உண்டாக்குதல் கூடும் என அஞ்சிச் சுருக்கியுள்ளேன். வெளிநாட்டுச் செலவு செய்யாத முதியோர்க்கும், வருங்காலத்தில் வெளிநாடு செல்ல விரும்பும் இளைஞர்க்கும், தம் அறிவை வளர்க்க விரும்பும் சிறுவர்க்கும் பயன்படத்தக்க வகையில் அமைத்துள்ளேன்.

**செலவு வாகனங்கள்**

நம் முன்னோர் பயன்படுத்திய செலவு வாகனங்களுக்கும் நாம் பயன்படுத்தும் வாகனங்களுக்குமிடையே உள்ள வேற்றுமைகள் பல. பிற நாடுகளுக்குப் புகைவண்டியாலும் கப்பலாலும் வானவூர்தியாலும் நான் சென்றிருக்கின்றேன். வெவ்வேறு செலவு இயந்திரங்கள் வெவ்வேறு வசதிகளை அளிக்கின்றன. முதன்முதல் ஒரு நாட்டை நன்றாகப் பார்க்கவேண்டுமாயின் மோட்டார் வண்டியிலும் புகைவண்டியிலும் செல்லுதல் பயனளிக்கும். புகைவண்டிச் செலவால் ஐக்கிய அமெரிக்காவின் கோலரடோ அரிசோனா நிலப் பரப்புகளையும் (Prairies of Colorado, Arizona) இங்கிலாந்து, இத்தாலி, சுவிட்சர்லாந்து, சாவகம் (Java) முதலிய நாடுகளின் இயற்கையழகையும் கண்டின்புற்றுள்ளேன்.

இந்நாடுகளில் சுற்றுச் செலவாளர்களுக்கென நாட்டைப் பார்ப்பதற்கென்றே 'observation cars' வண்டிகளுண்டு. இவை, மரப்பலகையைக் காட்டிலும் கண்ணாடியை அதிகமாகக் கொண்டு கட்டப்பட்டுள்ளன. எனவே, பிரயாணிகள் பரந்த கண்ணாடிச் சன்னல்களும் கண்ணாடிக் கூரையும் வழியாக வெளியே பார்த்தல்கூடும். ஓராயிரம், ஈராயிரம் கல் புகைவண்டியில் பிரயாணம் செய்யும்பொழுது நிலப் பரப்பின் மாற்றங்களை நன்கு கவனித்தல் கூடும் என்பது தெளிவு.

இவ்வாறே மோட்டார் வண்டியும் நாட்டின் அழகைக் காட்டுவதுடன் வேண்டிய இடத்தில் வண்டியை நிறுத்தி இடங்களைப் பார்க்க வாய்ப்பினை அளிக்கின்றன. மோட்டார் வண்டிகள் மிகுதியாக உள்ள நாடுகளில் மோட்டார்ப் பிரயாணிகள் தங்குவதற்கென மலிவான விடுதிகள் உள. இவ்விடுதிகளை ஆங்கிலத்தில் குறிக்கும் 'மோட்டார் ஓட்டல்' (motor hotel) எனும் சொற்றொடரை 'மோட்டல்' (motel) என்று அமெரிக்கர் சுருக்கியுள்ளனர்.

கடற்பிரயாணம் உடலுக்கும் உயிருக்கும் நலத்தைத் தருவதாகும். பல நாள்கள் தரையைக் காணாது அடிவானம் மட்டும் பரந்திருக்கும் நீரையே பார்த்துக்கொண்டிருப்பதால் நம் மனம் ஒருவாறு விரிவையும் அமைதியையும் அடைகின்றது. மேலும், மாபெரும் கடற்பரப்பில் செல்லும் கப்பல், மாளிகை போன்றதாயினும், சிறு துரும்புபோல் அலைகளால் வீசப்படுமென்று நினைக்கும்பொழுது மனிதன் தன் தற்பெருமையை இழந்து தாழ்மை உணர்ச்சியைப் பெருக்கிக்கொள்கிறான். இன்று மாபெரும் கண்டங்களின் துறைமுகங்களை இணைக்கும் பிரயாணிக் கப்பல்கள் பெரும் மாளிகைகளையும் கோட்டைகளையும் போன்றவை. எனவே, பிரயாணிகளுக்கு ஏற்ற வசதிகள் அனைத்தும் அவற்றில் உள. நேரப்போக்கிற்கென்று விளையாட்டுகளுக்கும் நாட்டியத்திற்கும் திரைப்படங்களுக்கும் நீச்சல் குளங்களுக்கும் வேண்டிய ஏற்பாடுகள் இக்கப்பல்களில் செய்யப்பெற்றிருக்கின்றன. கடற்பிரயாணத்தில் பிற நாட்டு மக்களுடன் நன்றாகப் பேசிப் பழக நேரமும் வாய்ப்பும் உண்டு. கடலையே பார்த்துக்கொண்டிருந்தால் சில வேலைகளில் திமிங்கிலங்கள் நீர்மேல் உந்திச் செல்வதையும், மீன் இனங்கள் கப்பலடிக்கட்டையை உரசிக்கொண்டு விளையாடுவதையும், பறவை மீன்கள் அலைமேல் பறந்து செல்வதையும் காணுதல் கூடும். கப்பலில் உட்கார்ந்துகொண்டு நீர்ப்பரப்பைப் பல மணி அளவு பார்த்து இன்புற்றிருக்கின்றேன்.

கடல்வழியாகச் செலவு நிகழ்த்தும்பொழுது, நான் கப்பலின் எல்லாப் பகுதிகளுக்கும் சென்று எல்லா மக்களுடனும் பழகி வருவேன். மாலுமித் தலைவருடனும் மேற்பாலத்திற்குச் சென்று கப்பலோட்டும் முறையையும் மாலுமிகள் கையாளும் படங்களையும் கருவிகளையும் பார்வையிடுவேன். சில வேளைகளில் கப்பலின்

அடித்தளத்தில் பொறிகளை இயக்கும் தொழிலாளிகளுடன் உரையாடுவேன். கப்பலில் உள்ள தொழிலாளரும் பணியாளரும் பெரும்பாலும் கப்பலின் அடிப்புறத்திலே வேலை செய்பவராதலால் அவர்கள் இவ்வாறு உரையாடுவதை மிகவும் விரும்புவர்.

கப்பலின் குருவாக (chaplain) ஒரு முறை (1955) நான் பயணம் செய்திருக்கிறேன். அப்பதவியால் நானும் ஓர் உயர்ந்த கப்பல் ஊழியர் இடத்தைப் பெற்றேன். உயர்ந்த ஊழியர் வகுப்பினர்க்கு நல்ல ஓய்வு நேரமும் அமைதியும் வாய்ப்பதுண்டு. அவர்களுள் பலர், நூல்களை எழுதுவதிலும் படிப்பதிலும் ஓவியங்களை வரைவதிலும் நேரத்தைப் போக்குவர். கப்பல் ஊழியர் ஒரு தனிப் படிப்பில் ஈடுபட்டால் அதனை நன்றாக ஆராய்வதற்கு ஆன்ற அமைதியும் வாய்ப்பும் அவருக்குக் கிடைக்கும்.

உலகை விரைவாகப் பார்க்கவேண்டுமாயின் வானவூர்திகளில் பிரயாணம் செய்யவேண்டும். பெரும் விமான நிலையங்களில் இரண்டு மூன்று விநாடிகள் நின்று பார்த்தாலும் வானவூர்திகள் அடிக்கடி அங்கு வருவதையும் செல்வதையும் காணலாம். இவற்றில் பல்வேறு மக்கள் வந்து இறங்குகின்றனர். பெருநகரின் விமான நிலையங்களில் புகைவண்டி நிலையங்களைப் போல மக்கள் நிரம்பி இருப்பதைக் காண்கின்றோம். இன்று, நெடுஞ்செலவுக்கு வேண்டிய எல்லா வசதிகளும் விமான ஊர்திகளில் அமைந்திருக்கின்றன. அவை, உடலுக்கு இன்பமாகத் தட்பவெப்ப நிலை, தூங்குவதற்கு ஏற்ற வசதிகள், சத்தம் இல்லாமல் படிப்பதற்கும் எழுதுவதற்கும் தக்க ஏற்பாடுகள், உரையாடுவதற்கு ஏற்ற சிறு அறைகள் ஆகியவையாம்.

கப்பல்வழியாகவும் புகைவண்டிவழியாகவும் கடலையும் நிலத்தையும் கடக்கும்பொழுது நாம் பிரயாணம் செய்வதை நன்கு உணர்கின்றோம். வானவூர்தியில் செல்லும்பொழுதோ நீண்ட தூரச் செலவு செய்வதாகத் தோன்றுவது இல்லை. ஒரு முறை அமெரிக்காவிற்கு ஐரோப்பாவிலிருந்து பறந்து சென்றேன். மாலை ஹேக் என்னும் உலகப் பொது நீதிமன்றம் இருக்கும் நெதர்லான்ஸ் நகரில் பல நாடுகளிலிருந்து வந்த சட்ட அறிஞர்களுடன் இரவு உணவு அருந்திய பின்னர், ஆம்ஸ்டர்டாம் நகரில் விமானவூர்தி ஏறினேன். துயில் கொள்வதற்கு

நல்ல வசதிகள் அமைக்கப்பட்டிருந்தன. எனவே, நான் நன்றாக உறங்கினேன். காலை ஏழு மணிக்கு என்னை விமானப் பணியாளர் எழுப்பினர். காலைக் கடன்களை முடித்ததும் காலை உணவு உட்கொண்டேன். எட்டு மணி அளவில் வானவூர்தி ஹட்சன் நதியைத் தழுவிப் பறந்தது. ஒன்பது மணிக்கு நியூயார்க் விமான நிலையத்தில் இறங்கியது. ஐரோப்பாவிலிருந்து அமெரிக்காவிற்கு இத்தனை விரைவாக வந்ததும் அமெரிக்கரின் வாழ்க்கை விதிகளையும் வழிமுறைகளையும் தழுவவேண்டியதாயிற்று. 'இத்தகைய வேகத்தில் உடல் முன்னும் ஆவி பின்னும்தான் செல்லுதல் கூடும்,' என்று என் நண்பர் கூறி வழி அனுப்பியதைப்பற்றி நினைத்தேன். இவ்வாறெல்லாம் வேகமாகப் பறந்து செல்லுங்காலை, நாம் செலவைத் தொடங்கிய நாடுகளைப்பற்றிய அனுபவ உணர்ச்சியிருக்கும்பொழுதே பிறிதொரு நாட்டையும் பிறிதொரு பண்பாட்டையும் பிற மக்களையும் கண்டு மயங்குகின்றோம். இன்று தொடங்கிய 'ஜெட்' காலத்தில் நம் பின்னோர் ஒலியின் செலவை மிஞ்சிய வேகத்தை அறியப்போகின்றனர்.

இயல்பாக மக்கள் வேகத்தையே விரும்புகின்றனர். புகை வண்டி வகையில் அதிவிசை வண்டியை விரும்புகின்றோம். வானவூர்தியில் செல்வோர்கூடத் தம் ஊர்தி இடையில் வேறோர் ஊரில் தங்காமல் செல்வதையே விரும்புகின்றனர். இன்று மணிக்கு அறுநூறு, எழுநூறு கல் வேகமாக ஊர்திகள் செல்கின்றன. வானவழியாகப் பறப்பதில் பெரும் நேரத்தை நாம் போக்குவதில்லை. நகரிலிருந்து வானவூர்தி நிலையத்தை அடைவதிலும், மற்ற இடத்தைச் சேர்ந்ததும் நிலையத்திலிருந்து நகரை அடைவதிலுமே பெரும் நேரம் செலவாகின்றது. எனவே, எதிர்காலத்தில் உலகைச் சுற்றிப் பறக்க இரு மணியளவு வேண்டும் என்பர். ஒரு மணிக்காலம் உலகைச் சுற்றிப் பறப்பதற்கும், மற்றொரு மணி நேரம் ஊரினின்று வானவூர்தி நிலையத்திற்குச் செல்வதற்குமாம். இவ்வேகத்தால் அண்மை, சேய்மை என்ற கருத்துகள் மாற்றம் அடைந்துவருகின்றன. நாள் அளவை மேற்கொண்ட நாம் இன்று மணி அளவை மேற்கொள்ளவேண்டியதாயிற்று.

இதுகாறும் நான் இரண்டு இலட்சம் மைல்களுக்கு மேல் விமானவழியாகச் சென்றிருக்கின்றேன். ஆயினும், ஒரு

நாளாவது விமான நோயால் (air sickness) நான் பீடிக்கப்பட வில்லை. முகில்களுக்குமேல், விமானத்தில் பறந்துசெல்லும் பொழுதெல்லாம் என் மனம் வெளியில் பரவிய வானத்தின் தூய வெளியில் ஈடுபட்டு எழுச்சி பெற்று இன்புறுகின்றது. சில வேளைகளில் விமானத்தில் செய்தித் தாள்களைப் படிக்குங் கால் வேறு விமானங்களும் பிரயாணிகளும் ஆபத்தில் சிக்கியது பற்றிப் படிக்க நேரிடும்.

அப்பொழுதெல்லாம் அவ்வாபத்து எனக்கும் நேரிடக்கூடு மென்று நினைப்பேன். மக்கள் புகைவண்டி, மோட்டார் வண்டி ஆபத்துகளில் இறப்பதால் அவ்வாகனங்களைப் பயன்படுத்தும் பிரயாணிகளின் தொகை குறைவதில்லை. அவ்வாறே, விமான ஆபத்துகள் நிகழ்வதால் விமானத்தில் செல்வோரின் தொகை யும் குறைவதில்லை. பிரயாணிகளின் விழுக்காட்டைப் பார்க்கும் பொழுது விமான ஆபத்தில் மாண்டவர் தொகையே மற்றெல்லா வகையான பிரயாண ஆபத்திலும் மாண்டவர் தொகையைவிட மிகக் குறைந்தது என்று கணக்கிட்டிருக்கின்றனர். சிறு விமானமொன்றில் அமெரிக்கச் சிறு நகர்களிடையே நான் ஒரு முறை (1950) பிரயாணம் செய்துகொண்டிருந்தபோது அவ்விமானம் 'பாட்மின்டன்' பந்தைப் போல் அங்கும் இங்கும் புயற்காற்றால் வீசப்பெற்றது. மாலுமியின் திறமையால் ஆபத்தின்றித் தரையை அடைந்தோம்.

இவ்வானவூர்திக் காலத்தில் உலக மக்களின் வாழ்க்கை வேறுபட்டுவருவது வெளிப்படை. உலக நாடுகளுக்கும் மக்க ளுக்கும் இதனால் அறிவும் உறவும் மேம்பாடு அடைந்துவருகின் றன. எனவே, நாம் பிற நாடுகளைப்பற்றி அறிந்திருப்பது இன்றியமையாததாகும். இவ்விருபதாம் நூற்றாண்டின் பிற் பகுதியில் நெருங்கிய தொடர்பும் அறிவும் இருப்பினும் ஒரு நாட்டவர் பிற நாட்டைப்பற்றிக் கொண்டிருக்கும் அறியாமை இன்றும் பெரிதாயிருக்கின்றது. அமெரிக்கப் பல்கலைக் கழகங் களிலும் கல்லூரிகளிலும் சொற்பொழிவு ஆற்றியபின், 'கேள்வி நேரத்தின்' பொழுது அங்குள்ளோர் கேட்ட வினாக்களிலிருந்து வெளிநாட்டவர்களிடையே, நன்றாகக் கல்வி பயின்றவர்கூட, நம் நாடுகளைப்பற்றிச் சிறிதே அறிந்திருக்கின்றனர் என்று உணர்ந்தேன். மக்களின் வேற்றுமைகளைப்பற்றியே நாம் அறிவது பொருத்தமன்று. மக்கட்குலம் ஒரு குலம் என்னும்

ஒற்றுமைக் குறிப்புகளை மக்கள் அனைவரும் அறியுமாறு பல துறைகளின் வழியாக நாம் உழைக்கவேண்டும். ஒரு நாட்டினரை அறியவேண்டுமாயின் அவர்களுடைய சீர் குறைந்த பழக்க வழக்கங்களை அல்லது வேற்றுமை நிறைந்த வழக்குகளைக் கல்வியில் வற்புறுத்தாமல், அம்மக்களின் வரலாற்றையும் இலக்கியச் சிறப்புகளையும் பண்பாட்டினையும், அம்மக்களில் பெரியார் வாழ்க்கையினையும் வற்புறுத்தலே நலமாகும்.

தமிழ்ப் பண்பாட்டின், 'யாதும் ஊரே யாவரும் கேளிர்,' எனும் மனப்பான்மை எல்லா உலக ஒற்றுமைக் கல்விக்கும் அடிப்படைக் கொள்கையாக அமையவேண்டும். மக்களிடையே தோன்றும் வேற்றுமைகள், புவியியல் வேறுபாடுகளால் தோன்றும் நிகழ்ச்சிகள் என்றும் வலியுறுத்தல் நலமாகும். ஆனால், சென்ற இருபது ஆண்டுகளில் (1950-1970) உலகில் பிற மக்களைப்பற்றிய அறிவு நன்கு வளர்ந்துள்ளது. அதற்குத் திரைப்படங்களும் தொலைக்காட்சிகளும் பெருந்துணை புரிந்துள்ளன.

**நாடு பார்க்கும் முறைகள்**

எந்த நாட்டிற்குச் சென்றாலும், நாம் அந்நாட்டின் தலைநகர்களை மட்டும் பார்த்துவிட்டு நாட்டைப் பார்த்துவிட்டோம் என்று நினைப்பது தவறு. நமக்குப் போதிய நேரமும் பணமும் கிடைக்கப்பெறாததால் பெரும்பாலும் தலைநகர்களையும் துறைமுகங்களையும் பார்க்கின்றோம். இவை பெரும்பாலும் ஒரே பண்பாட்டைக் காட்டுகின்றன. உலகம் சுற்றும் மேல்நாட்டார்க்கு வேண்டிய வசதிகளையே பரிமாறுகின்றன. ஆனால், பெரும் நகர்களும் துறைமுகங்களும் பல்வேறு இனத்தாரின் உறைவிடமாதலால் அவை நாட்டின் தனிப்பண்புகளைக் காட்டவல்லவை அல்ல. எனவே, நாட்டுப்புறத்தினையும தலைநகர்களிலும் சிறிய நகர்களையும் சுற்றுச் செலவாளி பார்வையிடுதல் வேண்டும். அவ்விடங்களில் அந்நாட்டு மக்களுடன் உரையாடுதல் வேண்டும். அவர்கள் பண்பாட்டு நிகழ்ச்சிகளையும் சின்னங்களையும் அறிய வருதல் வேண்டும்.

ஒரு நாட்டவர் பிற நாட்டவரைக் கண்டால், பெரும்பாலும் பிற நாட்டவருடன் உரையாடவே விழைவர். ஆதலால், நாமும் அதற்கு இடம் கொடுத்தல் நல்ல இயல்பேயாம்.

இலண்டன் மாநகர் நிலம்புகு வண்டியில் ஆங்கிலேய அம்மையார் ஒருவர் என் நண்பரை இமை கொட்டாது பார்த்துக்கொண்டேயிருந்தார். என் நண்பரும் அவ்வம்மையார் தம்மோடு உரையாட விரும்பினுரென்று அறிந்து தாம் இந்தியாவிலிருந்து வந்ததாகச் சொன்னுர். 'இந்தியாவா? அப்படியென்றுல் நீங்கள் ஆகாக்கானை நிலா வெளிச்சத்தில் கண்டிருக்கவேண்டுமே' என்று வியந்தார். 'அம்மணி, நான் ஆகாக்கானை நிலா ஒளியில் காணும் பேற்றைப் பெற்றிலேன். ஆனுல், தாஜ் மஹாலை நிலா ஒளியில் கண்டிருக்கிறேன்,' என்று என் நண்பர் கூறியதும் அம்மையார் தாம் அச்சிற்பச் செல்வத்தின் பெயரை மறந்தே 'ஆகாக்கான்' என்று சொல்லிவிட்டதாக மன்னிப்புக் கேட்டார்.

ஆங்கிலத்தை நன்றுகப் பேச அறிந்திருந்தால் எந்நாட்டிலும் எளிதில் பிரயாணம் செய்தல் கூடும். ஆங்கிலம் இன்று எல்லா நாடுகளிலும் பல காரணங்களின்பொருட்டுப் பயிலப் பெற்றுவருகிறது. ஆயினும், வெளிநாட்டு மக்கள் தம் தாய் மொழியை, நம்மைப் போன்ற பிற நாட்டார் பேசக் கேட்கும் பொழுது அவர்களுக்கு உவகை பிறப்பது இயல்பேயாம். சில வேளைகளில் அவர்களுடைய மொழியை நாம் அறிந்திருக்கக் கூடும் என்று நினையாமல் அவர்கள் நம்மைப்பற்றிக் குறிப்பிடும் கருத்துகளை அறியவருகின்றேம். என் நிறம், தலைமுடி, பற்கள் முதலியவைபற்றி ஐரோப்பிய மக்கள், எனக்குத் தம் மொழி புலனுகாது என்று நினைத்துத் தமக்குள் உரையாடிக் கொண்டதைக் கேட்டு நான் பன்முறை புன்முறுவல் கொண்டு இருக்கின்றேன். சில வேளைகளில் அவர்கள் என்னைப்பற்றிப் பேசிய பின் குறும்பிற்காக அவர்கள் மொழியில் ஏதாவது ஒரு கேள்வியை அவர்களிடம் கேட்டு அவர்களைத் திடுக்கிடச் செய்திருக்கிறேன். ஆக்ஸ்போர்ட்டில் ஒரு நாள் (1956) புத்தகக் கடையொன்றில் புத்தகங்களைப் பார்த்துக்கொண்டிருந்தேன். அங்கு வந்த இருவர் என்னைக் கண்டதும் நான் எந்நாட்டவராக இருக்கக்கூடுமென்று இத்தாலிய மொழியில் உரையாடத் தொடங்கினர்.

அவர்கள் இங்கிலாந்தைப் பார்க்கவந்த இத்தாலியர் என்பது எனக்கு விளங்கிற்று. என் உடலமைப்பு, முடி, மூக்கு, முதலியவற்றைப்பற்றிச் சுவையாகவே தமக்குள் பேசிக்

கொண்டனர். இறுதியில், நான் தெள்ளிய இத்தாலியத்தில், 'ஐயா, என்னை மன்னித்து இடங்கொடுங்கள்,' என்று சொல்லி விட்டு அவர்களைத் தாண்டி வேறொரு பக்கத்திற்குச் சென்றேன். அப்பொழுது அவர்கள் திடுக்கிட்ட காட்சி எனக்கு நகைப்பைத் தந்தது. சிறிது நேரங்கழித்து அவர்கள் நின்ற பக்கத்தே நான் திரும்பிப் பார்த்தபொழுது அவர்கள் கதவைத் திறந்துகொண்டு புத்தகக் கடையைவிட்டு விரைவாக வெளியே செல்வதைக் கண்டேன்.

ஒரு நாட்டில் கண்ட அன்னியரை மீண்டும் எதிர்பாராத வேற்று நாட்டில் காண்பது என் செலவுகளில் நான் அனுபவிக்கும் பிறிதோர் இன்பம். ஜப்பானில் சந்தித்த ஒருவரை இலண்டனில் நிலம்புகு வண்டியில் எதிர்பாராது கண்டிருக்கின்றேன். இத்தாலியில் உடன் மாணவராக இருந்தவரொருவரைச் சிங்கப்பூர்த் தெருவில் வாழ்த்தியுள்ளேன். ஹாலண்டில் இவ்வாறு நான் அறிந்த மூவரை ஒரே நாளில் (1957-ல்) சந்தித்துள்ளேன். இலெய்டன் பல்கலைக் கழகத்தை நான் பார்க்க விரும்பிக் கால்வாய் அருகில் நின்ற மூவரை அணுகிப் பல்கலைக் கழகத்திற்குச் செல்லும் வழியை வினவினேன். எனக்கு வழியைக் காட்டியவர் என் முகத்தை உற்றுப் பார்த்தார். நானும் அவரைப் பார்த்தேன்.

இந்தோனேசியாவில் இலங்கைத் தூதுவர் இல்லத்தில் நான் சந்தித்த டச்சுக்காரர் அவர். அன்று நண்பகல் பழம்பொருட் காட்சிச்சாலையொன்றைப் பார்க்கச் சென்றேன். போகும் பொழுது வீதியின் மறுபக்கத்தில் நான் அறிந்த பாக்கிஸ்தான் நண்பர் ஒருவர் செல்வதைக் கண்டேன். அவர் அன்று இலண்டன் மாநகர் போவதாகவும் விமானச் செலவில் ஆம்ஸ்டர்டாம் தங்கியதால் நாட்டைப் பார்க்க விரும்பியதாகவும் கூறினர். அன்று இரவு நான் நியூயார்க் செல்ல ஆம்ஸ்டர்டாம் விமான நிலையத்தில் உலாவிக் கொண்டிருந்தேன். பக்கத்தில் இத்தாலிய மொழியில் உரையாடிக்கொண்டிருந்த இருவரைப் பார்த்த பொழுது ஒருவரின் முகம் அறிந்த முகம்போல் தோன்றிற்று. என் நினைவிற்கு எட்டிய அளவு அவர் யாரென்று நினைக்க முயன்றேன். அவரை அணுகி, 'நீங்கள் இசைக் குழுத் தலைவரல்லவா? நாம் இருவரும் பனுமாவிற்கு ஒரே விமானத்தில் சென்றோமல்லவா?' என்று நான் கூற, அவர் 'நீங்கள் தானு?'

என்று கையைப் பற்றினர். இவ்விசைக்குழு ஆசிரியரை ஏழு ஆண்டுகளுக்கு முன்னர், நியூயார்க்கிலிருந்து பனமாவிற்குச் செல்லும்பொழுது சந்தித்தேன். ஏழு ஆண்டுகளுக்குப் பின்னர் மீண்டும் ஒரே விமானத்தில் அவரும் நானும் ஐரோப்பாவி லிருந்து அமெரிக்கா சென்றோம்.

பிற நாட்டில் சுற்றுச் செலவு செய்பவர் அனைவரும் பெருஞ் செல்வர் என்று நினைப்பது தவறாகும். நடுத்தரத்தில ஊழியம் செய்யும் ஐரோப்பிய அமெரிக்க மக்கள் எத்தனையோ பேர் சுற்றுச் செலவு செய்துவருகின்றனர். ஒவ்வொரு திங்களும் ஒரு சிறு தொகையைப் பிரயாணத்திற்கென்று ஒதுக்கி வைப் பதால், கோடை விடுமுறைக் காலத்தில் பிரயாணம் செய்வதற் குப் போதிய பணத்தைத் திரட்டுகின்றனர். ஒருவர் தம் நாட்டி லேயே பிரயாணம் செய்வதுகூட அறிவை வளர்த்து விரிவடை யச் செய்யும். எனவே, கல்விக் கழகங்களும் ஏனைய கழகங்க ளும் செலவுக் குழுக்களை ஏற்படுத்திப் பிரயாணப் பழக்கத்தை மக்களிடையே பரப்பவேண்டும்.

பிரயாணஞ்செய்வது ஒரு கலை. சிறு பணத்தொகையுடன் பல இடங்களைக் காண்பது எப்படி, ஓர் இடத்திற்குச் சென்றால் அங்கு எதனைப் பார்க்கவேண்டும், யாரைச் சந்திக்கவேண்டும், எத்தகைய விடுதியில் தங்கவேண்டும் என்பன போன்ற விவரங்களைப் பழகிய சுற்றுச் செலவுக்காரர்களிடமிருந்து அறிந்துகொள்வது நன்று. எத்தனையோ பேர் கீழ்த்திசை நாடுகளிலிருந்து இலண்டனுக்குப் பறந்துசெல்கின்றனர். அவர் களில் பலர் இடையே உள்ள நகர்களாகிய பம்பாய், கராச்சி, பெய்ரூட், ஏதென்ஸ், உரோமாபுரி, ஜெனீவா, பாரீஸ் போன்ற இடங்களில் ஒரே பிரயாணக் கட்டணத்திற்குப் பல நாள்கள் தங்கிச் செல்லக்கூடுமென்றும் ஒரு விமானக் கம்பெனியில் சீட்டு வாங்கினால் வேறு விமானக் கம்பெனி ஊர்திகளிலும் செல்லுதல் கூடுமென்றும் அறியார். ஆதலால், தங்கக்கூடிய இடங்களில் தங்காதும், பார்க்கக்கூடியவற்றைப் பார்க்காதும் செல்கின்றனர். சுருங்கிய செலவில் பிற நாடுகளை எங்ஙனம் காண்பது என்பதுபற்றி இன்று பல நூல்கள் உள. இளைஞர் விடுதிகள் (youth hostels) இத்தகைய வாய்ப்பினைப் பல நாடுகளில் அளிக்கின்றன.

பல நாடுகளுக்குச் சென்றபோதெல்லாம் நான் அந்நாடுகளில் மக்களின் விருந்தோம்பும் மனப்பான்மையை அறியும் வாய்ப்பினைப் பெற்றேன். என் வியப்பு யாதெனில், மக்கள் இத்தகைய பரந்த கனிந்த உள்ளத்தைப் படைத்தவர்களாய் இருந்தனர் என்பதேயாம். சில நாடுகளில் அரசினர் தம் நாட்டை நான் நன்முகப் பார்ப்பதற்கு வேண்டிய வசதிகளைச் செய்துதந்தனர்.

வேறு சில நாடுகளில் இந்திய, இலங்கைத் தூதுவர், அல்லது தமிழ்த் தலைவர்கள் அதே வசதிகளை எனக்கு அளித்தனர். ஆனால், எல்லா நாடுகளிலும் பல்கலைக் கழக ஆசிரியர்களும் கத்தோலிக்கத் திருமறைக் குருக்களும் எனக்கு ஆற்றிய உதவிகள் பல. அவர்களுடன் நான் அவர்கள் நாட்டைப்பற்றி உரையாடவும் அந்நாட்டின் மக்களைச் சந்திக்கவும், சிறப்பான இடங்களைப் பார்க்கவும் பல வாய்ப்புகளைப் பெற்றுள்ளேன்.

### அருஞ்சொற்பொருள் :

மாலுமி - கப்பலோட்டி, வானவூர்தி - விமானம், வலவர்-ஓட்டுவோர், குருக்கள்-திருவழிபாடு நடத்துவோர், முகில்-மேகம், பட்டறிந்த-அனுபவத்தால் உணர்ந்த, பேரவை-பெருங்கூட்டம், சேய்மை - தொலை, விழுக்காடு - விகிதம், ஓவியம் - சித்திரம், நங்கூரம்-கப்பலைக் கடலில் நிறுத்தும் பளுவுள்ள கருவி. நிலைக்களம் - உறைவிடம், தட்பம் - குளிர்ச்சி, ஒலியின் செலவை மிஞ்சிய வேகம்-ஒலியைக் காட்டிலும் வேகமாய் செல்வது.

### வினாக்கள் :

1. கப்பற்பயணம் உடலுக்கும் உயிருக்கும் எவ்வாறு நலந் தரும்?
2. 'யாதும் ஊரே யாவரும் கேளிர்,' என்ற மனப்பான்மை சுற்றுச் செலவால் எவ்வாறு வளர்ந்தோங்கும்?
3. பிரயாணம் செய்வது ஒரு கலை. — விளக்குக.
4. பிறநாட்டுத் தலைநகரங்களைக்காட்டிலும் நாட்டுப் புறத்தைப் பார்வையிடுவதால் விளையும் நன்மைகள் யாவை?
5. தனிநாயக அடிகள் மேற்கொண்ட பயணங்களைப்பற்றிக் கூறுக.
6. கப்பற்செலவிற்கும் விமானச் செலவிற்குமுள்ள வேறுபாடுகள் யாவை?

# 14. பன்னாட்டு மன்றம்

## [திரு. எம். ஆர். அடைக்கலசாமி]

### முன்னுரை

மக்களாய்ப் பிறந்த அனைவரும் ஒன்றுகூடி, ஒருவர்க்கொருவர் உதவி வாழ்ந்தால் நலம் சிறக்கும்; அனைவரும் மகிழ்ச்சியாக வாழலாம். அவ்வாறின்றி மாறுபட்ட பகை உணர்ச்சி மனித உள்ளத்தில் எழுந்தால் வெறுப்பும் வேற்றுமையுமே வேர்விட்டுப் படரும்; பூசலும் போராட்டமும் மலிந்து மக்களின் அழிவுக்கு வழி கோலும்.

இவ்விருபதாம் நூற்றாண்டில் மனித குலம் ஒரு தலைமுறைக்குள்ளேயே இரு பெரும் உலகப் போர்களால் இடருற்றது. போராலே உருக்குலைந்த நாடுகள் பல; உயிரிழந்த மாந்தர் பலர்; பொருட்சேதத்திற்கோ எல்லையே இல்லை. இந்நிலையில் மக்கள் தம் பகுத்தறிவினால் பகைமையுணர்ச்சியை அறவே நீக்கி, இவ்வுலகை இன்பவுலகாக மாற்ற ஆவன மேற்கொள்ளல் வேண்டும் என்பதை அனைவரும் ஒப்புக்கொள்வர்.

### கவிஞர்கள் கண்ட கனா

எல்லையில்லாத் தொல்லைதரும் போர்களை இம்மண்ணிலிருந்தே தொலைக்கக் கவிஞர்கள் கனவு கண்டு கவிதைகள் தீட்டினர்; காப்பியம் புனைந்தனர். அகில உலகையும் தம் சொந்த ஊராகவும் அதில் வாழும் மக்கள் அனைவரையும் தம் சுற்றத்தினராகவும் தழுவிக்கொள்ளத் தமிழ்ப் புலவர்கள் ஆசைப்பட்டனர்; 'யாதும் ஊரே, யாவரும் கேளிர்,' எனப் பறைசாற்றினர். மனித குலச் செம்மலான இராமனையும் அரக்க இன அரசனான விபீடணனையும் குரக்குக் குலக் கொற்றவனான சுக்கிரீவனையும் வேறுபட்ட வேட்டுவர் இன வேந்தனான குகனையும் ஒருமைப்பட்ட கலப்புடைய உடன்பிறப்புகளாகக் கண்டு உளம் மகிழ்கின்றார், காப்பியப் பேரரசர் கம்பர்.

அன்று கவிஞர்கள் கண்ட கனவை இன்று இவ்விருபதாம் நூற்றாண்டில் சில அறிஞர் பெருமக்கள், நனவாக்க முயன்று இந்நானிலத்தில் தோற்றுவித்ததே இப்பன்னாட்டு மன்றம் ஆகும்.

**பன்னாட்டு மன்றத்தின் தோற்றம்**

இரண்டாம் உலகப் போர், இவ்வையகத்தை அலைக்கழித்துக்கொண்டிருந்த இக்கட்டான வேளையில் பிரிட்டன் நாட்டுப் பிரதமர் வின்ஸ்டன் சர்ச்சிலும் அமெரிக்க நாட்டு அதிபர் பிராங்கிளின் ரூஸ்வெல்ட்டும் அட்லாண்டிக் கடலின் ஒரு பகுதியில் ஒரு கப்பல் தளத்தின்மீது சந்தடியின்றிச் சந்தித்தனர்; இம்மண்ணிலிருந்தே போரைப் பூண்டோடு ஒழித்து மனித குலத்தின் உரிமைகளை மாண்பு பெறச் செய்ய உள்ளம் விட்டு உரையாடினர். அப்பெருந்தலைவர்கள் பேசிய பேச்சின் விளைவாக எழுந்த அட்லாண்டிக் உரிமைப் பட்டயமே (charter) இன்றைய பன்னாட்டு மன்றத்தின் தோற்றத்திற்கு அமைந்த கருவாகும். இம்மன்றத்திற்கு உருக் கொடுத்தது வாஷிங்டன் நகரில் 1944ஆம் ஆண்டு நிகழ்ந்த டம்பார்ட்டன் ஓக்ஸ் மாநாடு ஆகும். ஆனால், 1945ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்கள் 24ஆம் நாள் சான்பிரான்சிஸ்கோ நகரில் கூடிய மாநாட்டில் கலந்துகொண்ட 50 நாடுகள் உரிமைப் பட்டயத்தில் கையொப்பமிட்ட நாளே, இப்பொன்னுன மன்றம் புவியில் தோன்றிய புனித நாளாகும். அவ்வினிய தினத்தையே பன்னாட்டு மன்றத்தின் தோற்ற நாளாக இக்குவலயமும் இன்று கொண்டாடி மகிழ்கிறது.

**மன்றத்தின் கொள்கையும் குறிக்கோளும்**

மன்றத்தின் உரிமைப் பட்டயத்தை உளமார ஏற்று, அதன் செயல்முறைகளுக்கு உட்படுவோர் அனைவரும் இம்மன்றத்தின் உறுப்பினராகலாம். இன்று அம்முறையில் 155 நாட்டினர் இம்மன்றத்தில் உறுப்பினராயுள்ளனர். இம்மன்ற உறுப்பினர்கள் அனைவரும் சரிநிகர் சமானம் ஆவர். அனைவரும் சமத்துவ நெறியிலேயே பணியாற்றுவர். உறுப்பு நாடுகள் தமக்குள்ளே எழும் சண்டை சச்சரவுகளைச் சமாதானமாகத் தீர்த்துக்கொள்ளச்செய்யும் பன்னாட்டு மன்றம் எடுக்கும் நடவடிக்கைகளுக்கு எதிராக உறுப்பினர்கள் செயல்படுதல் கூடாது. உள்நாட்டுப் பிரச்சினைகளில் உலக மன்றமும் தலையிடாது என்பவை பன்னாட்டு மன்றத்தின் பண்புமிக்க கொள்கைகள் ஆகும்.

அடிப்படை மனித உரிமைகளை மதித்து அவற்றை மாண்புறச் செய்தல், நீதியை நிலைநாட்டுதல், மனித இனத்தின் கல்வி,

சமூக, பொருளாதார, பண்பாட்டு மேம்பாட்டிற்கு வழிகோலி மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல், உலக நாடுகளுக்கிடையே ஒப்புரவு மனப்பான்மையை உருவாக்கி நட்புறவையும் நல்லெண்ணத்தையும் பரவச்செய்தல் ஆகியன இம் மன்றத்தின் மாண்புமிக்க குறிக்கோள்கள் ஆகும்.

உலகில் அமைதியை நிலைநாட்டுவதே இம்மன்றத்தின் உயரிய நோக்கம் ஆகும். படையெடுப்புகளைத் தடுத்து நிறுத்திப் பாரில் அமைதியை நிலவச்செய்ய நேரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதே இம்மன்றத்தின் உன்னதப் பணியாகும்.

## பன்னாட்டு மன்றத்தின் பல்வேறு பணி நிலையங்கள்

### 1. பொதுப் பேரவை (General Assembly)

பன்னாட்டு மன்றத்தின் முக்கியப் பணி நிலையம் பொதுப் பேரவை. உலக அமைதி காக்கும் உயரிய சட்டமன்றம் இப் பேரவை. பாதுகாப்புப்பற்றிய எத்தகைய பிரச்சினைகளையும் விவாதிக்கும் சிறப்பு இப்பேரவைக்கே உண்டு. தலைமைச் செயலாளரையும் கிளை நிலையங்களில் பணிபுரியும் பல்வேறு உறுப்பினர்களையும் தேர்ந்தெடுக்கும் உரிமையும் பெருமையும் பெற்றது இப்பேரவையே.

ஒவ்வொரு நாடும் இந்த அவைக்கு 5 சார்பாளர்களை அனுப்பலாம். எனினும், ஒரு நாட்டிற்கு ஒரு வாக்குரிமையே உண்டு. ஆண்டிற்கு ஒரு முறையாவது இப்பேரவை கூடும். ஆனால், நெருக்கடி வேளையில் தேவைக்கு ஏற்பச் சிறப்புக் கூட்டங்களையும் நிகழ்த்தும். இப்பேரவையின் தலைவரை இதன் உறுப்பினர்கள் ஆண்டிற்கு ஒரு முறை தேர்ந்தெடுப்பர். சாதாரணப் பிரச்சினைகளில் தீர்மானம் வெற்றிபெறப் பெரும்பான்மை வாக்குகள் போதும். ஆனால், முக்கியப் பிரச்சினைகளிலோ மூன்றில் இரு பங்கு வாக்குகள் பெரும்பான்மையாக அமைந்தால்தான் தீர்மானம் செல்லுபடியாகும். பன்னாட்டு மன்றத்தின் வரவு செலவுக் கணக்குகளைப் பார்க்கும் உரிமை இப்பேரவைக்கே உண்டு. இப்பேரவையின் பணிகளை ஏழு குழுக்கள் பங்கிட்டுச் செயலாற்றுகின்றன. இப்பேரவையின் தலைவராக நம் பாரதநாட்டைச் சேர்ந்த திருமதி விஜயலட்சுமி பண்டிட் அவர்கள் பணிபுரிந்துள்ளார்கள்.

**2. பாதுகாப்பு மன்றம் (Security Council)**

பன்னாட்டு மன்றத்தின் உயிர் நாடியாகத் திகழ்வது இப் பாதுகாப்பு மன்றமே. இவ்வையகத்தை வாழவைக்கும் வல்லரசுகளின் செயற்களமும் இச்சீரிய நிலையமே. அமெரிக்கா, இரஷ்யா, பிரிட்டன், பிரான்சு, சீனா ஆகிய ஐந்து நாடுகள் இம் மன்றத்தின் நிரந்தர உறுப்பினர்கள். பத்து உறுப்பினர்களைத் தாற்காலிகமாகப் பேரவை தேர்ந்தெடுத்து அனுப்பும். அவர்கள் இரண்டு ஆண்டுக் காலம் பதவி வகிப்பர்.

இம்மன்றம் ஆண்டு முழுவதும் பணியாற்றும். எனினும், பதினைந்து நாள்களுக்கு ஒரு முறை கூடிப் பிரச்சினைகளை ஆராயும். ஒன்பது உறுப்பினர்களே தங்கள் வாக்குகளை அளித்துச் சாதாரணப் பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டுவிடலாம். ஆனால், மிக முக்கியமான விவகாரங்களை அந்த ஐந்து நிரந்தர உறுப்பினர்கள்தான் விவாதித்துத் தீர்மானிக்க முடியும். இவ்வல்லரசுகளில் ஒன்று வாக்களிக்க மறுத்தாலும் அத்தீர்மானம் நிறைவேறாது. இதனைத்தான் மறுப்புரிமை (veto) என்று வழங்குவர். இச் சிறப்புரிமை இந்த ஐந்து நிரந்தர உறுப்பினர்களுக்கு மட்டும் தான் உண்டு. இவ்வல்லரசுகளின் இசைவும் ஒற்றுமையும் இருந்தால்தான் இப்பன்னாட்டு மன்றம் பயனுள்ள பணிகளைச் சிக்கலின்றிச் சிறப்பாகச் செய்யமுடியும் என்ற அடிப்படையில் அவ்வுரிமை கொடுக்கப்பட்டுள்ளது.

இவ்வையகத்தின் அமைதியையும் பாதுகாப்பையும் கண்ணும் கருத்துமாகக் கட்டிக்காப்பது இம்மன்றத்தின் உன்னதப் பணியாகும். இவற்றிற்கு இடையூறு விளைக்கும் எத்தகைய தகராறுகளையும் காய்தல் உவத்தல் அகற்றி ஆய்ந்து பார்த்துப் பூசலையும் போராட்டத்தையும் தவிர்க்கத்தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டியது இம்மன்றத்தின் தலையாய கடமையாகும். அமைதியை நிலைநாட்ட எத்தகைய பெருஞ்செயலையும் இம்மன்றம் மேற்கொள்ளலாம்; ஒரு நாட்டின்மீது படையெடுத்து அந்நாட்டைத் தாக்கிய நாடுகளை அடிபணியச் செய்யலாம்; அந்நாட்டு அரசியல் உறவையே துண்டிக்கலாம். சமூக, பொருளாதாரத் தடைகளைக் கணை களாகப் பயன்படுத்தலாம்; அதற்கு எதிராகப் படை நடத்தி அந்நாட்டையே தண்டிக்கலாம். அத்தகைய சிறப்பும் சீரமைப் பும் உடையது இப்பாதுகாப்பு மன்றம். பன்னாட்டு மன்றத்தில்

எந்த நாட்டையும் உறுப்பினராகச் சேர்த்துக்கொள்ளப் பரிந்துரை செய்யும் அதிகாரமும் இம்மன்றத்திற்கே உண்டு. சர்வதேச நீதி மன்றத்தில் பதவியேற்கும் நீதிபதிகளையும் தலைமைச் செயலாளரையும் பேரவைக்குப் பரிந்துரைக்கும் பெருமையினையும் உடையது இப்பாதுகாப்பு மன்றமே.

**3. செயலகம்** (Secretariat)

பன்னாட்டு மன்றத்தின் பல்வேறு பணிகளையெல்லாம் ஒருமுகமாகச் செயற்படுத்தும் நிர்வாக நிலையமே இச்செயலகம் ஆகும். பேரவை கொணரும் தீர்மானங்களை நிறைவேற்றும் பொறுப்பு இச்செயலகத்தையே சாரும். பொதுச் செயலாளரே (Secretary General) இதன் தலைவர் ஆவார். பாதுகாப்பு மன்றத்தின் பரிந்துரையின்பேரில் பேரவை இப்பொதுச் செயலாளரை ஐந்து ஆண்டிற்கொருமுறை நியமிக்கும். பன்னாட்டைச் சேர்ந்த ஆடவர், பெண்டிர் பத்தாயிரவர் இச்செயலகத்தில் பணி புரிகின்றனர்.

இப்பாரின் அமைதியைப் பாழ்படுத்தும் எத்தகைய பிரச்சினைகளையும் பாதுகாப்பு மன்றத்தின் கவனத்திற்குக் கொணர்வது, செயலாளரின் சிரிய பணியாகும். பன்னாட்டு மன்றத்தின் பணிகளையெல்லாம் ஆண்டிற்கு ஒரு முறை அறிக்கையிட்டுப் பேரவைக்கு அளிக்கவேண்டுவதும் அவரது பொறுப்பு ஆகும். அவ்வப்போது பிற பணி நிலையங்களின் நடவடிக்கைகளையும் கண்காணிக்கவேண்டியது அவர்தம் கடமையாகும். பன்னாட்டு மன்றத்தின் இன்றைய பொதுச் செயலாளர் பெரு நாட்டைச் சேர்ந்தவராகிய ஜாவியர் கூலர் ஆவார். அவர் 1981 ஆம் ஆண்டு இப்பதவியினை ஏற்றார்.

**4. சமூக, பொருளியல் பணி நிலையம்** (Economic and Social Council)

மக்கள் அனைவரும் எத்தகைய வேற்றுமையுமின்றிப் பொருளாதார முன்னேற்றம் அடையவும், பின் தங்கிய நாடுகள் எல்லாம் பெரும் அளவில் நிதி உதவி பெறவும், தொழில் நுட்பத்தைப் பகிர்ந்துகொள்ளவும் இப்பணி நிலையத்தைத் தோற்றுவித்தனர். மக்கள் தொகையைக் கட்டுப்படுத்தி, மனித உரிமையைப் பேணி வளர்ப்பதும் இயற்கைச் செல்வத்தைப் பயன்படுத்தி மக்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதும் இந்நிலையத்தின் நேரிய பணிகளாகும். பாரில் வாழும் மக்களின் பண்பாட்டு வளர்ச்சி,

கல்வி மேம்பாடு, சமூக முன்னேற்றம், ஆடவர் பெண்டிர் நல் வாழ்வுபற்றிய ஆய்வுகளை அனைத்து நாடுகளிலும் பற்பல குழாங்களாகவும் குழுக்களாகவும் நடத்திப் புள்ளிவிவரங்கள் சேகரித்துப் பலதிறப்பட்ட செயல்களை இப்பணிமன்றம் ஆற்றுகிறது. பன்னாட்டு மன்றத்தில் பணிபுரியும் பல்வேறு சிறப்புச் செயலமைப்புகளின் (Specialised Agencies) சீரிய சேவைகளையெல்லாம் ஒருமுகப்படுத்தும் கடமையினைச் செய்வதும் இப்பணி நிலையமே.

தொடக்கத்தில் இப்பணிமன்றத்தில் பேரவை தேர்ந் தெடுத்த 18 உறுப்பினரே பணிபுரிந்தனர். ஆனால், 1972ஆம் ஆண்டிலிருந்து இம்மன்றத்தில் பணிபுரியும் உறுப்பினர் தொகை 54ஆக அதிகரித்துள்ளது. அவ்வப்பொழுது இப் பணி நிலையம் கூட்டப்பட்டாலும் வழக்கமாக ஆண்டிற்கு இரண்டு தடவை மட்டுமே கூடிச் செயலாற்றுதல் இன்றி யமையாதது.

## 5. பொறுப்பாட்சிப் பணி நிலையம் (Trusteeship Council)

சர்வதேசச் சங்கத்தின் (League of Nations) பொறுப்பில் தன்னாட்சி பெறாத பல நாடுகள் ஏற்கெனவே இருந்தன. இரண் டாம் உலகப் போரின் விளைவாகப் பல நாடுகள் எதிரிகளிட மிருந்து கைப்பற்றப்பட்டுப் பன்னாட்டு மன்றத்தின் ஆட்சிப் பொறுப்பிற்கு வந்துசேர்ந்தன. அந்நாட்டு மக்கள் நல்வாழ்வு பெற்றுத் தன்னுரிமை எய்தும்வரை உலக மன்றத்தின் அறக் காப்பிலேயே அமைந்து வாழும். அந்நாடுகளின் அரசியல், சமூக, பொருளாதார நிலையை மேம்படுத்த ஆவன செய்ய வேண்டியது இப்பணி நிலையத்தின் மேலான கடமையாகும். இவ வாறு, பல நாடுகள் இந்நிறுவனத்தின் சீரிய சேவையால் பெரும் முன்னேற்றம் கண்டு உரிமை பெற்ற நாடுகளாகி இன்று உலக மன்றத்திலேயே உறுப்பினராகச் சேர்ந்துள்ளன.

## 6. சர்வ தேச நீதி மன்றம் (International Court of Justice)

பன்னாட்டு மன்றத்தின் உறுப்பினர்கள் கொணரும் பல் வேறு வழக்குகளின் சிக்கல்களை அகில உலகச் சட்டக் கண்ணோட்டத்தில் ஆராய்ந்து தீர்ப்பு வழங்குவது இம்மன்றத் தின் திறம்பட்ட பணியாகும். பொதுப் பேரவை, பாதுகாப்பு

மன்றம், பிற பணி நிலையங்கள், கிளை நிறுவனங்கள் கோரும் சட்ட நுணுக்கங்களை முறைப்படி ஆய்ந்து நீதி ஆலோசனை கூறுவதும் இம்மன்றத்தின் மகத்தான பணியாகும். இவ்வுலக நீதி மன்றத்தில் 15 பேர் உறுப்பினர்கள் ஆவர். இரண்டு நீதிபதிகள் ஒரே நாட்டைச் சேர்ந்தவராய்த் திகழ்தல் கூடாது. அவர்களைப் பேரவையும் பாதுகாப்பு மன்றமுமே தேர்ந்தெடுக்கின்றன. அவர்களின் பதவிக் காலம் 9 ஆண்டுகள் ஆகும்.

### 7. சிறப்புச் செயலமைப்புகள் (Specialised Ageucies)

மக்களின் சமூக, பொருளாதார நலன்குறித்து நாடுகள் தத்தமக்குள்ளே பற்பல ஒப்பந்தங்களையும் இணக்கமான ஏற்பாடுகளையும் உருவாக்கியுள்ளன. அவற்றிற்குச் சிறந்த உயிரூட்டி அவைகளைச் செயற்படச் செய்யச் சில செயலமைப்புகள் எழுந்தன.

அவைகளில் ஒன்று சர்வதேசத் தொழிலாளர் அமைப்பு (International Labour Organisation). தொழிலாளர் பிரச்சினைகளைத் துருவி ஆராய்ந்து அவர்கள் நலனுக்காக ஆக்கப் பணிகளை அறிமுகப்படுத்துவது இவ்வமைப்பின் செயலாகும். உழவுத் துறையிலே ஆராய்ச்சி நிகழ்த்தி உயர்ந்த ரக விதைகளை உற்பத்தி செய்து, உணவுப் பொருள்களைப் பெருக்க உலகநாடுகளுக்கு உதவுவதும், விலங்கின நோய்களை வேரறுக்க முனைந்து பூச்சித் தொல்லைகளைக் கட்டுப்படுத்த முயலுவதும் உணவு வேளாண்மைக் கழகத்தின் (Food and Agriculture Organisation) உன்னதப் பணியாகும்.

மண்ணில் வாழும் மக்கள் அனைவருக்கும் கண்ணனை கல்வியை ஊட்டுவதும், அறிவுக் கலைகளில் மேம்பட ஆக்கமும் ஊக்கமும் அளிப்பதும் தொழில் நுட்பத் தொண்டு புரிவதும் மக்களின் அடிப்படை உரிமைகளையும் பண்பாட்டு நலனையும் பாதுகாத்து அவற்றைப் பரிமளிக்கச் செய்வதும் கல்வி, விஞ்ஞான, பண்பாட்டுக் குழாத்தின் (United Nations Educational, Scientific and Cultural Organisation—UNESCO) சீரிய சேவைகளாகும்.

ஒவ்வொரு நாட்டின் நாணயத்தின் மதிப்பைக் கெடாமல் காப்பாற்றி அந்நாட்டுச் செலாவணிகளைச் சீர்ப்படுத்தி

வணிகத்தை நெறிப்படுத்தி உறுப்பு நாடுகளுக்கு உற்றுழி நிதி உதவிபுரிவதும் அகில உலக நாணய நிதி நிலையத்தின் (International Monetary Fund—IMF) அரிய பணியாகும்.

அகில உலக அணு சக்தி ஆராய்ச்சிக் குழுவிலே (International Atomic Energy Agency—IAEA நம் பாரத நாடும் ஓர் இடம் பெற்றுள்ளது. அழிவிற்கல்லாது மக்கள் நலனுக்கு—ஆக்கச் செயலுக்கு—அணுசக்தியை எவ்வாறு பயன்படுத்துவ தென்பதை இச்செயலமைப்பு ஆராய்ந்து அகில உலகிற்கும் வழி காட்டும்.

**பன்னாட்டு மன்றத்தின் பயனுள்ள சாதனைகள்**

இரண்டாம் உலகப் போரின் இறுதியில் பேரரசுகள் பெர்லின் நகர்மேல் கொண்ட உரிமைச் சிக்கலை இம்மன்றம் மிக இணக்கமாகத் தீர்த்துவைத்தது; வட கொரியா நாட்டின் வலுவான ஆக்கிரமிப்பைத் தன் படைபலத்தாலே தகர்த்து எறிந்தது. ஜெனீவா ஒப்பந்தத்தால், இந்தோசீன யுத்தத்தைத் தடுத்து நிறுத்தியது; 1948ஆம் ஆண்டில் பாலஸ்தீன விவகாரத்தில் தலையிட்டுச் சமரசம் செய்து சமரைத் தவிர்த்தது; அதன் பலனாய், யூத இனத்திற்கென்று இஸ்ரேல் நாட்டைப் புதிதாகத் தோற்றுவித்தது; 1949ஆம் ஆண்டில் இந்தோனேசியச் சிக்கலில் குறுக்கிட்டு டச்சு நாட்டுப் படைகளைப் பின்வாங்கச் செய்து ஒன்றுபட்ட இந்தோனேசிய நாட்டை உருவாக்கியது; காஷ்மீர் எல்லைத் தகராறில் நம் பாரத நாட்டிற்கும் பாகிஸ்தான் நாட்டிற்கும் இடையே எழுந்த போரைத் தவிர்த்தது. சைப்ரஸ் தீவு காரணமாகக் கிரேக்க நாடும் துருக்கி நாடும் சமர்புரிய எழுந்தபொழுது இம்மன்றம் தலையிட்டு அத்தீவில் அமர் விலக்கி அமைதி காத்தது. எகிப்து அதிபர் நாசர் சூயஸ் கால்வாயைத் தேசியமயமாக்கிய நிலையில் பிரான்சும் பிரிட்டனும் எகிப்து நாட்டின்மேல் போர் தொடுக்க அப்படையெடுப்பை இம்மன்றம் வெற்றிகரமாக விலக்கியது. காங்கோ நாட்டில் எழவிருந்த உள்நாட்டுக் கலகத்தைக்கிள்ளியெறிந்து பன்னாட்டுப் படை நிலையை ஆங்கு நிறுவிச் சமாதானத்தை நிலைநாட்டியது. இவை போன்றவையெல்லாம் இவ்வுலகில் உலக மன்றம் சாதித்த சில அரசியல் சாதனைகள் ஆகும். கியூபா நெருக்கடியில் உலக மன்றச் செயலாளராயிருந்த ஊதாண்ட் அவர்களின் உருக்கமான வேண்டுகோளுக்கிணங்க, அமெரிக்க அதிபர்

கென்னடியும் இரஷ்யப் பிரதமர் குருசேவும் தங்கள் எண்ணத்தை மாற்றி, நேச உணர்ச்சியைக் காட்டி, உலகப் போரைத் தவிர்த்த செயல் பன்னாட்டு மன்றத்தின் அரசியல் பணிகளுள் சிறந்த சாதனையாகும்.

பொருளாதாரத் துறையில் இம்மன்றம் ஈட்டிய சாதனைகள் பெரிதும் போற்றுதற்குரியன; அதன் சிறப்புச் செயலமைப்புகள் ஆற்றிய பணிகள் அளவிடற்கரியன. உணவுப் பொருள்களை மிகுதியாக உற்பத்திசெய்து உலகம் முழுவதும் பங்கிட்டுப் பரிமாறியுள்ளது; பசிக் கொடுமையால் பரிதவித்த பல்லாயிரக்கணக்கான சின்னஞ்சிறார்களுக்குச் சத்து உணவு ஊட்டும் திட்டங்கள் பலவற்றைத் தீட்டியுள்ளது; போரின் விளைவாகப் புழுங்கிச் செத்த பல இலட்சம் அகதிகளுக்கு மறுவாழ்வு தந்துள்ளது; காலரா, மலேரியா போன்ற கடும் நோய்களைப் பாரில் பரவவிடாமல் தடுத்துள்ளது; எலும்புருக்கி நோயையும் கட்டுப்படுத்தியுள்ளது; பின்தங்கிய நாடுகளுக்குப் பெரும் அளவில் தொழில் நிதித் தொண்டுகள் புரிந்து மக்களின் வாழ்க்கையைச் செழிக்கச் செய்யும் வகையில் திட்டங்கள் பலவற்றை வகுத்துள்ளது. ஆப்பிரிக்கா, பசிபிக் பகுதிகளில் வாழும் பல்லாயிரக்கணக்கான பின்தங்கிய மக்கள் பன்னாட்டு மன்றத்தின் பணிகளின் பயனாகத்தான் உயர்ந்த தன்னாட்சி பெற்று இன்று அம்மக்கள் மன்றத்திலேயே உறுப்பினர்களாகச் சேர்ந்துள்ளனர். நடுநிலைமைக் கொள்கையைப் பின்பற்றும் ஆசிய, ஆப்பிரிக்க நாடுகளின் அமைதிக் குரல் இன்று அகில உலக அரங்கத்திலே மிகுதியாக ஒலிக்கத் தொடங்கியுள்ளது. வல்லரசுகளின் வாழ்விடமாகத் திகழும் இம்மக்கள் மன்றம் உறுதியாக நல்லரசுகளின் உறைவிடமாக மாறும் என்பதில் ஐயமில்லை.

**முடிவுரை**

மனித குலத்தின் நலனிற்கு இம்மன்றம் ஒரு தலைமுறைக்குள்ளேயே மகத்தான பல பணிகளை ஆற்றினாலும் வல்லரசுகளுக்கிடையே மூளும் கெடுபிடிப் போரை (cold war) இம்மன்றம் முழுமையாகத் தவிர்க்கவில்லையே, தென் ஆப்பிரிக்கா பின்பற்றும் நிறவெறிக் கொள்கையை நிர்மூலமாக்கவில்லையே, இஸ்ரேல் – அரபு நாட்டுப் பகைமையை அடியோடு கிள்ளி யெறியவில்லையே, காஷ்மீர் தகராறைத் தகர்த்துச் சிதைக்க

வில்லையே என்று பலர் குறை கூறினாலும் குவலயத்தைக் காக்க இத்தலைமுறையில் எழுந்துள்ள ஒரே மக்கள் மன்றம் இப் பன்னாட்டு மன்றமே.

எனவே, இப்பூவுலகில் அழிவு மிக்க போரோ, ஆக்கம் தரும் அமைதிப் பணியோ அனைத்து உலக மன்றத்தின் வெற்றி தோல்வியையே பொறுத்துள்ளது. ஒளி விளக்காய்த் திகழும் இவ்வுலக மன்றத்திற்கு ஊறு நேர்ந்தால் அதுவே மனித குல நாகரிகத்திற்கு நேரும் மாபெரும் அழிவாகும் என்று மறைந்த நம் பாரதப் பிரதமர் நேரு கூறிய அறிவுரையை— எச்சரிக்கையை – நாம் என்றும் மறவாது மனத்தில் கொண்டு கடமையைச் செய்து வாழ்வோமாக.

வாழ்க — பன்னாட்டு மன்றம்!
வளர்க — அதன் பயன் மிக்க பணிகள்!

### அருஞ்சொற்பொருள் :

அலைக்கழித்தல்-அங்கும் இங்கும் இழுத்துத் துன்புறுத்தல், புரையோடி - புண்ணாகிச் சீழ் பிடித்து, இடர் - துன்பம், பூசல்-போருக்கு உரிய பகைமை ஒலி, கூற்று-கருத்து, புவி-உலகம், குரக்குக்குலம் - குரங்குக் கூட்டம், கேளிர்-உறவினர், இக்கட்டு-துன்பம், பட்டயம் - சாசனம், சமர், அமர் - போர், குவலயம்-உலகம், உன்னதம் - உயர்ந்த, குழு, குழாம்-கூட்டம், உற்றுழி-தக்க சமயம், பரிந்துரை-சிபாரிசு, ஆடவர்-ஆண்கள், அரிவையர்-பெண்கள், ஊறு-துன்பம், பொன்றினால்-அழிந்தால்.

### வினாக்கள் :

1. பண்டைத் தமிழ்க் கவிஞர்கள் கண்ட கனவுகள் யாவை?
2. பன்னாட்டு மன்றத் தோற்றத்தின் வரலாற்றைவிளக்குக.
3. பன்னாட்டு மன்றத்தின் கொள்கையையும் குறிக்கோளையும் புலப்படுத்துக.
4. பன்னாட்டு மன்றத்தில் செயலாற்றும் முக்கியப் பணி நிலையங்களின் சிறப்பையும் கடமையையும் எடுத்துக் காட்டுக.
5. பாதுகாப்பு மன்றமே பன்னாட்டு மன்றத்தின் உயிர்நாடியாம் என்பதை விளக்கி எழுதுக.
6. பன்னாட்டு மன்றத்தின் அரசியல், பொருளாதாரச் சாதனைகள் யாவை?
7. பன்னாட்டு மன்றத்தை நாம் ஏன் ஆதரிக்கவேண்டும்?

# 15. நாடோடி இலக்கியம்

## [திரு. கி. வா. ஜகந்நாதன்]

தொல்காப்பியத்தில், தமிழில் உள்ள இலக்கிய இலக் கணங்களின் வகைகளைச் சொல்லும் பகுதியில் தலைவனைப் பிரிந்த தலைவிக்கு ஆறுதல் கூறும் செவிலித்தாய் பயன்படுத்தும் இலக்கியங்கள் இன்னவை என்ற செய்தி சில நூற்பாக்களில் சொல்லப்படுகின்றன. அவற்றிலும் அவற்றின் உரைகளிலும் உள்ள செய்திகளை ஊன்றிக் கவனிக்கும்போது பற்பல காட்சிகளை நம் அகக்கண்ணில் காண்கிறோம். ஆனைக்கதை போன்ற கதைகளுக்கு, 'பொருளொடு புணராப் பொய்ம்மொழி' என்றும், சிரிப்பு மூட்டும் கதைகளுக்கு, 'பொருளொடு புணர்ந்த நகைமொழி' என்றும், விடுகதைகளுக்கு, 'பிசி' என்றும், நாடோடிப் பாட்டுகளுக்கு, 'பண்ணத்தி' என்றும் பெயர்கள் பழங்காலத்தில் வழங்கினவென்று தெரிகிறது. 'தலைமகளை வற் புறுத்தும் செவிலியர் உரைத்து நகுவித்துப் பொழுதுபோக்கு தற்குரியவை இவை என்று உரையாசிரியர் எழுதுகிறார்.

'பண்ணத்தி' என்பது பாட்டும் உரையும் போல இருக்கு மென்றும், எழுதும் பயிற்சியில்லாத புறவுறுப்புகளை உடைய தென்றும் இலக்கணம் அமைத்திருக்கிறார்கள். வஞ்சிப்பாட்டு, மோதிரப்பாட்டு, கடகண்டு என்னும் மூன்று பாட்டுகளைப் பேராசிரியர் என்ற உரைகாரர் உதாரணங்களாகக் காட்டு கிறார். இவற்றையெல்லாம் இக்காலத்தார் 'பாமர இலக்கியம்' (folk lore) என்று சொல்கிறார்கள்

இயற்கைப் பாட்டாகிய நாடோடிப் பாட்டை இலக்கிய வகையில் ஒரு வகையாகச் சேர்த்து எண்ணினர் பண்டைக் காலத்து ஆசிரியர்கள் என்ற உண்மையைத் தொல்காப்பியத்தி லிருந்து நாம் அறிகிறோம். இப்போது உள்ள தமிழ் நூல்களில் மிகப் பழமையானது தொல்காப்பியம்; மிகப் புதுமையானது பாரதியார் பாட்டு. தொல்காப்பியர் இலக்கணம் அமைத்த அந்தப் பாட்டைக் கவிஞர் பரம்பரையினரும் பாராட்டினர்கள். பாரதியார்வரையில் அந்தப் பாராட்டு வந்துகொண்டே இருக்கிறது.

வயல் வெளியிலே ஏற்றத்தால் தண்ணீர் இறைக்கிறார்களே, அங்கே நடைபெறும் இயற்கை இசை விருந்தைச் சுவைக்க விருப்பமுள்ளவர்கள் போய்க் கேளுங்கள். ஏற்றத்தில் ஏறி மிதிப்பவன் ஒருவன்; கீழே சால்பிடிப்பவன் ஒருவன். இந்த இரண்டு பேர்களே அந்தக் கச்சேரியை நடத்துகிறார்கள். ஏற்றமும் சாலுமே பக்க வாத்தியங்கள். முக்கியமான சங்கீத வித்துவான் சால் பிடிப்பவன். அவன் பாடும் பாட்டிலே இசை பொங்குகிறது; கருத்து உள்ளடங்கி இருக்கிறது. இரண்டையும் உணர்ந்து இன்புறுபவர்கள் உலகத்தில் சிலரே. வான விதானத்தின் கீழே பச்சைப் பயிரின் அழகு படர்ந்த பரப்பில் ஏற்ற நீர் ஓடும் சலசலப்பு ஒலியானது சுருதிபோட, சாலை முகக்கும்போதும் மேலே கவிழ்க்கும்போதும் தாளம் பிறக்கப் பாடும் அந்த ஏற்றக்காரர்களுடைய சங்கீதம் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் ஓர் இடத்திற்குள் சிறைப்படவில்லை. அவர்கள் உள்ளம் விரிந்து உவகை பொங்கும்போது வேலையிலே முனைகிறார்கள். அவர்கள் உடல் முழுதும் வளைந்து வேலை செய்யும்போது அதனால் உண்டாகும் உடல் வருத்தத்தை அந்த இனிய பாட்டு மறக்கச்செய்கிறது.

அவர்களுடைய உழைப்பில் சங்கீதம் இன்பத்தைப் புகுத்துகிறது. தம்மை மறந்து உழைக்கும் அவர்களுக்கு அந்த இசையே நிழலாகவும் சோறாகவும் இருந்து சிரமபரிகாரத்தை உண்டாக்குகிறது. சங்கீதம், பாடுபவனுக்கும் கேட்பவனுக்கும் ஒருங்கே இன்பமூட்டுகிறதென்ற தத்துவத்தை அவர்களிடம் நாம் தெளிவாகக் காணலாம். ஏற்றப்பாட்டு ஒன்றுதானா? நெல் இடிக்கும் பெண்கள், காரை குத்தும் மங்கையர் முதலிய மெல்லியலார் கூட்டத்திலே பிறக்கும் நயமான இசையைக் கேட்டுப்பாருங்கள். கும்மியடிக்கும்போது அவர்கள் வளைக் கரங்கள் குலுங்கப்பாடும் பாட்டிலே உண்டாகும் இன்பத்துக்கு ஈடு உண்டா?

பாரதியார் இயற்கையோடு இணைந்த இந்த இசையிலும் மனத்தைப் பறிகொடுத்துவிடுகிறார் :

'ஏற்றநீர்ப் பாட்டின்
இசையினிலும் நெல்இடிக்கும்
கோற்றொடியார் குக்குவெனக்
கொஞ்சும் ஒலியினிலும்

சுண்ணம் இடிப்பார்தம்
சுவைமிகுந்த பண்களிலும்
பண்ணை மடவார்
பழகுபல பாட்டினிலும்

வட்டமிட்டுப் பெண்கள்
வளைக்கரங்கள் தாம் ஒலிக்கக்
கொட்டி இசைத்திடுமோர்
கூட்டமுதப் பாட்டினிலும்

..................நெஞ்சைப்
பறிகொடுத்தேன் பாவியேன்!'

இந்த மாதிரியான பாடல்களிலே நெஞ்சைப் பறிகொடுத்தவர்கள் பலர். சிலப்பதிகாரம் செய்த இளங்கோவடிகள், ஆழ்வார்கள், நாயன்மார்கள், கம்பர் முதலிய கவிஞர் அனைவரும் இந்தக் கூட்டமுதப் பாட்டிலே உள்ளத்தைக் கொள்ளை கொடுத்தவர்களே.

அவர்கள் நூல்களை எடுத்துப் பாருங்கள். இளங்கோவடிகள், பெண்கள் அம்மானை ஆடும்போதும் பந்தாடும்போதும் பாடும் பாடல்களைக் கவனித்திருக்கிறார். அந்த மாதிரியான பாடல்களைத் தாம் இயற்றிய சிலப்பதிகாரத்தில் சேர்த்திருக்கிறார். அம்மானை வரி, கந்துக வரி என்ற பெயரோடு அவருடைய காவியத்திலே உள்ள பாடல்களைப் படிக்கும்போது முன்னே சொன்ன இயற்கையோடு இணைந்த பாடல்களைக் கேட்டு மயங்கினவர் இளங்கோவடிகள் என்பதை உணரலாம். திருவாசகத்தில் தோள் நோக்கம், சாழல், திருவுந்தி என்ற பெயர்களால் வரும் பாட்டுகளெல்லாம் இந்த இயற்கைப் பாடல்களின் போலிகளே.

அந்தப் பாட்டுகளின் உருவம், உலகில் பாமர மக்களும் குழந்தைப் பெண்களும் பாடும் பாடல்களிலிருந்து திருடிக் கொண்டது; கருத்து மாணிக்கவாசகருடையது. அவற்றின் உருவகத்திலும் ஓசையிலும் நாடோடி உலகத்தைக் காண்கிறோம்; கருத்திலே மாணிக்கவாசகரை உணருகிறோம்.

இளங்கோவடிகள்முதல் பாரதியார்வரையில் கேட்டு அனுபவித்த இயற்கைப் பாடல்களை நாமும் கேட்கப் பழக வேண்டாமா?

ஊசி முனையிலே தவம் இருப்பது துன்பமாம். ஆனால், பழங்காலத்துத் தமிழ் நாட்டுக் கதைகளிலே எவ்வளவோ பேர் ஊசி முனையிலே தவமிருந்து பயனடைந்ததாகப் பார்க்கிறோம். நெருப்பாற்றின்மேல் மயிர்ப்பாலம் போட்டுச் சென்ற வீராதி வீரர்களைப்பற்றிப் படிக்கிறோம். அரக்கர்களுடைய மர்மங்களை உணர்ந்து அவர்களுடைய உயிருலவும் இடந்தெரிந்து அவற்றைக் குலைத்து அழித்த கதைகளையும் கேட்டிருக்கிறோம். இவையெல்லாம் இந்த நாட்டுக் கற்பனையிலே படர்ந்தவை. அப்படிக் கற்பனை செய்வதிலும் அதைக் கேட்டுச் சுவைப்பதிலும் நம்மவர்களுக்கு இன்பம் உண்டாகிறது. யாருக்குத்தான் இல்லை? உலகம் முழுவதும் இத்தகைய அரிய கற்பனைகளிலே மயங்குகிறது; குழந்தைப் பருவத்திலேதான் இந்தக் கற்பனைகள் மிக்க சுவையை உண்டாக்குகின்றன. மேனாட்டினர் கூறும் மோகினிக் கதைகள் (fairy tales) எத்தனை! அவற்றைச் சிறு பிள்ளைகள் எவ்வளவு ஆவலாகக் கேட்கிறார்கள்.

செய்யமுடியாத காரியத்தைச் ,செய்யும் வீரர்களின் கதைகளோடு அந்த வகையிலே சில பாடல்களும் உலவுகின்றன. இரண்டுக்கும் ஆதாரம் மனப்பாங்குதானே? செயற்கரிய காரியத்தை ஒருவன் செய்கிறான். அதற்கு ஆயிரம் தடைகள் வருகின்றன. அந்த வீரன் அவற்றையும் புறங்கண்டு வெற்றியடைகிறான். இந்த மூலக் கட்டடத்தைத்தான் இராமாயணம் முதல் சித்திரக்குள்ளன் கதைவரையில் பார்க்கிறோம்.

தடைகள் வரவர மனிதனின் முயற்சி பெருகுகிறது; வீரம் வெளிப்படுகிறது; தடைக்கு அஞ்சி நழுவுபவன் ஆண்மகனாகமாட்டான். ஆதலால், வீரர் கதைகளில் தடைகளும் வெற்றிகளும் வருகின்றன. அதனால் கதை நீளுகிறது. கேட்பவனுடைய உள்ளமும் மயங்கி நிற்கிறது.

பாட்டிலே இப்படி வரும் ஒன்றைப் பார்க்கலாம். இது கதையன்று. கதையும் சிறிது இருக்கிறது. ஒருவன் முயற்சி செய்கிறான். வேண்டிய கருவிகள் இல்லாமலே தன்னுடைய இன்பத்தையே துணைக்கொண்டு முயல்கிறான். பலன் சிறந்ததாக இருக்கவில்லை. ஆனாலும், விடாப்பிடியாகச் செய்து வருகிறான். ஒவ்வொரு படியிலும் அவன் குறைபாட்டைக் காண்கிறான்; ஆனாலும், சலிப்பதில்லை. பல படிகளையும் தாண்டி

முடிந்த நிலையிலும் ஒரு குறை. இந்தக் கருத்தை முள்ளு முனையிலிருந்து ஆரம்பித்துச் சொல்கிறன்.

முள்ளு முனையிலே மூணுகுளம் வெட்டிவச்சேன்;
 ரெண்டு குளம் பாழு – ஒண்ணு தண்ணியே இல்லே.
தண்ணியில்லாக் குளத்திலே மண்ணெடுத்தான் மூணுபேரு;
 ரெண்டுபேரு மொண்டி – ஒத்தன் கையே இல்லே.
கையில்லாத மனுசன் வனைந்த சட்டி மூணு சட்டி;
 ரெண்டு சட்டி பச்சை – ஒண்ணு வேகவே இல்லே.
வேகாத சட்டியிலே போட்ட அரிசி மூணரிசி;
 ரெண்டரிசி பச்சை – ஒண்ணு வேகவே இல்லே.
வேகாத சோற்றுக்கு மோர்கொடுத்தது மூணெருமை;
 ரெண்டெருமை மலடு – ஒண்ணு ஈனவே இல்லே.
ஈனாத எருமைக்கு விட்டகாடு மூணுகாடு;
 ரெண்டுகாடு சொட்டை – ஒண்ணில் புல்லே இல்லே.
புல்லில்லாக் காட்டுக்குக் கந்தாயம் மூணு பணம்;
 ரெண்டு பணம் கள்ளவெள்ளி – ஒண்ணு செல்லவே இல்லே.
செல்லாத பணத்துக்கு நோட்டக்காரர் மூணுபேரு;
 ரெண்டுபேரு குருடு – ஒத்தனுக்குக் கண்ணே இல்லே.
கண்ணில்லாக் கணக்குப் பிள்ளைக்கு விட்ட ஊரு மூணு ஊரு;
 ரெண்டு ஊரு பாழு – ஒண்ணிலே குடியே இல்லே.

ஒவ்வொன்றிலும் மூன்று மூன்று பொருள்கள்; மூன்றும் உபயோகம் இல்லை. ஆனல், அதை அப்படிச் சொல்லவில்லை. இரண்டை ஒரு விதமாகவும் ஒன்றை ஒரு விதமாகவும் சொல்கிறது பாட்டு. குளம் பாழு என்பதும் குளத்திலே தண்ணியே இல்லையென்பதும் ஒன்றுதான். ஆனலும் 'முள்ளு முனையிலே மூணு குளம் வெட்டிவச்சேன்,' என்று தன்னுடைய சிரமத்தை அவன் சொல்ல ஆரம்பிக்கும்போது, 'அப்படியா? எப்படி முடிந்தது?' என்று வியப்பும் ஆவலும் தூண்டக் கேட்கிறேம். இத்தகைய பாட்டுகளைப் படித்துப்பார்ப்பதைவிடப் பாடிக் கேட்பதில்தான் ரஸம் இருக்கிறது.

'முள்ளு முனையிலே மூணு குளம் வெட்டிவச்சேன்,' என்ற அடியை நிறுத்திப் பாடும்போது பாடுபவனுடைய வார்த்தைகள் எவ்வளவுக்கு எவ்வளவு நிதானமாக வருகின்றனவோ, அவ்வளவுக்கு அவ்வளவு கேட்பவருக்குச் சுவை உண்டாகிறது.

'இரண்டு குளம் பாழு,' என்று சொல்லும்போது 'அடடா!' என்று நாம் இரங்குகிறோம். ஆனாலும், இன்னும் ஒரு குளம் இருக்கிறதே: அஃது எப்படி இருக்கிறது? அதாவது நன்றாக இருக்கட்டும் என்று நாம் விரும்புகிறோம்.

'ஒண்ணில் தண்ணியே இல்லே,' என்று முடிக்கும்போது நம்முடைய இரக்கம் உச்சநிலையை அடைகிறது.

**அருஞ்சொற்பொருள் :**

நூற்பா - சூத்திரம், விதானம் - மேற்கட்டி, தத்துவம்-உண்மை, காரை - சுண்ணாம்பு, கோல் தொடி-அழகிய வளையல், மடவார்-பெண்கள், அம்மானை-மூன்று பெண்கள் சேர்ந்து விளையாடும் ஒரு வகை விளையாட்டு, கந்துக வரி-பெண்கள் பந்தாடும் போது பாடும் ஒரு வகை இசைப்பாடல், புறங்கண்டு - வென்று, ஈனாத-கன்று போடாத, மலடு-பிள்ளைப்பேறு இல்லாமை, கந்தாயம்-வரவு, நோட்டக்காரர்-காசுகள் செல்லுமா எனச் சோதிப்பவர்.

**வினாக்கள் :**

1. பாமர இலக்கியம்பற்றித் தொல்காப்பியத்தில் காணப்படும் குறிப்பை விளக்கு.
2. ஏற்றப்பாட்டின் சிறப்பை ஆசிரியர் எங்ஙனம் விளக்கியுள்ளார்?
3. இயற்கையோடு இணைந்த இசையில் பாரதியார் தம் மனத்தைப் பறிகொடுத்த நிலையினை எங்ஙனம் விளக்கியுள்ளார்?
4. சிலப்பதிகாரம், திருவாசகம் ஆகிய இலக்கியங்களில் இயற்கைப் பாடல் அமைந்த தன்மையை ஆசிரியர் எங்ஙனம் எடுத்துக் கூறியுள்ளார்?
5. 'முள்ளு முனையிலே,' எனத் தொடங்கும் நாடோடிப் பாடலில் அமைந்துள்ள நயத்தை விளக்குக.

# 16. மறைந்த மாநகர்—பழையாறை

[திரு. நடன காசிநாதன்]

'சீரி னீடிய செம்பியர் பொன்னிநன் னாட்டுக்
காரின் மேவிய களியளி மலர்ப்பொழில் சூழ்ந்து
தேரின் மேவிய செழுமணி வீதிகள் சிறந்து
பாரி னீடிய பெருமைகள் சேர்பதி பழையாறை.'

—அமர்நீதி புராணம்

என்று சேக்கிழார் பெருமானால் சிறப்பிக்கப்படும் பழையாறை வரலாற்றுக்கு முற்பட்ட காலந்தொட்டு மக்கள் தொடர்ந்து வாழ்ந்துவரும் ஒரு திருத்தலமாக இருந்துவந்திருக்கிறது. பல்லவர் காலம்முதல் சோழ மன்னர்களின் தலைநகரங்களில் ஒன்றாகத் திகழ்ந்து பல விதப் பெயர் மாற்றங்களைப் பெற்றிருக்கிறது.

தஞ்சை மாவட்டத்தில் கும்பகோணத்துக்குத் தென் மேற்கே ஏறக்குறைய ஐந்து கிலோ மீட்டர் தொலைவில் இன்று ஒரு சிற்றூராகக் காட்சிதரும் இவ்வூர், சோழர்கள் காலத்தில், 'விக்ரமசோழப் பெருந்தெரு' போன்ற பெரும் தெருக்களை உள்ளடக்கிய பெருமைகள் சேரப் பழம்பதியாக விளங்கியிருக் கிறது. இவ்வூருக்கு அருகில் அமைந்திருக்கும் முழையூர், பட்டீச்சுரம், திருச்சத்திமுற்றம், திருமத்தடி, சோழமாளிகை, ஆரியப்படையூர், பம்பப்படையூர், புதுப்படையூர், மணப்படை யூர், சுந்தரப்பெருமாள்கோயில், தாராசுரம், நாதன்கோயில், இராசேந்திரப்பேட்டை, அரிச்சந்திரபுரம், கோணப்பெருமாள் கோயில் போன்ற ஊர்கள் பழங்காலத்தில் பழையாறை மாநகரின் பல பகுதிகளாக விளங்கியவை.

பழையாறை என்பது பழையாற்றூர் என்பதன் மரூஉ. பழையாறையின் மிகப் பழம் பெயர் 'ஆயிரத்தளி' காலப் போக் கில் நந்திபுரம், முடிகொண்டபுரம் ஆஹவமல்ல குலகாலபுரம், மீனவன் வெங்கண்ட சோழபுரம், இராசராசபுரம் என்று பல பெயர்களைப் பெற்றுத் திகழ்ந்திருக்கிறது.

இந்நகரில், (1) பழையாறை வட தளி (2) பழையாறை மேற்றளி (3) பழையாறைத் தென் தளி (4) பட்டீச்சுரம்

(5) திருச்சத்திமுற்றம் (6) அருண்மொழி தேவேச்சுரம் (7) பஞ்சவன் மாதேவீச்சுரம் (8) அரிச்சந்திரம் (9) இராச ராசேச்சுரம் (10) கோபிநாதப்பெருமாள் கோயில் (11) நந்திபுர விண்ணகரம் (12) சுந்தரப்பெருமாள் கோயில் போன்ற பல கோயில்கள், ஆயிரத்தளி என்ற அதன் பழம் பெயருக்கேற்ப அமைந்து அழகூட்டியிருக்கின்றன.

இந்திய அரசு தொல்பொருள் ஆய்வுத் துறையால், பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னர்ப் பழையாறைக்கு அருகில் உள்ள நந்தன்மேடு என்னுமிடத்தில் அகழ்வாய்வு செய்யப் பட்டது. அவ்வகழ்வாய்வில் கறுப்பு, சிவப்புப் பானையோடு களும், சிவப்பு வண்ணம் பூசப்பட்ட பானையோடுகளும் கிடைத் துள்ளன. இம்மேட்டுக்குச் சிறிது தொலைவில் முதுமக்கள் தாழிகள் மண்ணுக்குள் புதைந்திருப்பதும் கண்டுபிடிக்கப் பட்டன. இதனைப் போன்றே, சென்னைப் பல்கலைக் கழகத் தொல்பொருள் ஆய்வுத் துறையினர் தொல்பொருள் ஆய்வுப் பயணம் மேற்கொண்டபோதும் இப்பகுதியில் முதுமக்கள் தாழிகளும், கறுப்பு, சிவப்புப் பானையோடுகளும் பெரும் அளவில் கிடைக்கின்றன என்பது கண்டறியப்பட்டிருக்கிறது.

சோழன்மாளிகை என்ற பகுதியில் கிணறு ஒன்று தோண்டியபோது இப்பகுதியில் பெருங்கற்காலம் முதல் கி.பி. 12, 13ஆம் நூற்றுண்டுவரை மக்கள் தொடர்ந்து வாழ்ந்திருக்கவேண்டும் என்பதற்கான பாளநிலைகள் இருப்பது உணரப்பட்டது என்பது சென்னைப் பல்கலைக்கழகத் தொல் பொருள் ஆய்வுத் துறையால் வெளியிடப்பட்ட 'இந்தியத் தொல்லியல் – ஒரு திறனாய்வு 1964–65' என்ற ஆண்டிதழில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இன்றும், இப்பகுதியில் வயல்களில் உழவுத்தொழில் செய்கையில் ஏராளமான செங்கற்கள் காணப் படுகின்றன என்று இங்குள்ள உழவர் பெருமக்கள் தெரிவிக் கின்றனர். இங்கு ஓர் உறைக்கிணறும் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. சோழமாளிகைக்கு அருகிலுள்ள குளத்தில் துவரம்பருப்பு அளவுள்ள சில தங்கக் காசுகள் கண்டெடுக்கப் பட்டன என்று இவ்வூரார் கூறுகின்றனர்.

ஆகவே, அகழ்வாய்வில் கிடைத்த பொருள்களைக்கொண்டு பார்க்கையில் பழையாறையில் மக்கள் பெருங்கற்காலம் முதல் வாழ்ந்திருக்கின்றனர் என்பது உறுதியாகிறது.

கி.பி. 6ஆம் நூற்றாண்டின் இறுதியில் சோழ நாட்டில் பழையாறை ஒரு சிறந்த சிவத்தலமாக இருந்திருக்கிறது என்பது அப்பரின் பழையாறை வடதளிப் பாசுரங்களால் புலனாகின்றது. அப்பர் வாழ்ந்த காலத்திலேயே வாழ்ந்துவந்த ஞான சம்பந்தரும் பழையாறையின் ஒரு பகுதியாக விளங்கிய பட்டீச்சுரத்தைப் பாடிப் பரவியிருத்தலாலும் இந்நகரின் பழம் பெருமை தெரியவருகிறது.

சேக்கிழாரும் தம் பெரியபுராணத்தில் பழையாறைக்கு அப்பர் வருகைபுரிந்தார் என்றும், பழையாறையிலுள்ள வடதளியை வணங்கச் சென்றபோது சமணர்களால் தடுக்கப் பட்டார் என்றும், பின்னர் அங்நகரிலிருந்த மன்னனது தலையீட்டால் அப்பர் வடதளி இறைவனை வழிபட முடிந்தது என்றும் கூறியுள்ளார். எனவே, கி.பி. ஆறும் நூற்றாண்டின் இறுதியிலேயே இங்நகரில் அரசன் ஒருவன் இருந்து ஆண்டுவந்தான் என்பது வெளிப்படை. அவ்வாறு ஆண்டுவந்தவன் பல்லவர்க்கு அடங்கிய சோழ மன்னனாக இருக்கலாம். அச்சோழ மன்னனின் வழிவந்த ஒருவனின் மகள்தான் மங்கையர்க்கரசியோ என்று ஐயுறுவாரும் உளர்.

கி.பி. எட்டாம் நூற்றாண்டில் ஆட்சிபுரிந்த பல்லவ மன்னன் நந்திவர்ம பல்லவமல்லன் காலத்தில் பழையாறை மிக முக்கிய இடத்தைப் பெற்றுத் திகழ்ந்திருக்கிறது. இக்காலக்கட்டத்திலிருந்து பழையாறை பிற்காலச் சோழர்களின் முக்கியத் தலைநகரங்களுள் ஒன்றாக ஆகிவிட்டது. சங்க காலச் சோழர்களின் தலைநகரங்களான உறையூர், காவிரிப்பூம்பட்டினம் ஆகிய நகரங்களையடுத்து, பிற்காலச் சோழர்களின் முதல் தலைநகரமாகப் பழையாறை விளங்கியது என்று கூறலாம்.

இரண்டாம் நந்திவர்மனாகிய நந்திவர்ம பல்லவமல்லனின் 21ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட செப்பேட்டில் நந்திவர்மன் நந்திபுரத்தில் தமிழரசர்களாலும் (திர்மிள அரசர்கள்), பல்லவ மன்னன் சித்ரமாயனாலும் முற்றுகையிடப்பட்டான் என்றும் அதைக் கேள்வியுற்ற பூச்சனின் வழி வந்த உதயச்சந்திரன் என்ற தளபதி நந்திபுரத்துக்குச் சென்று தமிழரசர்களையும், சித்ரமாயனையும் தன் வாளால் வீழ்த்திவிட்டுத் தன் மன்னனுக்கு வெற்றி தேடித்தந்தான் என்றும் குறிக்கப்பட்டுள்ளது.

மேலே காணப்பெறும் செய்தியைக்கொண்டு பார்க்கையில் நந்திவர்ம பல்லவமல்லன் காலத்தில் பழையாறை ஒரு முக்கிய நகரமாக இருந்திருக்கிறது என்ற உண்மை விளங்குகிறது. அங்கே நந்திவர்மன் ஓர் அரண்மனையையும் நந்திபுர விண்ணகரம் என்ற திருமால் கோயிலையும் எடுப்பித்துச் சிறப்பித்திருக்கிறான். மேலும், பழையாறையைத் தன் பெயரால் நந்திபுரம் என்றும் மாற்றியிருக்கிறான். இவனால் எடுப்பிக்கப்பெற்ற நந்திபுர விண்ணகரம் இவனது சமகாலத்தவரான திருமங்கை மன்னன் என்ற ஆழ்வாரால் பாடப்பெற்றிருக்கிறது. இரண்டாம் நந்திவர்மனின் பெயரனாகிய மூன்றாம் நந்திவர்மனின் காலத்திலும் பழையாறை முக்கிய நகரமாகத் திகழ்ந்திருக்கிறது. மூன்றாம் நந்திவர்மனாகிய தெள்ளாறெறிந்த நந்திவர்மன்மீது பாடப்பட்ட நந்திக்கலம்பகம், 'படை ஆறு சாயப் பழையாறு வென்றான்,' என்று நந்திவர்மனைப் புகழ்வதிலிருந்து பழையாற்றில் போர் நிகழ்ந்து, அதில் நந்திவர்மன் வென்றிருக்கிறான் என்பதை உணரலாம்.

பிற்காலச் சோழர்களில் முதலாம் இராசராசனின் தந்தையான சுந்தர சோழன் காலத்தில் தஞ்சாவூர் முக்கியத் தலைநகரமாக இருந்தபோதிலும் மன்னன் பெரும்பாலும் பழையாறையில் தங்கியிருந்திருக்கிறான் என்று தெரிகிறது. வீரசோழியவுரையில் காணப்படும் பழைய பாடல்கள், 'மேதகு நந்திபுரி மன்னர் சுந்தரச் சோழர்,' (வீரசோ. அலங். 10) என்றும் கூறுவதால் மேற்கூறிய கருத்து வலிமை பெறுகிறது.

உத்தமசோழன் காலத்தில் நந்திபுரமான ஆயிரத்தளியைச் சார்ந்த திருவாலி ஆயிரவன் என்பான் நந்தாவிளக்கெரிப்பதற்காக 90 ஆடுகள் கொடையளித்ததைத் திருப்பழனத்துக் கல்வெட்டுக் கூறுகிறது.

முதல் இராசராசனின் தமக்கையான குந்தவைப் பிராட்டியார் தம் தந்தையின் நினைவாக, 'சுந்தர சோழ விண்ணகர் ஆதுரசாலை' என்ற மருத்துவ நிலையத்தைத் தஞ்சையில் நிறுவி அதற்கு நிலமும் பொருளும் அளித்ததற்கான ஆணையைப் பழையாறை அரண்மனையிலிருந்து அனுப்பிய செய்தி ஒரு கல்வெட்டில் காணப்படுகிறது.

முதலாம் இராசராசன் தனது மற்றொரு பெயரான அருண் மொழித்தேவன் என்னும் பெயரால் பழையாறையில் 'அருமொழி தேவேச்சுரம்' என்னும் கோயிலை எடுப்பித்திருக்கிறான். இவனது அருமை மைந்தன் முதலாம் இராசேந்திரன் காலத்தில் பழையாறையான முடிகொண்டசோழபுரத்தில் இருந்த பள்ளிப் படையான பஞ்சவன் மாதேவீஸ்வரம் உடைய மகாதேவற்கு வழிபாட்டுக்கும் நிவந்தங்கட்கும் நிலம் அளிக்கப்பட்டதை இராமநாதன்கோயில் கல்வெட்டுத் தெரிவிக்கிறது. இவன் இந்நகரில் தங்கியிருந்து பல வித ஆணைகளை அனுப்பியுள்ளதை உய்யக்கொண்டான் திருமலையிலுள்ள கல்வெட்டாலும் எம்பாடியிலுள்ள கல்வெட்டாலும் உணரலாம். இவனது புகழ்பெற்ற திருவாலங்காட்டுச் செப்பேட்டுச் சாசனம் இங்கிருந்து அளிக்கப் பெற்றதேயாகும். இவன் தனது பெயரால் இந்நகரை முடிகொண்டசோழபுரம் என்று மாற்றியமைத்திருக்கிறான். முதலாம் இராசேந்திரன் மக்களுள் ஒருவனான வீரராசேந்திரன் பழையாறையை ஆஹவமல்லகுலகாலன் என்ற தன் பெயரால் 'ஆஹவமல்லகுலகாலபுரம்' என்று மாற்றியமைத்திருக்கிறான்.

விக்கிரம சோழன் கி.பி. 1122இல் 'முடிகொண்டசோழபுரத்துக் கோயிலின் உள்ளாலை ஆட்டத்து வெளிமேலை மண்டபம் ராஜேந்திர சோழனில் சேதராஜனில் எழுந்தருளி இருந்து' தென் ஆர்க்காடு மாவட்டத்தில் இன்று காணப்பெறும் எலவானாசூர்க் கோயிலுக்குக் கொடையளித்திருக்கிற செய்தியை எலவானாசூர்க் கல்வெட்டில் காணமுடிகிறது.

இரண்டாம் இராசராசன் பழையாறையில் உயிர்நீத்தான் என்பதும், அவன் இறந்தபொழுது அவன் மைந்தர்கள் ஒரு வயதும், இரண்டு வயதுமுடையவர்களாக இருந்த காரணத்தினால் இளவரசராக முடிசூட்ட இயலாத சூழ்நிலை இருந்தது என்பதும், பல்லவராயன் என்பான் அவர்களையும் திருவந்தப்புரத்தார்களையும் பரிவாரத்தையும் அழைத்துக்கொண்டு பழையாறையின் ஒரு பகுதியான இராசராசபுரத்துக்குச் சென்றதையும், 'பெரியதேவர் துஞ்சியருளிப் பிள்ளைகளுக்கு ஒன்றும் இரண்டும் திருநட்சத்திரமாகையால் ஆயிரத்தளிப்படை வீடும் விட்டுப் போத. வேண்டிப் போதுகிற இடத்துத் திருவந்தப்புரமும்

பரிவாரங்களும் உள்ளிட்டன எல்லாம் பரிகரித்துக் கூட்டிக் கொடு போந்து ராஜராஜபுரத்திலே இருந்த இடத்து,' என்று பல்லவராயன்பேட்டைக் கல்வெட்டுத் தெரிவிக்கிறது.

பழையாறையின் ஒரு பகுதியான இராசராசபுரம் இரண்டாம் இராசராசனின் பெயரால் அமையப்பெற்றதாகும். அவனது பெயராலேயே இராசராசேச்சுரம் என்ற கோயில் ஒன்றையும் ஏற்படுத்தியிருக்கிறன். இராசராசபுரம்தான் இன்று தாராசுரம் என்று வழங்கப்படுகிறது. இவன் காலத்தில் வாழ்ந்த தமிழ்ப் புலவரான ஒட்டக்கூத்தர் 'தக்கயாகப்பரணி' யில்,

'உம்பரர்ளும் அமராபுரந்தவிரலோக பாலரெயில் காவல்கூர்
செம்பொன் மாடநிரை ராசராசபுரி வீதி மாதர் கடை திறமினோ!'

என்று இராசராசபுரியைப் பாராட்டியிருக்கிறர்.

கி.பி. 13ஆம் நூற்றுண்டில் பாண்டி நாட்டை ஆட்சிசெய்த முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன், சோழ மன்னன் மூன்றும் இராசராசனை வென்று அவனது தலைநகர்களில் ஒன்றுன பழையாறையில் வீராபிடேகம் செய்துகொண்டதைச் சுந்தரபாண்டியனின் மெய்க்கீர்த்தி,

'பாடருஞ் சிறப்பிற் பருதி வான்றேய்
ஆடகப் புரிசை யாயிரத் தளியிற்
சோழ வளவ னபிஷேக மண்டபத்து
வீராபிஷேகம் செய்து புகழ்விரித்து....

என்று புகழ்ந்துரைக்கிறது.

இவ்வாருக வரலாற்றுக்கு முற்பட்ட காலந்தொட்டு கி.பி.13ஆம் நூற்றுண்டுவரை பழையாறை தமிழக வரலாற்றில் ஒரு சிறந்த இடத்தைப் பெற்றுவந்திருக்கிறது. பழையாறை அரண்மனையில் பல்விதப் பள்ளிக் கட்டில்களும் மண்டபங்களும் இருந்தன என்பது மேலே கூறப்பட்டன. பெரும் வீதிகளும் வான் தோய் மாடங்களும் பற்பல கோயில்களும் அங்கு இருந்தன.

பழையாறை, சோழர் காலத்தில் வரி வாங்குவதில் கடைப் பிடிக்கவேண்டிய அளவு முறை போன்றவற்றுக்கு எடுத்துக் காட்டாக விளங்கியிருக்கிறது. தட்டனூர்த் தலைவனுன வேதன்

சிந்தாமணி என்பானுக்கு அனுப்பப்பட்ட ஆணையில் நந்திபுரத்தில் எந்த வகையில் வரிகள் வாங்கப்படுகின்றனவோ, அதே முறையில் பழூரிலும் வாங்கப்படுதல் வேண்டும் என்று கூறப்பட்டிருப்பதை மேலூர்ப்பாளையம் கல்வெட்டு உணர்த்துகிறது.

பராந்தகனின் கல்வெட்டுகளில் ஆயிரத்தளி, தென்கரை நாட்டில், கிழார்க் கூற்றத்தில் அமைந்திருந்ததாகக் காணப்படுகிறது. முதலாம் இராசராசன், அவன் மகன் முதலாம் இராசேந்திரன் ஆகியோர் காலங்களில் பழையாறை, க்ஷத்திரிய சிகாமணி வளநாட்டுத் திருநறையூர் நாட்டில் அடங்கியிருந்ததாகக் குறிக்கப்பட்டுள்ளது.

## அருஞ்சொற்பொருள் :

செம்பியர்-சோழர், கார்-மேகம், களி அளி-களிக்கும் வண்டுகள், மரூஉ - இலக்கணம் சிதைந்து மருவி வழங்கும் சொல், தளி-கோயில், முதுமக்கள் தாழி - முற்காலத்து இறந்தவர்களின் உடலை இட்டுப்புதைக்கும் மண்பாண்டம், நந்தாவிளக்கு-கோயில்களிலுள்ள அணையா விளக்கு, நிவந்தம் - கோயில் செலவு, பரிகரித்து - நீக்கி.

## வினாக்கள் :

1. பழையாறை சேக்கிழார் பெருமானால் எவ்வாறு சிறப்பிக்கப்பட்டுள்ளது?
2. பழையாறை பெற்ற பிற பெயர்கள் யாவை?
3. தொல்பொருள் ஆய்வுத் துறையினரின் அகழ்வாய்வினால் கண்டுபிடிக்கப்பட்டவை யாவை?
4. பழையாறையில் அப்பர் வருகைகுறித்து ஆசிரியர் கூறும் செய்தி யாது?
5. நந்திவர்ம பல்லவமல்லன் காலத்தில் பழையாறை எங்ஙனம் சிறப்புற்று விளங்கியது?
6. இராசராச சோழனின் காலத்தில் பழையாறை பெற்ற சிறப்புகளைத் தொகுத்து எழுதுக.
7. பல்லவராயன்பேட்டைக் கல்வெட்டினால் நாம் அறியும் செய்தி யாது?
8. சுந்தரபாண்டியனின் மெய்க்கீர்த்தியால் நாம் அறியும் செய்தி யாது?
9. மேலூர்ப்பாளையம் கல்வெட்டினால் தெரியவரும் வரலாற்றுச் செய்தியைக் குறிப்பிடுக.

# 17. விண்வெளிப் பயணம்

## [திரு. பெ. நா. அப்புஸ்வாமி]

நாம் வாழும் பூமி என்பது ஒரு கோள். அஃது உருண்டை வடிவமானது; நிலம், நீர், வாயு என்னும் திடப் பொருள், திரவப் பொருள், வாயுப் பொருள் என்பவைகளால் அமைந்தது. அது சூரியனது குடும்பத்தைச் சேர்ந்தது; சூரியனைச்சுற்றி, சுழன்று உருண்டு ஓடிவருகிறது. அதைப்போலவே, சூரிய குடும்பத்தைச் சார்ந்த கோள்கள் பிறவும் சூரியனைச்சுற்றி உருண்டோடிவருகின்றன. சூரியன் என்பது ஒரு விண்மீன்; அது பூமியைவிட மிகமிகப் பெரியது; அதைவிடப் பெரியனவும் அதை ஒத்தனவும், அதைவிடச் சற்றே சிறியனவுமான கோடிக் கணக்கான விண்மீன்க்ள், 'நமது அண்டம்' என்னும் 'நமது பிரபஞ்ச'த்தில் அடங்கியுள்ளன. நமது அண்டத்தைப்போன்ற கோடிக்கணக்கான வேறு பல அண்டங்களும் பேரண்டம் என்று சொல்லத்தகும் 'அகில பிரபஞ்ச'த்தில் அடங்கியுள்ளன. கோடானுகோடிக் கணக்கான அத்தனை பிரபஞ்சங்களும் அவற்றின் உள்ளே அடங்கிய மற்றவை அனைத்தும் நமது மனத்தைத் திகைக்கச் செய்யும் மாபெரும் விரிவை உடையதும், எல்லையற்றதாகத் தோன்றுவதுமான விண்வெளியில் இயற்கை ஆற்றல்களின் ஆட்சிக்கு உட்பட்டு, அந்த ஆற்றல்களுக்கு உரிய தனி முறைகளின்படி இயங்கி ஓடிவருகின்றன. நெறி தவறுமலும், வெற்றுக் கற்பனைகளுக்கோ முற்கோள்களாகக்கொள்ளப் பட்ட தவறான பற்றுகளுக்கோ இடங்கொடாமலும், பற்பல துறையினரான அறிவியலார் ஆராய்ந்து கூர்ந்து நோக்கி, உண்மையைச் சிறிதும் கைவிடாமல் நேராகக் கண்டும், உண்மைக்குச் சிறிதும் மாறுபடாமல் சீராகக் கொண்டும், வெளியிட்டுவந்த உறுதியானவும் நம்பத்தக்கனவுமான அறிவியல் சான்றுகளின் அடிப்படையில் இக்கால வானவியலார் இவ்வாறு நம்பிவருகிறார்கள்.

### வாயுமண்டலமும் விண்வெளியும்

நிலமும் நீருமாக அமைந்த பூமியைச்சுற்றி வாயுமண்டலம் என்னும் வாயுத் தொகுதி ஒன்று உள்ளது. அத்தொகுதியில் ஒருசில வாயுக்களும் நீராவியும் உள்ளன. 'கடல் மட்டம்' என்று

சொல்லப்படும் பூமி மட்டத்தில் வாயுமண்டலத்தின் அழுத்தம் அதிகம். பூமியிலிருந்து உயரச் செல்லச் செல்ல அதன் அழுத்தம் குறைவு. பூமியின் மூன்று தொகுதிகளையும் சேர்த்து ஒன்று என்றே கொள்ளலாம். அவை மூன்றும் ஒன்றாக விண் வெளியில் இடம்பெற்றுள்ளன. ஆதலால், பூமியின் வாயு மண்டலம் முடிவு பெற்றபின், அதற்கு அப்பாலிருந்து விண்வெளி தொடங்குகிறது.

இதைப் பற்பல கோணங்களிலிருந்து பார்க்கும்போது வெவ்வேறான முடிவுகளைக் கொள்ளவேண்டியிருக்கிறது. பூமி யிலிருந்து முப்பத்திரண்டு கிலோமீட்டர் உயரச் சென்றால் அங்குள்ள வாயு மண்டல அழுத்தம் கடல் மட்டத்திலுள்ள அழுத்தத்தின் ஒரு சதவீத அளவாகக் குறைந்துவிடுகிறது. அந்தச் சிற்றளவு பொருட்படுத்தத்தக்கதன்று என்று கருத லாம். ஆகவே, விண்வெளி அங்கே தொடங்குகிறது என்பது பௌதிகவியலார் கூறும் முடிவு.

வாயு மண்டலத்தின் மேற்பகுதியில் வானொலி அலைகளைத் தடுத்துத் திருப்பும் அயனி அடுக்குகள் உள்ளன. அவற்றுள் மிக உயரத்தில் உள்ள அடுக்கு நானூற்று எண்பது கிலோ மீட்டர் தொலைவில் இருக்கிறது. அதற்கு மேலிருந்துதான் விண் வெளி தொடங்குகிறது என்பது வானொலித் துறையார் கூறும் முடிவு. பூமியிலிருந்து ஏறத்தாழ இருநூற்றைம்பது கிலோ மீட்டர் உயரத்துக்கு மேலுள்ள இடத்தில் விரைந்து செல்லும் ராக்கெட்டை யாதொன்றும் தடைசெய்வதில்லை. ஆதலால், விண்வெளி அங்கிருந்து தொடங்குவதாகக் கருதலாம் என்பது ராக்கெட்டுத் துறை ஆராய்ச்சி நிபுணர்களின் கருத்து. வாயு மண்டலத்தில் உள்ள வாயுவின் அழுத்தமே உயரப் பறக்கும் வானூர்திகளைத் தாங்கிப்பிடிக்கிறது. பூமியிலிருந்து ஏறத்தாழ ஐம்பத்தாறு கிலோமீட்டர் உயரத்தில் வானூர்திகளைத் தாங்கிப் பிடிக்கப் போதுமான அழுத்தம் வாயு மண்டலத்துக்கு இல்லை. ஆகவே, அங்கிருந்தே விண்வெளி தொடங்குகிறது என்பது வானூர்தித் துறையினர் கூறும் முடிவு. கடல் மட்டத்திலிருந்து மேலே ஏற ஏற, வாயு மண்டல அழுத்தம் குறைகிறது. அதாவது, அங்கே உள்ள வாயு மண்டலத் துகள்களின் எண் குறைவு. இப்படி மேலே செல்லும்போது, வாயு மண்டலத் துகள் ஒன்றுமே

இல்லாத இடம் ஒன்று வரும். அந்த இடம் பூமியிலிருந்து நான்கு இலட்சம் கிலோ மீட்டர் உயரத்தில் இருக்கிறது என்று சொல்லலாம். அங்கிருந்தே உண்மை விண்வெளி தொடங்குகிறது என்று புவிப்பௌதிகவியலார் கூறுகின்றனர்.

இவையெல்லாம் உயிரற்ற பொருள்களிலிருந்து கொண்ட முடிவுகள். உயிரியல் துறை நிபுணர்கள் வேறு வகையாகக் கணக்கிடுகிறார்கள். பூமியிலிருந்து மேலே ஏறஏற மக்களுக்கு மூச்சுவிடுவது மேன்மேலும் துன்பம் தருகிறது. எட்டுக் கிலோ மீட்டர் உயரத்திலும் அரிதில் உயிர் வாழ முடியும். அதற்கு மேலுள்ள உயரத்தில் செயற்கைத் துணைகள் இன்றி உயிர் வாழ இயலாது என்று சொல்லலாம். உயரச் செல்லச்செல்ல, வாயுவின் அழுத்தம் குறையும்; நீரின் கொதிநிலை தாழும். பத்தொன்பது கிலோ மீட்டர் உயரம் ஏறினால், உடலில் உள்ள திரவங்கள் எல்லாம் உடலில் உள்ள இயற்கைச் சூட்டிலேயே கொதிக்கத் தொடங்கிவிடும். வாயு மண்டலத்தில் உயிர் வாழமுடியாத அந்த இடம் விண்வெளியின் தொடக்கம் என்பது உயிரியலாரின் கருத்து.

**விண்வெளியின் பரப்பு முதலியவை**

விண்வெளி என்பது எண்ணிப் பார்க்கமுடியாததும், கோடானுகோடிக்கணக்கான பிரபஞ்சங்களைத் தன்னுள்ளே கொண்டதுமான ஒரு மாபெரும் பரப்பு. அதன் உள்ளே அந்தப் பிரபஞ்சங்களுக்கு இடைஇடையே உள்ள வெளியிடங்களின் பரப்புகளுக்கும் மிகமிகப் பெரியன. அந்த இடைவெளிகளில் ஒன்றுமே இல்லை என்றும் அந்தப் பகுதிகள் எல்லாம் வெறும் வெற்றிடங்கள் என்றும் அறிவியலார் கருதிவந்தார்கள். அந்தக் கருத்து இப்போது மாறிவிட்டது. வேதியியல் தனிமங்களின் அணுக்கள் அனைத்திலும் ஹைடிரஜன் வாயுவின் அணுக்களே அளவில் சிறியன; எடையில் குறைந்தவை. குண்டூசியின் சின்னஞ்சிறிய தலையிலே கோடிக்கணக்கான ஹைடிரஜன் அணுக்கள் தங்குவதற்குப் போதிய இடம் இருக்கிறது. அத்துணை நுண்ணளவே உள்ளவை ஹைடிரஜன் அணுக்கள். அவற்றின் நுண் எடையும் அவற்றின் நுண்ணளவுக்கு ஒத்ததாகவே உள்ளது. மேற்கூறிய விண்வெளியின் இடை

வெளிகளில் மிகமிக அருகலாக, அதாவது கன சென்டி மீட்டருக்கு ஒன்ருே மிகச் சிலவோ வீதம் ஹைடிரஜன் அணுக்கள் உள்ளன என்றும், விண்வெளியில் உள்ள ஹைடிரஜன் வாயுத் தனிம அணுக்கள் அனைத்தையும் தராசுத் தட்டு ஒன்றிலும் கோடானு கோடிக்கணக்கான பிரபஞ்சங்கள் அனைத்திலும் உள்ள கோடானுகோடிக்கணக்கான விண்மீன்கள், அவற்றின் கோள்கள், அவற்றின் துணைக்கோள்கள் முதலியவற்றை எல்லாம் அந்தத் தராசின் மறுதட்டிலும் இட்டு நிறுத்தால் விண்வெளியில் உள்ள ஹைடிரஜன் அணுக்களின் எடையே அதிகமாக இருக்கும் என்றும் வான் பௌதிகவியலார் கூறுகின்றனர்.

'விண்வெளி என்பது எல்லை அற்றது; ஆயினும், முடிவு உடையது'. அது வளைவாக அமைந்து, தன்னைத்தானே அடக்கிக் கொண்டுள்ளது.' என்றும் கோடானுகோடிக்கணக்கான பிர பஞ்சங்கள் அனைத்தையும் தன்னுள்ளே அடக்கிய மாபெரும் பிரபஞ்சம் அகிலப் பிரஞ்சம் — நொடிக்கு நொடி மேன்மேலும் விரிவடைந்துவருகிறது என்றும் வானவியலார் கூறுகின்றனர்.

நாம் பகலில் காணும் வானம் நீல நிறமுள்ளதாகக் காட்சியளிக்கிறது. அண்மை விண்வெளியிலிருந்து பார்த்தால் அஃது ஊதா நிறமுள்ளதாகத் தோன்றும். புற விண்வெளி எனத் தகும் சேய்மை விண்வெளியில் சூரியனது ஒளி வீசிக்கொண்டிருக்கும் நேரத்திலும் சூழ உள்ள இடம் எல்லாம் இருள் போன்ற மைந்நிறம் உள்ளதாகவே தோன்றும்.

விண்வெளியில் குளிர் மிக அதிகம். சூழ உள்ள இடத்தின் அழுத்தமும் மிகக் குறைவு. மூச்சுவிடுவதற்குத் தேவையான ஆக்ஸிஜன் அங்கே கிடையாது. ஆதலால், விண்கலங்களின் உட்புறம் நன்ருக அழுத்தி மூடப்பட்டிருக்கும். அது தக்க அழுத்தம் உடையதாகவும் மூச்சு விடுவதற்கு ஏற்ற அளவில் தக்க வாயுவை உடையதாகவும் வைக்கப்பட்டிருக்கும். கடுங்குளிரைத் தாங்கவும் அழுத்தக் குறைவினுல் தீங்கு நிகழாதிருக்கவும் துணைபெறப் பாதுகாப்பு உடைகள் விண்பயணிகள் அணிவார்கள்; அழுத்தம் மிக்க ஆக்ஸிஜன் வாயுவைக் கொண்டுள்ள நீள்வட்டுருவக் கொள்கலங்களையும் அவ்வாயுவைச் சுவாசிப்பதற்கு உதவும்

குழாய்களையும் தங்களுடைய பாதுகாப்பு உடையோடு பொருத்திக்கொள்வார்கள். விண்வெளியிலிருந்து உறைக்கும் கதிர் வீச்சைத் தடுக்கப் போதிய வாயு மண்டலப் பகுதி அங்கே இல்லை. அதனால், கதிர்வீச்சு அபாயம் அங்கே ஏற்படக்கூடும்.

**விண்வெளிப் பயணம்**

மனிதன் கற்பனை மனம் பெற்றவன். அவனுடைய கற்பனைகள் கவிதைகளாகச் சிலவும் கதைகளாகச் சிலவும் வெளிப்படுகின்றன. மிகப் பல கற்பனைகள் இறுதிவரை வெறும் கனவுகளாகவே நின்றுவிடுகின்றன. ஒருசில கற்பனைகள மட்டுமே நனவுகளாகச் செயல்வடிவில் உருப் பெறுகின்றன. விண்வெளிப் பயணத்தைப்பற்றிய கற்பனைகள் பண்டைப் பழங்காலம் முதலே எல்லா நாட்டு மக்களிடையேயும் தோன்றியுள்ளன. கிரேக்க நாட்டுப் பழங் கதைகளிலும் நமது நாட்டுப் பழங்கதைகளிலும் அத்தகைய கற்பனைகளைக் காணலாம். பிற்காலத்திலும் பல நாடுகளிலும் அவ்வகைக் கதைகள் புனையப்பட்டுவந்தன. மனித இனத்துக்கு இயற்கையான குறுகுறுப்பாலும் அவ்வகைக் கதைகளின் தூண்டுதலாலும், விண்வெளிப் பயணத்தின்மீது மக்களின் ஆர்வம் பெருகிவந்தது. இத்தகைய சூழ்நிலைகளுக்கு இடையே அறிவியல் யுகம் உதயமாயிற்று. அதை அடுத்துப் பொறியியல் யுகமும் தொழில்நுட்ப யுகமும் உதயமாயின. விண்வெளியைப்பற்றிய கனவுகளில் சிலவற்றையேனும் நனவாக்கவேண்டும் என்று மக்கள் முயன்றார்கள். அம்முயற்சி கைகூடுவதற்குத் தேவையான எடுகோள்கள், சமன்பாடுகள், கணக்குகள் முதலியவற்றைத் திரட்டப் பல அறிஞர்கள் ஈடுபட்டார்கள். தேவையான கருவிகளையும் பொறிகளையும் படைக்க முயன்றார்கள்.

**முன்னோடிகளும் பிறரும்**

அவ்வகை முன்னோடிகள், பலர்; பல தரத்தினர்; பலவகைக் கற்பனையினர்; பலவகை அறிவினர்; செயலினர்; பற்பல நாட்டினர். அவர்களுடன் இரஷ்ய நாட்டினரான ஸீயால் கோவ்ஸ்கி, ஜெர்மனி நாட்டினர்களான கான்ஸ்சின்ட்டும்

ஓபெர்ட்டும், அமெரிக்க நாட்டினரான காடர்டு ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். அத்தகையவர்களால் விண்வெளித் துறை வளர்ந்துவந்தது.

அண்மை விண்வெளி எனப்படும் அகவிண்வெளியில் இயங்க வானூர்திகளை ஒத்த பொறி அமைப்புகள் போதும். ஆனால், வாயு மண்டலத்துக்கு முழுதும் அப்பாற்பட்ட சேய்மை விண்வெளி எனப்படும் புறவிண்வெளியில் அவ்வகை ஊர்திகளால் இயங்க முடியாது. வானூர்திகளை வாயு மண்டலம் தாங்குகிறது. விண்வெளிக் கலங்களுக்கு அதன் உதவி இல்லை. வாயுவே இல்லாத புறவெளியைச் சென்று அடையவும், அவ்வெளியில் பயணம் செய்யவும் தனி வகைப் பொறி தேவைப் படுகிறது. நமது நாட்டுத் திருவிழாக்களில் நெருப்புப் பொறிகளைப் பின்புறமாகக் கக்கியவண்ணம் சீறிக்கொண்டு வானில் ஏறி இயங்கும் சீறுவாணத்தை அவ்வாறு செயல்படச் செய்யும் ஆற்றல் பௌதிகவியல் தத்துவம் ஒன்றை அடிப்படையாகக் கொண்டது. அதே தத்துவத்தை அடிப்படையாகக் கொண்ட ராக்கெட்டு என்னும் பொறி வகை இவ்வகைச் செயலுக்கு உதவவல்லது.

**ராக்கெட்டுகள்**

சீறுவாணங்கள் என்பவை எளிய, வலிமையற்ற ராக்கெட்டுகள். அவற்றை பலரும் அறிவர். ஆனால், ஆற்றல் மிக்க ராக்கெட்டுகளின் தன்மைகள் அவற்றுக்குத் தேவையான எரிபொருள் வகைகள், அவ்வானில் பொறிகளின் அமைப்பு முதலியவற்றை அறிவியலாரும் சிறந்த தொழில்நுட்ப வியலாரும் அறிய முடியும். அவர்கள் முயன்று தெரிந்து அவ்வகைப் பொறிகளைப் படைக்கவும் கையாளவும் தொடங்கினார்கள். அந்நாளில் ஜெர்மனி இந்தத் துறையில் அதிகம் ஈடுபட்டதாகத் தெரிகிறது. அந்நாட்டில் ராக்கெட்டுச் சங்கங்கள் தோன்றின. அவை அறிஞர்களின் துணையைப் பெற்றன. அந்த அறிஞர்களுள் வான்பிரௌன் என்பவரும் ஒருவர். அவர் ராக்கெட்டுத் துறை ஆய்வுகளில் மிகவும் ஈடுபட்டார். அம்முயற்சிகளால் 'பறக்கும் குண்டு' என்னும் பெயர் பெற்ற '*வி-1*', '*வி-2*' என்னும் அசுர ராக்கெட்டுகள்

ஜெர்மனி நாட்டின் பகுதி ஒன்றிலிருந்து இங்கிலாந்தின்மீது வீசப்பட்டன. இலண்டன் முதலிய பல நகரங்களுக்கு அவை பெருஞ்சேதத்தை விளைவித்தன.

அதன் பிறகு, நேசக் கட்சியினர் அந்த இரண்டாவது உலகப் போரில் ஜெர்மனியின்மீது படையெடுத்துச் சென்றனர். அப்படையின் அமெரிக்கப் பகுதி, வான்பிரௌனும் அவருடைய துணைவர்களுமாகப் பறக்கும் குண்டுகளை வீசிவந்த இடத்தைக் கைப்பற்றிற்று; வான்பிரௌனையும் அவரது துணைவர்கள் சிலரையும் போர்க்கைதிகளாகப் பிடித்தது; அவர்கள் மனம் உவந்து இணங்க அவர்களை அமெரிக்கக் குடிமக்களாக ஏற்றுக் கொண்டது; ஜெர்மனியில் கிடைத்த சில ராக்கெட்டுகளையும் அமெரிக்காவுக்கு எடுத்துச் சென்று ஆராய்ச்சிகளை நடத்தி வந்தது. அந்தப் புதிய குடிமக்களும் துணைசெய்ய, அமெரிக்க விண்வெளித் துறை முயற்சி நன்கு வளரத் தொடங்கிற்று. வான்பிரௌனின் துணைவர்கள் வேறு சிலரை இரஷ்யப் போர்ப் படையானது கைதிகளாகப் பிடித்துத் தன் நாட்டுக்குக் கொணர்ந்தது. இரஷ்யா ஏற்கெனவே தொடங்கியிருந்த விண் வெளி முயற்சிக்கு அவர்களும் ஓரளவு துணைசெய்தார்கள். ஆயினும், அங்கு எல்லாமே இரகசியமாக நடந்துவந்தன. இவ்வாறு, அந்த இரண்டு பெரு நாடுகளும் விண்வெளிப் பயண முயற்சியில் மிக முனைந்தன.

இதற்கு இடையில், சர்வ தேசியப் (அனைத்துலகப்) பூமிப் பௌதிக ஆண்டு என்று சூட்டப்பட்ட ஆண்டில் விண்வெளி முயற்சிக்கு ஊக்கம் அளிக்கப்பட்டது. அதன் விளைவாக, 1957-ல் இரஷ்யா விண்ணில் ஏவிய முதலாவது 'ஸ்பூட்னிக்கு' என்னும் துணைக்கோள் கீச்சுக்கீச்சென்று கத்திக்கொண்டு விண்ணிலிருந்தவண்ணம் பூமியைச் சுற்றிவந்தது. இதுதான் முதன்முதலான விண்பயணி. அதை அடுத்து, அதிலிருந்து முப்பதாவது நாளில் 'லைக்கா' என்னும் நாயையும் ஏற்றிக் கொண்டு இரண்டாவது ஸ்புட்னிக்கு என்னும் இரஷ்யத் துணைக் கோள் பூமியைச் சுற்றிவந்தது. அந்த நாய்தான் முதன் முதலாக விண்வெளிப் பயணம் செய்த உயிர்ப்பிராணி.

அதன்பிறகு, அமெரிக்கா ஏவிய எக்ஸ்புளோரர் என்னும் துணைக்கோள் 1958-ல் விண்வெளியில் பயணம் செய்தது. 1961-ல் ஏப்பிரல் மாதத்தில் யூரி ககாரின் என்னும் இரஷ்ய விண்வெளி மாலுமி, 'வாஸ்டாக்கு' என்னும் விண்ணூர்தியில் ஏறி, பூமியை ஒரே ஒரு முறை சுற்றிவிட்டுப் பத்திரமாகப் பூமியை வந்தடைந்தார். அதற்கு அடுத்த மாதத்தில், ஆலன் ஷெப்பர்டு என்னும் அமெரிக்கர் பூமியிலிருந்து நூற்றறுபது கிலோ மீட்டர் உயரத்திலிருந்து பூமியைப் பதினேழு முறை சுற்றிவந்து பத்திரமாக மீண்டார். இவ்வாறு, படிப்படியாக இந்தத் துறை வளர்ந்துவந்தது. அமெரிக்காவும் இரஷ்யாவும் இத் துறையில் போட்டியிட்டதுபோல் தோன்றிற்று. மற்ற நாடுகள் யாதொன்றும் இத்துறையில் ஈடுபடவில்லை. அவ்வாறு ஈடுபடுவதற்குத் தேவையான பண வசதியோ வழிவகை அறிவோ அவற்றுக்கு இல்லாததால் அவை இத்துறையில் முனைய முடியவில்லை. ஆனால், அப்பெருநாடுகள் இரண்டும் மேன்மேலும் முயன்றுவந்தன. சந்திரமண்டலப் பயணம் அவற்றுக்கு ஒரே குறிக்கோளாக இருந்தது.

அம்முயற்சியில் அந்த நாடுகள் முனைந்தன. ஒரு சில கருவித் தொகுதிகளையும் 'லூனோகாடு' என்னும் மோட்டார்க் காரைப்போன்ற தானியங்கி ஊர்தி ஒன்றையும் இரஷ்யா சந்திர மண்டலத்தில் இறக்கிற்று. அவற்றின்மூலம் சந்திர மண்டலத்தைக் கூர்ந்து நோக்கியும் சந்திர மண்டலத்திலிருந்து பாறை, மண் முதலியவற்றை எடுத்துவந்தும், தன் ஆராய்ச்சிகளை நடத்திவந்தது. அமெரிக்க ஜனாதிபதி கென்னடி, 'இந்தப் பத்தாண்டு முடிவடைவதற்குள் சந்திரனில் அமெரிக்க மக்கள் சிலரை இறக்கி வெற்றி காண்பேன்.' என்று சபதம் கூறினார். அந்தச் சபதத்தை அமெரிக்க அறிவியலாரும் தொழில்நுட்பவியலாருமாக நிறைவேற்றிவைத்தனர். அதற்குப் பின்பு, பல அமெரிக்க மாலுமிகள் சந்திர மண்டலத்துக்குச் சென்றும் அங்கே இறங்கி நடந்தும் படம் பிடித்தும் அங்கிருந்து பாறையையும் மண்ணையும் எடுத்துக் கொணர்ந்தும் பல அரிய சாதனைகளைச் செய்தார்கள்; பல செய்திகளைக் கண்டு தெரிவித்தார்கள். அவர்கள் கொணர்ந்த சான்றுகளை இன்னும் அமெரிக்காவிலும் பிற நாடுகளிலும் ஆராய்ந்துவருகிறார்கள். அம்மாலுமிகளும் அவர்கள் ஏறிச்சென்று சந்திரனைச் சுற்றிவந்த விண்கலங்களும்

அவர்கள் எடுத்துச் சென்று சந்திரனில் விட்டுவந்த கருவித் தொகுதிகளும் விண்பயணிகள் என்பதில் ஐயமில்லை.

மனிதரை விண்பயணிகள் ஆக்குவது எளிதான செயல் அன்று. அவ்வாறு செய்யுமுன், துணை யாதொன்றுமே இல்லாத விண்வெளியில் அம்மக்களுக்கும் அவர்கள் ஏறிச் செல்லும் ஊர்திகளுக்கும் எவ்வகையான தீங்கும் ஏற்படாமலிருக்குமாறு மிக்க கருத்தோடு ஒவ்வொரு செயலையும் திட்டமிட்டு நடத்திவரவேண்டும். அவ்வகைப் பயணம் செய்யத் தேவையான திறமைகள் அனைத்தையும் உடையவர்களாகும் வரை அவர்களைப் பயிற்றுவிக்கவேண்டும். விண்வெளிப் பயணம் செய்ய, பூமியிலிருந்து அதன் புவியீர்ப்பை மீறி மிக வேகமாக இயங்கத் தொடங்கவேண்டும். அப்போதும், அப்பயணத்தின் போது நேரக்கூடிய எடையின்மை முதலிய நிலைகள் தோன்றும் போதும் எதிர்பாராத ஆபத்து நேரக் கூடும். அவற்றை எல்லாம் தாங்கி, அவற்றுக்குத் தக்கவாறு ஈடுசெய்யப் போதிய உடற்பயிற்சி, மனப் பயிற்சி முதலியவற்றை அப்பயணிகளுக்கு அவர்கள் பயணத்தைத் தொடங்குவதற்கு முன்னமேயே அளித்துப் பழக்கவேண்டும். அத்தனை செயல்களும் அமெரிக்கர்களால் செய்யப்பட்டன. மனிதன் சந்திர மண்டலத்துக்குச் சென்று பத்திரமாக மீண்டுவிட்டான். பண்டைக் காலக் கற்பனைகளுள் ஒன்று நனவுச் செயலாக உருப்பெற்றுவிட்டது. இந்த வெற்றியைப் பெற்ற மனித இனத்தின் அறிவின் திறமை மிகமிகப் பாராட்டத்தக்கது.

இப்படி அமெரிக்கா மேற்கொண்டு வெற்றிகரமாக நடத்தி வைத்த திட்டத்துக்கு 'அப்போலோத் திட்டம்' என்று பெயர். இத்தகைய பல திட்டங்களை அமெரிக்காவும் இரஷ்யாவும் நடத்தி வருமுன் எத்தனையோ வகையான அறிவியல் சிக்கல்களையும் தொழில் நுட்பச் சிக்கல்களையும் தீர்த்தாகவேண்டியிருந்தது. நுண்ணிய வடிவுள்ள, ஆயினும் திறமைகளில் குறைவுபடாத, எத்தனையோ புதிய கருவிகளையும் கருவித் தொகுதிகளையும் படைக்கவேண்டியிருந்தது. பயணத்தைத் தொடங்குமுன்னும் தொடங்கும்போதும் தொடங்கியபின்பு இடைவெளியிலும் கருவிக் கோளாறுகள் ஏற்பட்டன. சந்திர மண்டலத்தில் கருவிகளையும் மனிதரையும் இறக்கிய பின்னும் சில சிக்கல்கள்

தோன்றின. அவை எல்லாம் அனேகமாக வெற்றிகரமாக விடுவிக்கப்பட்டன. இந்தத் திட்டத்தின் விளைவாக எத்தனையோ அறிவியல் செய்திகள் கண்டுபிடிக்கப்பட்டன; எத்தனையோ புத்தமைப்புகள் படைக்கப்பட்டன. இந்தத் திட்டத்தின் நோக்கங்கள் எல்லாம் நிறைவேறிவிட்டன என்று கூறி, அமெரிக்கா இந்தத் திட்டத்தை நிறுத்திவிட்டது.

இப்போது இரு நாடுகளும் சுக்கிரன், செவ்வாய் முதலிய கோள்களையும் அவற்றுக்கு அப்பால் உள்ளவைகளையும் ஆராய முற்பட்டு முயன்றுவருகின்றன.

### ஒத்துழைப்பு

இவ்வெற்றிகளுக்குப்பின் இந்த நாடுகள் வேறு பல வெற்றிகளைப் பெறும் நோக்கோடு, ஒன்றாக ஒத்துழைக்கத் தொடங்கிவிட்டன. பூமியிலிருந்து நன்கு செய்ய இயலாத செயல்கள் சிலவற்றை விண்வெளி ஆய்வுக்கூடங்களிலிருந்து செய்ய முடியும். இப்போது விண்வெளியில் அந்த இரண்டு நாடுகளின் கலங்கள் ஒன்றோடு ஒன்று இணைந்து இவற்றில் ஏறிச் சென்ற மாலுமிகள் ஒன்றாகச் செயல்புரியத் தொடங்கி விட்டனர். விண்வெளியில் ஒரே வட்டப் பாதையில் தங்கி ஓடி வரக் கூடிய ஆய்வுக்கூடம், விடுதி முதலியனவும் திட்டமிடப் பட்டுள்ளன. பூமியிலிருந்து அங்கே சென்று திரும்பி வரக் கூடிய விண்வெளி ஓடங்களையும் அமெரிக்கா படைத்து வைத்திருக்கிறது.

### பொதுமக்களும் விண்வெளிப் பயணமும்

கடுமையான பயிற்சிகளைப் பெற்ற ஒருசிலரால் மட்டுமே விண்வெளிப் பயணம் செய்ய இயலும் என்னும் நிலைதான் இப்போது உள்ள நிலை. இந்த நிலை மாறி, பொதுமக்களும் விண்வெளிப் பயணம் செய்வதற்கும் சந்திர மண்டலத்துக்குக் கூடப் போய்வருவதற்கும் தேவையான தகுதியுடைய ஊர்தி களையும் கலங்களையும் படைக்க இரஷ்யாவும் அமெரிக்காவும் ஒத்துழைத்துவருகின்றன.

இந்த விண்வெளித் துறை மிக விரைவாகவும் நன்றாகவும் வளர்ந்துவருகிறது. இந்த நூற்றாண்டு முடிவடைவதற்குள்

இன்னும் பலரை விண்பயணிகள் ஆக்கிவிடும் என்று அறிவியலார் தெரிவிக்கின்றனர்.

**பயன்கள்**

விண்கலங்கள் செய்த பயணங்களை வெறும் துணிகரச் செயல்களாகவோ போட்டிச் செயல்களாகவோ அறிவியலார் கருதவில்லை. விண்வெளி முயற்சிகளால் உண்டான விளைவுகள் சிலவும் முன்னமேயே கூறப்பட்டன. விண்வெளியையும் அதில் அடங்கிய பொருள்கள் சிலவற்றையும் விண்வெளியின் பண்புகள் சிலவற்றையும்பற்றி நிகழ்த்தப்படும் ஆய்வுச் செயல்கள் எல்லாம் மனித இனத்தின் நன்மையின் பொருட்டே செய்யப்படுகின்றன என்றே அறிவியலார் கருதுகின்றனர். புதிய முறைகளில் நுண்ணிய அளவினவாகச் செய்யப்பட்ட கருவிகள் வியத்தகு ஆற்றலுடையவை. பூமியிலிருந்து எளிதில் தெரிந்துகொள்ளவியலாத பலவற்றை அத்தகைய கருவிகள் விண்வெளியிலுள்ள கலங்களிலிருந்து கண்டும் குறித்தும் எலெக்டிரானியல் கருவிகளின் மூலமாகப் பதிவு செய்தும் உடனுக்குடனே பூமியில் விண்வெளியோடு தொடர்புள்ள நிறுவனங்களுக்குத் தெரிவித்தும் மதிப்பரிய செய்திகளை அறிவியல் கருவூலத்தில் குவித்து வருகின்றன. கோடிக்கணக்கான கிலோ மீட்டர் தொலைவும் அக்கருவிகளுக்கு எட்டாத் தூரம் அன்று.

விண்வெளிப் பயணத் துறையில் நடந்துவரும் இவற்றையெல்லாம் ஓரளவேனும் அறிந்துகொள்ள முயலுவது நமது கடமை. அவற்றாலெல்லாம் நன்கு பயன்பெற முயலுவது நமது உரிமை.

**அருஞ்சொற்பொருள் :**

கோள்-கிரகம், வானூர்திகள்-வானில் ஏவப்படும் ஊர்திகள், துணைகள்-துணையான கருவிகள், நனிமங்கள்-நனிப்பொருள்கள், சேய்மை-தொலைவு, ஆக்ஸிஜன்-உயிர் வாயு (பிராணவாயு), புத்தமைப்பு-புதிதாக அமைக்கப்படும் பொருள்கள்.

**வினாக்கள் :**

1. அண்டங்கள், பேரண்டங்கள் எவ்வாறு இயங்குகின்றன?
2. வாயு மண்டலத்தின் எல்லை, இயல்புகள் யாவை?
3. விண்வெளியின் தொடக்கம் என்று பல்வேறு துறையினர் எவற்றைக் குறிப்பிடுகின்றனர்?
4. விண்வெளியிலுள்ள ஹைடிரஜன் அணுக்கள்பற்றிச் சிறு குறிப்பு எழுதுக.
5. விண்வெளிப் பயணம்பற்றிய கற்பனைகளை விளக்குக.
6. விண்வெளிப் பயண முன்னோடிகள் யாவர்?
7. ராக்கெட்டுகள் விண்வெளிப் பயணத்தில் எவ்வாறு பயன்படுகின்றன?
8. 1957முதல் நிலவில் மனிதன் இறங்கியதுவரையிலான விண்வெளி முயற்சிகளை விளக்குக.
9. விண்வெளிப் பயணம் மேற்கொள்ளும் மனிதன் எதிர் கொள்ளும் இடர்கள் யாவை? அவற்றைக் களைவது எவ்வாறு?
10. விண்வெளி முயற்சிகளால் மனித குலத்துக்கு ஏற்படும் நன்மைகள் யாவை?

# 18 பதினேழாம் நாள்

( ஓரங்க நாடகம் )

[டாக்டர் இரா. குமரவேலன்]

## காட்சி 1

இடம் — அங்க நாட்டு அரண்மனை
காலம் — காலை
உறுப்பினர் — கர்ணன், ஒரு சேவகன்.

[ அழகு மிளிரும் அங்க நாட்டு அரண்மனைக்கூடம்; சாளரங் களின் திரைகளை ஒதுக்கித் தென்றல் காற்று மெல்லென வீசுகிறது. நறுமணப் புகை நாற்புறமிருந்தும் கமழ்கிறது. பொலிவு மிக்க அரியணை ஒன்று தூய்மையாகக் காட்சி தருகிறது. அருகில், பொற்குடம் நிறையப் பொற்காசுகள்

உள்ளன. மற்ருெருபுறம், பளபளக்கும் பட்டாடைகள் அடுக்கிவைக்கப் பெற்றுள்ளன. முன்னுள்ள பெரிய கட்டு களில் பல்வேறு அணிகலன்கள் ஒளிவீசுகின்றன. தரை முழுவதும் பட்டுக் கம்பளங்கள் விரிக்கப்பட்டுள்ளன. அரியணைக்குச் சற்றுத் தொலைவில் இருபுறமும் பல இருக்கைகள் அமைந்துள்ளன. நேரே விளங்கும் நெடுங் கதவம் திறந்தபடி இருக்கிறது. கர்ணன் கம்பீரமாக ஏதோ நினைத்தவண்ணம் நடைபோட்டுக்கொண்டிருக்கிருன். பகல வனின் கதிர்கள் அவன்மீது படிகின்றன.]

கர்ணன்: ஓ.... பொழுது விடிந்ததுமின்றிப் பொற்கதிரும் எழுந்து உலாவந்ததோ? ஏன் இன்று இரவலர் எவரும் வரவில்லை? எடுத்துவைத்த பொற்காசு களும் பிற பொருள்களும் அப்படியே இருக்கின்ற னவே. கர்ணன் கொடை நேற்ருேடு போயிற்று என்று உலகம் கூறும் நேரமும் வந்ததோ? அடை யாத நெடுங்கதவம் கண்டும் ஆளரவம் ஏதும் இல்லையே. வறியவர் மறைந்து உடையவர் அங்க நாட்டில் நிரம்பினரோ? அண்டை நாட்டு இரவலர்க் கும் என்னைக் காண வெறுப்பு வந்ததோ? கர்ணு, உன் கைக்கு ஏன் இந்த ஓய்வு? இப்படியே போனல் உன் சிவந்த கரமும் கறுத்துவிட வேண்டியதுதான்... அதோ யாரோ வருகிற ஓசை கேட்கிறது. இரவல ராக இருக்கலாம். அனைத்தையும் ஒருவருக்கே அளித்து நான் அரசியல் பணியைக் கவனிப்பேன்.... எங்கே வந்தவரைக் காணேம்........யாரது? உள்ளே வாருங்கள்........ (ஒரு சேவகன் நுழைகிருன்)....யார்? ....நீயா.... என்ன செய்தி?

சேவகன்: வாழ்க அங்க நாடு! வாழ்க கொடை வேந்தர்!

கர்ணன்: வாழ்த்து இருக்கட்டும்; வந்த காரணம் யாது?

சேவகன்: அத்தினபுரத்தில் இருந்து ஓர் ஓலை வந்தது. கொண்டு வந்தவன் முகத்தில் கலவரம் இருந்தது; அஞ்சியபடி நின்ருன். எனவே, அதனை நான் வாங்கிக்கொண்டு வந்திருக்கிறேன். இந்தாருங்கள்; வாழ்க மன்னர்! (செல்கிருன்)

கர்ணன் : (ஓலையைப் படித்து முடிப்பதற்குள் முகத்தில் பல வித மாற்றங்கள்) கர்ணு! கொடையால் சிவந்த உன் கரங்கள் இனி, படையால் சிவக்கும் காலம் வந்து விட்டது. நீண்ட நெடும்பகையை முடிக்கும் நேரம் வந்துவிட்டது. தேரோட்டி மகன் என்றென்னை ஏசியவன் மார்பில் என் கணையோட்டும் பொழுது வந்துவிட்டது........ காலமெல்லாம் துணையிருந்து, தோழமை பூண்டு, அங்க நாட்டிற்கு அரசனும் ஆக்கிய அரிய நண்பனுக்கு நன்றி காட்டும் காலம் நெருங்கிவிட்டது. போரில் பின்னடையாத பிதாமகர் வீடுமர் சாய்ந்து விட்டார். எதிரிப் படையைத் துரும்பாகக் கருதிப் போர்தொடுக்கும் துரோணரும் மாய்ந்துவிட்டார். இனி....இனி....ஆம், நான்தான் படை நடத்தவேண்டும். அத்தினபுர வேந்தன், அரவக்கொடி அண்ணல், அருமை நண்பன் துரியோதனன் அதனைத் தான் விழைகின்றான். இதோ புறப்பட்டுவிட்டேன்; குந்தியின் மகன் விசயனின் குடல் உருவப் புறப்பட்டு விட்டேன்; பதின்மூன்று ஆண்டுகளுக்கு முன் நான் எடுத்துக்கொண்ட வஞ்சினம் நிறைவேற்றப் புறப்பட்டுவிட்டேன்.... (கை தட்டி) ....யாரங்கே! தேர் புறப்படட்டும்....

## காட்சி 2

இடம் — அத்தினபுரம்
காலம் — முற்பகல்
உறுப்பினர் — கர்ணன், துரியோதனன்.

துரி....: புறப்படட்டும் படை! அதிரட்டும் முரசு! முழங்கட்டும் சங்கம்! ஒலிக்கட்டும் துந்துபி! பதினைந்து நாள் மோதலில் படுகளத்தில் வெற்றிபெறமுடியாத கண்ணன் எப்படி இனி எதிரிகளுக்கு உதவப் போகிறான். அவன் அறிவு துணையிருந்தும், ஆற்றல் பல இருந்தும் யுதிட்டிரன் வெல்ல முடிந்ததா? வீடுமர் பத்தாம் நாளே வீழ்ந்தார். துரோணரும் நேற்றைப் போரில் பலியானார். உடலை இங்கே வைத்து

உள்ளத்தை அங்கே வைத்துப் போரிட்டவர்கள் அவர்கள். அதன் விளைவு, வீரமரணத்தில் வெற்றி சேர்க்க மறந்தனர். ஆனால், இன்றோ கர்ணன்.... களப்போர்க் களிறு கர்ணன்.... என் கண்ணனைய கர்ணன்.... அர்ச்சுனனின் குல எதிரி கர்ணன் போருக்குத் தலைமை ஏற்று வெற்றி குவிப்பான். இன்றோடு அழிந்தது பகை; ஒழிந்தனர் பாண்டவர்.

கர்ணன்: (வந்துகொண்டே) நன்று சொன்னாய், துரியோதனா... பதினைந்து தினத்திற்பட்ட பல்படை இன்று மீண்டெழுந்ததுபோல விண்ணும் மண்ணும் தெரியா வண்ணம் வெங்களத்தில் சுழன்று போராடும் என் படைத்திறனைப் பார். பகைவரை வேரறுக்கும் என் ஆற்றலை, அரவக்கொடியோனே இன்று பார்....

துரி....: கர்ணா! உன் வீரமே வீரம்! அழகே அழகு! சென்னியில் மகுடமணி வெயில் எறிக்கிறது. திருக்குழைகள் ஒளிவிடுகின்றன. பொலம்பூண்மணிகள் பளபளக்கின்றன. வீரகழல்மணி தகதகக்கிறது! பூமியில் பிறந்த பகலவன்போல் தோற்றந்தரும் உன் அழகும் வீரமும் கண்டு களிப்புறாதார் கண்கள் இல்லாதவரே. உன் வீரத்திறம் காணப் பாருலகம் பதைபதைக்கிறது.

கர்ணன்: மாசுணக்கொடி மன்னவா! பாராட்டுக்கு நன்றி. ஆற்றல் மிக்க பகைவரை இன்று அடுகளத்தில் அழித்து ஒழிப்பேன். ஆண்மை அரசே அவர்தம் குறையுடல்கள் கூத்தாடச் செய்வேன். கவலை கொள்ளற்க.

[கர்ணனின் தலைமையில் பதினாறும் நாள் போர் நடைபெறுகிறது. அன்று நிகழ்ந்த பெரும்போரில் விசயன் அம்பினால் கர்ணன் வலியழிந்து தவிக்கிறான். வில்விசயன், 'இன்று போய் இனி நாளை வா,' என அவனுக்கு விடையளிக்கிறான். வெற்றி பெறுவேன் என்று வீரம் பேசிய கர்ணன் மனமழிந்து மாலையில் பாசறைக்கு மீள்கிறான்.]

## காட்சி 3

இடம் — பாடிவீடு
காலம் — பதினேழாம் நாள் முற்பகல்
உறுப்பினர் — கண்ணன், தருமன்.

[தருமன் தன் தம்பிமார்களுடன் போர்க்கோலத்தில் நிற்கிருன். அமைதி தவழவேண்டிய அவன் முகத்தில் புரியாத கவலைக்கோடுகள் பதிந்துள்ளன. தன் உறைவாளை உருவி மீண்டும் உறையில் போட்டபடி இங்குமங்குமாக உலவி வருகிருன். ஏதோ நினைத்தவனுய்க் கண்ணனை உற்று நோக்குகிருன்.]

கண்ணன்: என்ன யுதிட்டிரா! ஏன் அப்படிப் பார்க்கிருய்?

தருமன்: களங்கனியன்ன கருநிறக் கண்ணனே! உன் திருவிளையாடலுக்கு எல்லையே இல்லையா? பதினுறு நாள்களாகப் போர்புரிந்தும் முடிவு கிடைக்கவில்லையே? களம் கண்டு நானே என் தம்பிகளோ அஞ்சவில்லை. ஆனல், அறம் வெற்றி பெறுவதற்கு இவ்வளவு அரும்பாடுபடவேண்டுமா என்று கேட்கிறேன்?

கண்ணன்: தருமா! என்னைக் கேட்டு என்னப்பா பயன்? அவரவர் வினைகளுக்கேற்ப வருவனவற்றை ஏற்கவேண்டியதுதானே....

தருமன்: நடப்பது நடக்கட்டும் கண்ணு....ஆனல், முக்காலமும் உணர்ந்த நீ நேரப்போவதையெல்லாம் மூடிமூடி மறைப்பதேன்?

கண்ணன்: தருமராசனே! நான் என்னதான் சொல்லவேண்டும் என்கிருய்?

தருமன்: அறிவுருவான கண்ணு....நீ எதையும் சொல்லவேண்டாம். இன்றைய பதினேழாம் நாள் போரில் இரவியின் புதல்வன் வான் உலகு எய்துவாஞ என்பதை மட்டும் எனக்குத் தெரிவித்தால் போதும்.

கண்ணன்: உனக்கேன் கவலை? சொல்லிவிடுகிறேன். இன்றைய போரில் பகலவன் மகன், அருச்சுனனுடைய அம்பினால் விண்ணுலகு எய்துவது திண்ணம். நாளைய போரில் குருநாட்டு வேந்தன் வாயுகுமாரனால் கொல்லப்படுவான். அத்தினபுரமும் அவனிசூழ் உலகும் பாண்டவர்களாகிய உங்கள் கையில் வந்துசேரும். போதுமா, தருமா?

தருமன்: செங்கட்கருமேனியனே! எங்கள் மானத்தையும் பெருமையையும் புகழையும் உன்னையன்றி வேறு யார் காப்பவர்? அரவக்கொடியுடைய துரியோதனனின் வஞ்சனைக் கடலில் நாங்கள் விழுந்து அழுந்தாவண்ணம் எங்களைக் காத்து இன்று வெற்றியையும் எங்களுக்குத் தந்தாய். அன்றொருநாள் கங்கைப் புனலிலே நீராடி விளையாடியபோது அந்தச் சுயோதனன் புதைத்த கொடிய கழுவின் முனையில் விழுந்து இறவாமல் வண்டின் வடிவமாக வந்து வீமன் உயிர் காத்தாய். அத்தினபுரத்தில் அரவக்கொடியோன் அவையில் நாங்கள் ஐவரும் நெட்டை மரங்களென நெஞ்சலமரப் பார்த்துக்கொண்டிருக்க அந்தப் பாவி துச்சாதனன் நெருப்பென நின்று பாஞ்சாலியின் நாணமும் துகிலும் நீக்க முனைந்தபோது நின் கடைக்கண் அருளினால் காத்துநின்றாய். அம்மட்டோ? நாங்கள் வனவாசம் செய்தபோது முனிவர் கூட்டத்துக்குப் பெருவிருந்தளிக்கும் நிலையுண்டாக்கத் துருவாச முனிவரின் சாபத்திலிருந்து எங்களைக் காப்பாற்றினாய். என்னையும் ஒரு பொருட்டாக மதித்துத் துரியோதனனிடம் தூதனாகச் சென்றாய். இணையில்லாத விதுரனின் வெஞ்சிலையை நீக்கினாய். பானுகுமாரனாகிய கர்ணனது கவச குண்டலங்களை இந்திரன் இரந்து பெறுமாறு செய்தாய். நீ எமக்குச் செய்த நன்றிக்கு அளவுண்டோ? அச்சத்தாலோ அன்றி அருள் உள்ளத்தாலோ முதல் நாட்போரில் அருச்சுனன் போர்த்தொழில்மறந்து காண்டீபம் கைந்நெகிழத் தேர்மீது செயலிழந்து நின்றபோது கீதோபதேசம் செய்து மீண்டும் பொரும்படி ஊக்கமூட்டினாய். துரியோதனனுக்கெதிராகப் படைக்கலன் தொடேன் என்ற

வஞ்சினம் மறந்து சங்கநாதம் செய்து சக்கராயுதம் எடுத்தாய். பகதத்தன், அருச்சுனனை நோக்கி அவன் மார்பில் ஊடுருவ எய்த வேலினை நின் துழாய் மார்ப கத்தேற்று அவனைக் காத்தாய். சக்கரப் படையால் ஆதவன் வெயிலை மறைத்து இரவை வரும்படியாகச் செய்து அபிமன்யுவைக் கொன்றவனைப் பழி வாங்கினாய். மூவரும் ஒருவராகி நின்ற மூர்த்தியே! நின் கருணை மழையை இப்புவியில் யார் அறிவார்? எங்களின் காவல் தெய்வம் நீயே.

(கண்ணன் பாதங்களில் விழுந்து அழுது தொழுகிறான்)

கண்ணன்: வருந்தாதே, தருமா! எழுந்திரு. வெற்றி பாண்டவர் பக்கமே. துணிந்து நில்!

## காட்சி 4

இடம் — போர்க்களம்
காலம் — முற்பகல்
உறுப்பினர் — கர்ணன், துரியோதனன்.

கர்ணன்: துரியோதனா! அந்த மேகவாகனனின் புதல்வனுக்கு மேகவண்ணன் தேர்ப்பாகனானான்; கலகமும் வஞ்சனையும் உற்ற கள்வன் சாரதியானான். அவனுக்கொப்பானோர் இங்கில்லை. எங்குமில்லை; அதனால்....

துரி....: அதனால்....என்ன செய்யவேண்டும் கர்ணா....ஒளிக்காமல், மறைக்காமல் உரைத்திடு. ஒரு கணத்தில் நிறைவேற்றுவேன்.

கர்ணன்: தாவிவரும் குதிரைகளின் தன்மையறிந்தவன், மோதிவரும் பகைக்களத்தின் விரகுபல தெரிந்தவன், புனைமலர் மாலைப் புலிவேந்தன் சல்லியன் எனக்குச் சாரதியாகவேண்டும். பார்த்தனுக்கு அந்தப் பாதகன் கண்ணன் சாரதி. ஆர்த்தெழும் எனக்குச் சல்லிய மன்னன் சாரதி. அவன் இன்று என் மணி நெடுந்தேர் செலுத்தட்டும். அருச்சுனனுக்குக்

கண்ணன் என்ன, சிவனே வந்து தேர் செலுத்தினாலும் இருவரையும் கொன்றொழிப்பேன். கடல் சூழ் உலக மனைத்தும் உன் பாத கமலங்களுக்குக் காணிக்கை ஆக்குவேன்.

துரி....: நன்று....நன்று....அப்படியே ஆகட்டும், கர்ணா.

கர்ணன்: அதுமட்டுமன்று. குருநாட்டுச் சிங்க ஏறே! நீ அளித்த தீம்பாலும் வெஞ்சோறும் உண்டு இந்த உடல் வளர்த்தேன். விண்ணவர்போல் குறைவின்றி நெடுநாள் உன் திருவடியில் விழைந்து வாழ்ந்தேன்; திண்தோள்கள் வளர்த்தேன். இன்று நான் செஞ்சோற்றுக் கடன் கழிக்கும் காலம் வந்தது. ஓர் ஊரும் ஒரு குலமும் இல்லாத என்னை உங்கள் குலத்தில் ஒருவனாக்கினாய். தேர் செலுத்தும் பாகனின் மனையில் வளர்ந்த எனக்குச் செம்பொன் மணிமகுடம் புனைவித்தாய்; புவிமன்னர் போற்றும் புகழ் தந்தாய்; சீர் தந்தாய். உனக்கன்றி வேறு யார்க்கு நான் உடல் வளர்த்தேன்? இன்று என் உயிர்தந்த நின் கடன் தீர்ப்பேன். இது சத்தியம்.

(துரியோதனன் சல்லியனிருந்த இடத்திற்கு விரைந்து செல்கிறான்.)

## காட்சி 5

இடம் — போர்க்களம்
காலம் — முற்பகல்
உறுப்பினர் — துரியோதனன், சல்லியன்.

சல்லியன்: வருக, துரியோதனா....ஏது இவ்வளவு வேகம்?

துரி....: மத்திர தேச வேந்தே! எனக்கு உன்னால் ஒன்று ஆகவேண்டும். இல்லையென்னாது நீ உதவி செய்வாய் என்ற நம்பிக்கையில் உன்னிடம் வந்துநிற்கிறேன். என் வெற்றி தோல்வி உன் கையில் இருக்கிறது.

சல்லியன்: என்ன வேண்டும்? சொல், துரியோதனா....உனக்கு உதவ நான் காத்திருக்கிறேன்.

துரி....: எனக்கொரு வரம் வேண்டும். மறுக்காமல் தர வேண்டும்.

சல்லியன்: பகைவர் உயிரைப் பருகும் மன்னவா! சேர்ந்தவர் தீமையைப் பொறுக்கும் அரசே! எதற்கும் ஆற்றாத என்னையும் ஒரு பொருளாக மதித்து நீ வரம் கேட்பாயானால் நான் மறுத்துரைப்பேனோ? விரைவில் சொல்!

துரி....: சல்லியா! கறுத்த மேகத்தையும் வெளுப்பெனும்படி காயர் மேனி கொண்ட கண்ணன் பாண்டவரைக் காத்தல் போல நீ எங்களைக் காத்தல்வேண்டும்.

சல்லியன்: அரசர்க்கெல்லாம் அரசனான நீயல்லவா என்னைக் காக்கவேண்டும். உன் குடைக்கீழ் தொழில் புரியும் நான் உன்னைக் காத்தல் என்பது பொருந்துவதோ? ஆனாலும், யது குலத்தில் தோன்றி அனைத்துலகும் காக்கும் ஆதிமூர்த்திபோல உன்னைக் காக்கும் ஆற்றல் எனக்கேது துரியோதனா?

துரி....: சல்லியா! தனஞ்சயனுக்கு அந்த வஞ்சகக் கண்ணன் தேரோட்டுகிறான். அதுபோல், நீ பதினேழாம் நாள் போரில் கர்ணனுக்குத் தேரோட்டவேண்டும். இதுவே நான் கேட்கும் வரம்.

சல்லியன்: (வெகுண்டு) யாது கூறினாய், துரியோதனா? யாரிடம் கூறுகிறாய்? புனங்களை மேயும் புல்லிய மானுக்குப் புலி கை கட்டிச் சேவகம் செய்யுமோ? மத்திர வேந்தன் கர்ணனுக்குத் தேரோட்டிப் பணிபுரிவானோ? சுயோதனா! இச்சொற்களை நீ கூறியதால் பொறுத்தேன். வேறு எவரேனும் சொல்லியிருந்தால் நாவினைக் கூறுபடுத்தியிருப்பேன். கர்ணன்....ஆ.... அவனே ஓர் தேரோட்டி மகன்....அவனுக்கு நான் சாரதியானால்? மத்திர மன்னனாகிய எனக்கு எத்தகைய இழிவு? அது நடக்காது.

துரி....: **சல்லியா!** சினங்கொள்ளாமல் எண்ணிப்பார். அன்றொருநாள் உமைபங்கனுக்கு வேதங்களைக் குதிரையாகவும் பூமியைக் கொடியாகவும் கொண்ட தேரினை நான்முகன் சாரதியாக இருந்து ஓட்டவில்லையா? பாற்கடலில் பள்ளிகொண்டிருக்கும் பரமன் என்று பாராட்டப்படும் வசுதேவன் புதல்வன் இன்று விசயனுக்குச் சாரதியாக இருக்கவில்லையா? அந்த வில்லாளன் விசயனே முன்பொருநாள் உத்தரகுமாரனுக்குத் தேரைச் செலுத்தவில்லையா? புகழ் மிக்க போர் வேந்தனே! களத்தில் தேர் செலுத்துவது உன் போன்ற மாவீரருக்குப் பெருமை அல்லவா? எனக்காக நீ இதனைச் செய்தேயாகவேண்டும். எல்லாக் கலைகளிலும் வல்லவனாகிய உன்னையன்றி வேறு எவரால் கண்ணனுக்கெதிர் தேர் செலுத்த முடியும்? சொல், சல்லியா! சொல்.

சல்லியன்: (சினம் தணிந்து) நன்று, துரியோதனா....நின் விருப்பம் கருதி நான் தேர் செலுத்த ஒப்புக்கொள்கிறேன்.

துரி....: (அவனைக் கட்டித் தழுவி) மிக்க நன்றி. சல்லியா! உன் உதவியை நான் என்றும் மறவேன். காருள்ளளவும் கடல் நீருள்ளளவும் மறவேன். நன்றி, நான் வருகிறேன்.

## காட்சி 6

இடம் — போர்க்களம்
காலம் — பகல்
உறுப்பினர் — கர்ணன், சல்லியன்.

கர்ணன்: சல்லியா! உனக்கு நன்றி. இழந்த கவச குண்டலங்களை மீண்டும் பெற்றாற்போல மகிழ்ந்தேன். நின் துணைகொண்டு பாண்டவர் ஐவரையும் அழிப்பேன்.

சல்லியன்: கர்ணா! தேரைச் செலுத்தட்டுமா?

கர்ணன்: கொஞ்சம் நில். பொருள் கேட்டு வரும் இந்த இரவலர்களுக்குப் பொன் கொடுத்துவிட்டு வருகிறேன்.

(தன்னிடமிருந்த அணிகலன்களை அளிக்கிருன்) போதுமா அந்தணர்களே....................சரி, புறப்படு, சல்லியா! இந்திரனிடமிருந்து சூரியன் பெற்று ஜமதக்னி முனிவருக்கீந்த பெரும் வில்லைப் பரசுராமர் வழியாக நான் பெற்றேன். நாகாஸ்திரத்தையும் பெற்றுள்ளேன். எல்லாவற்றிற்கும் மேலாகக் கண்ணனுக்கு நிகரான தேர்ச்சாரதியாக நின்னைப் பெற்றேன். எனக்கென்ன கவலை? எனக்கெதிர் விசயனை அன்றி வேறில்லை. விசயனுக்கும் என்னைத் தவிர வேறு எதிர் எவருமில்லை. என் மனத்துக்கினிய நண்பன் ஏழுலகும் அடையுமாறு இன்று விசயனை ஒழிக்கும் என் விற்றெழிலை நீ காண்பாயாக.

சல்லியன்: கர்ண! நின் வீரத்தை என்னிடம் இயம்ப வேண்டாம். நீ என்றுமே வில்விசயனைப் போரில் வென்றதில்லை. அவனுக்கு நீ இணையாகமாட்டாய். இன்று நடைபெறும் போரின் முடிவு இப்பொழுதே தெரியுமோ? அருச்சுனனுக்கு எதிராக நீ எடுத்த சபதம் இன்று நிறைவேறுகிறதா என்பதைப் பொறுத்திருந்தல்லவா காணவேண்டும்?

கர்ணன்: சல்லியா! விசயனுக்கு நான் நிகரில்லை என்று பலர் முன்னிலையில் நீ இகழ்தல் வேண்டாம்! வல்லையேல் இத்தேர் செலுத்து! போர்வினை பற்றிப் பேச நீ யார்?

(சல்லியன் வெகுண்டு தேரிலிருந்து இறங்கி, 'உனக்கு நான் தேர் செலுத்தேன்,' என்று உடைவாள் வீசிக் கர்ணனோடு மாறுகொண்டு நிற்கிருன். இருவரும் மோதுகின்றனர்.)

துரி....: சல்லியா! போதும். களத்தில் இப்படி நீங்களே மாறுபட்டு நின்ருல் போரில் வெற்றி எப்படிக் கிடைக்கும்? உங்கள் வாதத்தை நிறுத்துங்கள்; பகையை நொறுக்குங்கள்!

(தேர் புறப்படுகிறது; படை மோதுகிறது.)

### காட்சி 7

இடம் — படுகளம்
காலம் — மாலை
உறுப்பினர் — கர்ணன், கண்ணன், அருச்சுனன், குந்தி.

*[கர்ணனும் அருச்சுனனும் கடும்போர் புரிகின்றனர்; வீர வாதம் செய்கின்றனர். ஒருவர் விடும் கணைகளை மற்றவர் முரிக்கின்றனர். நெடுநேரம் நடந்த போரின் இறுதியில் செங்குருதிக் கடலுக்கு நடுவில் இருக்கும் கர்ணன், அருச்சுனன் கழுத்தை இலக்காகக் கொண்டு நாகக்கணையைத் தொடுக்கிறான். செலுத்தும்போது சல்லியன், 'மார்பு நோக்கி விடுவாயாக,' என்று கூறியதைச் செவிக் கொள்ளாமல் கர்ணன் அம்பு தொடுக்கிறான். கண்ணன் அதனை அறிந்து பன்னிரண்டு அங்குலங்கள் தாழும்படியாகத் தேரைப் பூமியில் அழுத்தினான். அக்கணை அருச்சுனன் தலைமகுடத்தைப் பறித்துச் சென்றது. குந்தி முன்னரே பெற்ற வரத்திற்கேற்ப மீண்டும் ஒரு முறை நாகாஸ்திரத்தைச் செலுத்த மறுக்கிறான் கர்ணன். சல்லியன் மனம் வெறுத்துக் கர்ணனுக்குத் தேர் செலுத்தாமல் பிரிகிறான். தேர் பூமியில் புதைகிறது. சக்கரத்தில் கை கொடுத்துத் தூக்க முனைகிறான் கர்ணன். அப்போது கண்ணன் வேதியர் வடிவில் வந்து,'நின் புண்ணியமனைத்தும் உதவுக,' என்று தானமாகக் கேட்கிறான்.]*

வேதியர்: கர்ணா! தானப் பிரபு! என்னைப் பார். உலகில் தளர்ந்தவர்க்கு வேண்டியவெல்லாம் நீ தருவதாகக் கேள்விப்பட்டேன். யான் மேரு மலையில் தவம் பூண்டிருப்பவன். பெரும் வறுமையில் உழல்கிறேன். உன்னால் இயைந்த ஒரு பொருளை எனக்குத் தானமாகக் கொடுப்பாய்.

கர்ணன்: ஆ....செவிக்கமுதம் போன்ற சொற்களைக் கூறினீர் வேதியரே! இறக்கும் இந்த நேரத்திலும் கொடுக்கும் பேறு பெற்றேனே. விசயன் சுடுசரம் என் உயிரைப் போக்குவதன்முன்னம் உமக்கு வேண்டிய பொருள் யாது? என்பதனைக் கூறும், தருகிறேன்.

வேதியர்: கர்ணா! நின் புண்ணியமனைத்தையும் தாரை வார்த்துக் கொடு!

கர்ணன்: நன்று சொன்னீர், நல்லவரே! என் ஆவியோ நிலை கலங்கியது; யாக்கையின் அகத்ததோ புறத்ததோ அறியேன். பாவியாகிய நான் பொருள் மிகப்பெற்ற காலத்தில் நீவிர் வரவில்லையே! வந்திருந்தால், நிறையத் தந்திருப்பேன். இதோ....இடைவிடாது நான் திரட்டிய புண்ணியம் அனைத்தையும் உதவினேன்; ஏற்றுக்கொள்ளும்!

(அங்கு நீர் இல்லாததால் உடல் குருதியினால் தாரை வார்த்துக் கொடுக்கிறான் கர்ணன்.)

வேதியர்: (மகிழ்ந்து) கர்ணா! உனக்கு என் வாழ்த்துகள். நீ வேண்டிய வரம் கேள்! தருகிறேன்.

கர்ணன்: வினை காரணமாக எனக்கு மீண்டும் பிறப்பு என்று இருக்குமானால் அப்பிறவிகளிலும் 'இல்லை' என்று இரப்போர்க்கு 'இல்லை' என்று உரையாத இதயம் எனக்கு அளிக்கவேண்டும். இந்த ஒரு வரம் எனக்குப் போதும் பெரியவரே!

வேதியர்: கர்ணா! நீ எத்தனை பிறவி எடுத்தாலும் ஈகைத் திறனும் இணையிலாச் செல்வமும் எய்தி முடிவில் முத்தியும் பெறுவாயாக! வாழ்க நீ!

(வரம் தந்த வேதியர் ஐம்படைகளை உடைய திருமாலாக அருட்காட்சி தருகிறார். கர்ணன் வியந்து பார்க்கிறான்.)

கர்ணன்: கண்ணா! மணிவண்ணா! நின் அருங்காட்சி கண்டேன். பெருந்தவங்கள் மிகப் பயின்றும் பெறுதற்கெட்டாப் பெரும்பயன் நின் திருவருளால் இன்று பெற்றேன். கருமலையே! காளமேகமே! பெருங்கடலே! காயாம்பூ நிறத்தவனே! கதை, வாள், சங்கு, சக்கரம், வில் எனும் ஐம்படை தரித்தவனே! துழாய் மாலையும் துவளும் பவள மணிமாலையும் கொண்டவனே! நின்னை இத்தோற்றத்தில் காணும் பேற்றை இப்பிறவியில் பெற்றேனே. ஆ....தருமன் முதலான பஞ்ச பாண்ட வராகிய என் அருமைத் தம்பியர்களை எதிர்த்துச்

*செஞ்சோற்றுக் கடன் கழிப்பதற்காகக் கடும்போர் புரிந்து என் உயிர் தந்தேன். கவச குண்டலங்களை இந்திரனுக்குத் தந்தேன். நல்வினைப் பேறுகளை நினக்குத் தந்தேன். இறக்கும் இவ்வேளையில் நின் திருநாமம் உரைக்கப் பெற்றேன். யான் பெற்ற பெருந்தவப் பேறு என்னையன்றி இருநிலத்தில் யாவர் பெற்றார்? கண்ணா....கண்ணா!*

*(கீழே விழும் அவனை அவன் தாய் குந்தி மடியில் ஏந்தக் கர்ணன் உயிர் பிரிகிறது.)*

**அருஞ்சொற்பொருள் :**

*சாளரம் - சன்னல், அரவம் - ஒலி, வீடுமர் - பீஷ்மர், அரவக் கொடி-பாம்புக்கொடி, வஞ்சினம்-சபதம், துந்துபி-இசைக்கருவி, யுதிரட்டிரன் - தருமன், விசயன் - அருச்சுனன், சென்னி-தலை, குழை-காதணி, இரவியின் புதல்வன் - கர்ணன், வாயுகுமாரன்-பீமன், சுயோதனன்-துரியோதனன், அலமர-கலங்க, துகில்-ஆடை, வெஞ்சிலை-கொடிய வில், மேகவாகனன்-இந்திரன், விரகு-உபாயம், தனஞ்சயன் - அருச்சுனன், புனம் - காடு, உமைபங்கன்-சிவன், உழல்கிறேன்-வருந்துகிறேன், துழாய்-துளசி.*

**வினாக்கள் :**

1. கர்ணன் கொடைத் திறனை விளக்கி எழுதுக.
2. கர்ணன் போருக்குப் புறப்படவேண்டிய நிலை எவ்வாறு ஏற்பட்டது?
3. தருமன், கண்ணனிடம் கேட்ட வினாவும் அதற்கு அவன் அளித்த பதிலும் யாவை?
4. தருமன், கண்ணனை எவ்வாறு புகழ்ந்தான்?
5. துரியோதனன், கர்ணனுக்குச் செய்த உதவிகள் யாவை?
6. துரியோதனன், சல்லியனை எவ்வாறு அமைதிப்படுத்திக் கர்ணனுக்குச் சாரதி ஆக்கினான்?
7. கர்ணனுக்கும் சல்லியனுக்கும் இடையில் ஏற்பட்ட பூசல் யாது?
8. களத்தில் கர்ணனிடம் வேதியர் விரும்பிக் கேட்ட தானம் யாது?
9. வேதியர், கர்ணனுக்கு அளித்த வரம் யாது?
10. கர்ணன் வீரமரணம் எவ்வாறு நிகழ்ந்தது?

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

கற்க கசடற

WRAPPER PRINTED AT PRASANNA OFFSET, MADRAS-14